கும் பாபங்களிற் கொஞ்சம் உனக்குச் சாருமல்லவா வென சிறுவன் கலகலென சிறித்து நீர் எவ்வித தொழிற் புரிந்தாயினும் இத்தருணம் என்னைக் காப்பாற்றினல் நீர் வயது முதிர்ந்த பிறகு யானுன்னைக் காப்பாற்றுவேன், அன்றி, நீர் செய்யுந் தொழிலா லுண்டாக்கும் பாபங்களை நீயே யனுபவிக்க வேண்டுமென்றான். வேடன் மனம் பதைத்துத் திகிலுற்று அடியற்ற பனைமரம் போல்திடீ ரென நாரதபகவான் பாதத்தைப் பணிந்து சுவாமி யான் புரிந்த பாபங்களைப் போக்கிப்பரிசுத்த னாகும்படியாய்க் கிருபை புரிவீரென்க நாரதர் அவ்வாறே நன்கெனச் சம் மதித்து ஓர் நந்தவனத்தில் அழைத்துக் கொண்டு வந்து தாமரைப் பொய்கையில் மங்கள ஸ்நானஞ் செய்வித்து தாரக மந்திரத்தை உச்சரித்து ராமா ராமா ராமா வென்று சொல்லிக் கொண்டிருப்பா யென்க வனவேடன் வாயில் அந்த அக்ஷரத்தை உச்சரிக்க முடியாமற் பலவித மாய் உளறுகையில் நாரதர் கிருபை கூர்ந்து எதிரிலிருக் கும் விருக்ஷத்தைப் பார்த்து இதென்ன வென்று வினவ வேடன் மாமென்றான் அப்படியே சொல்லிக் கொண்டிரு வென்றனர் அவனும் அப்படியே மரா மரா மராமா வென்று ராமநாமத்தை உச்சரித்துக் கொண்டு தனது பாபங்களைப் போக்கி புண்யாத்மாவாகி தேவர்களாலும் புகழ்ந்துரைக்கும் படியாய் வால்மீகி மஹாரிஷியானு ரென்பது யாவருக்குந் தெரிந்தவிஷய மெனினும் இதனை யாவரும் வாசித்து மகிழும்படியாய் யான் ஓர்வித அலங் காரமாய் எழுதலுற்றேன் இதனை வாங்கும் நண்பர்கள் அநுதினமும் சித்த சுத்தி வைராக்கிய முடன் பக்தி செலுத்தி பரமாத்மாவை தியானித்து இகத்தில் கீர்த்தி யும் பரத்தில் முத்தியு மெய்வராகவும். சுபம். சுபம். சுபம்.

இப்படிக்கு,

கவிராஜ கந்தசாமி பிள்ளை.

## பி. எஸ். டி. எம். அண்டு சன், பதிப்புகள்.

| | | | |
|---|---|---|---|
| ஆரிய அனுபோக வயித்தியம் பிரம்மாரகசியம் எட்டுகாண்டம் கலிகோபயிண்டு | 4 | 0 | 0 |
| ஸ்ரீராமகோடி அழகிய பட்டுகட்டடம் | 3 | 0 | 0 |
| பட்டினத்தார் பாடல் ஷெ யார் புலம்பல் பத்தரகிரியார் புலம்பல் மூலம் உரை படத்துடன் | 1 | 8 | 0 |
| அஷ்டதிக்கு பஞ்சபக்ஷி ஜெயமுனி வால்மிகர் அஞ்சநேயர் ஐந்து ஆரூடம் பஞ்சபக்ஷி சக்கரத்துடன் | 1 | 0 | 0 |
| பதினென் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய வாதகோவை என்னும் இரசவாத சிட்கா | 1 | 0 | 0 |
| ஸ்திரீ புருஷ லக்ஷணக்குறி சாஸ்திரம் என்னும் ஆண் பெண் இரேகை சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| அனுபோக ஜாதக ரகசியம் முதல்பாகம் கிரக சார சக்கரத்துடன் | 1 | 0 | 0 |
| நோயற்ற வாழ்வு குறையற்ற செல்வ மென்னும் நோயில்லா வாழ்வு | 1 | 0 | 0 |
| பச்சிலை மூலிகை அகராதி | 0 | 12 | 0 |
| நவக்கிரக மஹாமந்திரம் | 0 | 8 | 0 |
| ஔவைக் குறள் ஞானதீபார்த்த உரை | 0 | 8 | 0 |
| ஆரிய அனுபோக ரகஸ்ய வைத்திய ஹரிச்சுவடி 4-பாகம் அடங்கியது | 0 | 8 | 0 |
| மலையாள அனுபோக மாந்திரீக ஆசிரியன் | 0 | 8 | 0 |
| உயிர் மெய் யெழுத்து மூலிகை ஜால ரத்தினம் மூலிகை ஜால ரஹஸியம் | 0 | 8 | 0 |
| பிரம்மரஹஸிய ஜோதிட ஹரிச்சுவடி 4-பாகம் | 0 | 8 | 0 |
| இலாகிரிப் பிரியமென்னும் குடியர் துயரம் | 0 | 6 | 0 |
| வேமன்ன பத்தியம் மூலமும் உரையும் | 0 | 6 | 0 |
| இந்து பாரம கோபியா என்னும் அனுபவ வைத்திய தேவரகசியம் 3-காண்டம் ரூபா | 6 | 0 | 0 |

விலாசம்:--பி. எஸ். டி. எம். அண்டு சன்,
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

# ஸ்ரீராமர் வனவாசம்.

## விக்னேஸ்வரர் துதி.

### வெண்பா.

ஸ்ரீராமர் நற்சரிதை சித்திரம்போற் சொல்லிணைத்தும்
பாராரும் பாவினமாய்ப் பாடுதற்குக்—காராரும்
தும்பிக்கை தேவா துணையிருந்தாள் வீரென்று
நம்பினே னுன்பதத்தை நான்.

## வேத விநாயகர் துதி.

தந்திமுக வாரணனே தற்பரனே முன்னடவாய்
கந்தருக்கு முன்பிறந்த கஜமுக விநாயகனே
அம்பிகை புத்திரனே அன்பர்கள் மித்திரனே
தும்பிக்கை தேவா துதிப்போர்க் கருள்பவனே
பூமகள் ஜானகியை புகழாய் மணம்புரிந்த
ராமர் வனவாசம் நலமுடனே யான்பாட
வாக்கில் கொலுவிருந்து வரமருள் கணபதியே

பாட வரமருள்வாய் பார்வதியாள் புத்திரனே
ஏடு தவறாமல் எழுத்தசைசீர் மாறாமல்
சங்கீத சாஹித்தியம் சற்றும் வழுவாமல்
மங்களச் சொல்லமைத்து மதுர கவிபாடும்
சுந்தர ஜெயவீர சூரதீர கவிராஜ
கந்தசாமிபிள்ளையின் றன்கருத்தில் நடனமிடும்
வேத விநாயகனே வெண்ணையுண்டோன் தன்மருகா
ஜோதி மயமேயுன் தய்ய பதந்தொழுது
பருதிலா நற்கவிகள் பாரோர் மனமகிழ
எழுத வரமருள்வாய் எந்தன் குலக்குருவே.

## சரஸ்வதி துதி.

அம்பா சரஸ்வதியே அன்பர்க் கருள்நிதியே
உம்பர்கள் போற்றும் உண்மையருள் தேவதையே
கமலாசனி யம்பா காருண்ய தேவதையே
அமரர் பணிந்தேற்றும் அயனார் திருநாவில்
சந்ததம் வீற்றிருக்கும் சதுர்வேத காரணியே
உந்தன் கிருபையினால் உலகோர் மதித்திடவே
பூமகள் ஜானகியை புகழாய் மணம்புரிந்த
ராமர் வனவாச நற்சரிதை பாடுதற்கு
வாக்கில் கொலுவமர்ந்து வரமருள் கலைவாணி
பாக்யவதி நீயெந்தன் பக்கத்துணையிருந்து
பாட வரமருள்வாய் பாரோர் மகிழ்ந்திடவே.

---

கைமுறை பாக்கெட் வைத்தியம்.

இதில் வைத்திய பாகங்களெல்லாம் சுலபமாய் செய்யக்கூடியதாய் சுமார் 600-முறைகளுக்குக்குறையாமலடங்கியிருக்கிறது உயர்ந்த கடிதத்தில்அச்சிட்டு கலிகோ பயிண்டு செய்தது. தாபல் சார்ஜ் உள்பட ரூபா 1.

## கதையின் வரலாறு.

—:o:—

அன்பர் வசித்துலாவும் அயோத்திபுரி பட்டணத்தில்
இன்பா யரசுசெய்யும் இராஜேஸ் வரன்போல
செங்கோல் கரத்தேந்தி சிம்மா சனத்தமர்ந்து
மங்களா னந்தமுடன் மந்திரிகள் தான்சூழ
இராஜரீ கம்புரியும் இணையிலா தெய்பிரான்
கோசலை கைகேசி சுமித்திரை மூவரையும்
பாசமுடன் மணந்து பார்தனிலே வாழ்ந்திருக்கும்
தசரத ராஜனுக்குத் தனயர்க ளில்லையென்று
மனைவியர் தன்னுடனே மனக்கவலை தானடைந்து
சந்ததி தான்பெருக தனயர் ஜனித்திலரே
மைந்தர்க ளில்லா மலடானேம் சுந்தரிகாள்
என்செய்வோ மென்றுசொல்லி ஏங்கி விசாரத்துடன்
மன்னன் வருத்தமுற்று மண்மேற் புரண்டழுதான்
கண்டார் மனைவியர்கள் கணவன் படுந்துயரம
எண்டிசையும் தான்புகழும் எங்கள் மணவாளா
மூவருந் தான்மலடாய் முன்னின்றும் கற்சிலைபோல்
பாவிகளாயாங்கள் பாரோ ரிகழ்ந்திடவே
பூமிக்குப் பாரமாகப் பிறந்திட்டோம் நாயகனே
நேமியில் வந்திகளாய் நேர்ந்தக் கொடுமையாதோ
ஆண்டிப் பரதேசியை அடித்துத் துரத்தினேமோ
அங்காடி கூடைகளை அறிரவிலே யிட்டோமோ
பங்கில் முதற்பங்கு பதறி யெடுத்தோமோ
கூலிக் குறைத்தோமோ குறைமரக்கா லிட்டாமோ
அண்டிபிழைப்போரை அநியாயஞ் செய்தோமோ
ஐயமென்று வந்தவரை அதட்டித் துரத்தினேமோ
வைய மிசைமலடால் வருத்தப் படலானேம்

மாமரத்தின் கீழிருந்து மண்ணோரஞ் சொன்னேமோ
பூமரத்தின் கீழிருந்து பெண்ணோ ஞ் சொன்னேமோ
என்றிவர் சொல்லி எங்கி மனந்தளர்ந்தார்
பத்தினி மூவர்களின் பரிதாபம் தான்பார்த்த
உத்தமிகளே நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சாதீர்
கருணாகரக் கடவுள் காருண்ய மூர்த்தியையாம்
சிந்தித் திருந்தாலே ஜனிக்கும் நமக்குப் பிள்ளை
மைந்தர்களைப் பெற்று மாநிலத்தில் வாழ்ந்திருப்போம்
அஞ்சாதீரென்று சொல்லி ஆனந்த வாழ்மார்பன்
தைரியவார்த்தை சொல்லி தனது மனைவிகளின்
மனதைத் திடப்படுத்தி மாக்ஷிபுடனெந்நாளும்
ஸ்ரீமந்நாராயணனைச் சிந்தனைசெய்தன்பாக
மதன ரதிபோல மாநிலத்தில் வாழ்ந்திருந்தார்.

## அசுராதியர் துன்பத்தை சகியாமல் தேவர்கள் மஹாவிஷ்ணுவிடம் முறையிடுதல்.

இவ்விதமாகவே தான் இவர்களிருக்கையிலே
இலங்காபுரிவாசன் இராவணன் கும்பகர்ணன்
இந்திர ஜித்துடனே இராக்ஷதர்களெல்லோரும்
அந்தரத்தில் வாழ்ந்திருக்கும் இந்திராதி தேவர்களை
அடித்துத் துரத்தி அமர்பொருதும் வேளையிலே
தேவர்களெல்லோரும் திகைத்து மனமிரண்டு
பாவியசுரரிடம் பகைமுடிக்க வேணுமென்று
மாயாவதாரன் மஹாவிஷ்ணு வீற்றிருக்கும்
வைகுந்தந் தன்னிற்சென்று வரிசையாய் நின்றார்கள்
கண்டாரே எம்பெருமாள் ககனத்தின் தேவர்களை
புன்னகை தான்புரிந்து பூரித்துளமகிழ்ந்து
எங்குவந்தீர் தேவர்களே எனக்கறியச் சொல்லுமென்றார்
நாரணன் சொற்கேட்டு நமதுகுறை தீர்த்தென்று

நமஸ்காரஞ் செய்திவர்கள் நாரணா காருமென்று
சிரமேற் கரங்குவித்து செப்பலுற்றா ருற்றவர்
அசுரரா லுற்றவயர் வனைத்தும் புகன்றார்கள்
இராக்ஷதர் செய்த இம்சைகளைச் சொன்னார்கள்
இராவணன் கும்பகர்ணன் இந்திர ஜித்துடனே
அசுரர்க ளெல்லோரும் அமரா புரியில்வந்து
வீராவே சத்துடனே வெஞ்சமர் செய்தார்கள்
அஷ்டதிக்குப் பாலரும் அஞ்சிபயந்தோட
அடித்துத் துரத்திவிட்டார் ஆதிமூலா ஓடிவந்து
பாதமதைப் பணிந்தோம் பக்தர்களைக் காருமென்றார்
அவ்வார்த்தைத் தான்கேட்டு ஆதிமூலம் சொல்லுகிறார்
இந்திராதி தேவர்களே இருடிதபோதனரே
இராவணனைக் கொல்வதற்கு என்னாலுமாகாது
ஆதி சிவனாலும் அமர்பொருத லாகாது
ஆகையினாலே அமரர்க ளெல்லோரும்
வானரங்களாக மாநிலந்தனிற் ஜனிப்பீர்
சங்கு சக்ராயுதமும் சேஷனுடன் யான்சென்று
மங்களானந்தமுடன் மானிடராகவேதான்
அயோத்தியா புரியாளும் அன்பன் தசரதனின்
மனைவிகள் மூவருக்கும் மைந்தர்களாய் ஜனித்து
ஆரண்ய மார்க்கம்வந்து அனைவரும் ஒன்றாய்க்கூடி
இராவண கும்பகர்ணன் இந்திர ஜித்துடனே
அசுரர்கள் சேனைகளை அதஞ்செய்து கொன்றிடுவோம்
அஞ்சாதீ ரென்றுசொல்லி அமரரை யனுப்பிவிட்டார்.

## தசரதன் புத்திர காமேஷ்டியாகஞ் செய்வதும், ஸ்ரீராமர் லக்ஷ்மணர் பரதர், சத்ருக்னர் பிறப்பதும்.

திருமால் மொழிப்படியே தேவர்க ளெல்லோரும்
குரங்கும் கரடியுமாய்ப் பிறந்து வளர்ந்திவர்கள்

கிஷ்கிந்தா பட்டணத்தில் கீர்த்தியுட னிருக்க
அயோத்யாபுரி பட்டணத்தில் அரசரிமை தான்புரியும்
தசரத ராஜனுக்குத் தனயர் ஜனிக்கவென்று
புத்ரகாமேஷ்டியாகம் புரிதல் நலமென்று
வதிஷ்டருரைத்திடவே மன்னவனுஞ் சம்மதிக்க
காட்டில் தவம்புரியும் கலைக்கோட்டு மாமுனியை
அன்பாய் வரவழைத்து யாகம் புரிந்தனர்கள்
ஓமப் புகையினின்று ஓங்கி யெழுந்தபூதம்
தங்கக் கலசமதில் தான்கொணர்ந்த பாயாசம்
மன்னவன் கையிற்றந்து மறைந்ததுகாண் யாகமதில்
அங்கோர வேளையிலே அரசன் தசரதனும்
பத்தினிமார் மூவருக்கும் பாயாசந் தான்கொடுத்து
அருந்துவீ ரென்றுமன்னன் அன்பாகவேயுரைத்தான்
சுகுண வதிகளான கோசலை கைகேசி
சுமுத்திரா தேவியும் சுகமுடனே தானருந்தி
கர்ப்பவதி யானார்கள் கிளிமொழிமார் மூவர்களும்
சித்திரை மாதத்தில் சுக்லபக்ஷ நவமி
கருதும் புனர்பூசம் கற்கடக லக்கினத்தில்
நாரா யணனேவந்து ராமாவதாரமாக
கௌசலை கர்ப்பத்தில் களிப்புடனே தான்பிறந்தார்
சங்குசக்ராயுதமும் சேஷனுடன் மூவருமாய்
மங்களா னந்தமாக மற்றிரண்டு பெண்களினும்
கைகேசி கர்ப்பத்தில் காளை பரதனுமாய்
சுமித்திரை தன்வயற்றில் சுகுண இலக்ஷ்மணனும்
சத்துருக்கனும்வந்து ஜனித்து வளர்ந்தார்கள்
கண்டான் தசரதனும் காதலுற்றான் மைந்தர்கள்மேல்
பிள்ளைகலி தீர்க்கவென்று பிறந்தீரே கண்மணிகாள்
என்று மனமகிழ்ந்து இருதோளும் பூரித்து
காதிற் கடுக்கனிட்டு கைவிரலில் மோதிரமும்

கால்காப்பு கைக்காப்பு கருதம் கொலுசணிந்து
நவரத்ன ஆபரணம் நாகரீக மாய்ப்புனைந்து
நெற்றிக்குச் சுட்டிகட்டி நீலவர்ன பொட்டுமிட்டு
கண்களில் மையெழுதி கனிவாயை முத்தமிட்டு
வித்தியா சாலைதனில் விடுத்தாரே நால்வரையும்
அந்நேரவேளையிலே அரசமக்கள் நால்வருந்தான்
ஆதி கணபதியை அன்பாய் மனதிருத்தி
ஆசிரியன் சொற்படியே அன்புடனே நாள்தோறும்
வஜிஷ்ட ரருட்படியே மனமகிழ்ந்து நால்வருமாய்
ஹரிநமோத்து சிந்தமென்று அன்பாய் படித்தார்கள்
ஓம்நமசி வாயமென்று ஒழுங்காய் படிக்கலுற்றார்
எழுத்தசை சீர்தளையும் இலக்கணமுந் தானுணர்ந்து
சாஸ்திர வேதமென்னும் சமஸ்கிருதந் தான்படித்து.
அரசர்க் குரியதொரு ஆனை குதிரையேற்றம்
தனுசிற் கணைதொடுத்து சமர்புரியும் வித்தையுடன்
சகலமுந் தானுணர்ந்து சந்தோஷித் திருக்கையிலே
மைந்தர்கள் தன்பெருமை மஹாராஜன் தான்பார்த்து
ஆனந்த மாகவேதான் அன்புடனே வாழ்ந்திருந்தான்.

## ஸ்ரீராமர் உண்டேவில்லால் மந்தரையின் கூனை நிமிர்த்திவிட்டது.

இப்படியாகவேதான் இவர்களிருக்கையிலே
ஸ்ரீராம லக்ஷமணரும் சத்ருக்க பரதருடன்
வீதியிற் சென்று விளையாடி தான்வருவார்
பந்தாடி செண்டாடி பக்ஷமாய் விளையாடி
காண்போர் மனமகிழ காளையர் நால்வருந்தான்
ஆடி மனமகிழ்ந்து அமுதுண்ணத் தான்வருவார்
பாலன்னந் தான்புசித்து பசியாறி ஏப்பமிட்டு
அண்ணன் தம்பி நால்வருமாய் அகமகிழ்ந் திருக்கையிலே

வனவேட்டை யாடுதற்கு மனதினிற் றானினைந்து
தனுசைக் கரத்தேந்தி தகுந்த கணைகளுடன்
அம்புறாத் தூணியையும் அன்பாய் முதுகணிந்து
நால்வரு மொன்றாக நடந்தார்கள் கானகத்தில்
அம்பிற் கணைதொடுத்து ஆரண்ய மெங்கும்விட
சிங்கம் புலிகரடி சிறுத்தையும் ஓநாயும்
கும்புகும்பாகவேதான் கூடிமடியுதுபார்
காட்டானை வேங்கையும் கதறியே ஓடுதுபார்
கண்டார் சிறுவர்கள் கானக விலங்கினத்தை
கைகொட்டித் தான்சிறித்து களிப்புற் றிருந்தார்கள்
அந்நேர வேளையிலே அரண்மனையி லுள்ளோர்கள்
அரசமைந்தர் நால்வருமாய் ஆடிருந்தா ரிந்நேரம்
எங்குசென்றாரோவென்று ஏங்கிமனந் திகைத்து
தேடினா ரப்போது தெருவெங்கும் ஆவலுடன்
அந்நேர வேளையிலே அருகிருந்த தாதியவள்
கைகேசி தோழி கூனியெனும் பாங்கியவள்
மந்தரை யென்னுமந்த மாது புகலுற்றாள்
அரசமைந்தர் நால்வருந்தான் ஆரண்யம் சென்றார்கள்
தனுசுங் கணையெடுத்து வனவேட்டை யாடச்சென்றார்
பாலர் பசியாற பலகாரம் தானெடுத்து
போகிறே னென்றுசொல்லி புறப்பட்டாள் கூனியவள்
வனமாய் வனங்கடந்து வருகிறாள் மந்தரை
ஆரண்யந் தன்னில்வந்து அன்புடனே தேடுகிறாள்
ஸ்ரீராமா வென்றுசொல்லி தேடுகிறாள் நாற்றிசையும்
லக்ஷ்மணா வென்றுசொல்லி பக்ஷமுடன் தேடுகிறாள்
அப்பா பரதாவென்று அதட்டியே கூவுகிறாள்
சத்ருக்னா வென்றலறி சப்தமிட்டு தேடுகிறாள்
மந்தரை கூக்குரலை மைந்தர்கள் தானுணர்ந்து
கூனி அழைப்பதைதான் குறிப்பா யுணர்ந்தார்கள்

அந்நேரவேளையிலே ஸ்ரீராமரேதசொல்வார்
ஆசையிருந்த அன்பான தம்பியரே
கானகத்தில் வேட்டையாடி களைப்புற்றிருக்கையிலே
நமது-பசிதணியவேணுமென்று பலகாரந்தானெடுத்து
கோலூன்றி மெள்ளமெள்ள கூனிவருகிறாள் பார்
என்றிவர் சொல்லி இன்பாய் நடந்துவர
பார்த்துவிட்டாள் மந்தரை பாலர் வருகிறதை
ஆனந்த மேலிட்டு அன்பாய் மனமகிழ்ந்து
அன்பான பிள்ளைகளே அழகிலகும் புத்திரரே
கானகத்தில் வந்து களிப்புடனே வேட்டையாடி
மிருகங்களை வதைத்து மெத்த அலுத்தீரோ
வேட்டைகளாடி வெகுவாய் களைத்தீரோ
என்றுசொல்லி கூனியவள் எதிரிருந்த மைந்தர்களை
இருகையால் சேர்த்தணைத்து இன்பாக முத்தமிட்டாள்
மார்புடனே தானணைக்கு மாமுகத்தை முத்தமிட்டாள்
பாலர் பசிதணிய பக்ஷமுடன் கொண்டுவந்த
தித்திக்கும் தேனும் தெகிட்டாத தெள்ளமுதம்
கற்கண்டு சீனியுடன் கலந்த பலகாரம்
மிட்டாயி லட்டுடனே மேன்மையுறும் பால்கோவா
சுகியம் ஜிலேப்பியுடன் சொகுசுள்ள தேன்குழலும்
பிள்ளைகள் முன்னேவைத்து புசிப்பீரே மக்களென்றாள்
அருந்திக்களை தெளிவீர் அன்பான மைந்தர்களே
என்றுரைத்தாள் மந்தரை இனிய வசனமுடன்
அவ்வார்த்தை கேள்வியுற்ற அரசமக்கள் நால்வருந்தான்
பலகாரம் தான்புசித்து பசிதணிந்தா ரந்நேரம்
மந்தரை கூனிமீது மைந்தர்கள் சந்தோஷித்தார்
ஸ்ரீராமர் தம்பியரும் சிந்தை மிகமகிழ்ந்து
அந்தவனத்திற் சென்று அன்பாய் விளையாடுகையில்
பார்த்து மனமகிழ்ந்தாள் பக்ஷமுள்ள மந்தரை

அத்தருணம் ஸ்ரீராமர் அருகிருந்த தம்பியரில்
பரதரைத் தானழைத்து பக்ஷமுடன் சொல்லுகிறார்
அப்பா பரதா அறிவிற் சிறந்தவனே
கூனியின் பேருதவி கூறுதற்கியன்றிடுமோ
அனுதினமும் நம்மீது ஆசைமிகுந் தன்புடனே
பசிவேளை பக்ஷணங்கள் பக்ஷமுடன் கொண்டுவருவள்
இவட்கொரு பேருதவி இன்பாய்ப் புரியவேணும்
யாதுசெய்தல் நன்கெனவே ராமச்சந்த்ரன் வினவ
தமயன் சொற்கேள்வியுற்ற தம்பி பரதனுந்தான்
ஆலோசனை புரிந்து அத்தருண மேதுசொல்வான்
அண்ணாவே யிந்த அன்பான மந்தரை
கூனை நிமிர்த்திவிட்டால் கோடி தரும முண்டு
என்றிவர் சொல்லையிலே ஸ்ரீராமர் தான்பார்த்து
தனுசிற்கவண் தொடுத்து தருந்த குறிபார்த்து
மந்தரை தன்னுடைய முதுகின்மேல் தானடித்தார்
குறிப்பு தவறாமல் கூனிற் கவண்பாய்ந்து
சுருண்ட நரம்பனைத்தும் சுருக்கெனவே தான்நிமிர
நெட்டை யொடித்து நேர்மையாய்த் தான்விலகி
கூனு நிமிர்ந்தவுடன் கோபித்தாள் மந்தரை
ஆடா துஷ்டர்களே அடித்தீரே கூன்நிமிர
பசிதணிய உங்களுக்கு பலகாரம் கொண்டுவந்தால்
அஸ்திரத்தாலே அநியாய மாயடித்தீர்
நீதியோ உங்களுக்கு நிஷ்டூர துஷ்டர்களே
என்றிவள் கோபித்து இரைச்சலிட்டுத் தான்கதற
ஸ்ரீராமர் தான்பார்த்து சிந்தைமிக மெலிந்து
ஏனம்மா பாட்டியாரே இத்தனை கோபமுற்றாய்
சகாயந்தானே புரிந்தேன் சஞ்சலமே னுந்தனுக்கு
என்றிவர் கேழ்க்கையிலே எதுரைப்பாள் மந்தரையும்
அரண்மனைத் தோழியாக அமர்ந்திருக்கு மெந்தனுக்கு

கூன்வடிவமைந்தாலே குறிப்பிடார் தொழிலனைத்தும்
பரிதாபமுற்று பக்ஷமுடன் தானிருப்பார்
இவ்விதமாகவே யான் ஏமாற்றி யானிருந்தேன்
காலவிபரீதத்தால் கசடரே யுங்களுக்கு
கொணர்ந்தேன் பலகாரம் கூனை நிமிர்த்துவிட்டீர்
இனிமே லெனக்கு இராஜாத்தி மாளிகையில்
அதிக தொழில்புரிய ஆச்சுதே என்செய்வேன்
ஆகையினா லுனக்கு அரசுகிடையாமல்
காட்டில் துரத்துதற்கு கலகம் செய்யாவிடிலோ
என்பேரும் மந்தரையா ளனைப்பெற்றாள் உத்தமிபா
பாரடாவென் றுரைத்து பார சபதமிட்டாள்
நால்வரும் கேள்வியுற்று நகைத்துக் கொண்டேநடந்தார்
அண்ணன்தம்பி நால்வருமாய் அரண்மனையில் வந்தார்கள்
தசரதன் மைந்தர்களைத் தழுவியே முத்தமிட்டான்
கண்ணிமை போலாக காதலுற்றுத் தான்வளர்த்தார்.

## விஸ்வாமித்திரர் அயோத்தியாபுரியில் வந்து தசரதனைக்கண்டு ஸ்ரீராம லக்ஷ்மணரை அழைத்துக்கொண்டு போவது.

கானிற் றவம்புரியும் கௌசிக மாமுனிவன்
தபசைக் கெடுக்குமந்த தாடகையைக் கொல்வதற்கு
ஆரை யழைப்பதென்று ஆலோசனைபுரிந்து
அசுரர்களைக் கொன்று அமரர் துயர்தவிர்க்க
அயோத்தி புரியில்வந்து அவதரித்த ஸ்ரீராமர்
அவரால் முடியுமந்த அரக்கியை வெல்வதற்கு
என்று மனதிலெண்ணி எழுந்திருந்தா ரந்நேரம்
ஆரண்யம் தான்விடுத்து அயோத்தி புரியில்வந்து
தசரதனைப்பார்த்து தபசி புகலுற்றார்

அரசர்க் கதிபதியே அன்பாயான் சொல்வதைக்கேள்
ஆரண்யந் தன்னில் அருந்தபசு யான்புரிய
அசுரர்கள் வந்து அழிக்கின்றா ரென்தபசை
தாடகை பாவிவந்து தடுக்கிறாள் யாகமதை
அத்தகைய துஷ்டர்களை அதஞ்செய்து கொல்வதற்கு
அதிவீர ராமனை நீர் அனுப்பவேணு மென்பிறகே
என்றிவர் சொல்லையிலே இராஜன் தசரதனும்
திடுக்கிட்டு மெய்மறந்து திரேகம் நடுக்கமுற்று
தபசில் பெரியவரே தபமுனியே சௌசிகரே
நீர் நவின்ற மொழிகேட்டு நடுங்குதையா தேகமெல்லாம்
பிள்ளையை யனுப்பிவிட்டு பிராணன் தரிப்பேனோ
மைந்தனை யனுப்புதற்கு மனமுந் துணிவேனோ
அறியாத பென்குழந்தை அசுரரை வெல்வானோ
மாய அசுரர்களை மைந்தன் ஜெயிப்பானோ
இராக்ஷதரை கொல்வதற்கு யானேவருகின்றேன்
பிள்ளை சலித்திர்க்க பிறந்த ஸ்ரீராமனையான்
அனுப்பமுடியாது ஆண்டவனே சரணமென்றான்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அருந்தபசி கௌசிகனும்
கோவைப் பழம்போல கோபித்துக் கண்சிவந்து
ஆங்காரக் கோபமுடன் அதட்டி யெழுந்திருந்து
இவ்வார்த்தை கேட்பதற்கோ இங்குவந்தேன் தசரதனே
ஆகட்டு மென்றுரைக்க அருகிருந்த வசிஷ்டரவர்
தசரதன் முகம்நோக்கிச் சாந்தமாய்ச் சொல்லுகிறார்
அரசர்க் கதிபதியே அருந்தபசி தன்னுடனே
ஸ்ரீராம லக்ஷ்மணரை தீரமா யனுப்பிவிடு
எதுக்கும் அஞ்சாதே என்வார்த்தை தட்டாதே
மைந்தரா லுந்தனுக்கு மாநிலத்திற் கீர்த்தியுண்டு
புத்திரரா லுந்தனக்கு பூதலத்திற்கீர்த்தியுண்டு
அசுரரை சம்ஹரித்து அவனியில் ஜெயம்பெறுவார்

தாயைக் கொலைசெய்ய தகுமோ உமக்கிதுதான்
பத்துமாதஞ் சுமந்து பால்கொடுத்த தாயாரை
வெட்டி எறிவதற்குன் வேதத்திற் சொல்கிறதோ
தன்குற்றம் பாராமல் தனுசேந்தி ஓடிவந்தீர்
என்று-பாஷித்ததைக்கேட்ட பரசுராமன் கோபித்து
கண்கள் ரெண்டும் சிவந்து காதிற் புகையெழும்பி
நல்ல ராமாவுன் ஞாயத்தை நானறிவேன்
தந்தை யுரைப்படியே தாயைக் கொலைசெய்தேன்
என்றிவர் சொல்லையிலே ஸ்ரீராமர் தான்சிரித்து
குருவாக்யும் மீறாமல் கொன்றுவிட்டேன் தாடகையை
வேதாந்த வேதியரே வெஞ்சமர் செய்பவர்போல்
வில்லைக் கரத்தேந்தி வேகமாயேன் ஓடிவந்தீர்
சொல்லென்று ராமர்மனம் சோராமற் கேட்கையிலே
பாரோர் மனங்கலங்க பரசுராமர் சொல்லுகிறார்
ஜனகன்வில் தானொடித்து ஜனகியை மணந்தாயோ
அற்பவில்லை தானொடித்து அதிவீரனையோ
மனோகர்வம் கொண்டுநீ மமதைபாய் பேசுகிறாய்
இந்த-வில்லை வளைத்தால் இணையில்லா ராமன்நீயே
எப்போதும் உந்தனையான் எதிர்த்து அமர்பொருதேன்
என்றுசொல்லி சன்தனுசை இராமன் கையிற்கொடுத்தார்
வாங்கினார் வில்லை வளைத்துக் கணைதொடுத்து
இக்கணை யார்மீது இன்பாய் விடுகவென்றார்
இதற்குப் பரிகாரம் இன்புடனே சொல்லுமென்றார்
பார்த்தார் பரசுராமர் பயந்து மனம்நடுங்கி
எனது-அருந்தபத்தின்மீது அஸ்திரத்தை-தான்விடுவீர்
என்றுசொல்ல ஸ்ரீராமர் எய்தார் அருந்தபத்தில்
அருந்தபத்தை தான்பறித்து அகமழ பரசுராமன்
இணையில்லா ஸ்ரீராமா என்நாளும் நீவாழி
அசுரர் குலமழிக்க அவதரித்த ஸ்ரீராமா

இனிமேல்யான் வேந்தர்களை எதிர்த்து அமர்பொருதேன்
என்றுரைத்து பரசுராமர் ஏகினார் கானகத்தில்
அந்நேர வேளையிலே ஸ்ரீராமர் ஓடிவந்து
பரசுராமன் தன்பயத்தால் பயந்து விழுந்திருந்த
தந்தை தசரதனைத் தட்டி யெழுப்பலுற்றார்
கண்திறந்து பார்த்தவுடன் களைதெளிந்தான் தசரதனும்
பரசுராமர் சென்றனரோ பாலகனே சொல்லுமென்றார்
உற்ற விபரமெல்லாம் உண்மையாய்த் தானுரைத்தார்
காதாரக் கேள்வியுற்று களிப்புற்று சொல்லுகிறான்
அப்பா ரகுராமா அருமை சிகாமணியே
என்-வயற்றின் பாக்ய வசமோ வையகத்தோர் புண்ணிய
தாயார் குடல்செய்த தவப்பயனோ யானறியேன் [மோ
இந்த-ஜானகி யம்மாளின் தாலிசெய்த பாக்கியமோ
தப்பிப் பிழைத்துவந்தாய் தனயனே உன்னையெந்தன்
புத்திரனாய் உற்பவித்த புகழிலகுர் தேவனையென்
சித்தத்திற்பூசித்து சிறுலகில் வாழ்ந்திருப்பேன்
கட்டிக் கரும்பேயென் கனிரசமே சர்க்கரையே
பின்னை கலி தீர்க்கவந்த பிரியமுள்ள ஸ்ரீராமா
என்று தசரதனும் இருகரத்தினாலணைத்து
மாரோடணைத்து மதிமுகத்தை முத்தமிட்டு
உச்சிமுகர்ந்து உள்ளங்கால் முத்தமிட்டு
வையகத்தி லெக்காலும் வறுமை யடைந்தவர்க்கு
ஐஸ்வரிய முற்றதுபோல் ஆனந்த மாகவே தான்
அயோத்திக்குச் செல்வோமென்று அனைவரும் பயணமானா
வனமாய் வனங்கடந்து வாரார்கள் எல்லோரும் [ர்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிகள் தூங்கும் வனம்
காட்டானை வேங்கையுடன் கரடி புலாவும் வனம்
இவ்வனங்கடந்து எலுமிச்சந் தோப்புவிட்டு
ஆரண்யந் தான்விடுத்து அயோத்தியில் வந்தார்கள்

## ஸ்ரீராமச்சந்திரனுக்கு அயோத்தியாபுரியை மகுடாபிஷேகஞ் செய்வதற்கு ஆலோசித்தல்

இப்படியாகவேதான் இவர்களிருக்கையிலே
கைகேசியைப் பெற்றெடுத்த கேகய ராஜனுந்தான்
என்-புத்திரிபெற்ற புகழிலகும் பரதனைத்தான்
அனுப்புவீரென் றோர்திருபம் அன்புடனே தானெழுதி
தூதனிடங்கொடுத்து துரிதமா யிந்திருபம்
அயோத்தி புரியாளும் அன்பான என்மருகன்
தசரத ராஜனிடந் தருகுவா யென்றனுப்ப
அவ்விதமே நல்லதென்று அந்திருபந் தான்வாங்கி
ஆரண்ய மார்க்கமாய் அதிவிரைவாய் ஓடிவந்து
அயோத்தியிற்சென்று அரண்மனையில் வந்துநின்று
சந்தோஷமாய்திருபம் தசரதன் கைகொடுத்தான்
வாசித்துபார்த்து மன்னன் மனமகிழ்ந்து
அருகி லமர்ந்திருந்த அன்புள்ள பரதனையும்
சத்ருக்ன ராஜனையும் சந்தோஷமாகவேதான்
கேகய தேசத்திற்கு கீர்த்தியுடன் செல்வீரென்று
பாட்டனார் வீட்டிற்குப் பக்ஷமா யனுப்பிவிட்டான்
அந்நேர வேளையிலே அரண்மனையி லுள்ளோர்கள்
தசரதன்பாற் சிலவுபெற்றுச் சந்தோஷமாய்ச்சென்றார்கள்
அவரவ ரிருப்பிடத்தில் அன்பாகச் சென்றார்கள்
அன்றுபோய் மற்றநாள் அரண்மனையில் தசரதனும்
சிம்மாதனத் தமர்ந்து செங்கோல் கரத்தேந்தி
இராஜரீகம்புரிந்து இன்பா யிருக்கையிலே
சபையோர் முகம்பார்த்து தசரதன் சொல்லுகிறன்
இத்தனை நாள்வரையில் இன்பா யரசுசெய்தேன்
இன்று-புத்திரன் ராமனுக்கு புகழாய் முடிசூட்டி
அரசுரிமை தான்புரிய அனுக்கிரகம் செய்துவிட்டு

யான்-கானகத்திற்சென்று கர்த்தனை ஸ்தோத்தரித்து
அருந்தபசு செய்வதற்கு ஆலோசித்தேன் மனதில்
என்றிவர் சொல்லையிலே எல்லோரும் சம்மதித்தார்
இராமர் முகம் பார்த்து இராஜனும் சொல்லுகிறான்
மைந்தா ரகுராமா மணிமகுடந் தானணிந்து
செங்கோல் கரத்தேந்தி சீருலகை யாண்டிடுவாய்
அயோத்தியா புரியை அரசுரிமை செய்திடுவாய்
என்றிவர் சொல்லையிலே ஸ்ரீராமர் தான்பார்த்து
தந்தைமொழியைத் தடுத்துரைக்கக் கூடாமல்
மைந்தன் ஸ்ரீ ராமச்சந்திரன் மவுனமாய்த் தானிருந்தார்
தனயன் மனக்குறிப்பைத் தசரதன் தானுணர்ந்து
மகுடாபிஷேகத்திற்கு மாக்ஷிமையானதெல்லாம்
சேகரிக்கச் சொல்லிவிட்டு சென்றாரே மாளிகையில்
ஸ்ரீராமச் சந்திரனும் சென்றுவிட்டார் மாளிகையில்
அந்நேரவேளையிலே அயோத்தியை யலங்கரித்து
மாவிலைத்தோரணங்கள் மாக்ஷிமையாய் வீதியெங்கும்
அலங்காரமாகவே அன்புடனே கட்டலுற்றார்
அந்தரத்தின் கந்திருவர் அமராபுரி யிதெனவே
அதிசயிக்கும் வாறதுபோல் அழகலங்காரமுடன்
சித்திரப் பதுமைகளும் சிங்காரமாய்ப் புனைந்து
மாணிக்கம் வைரமுடன் மரகதத்தால் தூணிறுத்தி
நகரை விலைமதிக்கும் நவரத்தினமிழைத்த
சிம்மாசன மழகாய் சிறப்புடனே ஜோடித்து
மங்கள ஸ்நானஞ்செய்து மாக்ஷிமையாய் விளங்கும்
மாங்கல்ய ஸ்திரீகடன் மஹாமுனிவர் சூழ்ந்துவர
வாத்திய கோஷ்டமுடன் வையகத்தோர் சூழ்ந்துவர
கங்காநதி தீர்த்தம் காவடியில் கொண்டுவந்தார்

## மந்தரை யானவள் தனது கூனிமிர்தின ராமனுக்கு அரசுகொடாமல் ஆரண்யத்தில் துரத்தவேணு மென்னுந் துர்க்குணத்தால் கைகேசியின் மனதைக் கலைத்தல்.

இவ்விதமாகவே தான் அவர்களிருக்கையிலே
ஆதியில் ராமன் வில்லால் அடிபட்ட மந்தரை
கண்டு வயறெரிந்தாள் காதக கூனியவள்
என் கூன் நிமிர்த்திவிட்ட ஸ்ரீராமசந்திரனுக்கு
அரசுமுடி புனைந்த அயோத்தியாள பார்ப்பேனோ
கலகம் விளைத்தவனை காட்டில் துரத்துகிறேன்
என்றுமனப்பதறி இனியில்லாக் கோபமுடன்
கைகேசி மாளிகையில் காள்போல் ஓடிவந்து
என்னடியப்பா ஸ்ரீராமச்சந்திரனுக்கு
மகுடாபிஷேகஞ்செய்ய மன்னவனுஞ் சம்மதித்தான்
என்றுசொல்ல கைகேசி இவள்மனதைத் தானுணரா
சுபசெய்தி சொன்னளென்று சுருக்காயெழுந்திருந்து
நகரை விலைமதிக்கும் நவரத்ன மாலையொன்று
விருப்பமுடன் கூனிக்கு வெகுமதியாய்த் தான் கொடுத்தாள்
கைகேசி தன்மனதை கண்டுணர்ந்த மந்தரை
கோபித்துக் கண்சிவந்து கொடுத்த வெகுமதியை
வீசி எறிந்தாளே வெஞ்சினத்தால் கர்ஜ்ஜித்து
இன்றுடன் அதிகாரம் எல்லாம் பறந்ததடி
சக்களத்தியின்னே தலைமாட்டிக் கொள்ளியாச்சே
ராமன்முடி புனைந்து ராச்சியத்தை யாண்டிருந்தால்
உன்மகன் பரதனுந்தான் ஊழியனாயிருப்பான்
கௌசலையின் முன்னேநீ கைகட்டி வாய்புதைத்து
அவள்-காலினலிட்ட தொழிற் கையினாற் றான்செய்து

தாதிபோல் நீயும் தத்தளித்து நின்றாலே
நான்-ஆரைச் சதமென்பேன் அந்நியரை தஞ்சமென்பேன்
எவரைச் சதமென்று என்வயிற்றை யான்வளர்ப்பேன்
இப்படியும் பெண்டுகள்தான் இருப்பாரோ வையகத்தில்
தசரத மஹாராஜன் தந்திரமாகவேதான்
ஆசைக்கு உன்னைக்கொண்டான் அழகுக்கு மாலையிட்டான்
தாசிமைந்தன் போலத் தள்ளிவிட்டா னுன்மகனை
மர்மமா யுன்னுடைய மகனைத் துரத்திவிட்டு
கௌசலை மைந்தனுக்குக் கனக முடிபுனைந்து
சிம்மாசனத்திருத்தி செங்கோல் கரங்கொடுத்து
அயோத்தியா பட்டணத்தை அரசுபுரியவென்றான்
ஐயோ விதிவசமோ யாரிடத்திற் சொல்லிடுவேன்
தாதிபோல் யானுனக்கு சந்தோஷமாய் வந்தேனே
உன்னைநம்பி வந்தேனே உன்விதி யிவ்வாறாச்சே
நீ-சக்காளத்தி முன்பாக தவித்திடவு மானதுவே
என்னசெய்வே னென்றுசொல்லி ஏங்கி விசாரமிட்டாள்
கூனி யுரைத்தமொழி கைகேசி கேள்வியுற்று
மெத்த மனமிரண்டு மேனி விலவிலத்து
எழுத்தற வாசித்து எண்ணறக் கற்றாலும்
பெண்புத்தியாலே பிழைமோச மானதுபோல்
கலைப்பார் கலைத்தாக்கால் கல்லு முருகிவிடும்
வஞ்சனைக்காரராலே வகைமோச மாவதுபோல்
ஒன்றும் புகலாமல் உத்தமி கைகேசி
அரைநாழிகைவரையில் ஆலோசனை புரிந்து
கேடுவரும்போது மதி கெட்டு வருமென்பதுபோல்
கூனியின் கோளாலே குற்றமற்ற கைகேசி
மனது கலைந்து மதிமயக்க முற்றவளும்
என்னசெய்வேன்மந்தரை இதற்கோர் உபாயஞ்சொல்வாய்
தாயும்நீ தந்தையுந்நீ தாதியுந்நீ யல்லாமல்

மற்றவ ரெந்தனுக்கு உற்றதுணை யாவரோ
இதற்கோ ருபாயம் இன்புடனே சொல்லுமம்மா
என்றிவள் கேட்கையிலே எதிரிருந்த கூனியவள்
இதுதான் தருணமென்று இன்பாகச் சொல்லுகிறாள்
அம்மணி கைகேசி அரிவை யிளங்கொடியே
நீ-பூணும் பணிகழட்டி பூமியிலெறிந்துவிட்டு
தனியறையிற் சென்றுநீ தரையிற் புரண்டழுது
மனவிசார முற்றிருந்தால் மன்னன் தசரதனும்
வந்துவிசாரிப்பான் வாய்திறந்து பேசாதே
என்னவென்று கேட்டாலும் ஏதொன்றும் பேசாதே
கெஞ்சிகெஞ்சி கேட்டாலும் கிளிமொழியே பேசாதே
வருந்தியவன் கேட்டால் வாய்திறந்து அப்பொழுதே
இரண்டு வரமெனக்கு இன்பாய்த் தரவேணுமென்று
பிரமாணஞ் செய்தெனக்குப் பிரியமாய் கொடுப்பீரென்று
கேட்பாயே யாமாகில் கொடுப்பான் வரமுனக்கு
அத்தருணமேயெழுந்து அரசன் தசரதனை
கண்ணால் மயக்கிவிட்டு காமசவுந்தரனே
ஒருவரத்தினால்பரதன் உலகாளவேண்டுமென்றும்
மறுவரத்தால் ஸ்ரீராமன் வனவாசம் போகவென்றும்
பதினான்கு வருஷம்வரை பதியில் வருகாமல்
காடே கதியாகக் காலங்கழித்திருக்க
மன்னவா செய்வீரேல் மனமகிழுவே னென்றுரைத்தால்
அப்படியே நல்லதென்று அரசனும் சம்மதிப்பான்
அப்போதுன் சொற்படியே அனைவருங் கேட்பார்கள்
அயோத்தியி லுன் அரசு ஆர்பாட்டமாயிருக்கும்
கௌசலை கர்வமெல்லாம் கதிரவன் முன்பனிபோல்
அடங்கிவிடும் நாமெல்லாம் ஆனந்தமா யிருப்போம்
இவ்விதமாய்க் கூனிசொல்ல இன்புற்றாள் கைகேசி

## கூனியின் வார்த்தையால் கைகேசி மனமிரண்டு தசரதனிடம் வரங்கேட்குதல்.

அவ்விதமே நல்லதென்று அணிபணிகள் தான்கழட்டி
தன்னுடைய மாளிகையில் சஞ்சலமாகவேதான்
மனது விசாரமுற்று மண்மேற் புரண்டழுதாள்
அக்கோரவேளையிலே அரசன் தசரதனும்
கைகேசி மாளிகையில் களிப்புடனே வந்துநின்று
என்னடி பெண்ணே நீ இக்கோலமானதென்ன
மனவிசாரமுற்று நீ மண்மீது சாய்ந்ததென்ன
எவருன்னை வைதார்கள் இக்ஷணமே சொல்லிடு
வைதாரை என்னுடைய வாளினால் வீசுகிறேன்
அவர்கள்-தலையை யறுத்து சமுத்திரத்தில் போடுகிறேன்
ஆசைக் கருங்குயிலே அமிர்தமொழிவசனி
காமக் கருங்குயிலே கைகேசி ரத்தினமே
உன்-முத்தான வாய்திறந்து மொழிவாய்டி மானே
என்றசொல் கேள்வியுற்ற எந்திழையாள் கைகேசி
ஆசை மணவாளா ஆதிபிலெந்தனுக்கு
அளித்த வரமிரண்டும் அன்புடனே தாரேனென்று
பிரமாணிக்கஞ்செய்தால் பிரியமுடன் சொல்லுகிறேன்
என்றிவள் கேட்கையிலே இராஜன் தசரதனும்
மர்ம முணராமல் மங்கைமுகம்பார்த்து
என்பிராண நாயகியே என்னுட லுக்குயிரே
நீ-எதனை விரும்பி இன்புற்றுக் கேட்டாலும்
உன்-மனதிற் கிசைந்தவிதம் மங்கையே யான்தருவேன்
சொல்லுவாய் பெண்ணேயென்று துரிதமாய்கேட்கையிலே
காலவிபரீதத்திற் கருத்தழியு மென்பதுபோல்
கைகேசி யானவளும் கணவன்முகம்பார்த்து
எந்தனுக்கு நீர்கொடுத்த இரண்டுவரங்களிலே

ஒருவரத்தால் ஸ்ரீராமன் உலகாசையைவிடுத்து
பதினான்கு வருடம்வரை பாவனந்தனிலே
ஆரண்ய வாசியாக அலைந்து திரியவேணும்
மற்றோர் வரத்தாலென் மைந்தன் பரதனுந்தான்
மங்களானந்தமுடன் மணிமகுடந்தான் புனைந்து
சிம்மாசனத்தமர்ந்து செங்கோல் கரத்தேந்தி
இராஜரீகம் புரிய இன்பாகச் செய்திடுவீர்
இதுதானெனக்குகந்த இனியவரங்களென்றாள்
அவ்வார்த்தைக் கேட்டவுடன் அரசன் தசரதனும்
திடுக்கிட்டு மெய்மறந்து திகைத்து நடுக்கமுற்று
என்பிராண நாயகியே இவ்வார்த்தை கேட்டவுடன்
மனது நடுங்குதையோ மாதரசி யென்னசெய்வேன்
சின்னஞ் சிறுபாலன் ஸ்ரீராமச் சந்திரனை
காட்டி லனுப்புதற்கு கருத்தில் நினைத்தாயே
சிங்கம் புலிகரடி சிறுத்தை யுலாவுவனம்
இராக்ஷதர் சஞ்சரிக்கும் இருண்ட வனந்தனிலே
பாலனை யனுப்புதற்கு பட்சமாயிருக்குதடி
ராமனுக்குத் தன்பதிலாய் யானே வனம்போறேன்
பரதன் முடிபுனைந்து பாரெல்லாம் ஓர் குடைக்கீழ்
ஆண்டிருந்தாலுமென் மைந்தன் அருமை மகன்ராமன்
இந்நகரிற்றனே இருக்கட்டும் பெண்மயிலே
பிள்ளை கலிதீர்க்கப் பிறந்தஸ்ரீ ராமனடி
மைந்தன் கலிதீர்க்க வந்துதித்த ராமனடி
புத்ரகலி தீர்ப்பதற்கு பிறந்த ஸ்ரீராமனை
காட்டில் துரத்துதற்குக் கருத்தில் நினையாதே
அவனைப் பிரிந்துவிட்டு ஆவிதரிப்பேனோ
மைந்தனைத் தான்பிரிய மனது துணிவேனோ
என்னுடலுக் குயிரான உத்தம ராமனையான்
பிரிந்தேனே யானாலென் பிராணனும் போய்விடுமே

யானிறந்து நீயிருந்தால் யாதுபலன் கைகேசி
மங்கிலியந் தானிழந்து மஞ்சட் குங்குமமிழப்பாய்
இந்த அயோத்திபுரி இருண்டவனம் போலாகி
மயானம்போலாய்விடுமே மங்கையரே என்னசெய்வேன்
என்றிவர் சொல்லையிலே எந்திழையாள் கைகேசி
கலகலென தான்சிரித்து கைகொட்டி சொல்லுகிறாள்
தந்திர வார்த்தைகளைத் தளராமற் சொல்கிறீரே
கௌசலை யுந்தனுக்குக் கற்றுக்கொடுத்தாளோ
தலையணை மந்திரமோ தார்வேந்தா யுந்தனுக்கு
இராமனைத் தான்பிரிந்தால் இறந்திடுவே னென்றீரே
கௌசிகர் பின்னாலே காட்டுக் கனுப்பினீரே
அந்நாளேன் சாகவில்லை அரசர்க் கதிபதியே
தந்திரவார்த்தைகளைச் சமர்த்தாக பேசாதீர்
உபாயமா யென்மகனை ஊரைவிட்டுத் தான்துரத்தி
கௌசலை மைந்தனுக்குக் காணியாக்ஷி தான்கொடுக்க
மனதில் நினைத்தவுந்தன் மர்மங்கள் யானறிவேன்
சூரியரும் சந்திரரும் தெற்குவடக்கானாலும்
சொன்னசொல் மாறாத சோர்வுறுநீர் மன்னவரே
வார்த்தையது பொய்யானால் வையகத்தோ ரேசாரோ
பிரமாணிக்கஞ்செய்து பின்வாங்க நீதியுண்டோ
ஆணைமறுப்பாரோ அரசகுலத்துதித்தோர்
க்ஷத்திரியராய்ப்பிறந்தோர் சத்தியம்பிசகுவாரோ
பரதன்நாடாளவேணும் ராமன்காடாளவேணும்
இதுவேபிரமாணிக்கம் இராஜராஜேஸ்வரனே
என்றிவள்சொல்லையிலே எதிரிருந்த தசரதனும்
பெண்வார்த்தையாலே பிழைமோசமாச்சுதென்று
கண்ணீர்சொரிந்தழுது கலங்கிமனந்துடித்து
கட்டிலின்மேல்சாய்ந்து கனவருத்தமுற்றிருந்தார்

## கைகேசியின் வார்த்தையைக் கேள்வியுற்ற ஸ்ரீராமர் சீதா லக்ஷ்மண சமேதராய் வனவாசம் போவது.

இவ்விதமாகவே தான் இவர்களிருக்கையிலே
மந்த்ரிபிரதானியரும் மற்றுமுள்ளசேனைகளும்
அரண்மனையைச் சிங்காரித்து ஆனந்தமாயிருக்க
சங்கீதவாத்தியங்கள் மங்களமாய் முழங்க
மகுடாபிஷேகமென்று மாநிலத்தோர்கொண்டாட
பட்டாபிஷேகமென்று பாரோர் மனமகிழ்ந்தார்
ஸ்ரீராமச்சந்திரனும் சிந்தைகளித்தன்பாக
தசரதன்மாளிகையில் சந்தோஷமாய்ப்போய்பார்த்து
ஏதுமனவருத்தம் என் தந்தைக்குற்றதென்று
சந்தேகத்தாலே தான்கேட்டாரப்போது
எதிரினில்நின்றிருந்த வஞ்சிழையாள்கைகேசி
மைந்தாரகுராமா மாதாவின்வார்த்தைகேளும்
ஆதிநாளுன்தந்தை அளித்தார்வரமெனக்கு
இரண்டுவரமளித்தார் இமையவர்சாக்ஷியாக
அந்தவரமிரண்டில் அரசுபாதனுக்கும்
வனமே உனக்கென்றும் வாக்களித்தாராகையினால்
காட்டிலீரேழ்வருடம் காலங்கழித்திடுவாய்
மாதாபிதாசொல்லை மறுத்திடவேண்டாம்நீ
என்-மைந்தனைபரதன் மணிமகுடம்தானணிந்து
சிம்மாசனத்தமர்ந்து செங்கோல்கரத்தேந்தி
இராஜரீகம்புரிவான் இராமச்சந்த்ராநீதான்
காட்டினிற்சஞ்சரித்துக் காலங்கழிக்கவேண்டும்
மாதாபிதாசொற்படியே வனவாசம்போய்விடுவாய்
என்று-கைகேசிசொன்ன கடூரமொழியனைத்தும்
காதாறக்கேள்வியுற்று களிப்புற்றார் ஸ்ரீராமர்

அம்மணியுன்சொற்போல ஆரண்யஞ்செல்லுகிறேன்
மாதாவுன்சொற்போல வனவாசப்போகிறேனென்
என்று-கைகேசிபாற்புகன்று கௌசலையின்முன்னேவந்து
அம்மணியான் காட்டுக்கு அன்புடனேபோய்வருவேன்
வனவாசப்போறேனென்று மாதாவைத்தான்பணிந்து
நடந்தவிவகாரம் நலமுடனே தான்புகன்றார்
மைந்தன்சொல்கேள்வியுற்று மாதாகௌசலையும்
முகத்திலறைந்துக்கொண்டு மூர்ச்சித்துத்தான்விழுந்து
யான்பெற்றசெல்வமேநீ ஆரண்யம்போகாதே
என்றுரைத்துகௌசலையாள் இராஜன்முன் ஓடிவர
தசரதன்சோர்ந்தழுது தபங்கமனபவாடி
ஆவியிழப்பவர்போல் அசைவற்றிருக்கையிலே
மைந்தன்வனமேக மன்னனுயிர்விடுக்க
காரணமாயிருந்தாள் கைகேசியென்றெண்ணி
அழுதுதுடித்திடவும் அரண்மனையிலுள்ளோர்கள்
அதிசயமென்னவென்று ஆலோசனைபுரிய
வசிஷ்டரும்ஓடிவந்து வகைமோசமென்னவென்று
கேட்டுத்தெரிந்துக்கொண்டு கைகைமுகம்பார்த்து
உத்தமியித்தருணம் உனதுமணாளனுக்கு
உயிர்பிச்சைதான்கொடுத்து உதவுவதுன்பாக்கியமே
ஆகையால்ராமனைநீர் ஆரண்யஞ்செல்லாமல்
அயோத்தியில்தானிருக்க அன்புடனேசொல்லுமம்மா [ள்
என்று-வசிஷ்டரன்வாய்புகன்ற வார்த்தையையுங்கேளாம
சொன்னசொல்மாறுதென்று சொல்லிவிட்டாள் கைகேசி
அப்போ-தசரதராஜன் வசிஷ்டரைத்தான்பார்த்து
எனக்கு-பரதனுமுற்றுரிமை நடத்தாதீரென்றுரைத்தார்
இவ்விதமாகவேதான் இவர்களிருக்கையிலே
ஸ்ரீராமச்சந்திரனும் சுமித்திரையாள்முன்சென்று
அம்மணியான் இத்தருணம் ஆரண்யம்போய்வருவேன்

வனவாசம் போய்வருவேன் மாதாசரணமென்று
நடந்தவிபரமெல்லாம் நலமுடனே தான்புகன்றார்
அவ்வார்த்தைக் கேட்டவுடன் அலறிதுடிதுடித்து
சுமித்திரையம்மாளும் சோர்ந்துமனம்பதறி
மைந்தாரகுராமா வனத்திற்குனையனுப்ப
மனதுதுணிந்தாளோ மாபாவிகைகேசி
என்றுமனம்பதைத்து ஏங்கிதுயர்மிகுத்து
கண்ணீர்சொரிந்தழுதாள் கடலிரையும்வாறதுபோல்
ஏதுவிசேஷமென்று இலக்ஷுமணர்ஒடிவந்து
நடந்தவிபரமெல்லாம் நன்றாகக்கேள்வியுற்று
கோபத்துடனெழுந்து கொக்கரித்துஆர்பரித்து
தனுசிற்கணைதொடுத்து தமையன்முகம்பார்த்து
அண்ணாவேயுந்தனுக்கு அரசுகொடுக்காமல்
ஆரண்யம்போகச்சொன்ன அனைவரையுந்தான்ஜெயித்து
நானேயுனக்கன்பாய் நன்மகுடந்தான்புனைந்து
இராஜரீகப் புரிய இக்ஷணமேசெய்கிறேன்பார்
என்றமொழிகேட்டு ஸ்ரீராமர்தான்சிரித்து
தாய்தந்தைசொற்படியே தனயர்நடக்கவேணும்
தம்பிஇலக்ஷுமணா தணித்திடுவாயுன்கோபம்
என்றுரைத்தார்ஸ்ரீராமர் இலக்ஷ்மணரும்சம்மதித்தார்
சுமித்திரையம்மனுந்தான் சொல்லுகிறாள்லக்ஷ்மணர்க்கு
கண்மணிதன்மைந்தனே நான்பெற்றகண்மணியே
அண்ணனுடனேநீ ஆரண்யம்போய்வருவாய்
தமயன்றனைப்பிரிந்து தனியாகச்சொல்லாதே
அண்ணனைவிட்டுநீ அரைக்ஷணமும் நீங்காதே
என்றுமதியுரைக்க இலக்ஷ்மணனும்சம்மதித்தான்
அங்கேரவேளையிலே அருகிருந்தசேவகர்கள்
கைகேசிதான்கொடுத்த காவிமரவுரியை
கோதண்டராமனுக்குக் கொண்டுவந்துதான்கொடுத்தார்

ஸ்ரீராமலக்ஷ்மணரும் சிறப்புடனே தானிருந்து
வில்லைக்கரத்தேந்தி விசையுடனேவாரார்கள்
ஜானகிமாளிகையில் தனுவீர்வந்தார்கள்
ஸ்ரீராமச்சந்திரனை சீதையம்மன்பார்த்தவுடன்
தரணிபாலகந்தனுக்கு தவவேடம்வந்ததென்ன
உமக்கு-மகுடாபிஷேகமென்று மாநிலமெலாம்புகழ
மரவுரிதான்தரித்து வந்தவயணமென்ன
என்று-சீதையினவியதை ஸ்ரீராமர்கேள்வியுற்று
அணுவும்பிசகின்றி ஆதியோடந்தமுடன்
நடந்தவிபரங்கள் நலமுடனே தான்புகன்று
காட்டிற்குப்போய்வருவேன் காதலிவிடையருள்வாய்
என்றசொற்கேள்வியுற்று எந்திழையாள்ஜானகியும்
உம்மைப்பிரிந்தினியான் உலகில்வசிப்பேனோ
மன்னுடனைப்பிரிந்து மாநிலத்தில்வாழ்வேனோ
கண்ணாள உன்னுடனே காட்டுக்குநான்வருவேன்
என்றமொழிகேட்டு ஸ்ரீராமச்சந்திரனும்
தம்பிஇலக்ஷ்மணனும் தையல்சீதையுடனும்
சுமந்திரன்கொண்டுவந்த துய்யரதமேறி
அயோத்திபுரிவிடுத்து அன்பாகவாரார்கள்
குடிபடைகள்சேனையெல்லாம் கூடதொடர்ந்துவந்தார்
ஆரண்யம்வந்தபின்பு அனைவரையுந்தானனுப்பி
ஸ்ரீராமலக்ஷ்மணரும் சீதையுடன்மூவருமாய்
அயோத்திநகரைமறந்து ஆரண்யஞ்சென்றார்கள்
முனிவர்களைக்கண்டு முகமலர்ந்துவாழ்ந்திருந்தார்
அந்நேரவேளையிலே அன்புடனேமூவருமாய்
கங்கையில்ஸ்நானஞ்செய்து களிப்புடனேவீற்றிருக்க

## குகபெருமாள் ஓடம் விடுதல்.

நதியில்ஓடம்விடுக்கும் நற்குணகுகபெருமாள்
இவர்களருகில்வந்து இன்புடன்நிற்கையிலே
இலக்ஷ்மணர்பார்த்து யாரப்பாவென்றுகேட்க
ஸ்ரீராமச்சந்திரரை சேவிக்கவந்தேனென்ன
அவ்விதமேநல்லதென்று அண்ணன்முன் அழைத்துசென் [றான்
குகபெருமான் தன்மனதின் குறிப்புணர்ந்துஸ்ரீராமர்
அப்பாகுகனேயாம் ஆரண்யம் செல்வதற்கு
கங்கைகரைதாண்ட களிப்புடன் ஓடம்விடுவாய்
என்றுரைத்தார்ஸ்ரீராமர் இலக்ஷ்மணருமந்நேரம்
அயோத்தியிலுற்றதெல்லாம் அனைத்தும்விபரமதாய்
சொன்னதைக்கேட்டுகுகன் சோர்வடைந்துசொல்லுகிறு [ன்
ஸ்ரீராமலக்ஷ்மணரே சித்தமகிழ்வுடனே
இங்ஙனமேவீற்றிருந்தால் இனிபசுகப்பெறுவீர்
வேண்டும்பதார்த்தமெல்லாம் விருப்பமுடன்யான்தருவே [ன்
என்னுடனேவீற்றிருப்பீர் ஸ்ரீராமஇலக்ஷ்மணரே
என்றுகுகன்புகல இருவரும் மனமகிழ்ந்தார்
அந்நேரவேளையிலே ஸ்ரீராமச்சந்திரரும்
அப்பாகுகனேயென் அன்பான தம்பிகளில்
நீயும் ஓர் தம்பியென நினைந்து மகிழ்வடைந்தேன்
நான்-தண்டகாரண்யம் சென்று தபசிகளைசேவித்து
மறுபடியும்யான்திரும்பி வரும்போது உனைக்காண்பேன்
என்றுஸ்ரீராமர்சொல்ல எதிரிருந்தகுகபெருமான்
நல்லதுசுவாமியென்று நமஸ்காரஞ்செய்திவனும்
அனைவரையும் ஓடத்தில் அன்பாகத்தானேற்றி
கங்கைக்கரைதாண்டி களிப்புடனேகொண்டுவந்தான்
ஸ்ரீராமர்லக்ஷ்மணரும் சீதைபுடன் மூவருமாய்
ஆற்றின்கரைதாண்டி அன்புடனேவாரார்கள்

## ஸ்ரீராமர் சீதாலக்ஷ்மண சமேதராய் வனவாசியாய்ப் போன சங்கதியை சுமந்திரனாற் கேள்வியுற்ற தசரத மஹாராஜன் பரமபதமடைதல்.

இவ்விதமாய்மூவர்களும் இருண்டவனம்சென்றவுடன்
சுமந்திரன் தசரதற்குச் சொன்னான் விபரமதாய்
அவ்வார்த்தைகேள்வியுற்று அரசன் தசரதனும்
மனம்பதறி துக்கித்து மண்மேல்புரண்டழுது
கைகேசியாலேயென் காதலரைத்தான்பிரிந்தேன்
மனைவியின் வார்த்தையாலென் மக்களையாளிழந்தேன்
பெற்றுவளர்த்தெடுத்த பிள்ளைகளையாளிழந்தேன்
எத்தனை விதமுரைத்தும் இரங்கவில்லைகைகைமனம்
மன்னனைக்கொல்வதற்கு மங்கைபிறந்தனளே
தலைமாட்டுகொள்ளிதனை தான்வைத்துக்கொண்டாற்போல்
கைகேசியைமணந்து கைலாசப்போகிறேன்
பெற்றோர்குணம்பார்த்து பெண்கொள்ளவேணுமென்று
உற்றபழமொழிபேச்சுறுதியாயுற்றதையோ
என்றுமனம்பதறி இராஜன் தசரதனும்
உலகாசையைமறந்து உத்தமனுயிர்விடுத்தான்
பரமபதமடைந்தான் பக்தியுடன்நேரம்
அருகிருந்தராணியர்கள் அரசபத்னிமூவர்களும்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுத்தானழுதார்
அரண்மனையிலுள்ளவர்கள் அதிசயித்தோடிவந்தார்
வசிஷ்டருமனந்நினைத்து வகைமோசமானதென்று
தசரதன் தேகத்தை தைலத்திற்றான்விடுத்து
கேகயநாட்டிலுள்ள கீர்த்தியுள்ளபரதனுக்கு
மர்மமுடனிருப்பு மாசக்ஷிமையாய்த்தானெழுதி
தூதுவன்கையிற்றந்து துரிதமாயனுப்பிவிட்டார்
ஓலையைத்தான்வாங்கி ஓடினான் தூதுவனும்

அயோத்திபுரிவிடுத்து ஆரண்யமார்க்கமேவி
ஓடிவந்துகேகயத்தில் உத்தமனைக்கண்டானே
பரதனைத்தான்பார்த்து பக்ஷமுடன்நிருபம்
அன்புடனே தந்துவிட்டு அறிவிலைவாய்வாருமென்ன
என்ன அதிசயமோ என்றுபரதனுந்தான்
சகோதரனாகிய சத்துருக்ஞன் தன்னுடனே
பாட்டனுடன்சொல்லிவிட்டு பக்ஷமுடன்ஓடிவாரான்
வனமெல்லாந்தான்கடந்து வருகிறான் அயோத்திநகர்
மயானத்தைப்போலாக மாநிலந்தோற்றுவதும்
அந்நகரவாசிகளும் அழுகுரலாய்த்துக்கித்து
விசனமுடனிருக்கும் விபரீதகாக்ஷிகளின்
காரணம்யாதெனவே கலவரமாய்ஓடிவந்து
அரண்மனையிற்சென்று அண்ணாவென்றேயழைத்தான்
அருகிருந்தோரேல்லோரும் அழுகுரலாய்த்துக்கித்து
உன்-தமயன்வனம்சென்றார் தந்தைஉயிர்விடுத்தார்
கைகேசியம்மாளால் கலகம்விளைந்ததப்பா
என்றசொற்கேட்டவுடன் எரியுந்தணல்போல
தந்தையைக்கண்டு தயங்கிமனஞ்சோர்ந்தழுது
தாயாரின்மாளிகையில் தீவிரமாய்ஓடிவந்து
அம்மாடி என்னுடைய அண்ணன் ஸ்ரீராமரெங்கே
சொல்லம்மாவென்றதட்டி தடிதடித்துகேழ்க்கையிலே
மணாளன்தனையிழந்து மதிமயக்கமுற்றிருக்கும்
கைகேசியம்மாளுங் கண்ணீர்சொரிந்தழுது
அப்பாபரதாவென் அறிவுள்ளபுத்திரனே
துர்க்குணத்தாள்சொற்கேட்டு துயரத்திற்காளானேன்
யோசித்துணராமல் மோசத்திற்காளானேன்
எங்கேபோவானம் இடிந்ததென்றயானிருந்தேன்
பாவிதலைமீது பதறிவிழுந்ததுபோல்

அநியாயமாச்சுதப்பா அவனியோர்தானிகழ
உலகோர்பழிக்கவும்நான் உடலெடுத்தேன்புத்திரனே
எண்ணறக்கற்றும்யான் எழுத்தறவாசித்தும்
பெண்புத்தியாலே பிழைமோசம்வந்ததப்பா
என்றசொற்கேட்டவுடன் எதிரிலிருந்தமகன்
பரதன்மனம்பதறி பக்ஷமுள்ளயென்தாயே
நடந்தவிபரமெல்லாம் நலமுடனேசொல்லிடுவாய்
என்றிவன்கேழ்க்கையிலே ஏந்திழையாள்கைகேசி
சொல்வதற்குநாவெழாமல் துடித்ததப்பாவென்மனது
ஆனாலுஞ்சொல்லுகிறேன் அன்புடனேகேள்விபுத்ரா
மனதுசலியாமல் மணிமகுடந்தான்சூடி
அரசுபுரிந்திடுவாய் அறிவுள்ளபுத்திரனே
உன்தந்தையெந்தனுக்கு உண்மையாயக்காளில்
ஆதியிலெந்தனுக்கு அளித்தவரமிரண்டில்
ஒருவரத்தாலுந்தனையான் உலகத்தையாளச்செய்தேன்
மறுவரத்தால்ராமனையான் வனவாசம்போகச்செய்தேன்
உன்-தமயன்வனம்போனான் தந்தையுயிர்விடுத்தார்
மைந்தாநீயொன்றும் மனதுசலியாமல்
மணிமகுடந்தான்புனைந்து மாநிலத்தையாண்டிருப்பாய்
என்று-கைகேசிசொன்னவுடன் கடுங்கோபத்தால்பரதன்
அண்ணனைத்துரத்திவிட்டு அரசுபுரிவேனோ
இந்தத்துயரத்தை எங்குசொல்லிதீர்ப்பேனென்று
கௌசலையின்முன்சென்று கண்ணீர்சொரிந்தழுது
வனமேகும் அண்ணனைநீர் வழிமறிக்கலாகாதோ
தாயேநீபார்த்திருக்க தமயனும்போனாரோ
அண்ணனைத்தான்பிரிந்து அரைக்ஷணமும்யானிருக்கேன்
அண்ணனுடனேயான் ஆரண்யம்போவதற்கு
தாயேசெலவருள்வாய் சந்தோஷமாகவென்று
கேட்கும்பரதனுக்குக் கௌசலைசொல்லுகிறாள்

குற்றமற்றகண்மணியே குவலயத்தில்கீர்த்திமிகும்
அப்பாபரதாவென் அறிவுள்ளபுத்திரனே
உன்தாயார்சொற்கேட்டு உயிரிழந்தாருன்தந்தை
அண்ணன்வனம்போனான் அரசுரிமைநீபுரிவாய்
மணிமகுடந்தானணிந்து மாநிலத்தையாண்டிருப்பாய்
உன்தாயும்நீயுமாக உலகத்தையாண்டிருங்கள்
நான்மைந்தனைப்பெற்றும் மலடானதைப்போல
உயிரோடிழந்துவிட்டேன் உண்மையுள்ளயென்மகனை
என்றுரைத்தாள்கௌசலையும் இனியில்லாதுக்கமுடன்
பரதனிதைக்கேட்டு பதறிவயறெரிந்து
சூதறியேன்வாதறியேன் சூழ்புவிசாக்ஷியதாய்
அண்ணனைத்துரோகஞ்செய்ய அணுவேனும்எண்ணவில்லை
கைகேசிசொல்லாலே கலகங்கள்நேர்ந்ததம்மா
என்றுபரதன்புகன்றசொல்லை பக்ஷமாய்க்கேள்வியுற்று
இவனைப்போல்உத்தமர்கள் இவ்வுலகில்யாருமில்லை
என்றுமனங்குளிர்ந்து என்மகனேகண்மணியே
தந்தையிறந்ததற்குச் சடங்கனைத்துஞ்செய்திடுவாய்
ஏழுநாளாயிற்று எடுத்துத்தகனம்செய்வாய்
என்றிவள்சொல்லையிலே ஏங்கிமனந்தளர்ந்தான்
அந்நேரவேளையிலே அருகில்வசிஷ்டர்வந்தார்
வசிஷ்டர்மலரடியில் பரதன்பணிந்துநின்று
என்செய்வேனென்றுசொல்லி ஏங்கிமனந்தளர்ந்தார்
அப்பாபரதாநீ அழுதுத்தடிக்காதே
தந்தைசரீரத்தைத் தகனஞ்செய்யவேணுமென்ன
பரதனுங்கண்ணுற்று பதறியேவீழ்ந்தழுதான்
என்றைக்குக்காண்பேனுன்னை எனைப்பெற்றஐயாவே
என்றுமனம்பதறி எல்லோருடன்கூடி
சரயுநதியருகில் சவத்தையும்கொண்டுவந்து
சத்கருமம்யாவும சடங்குடனேதான்நடத்த

வதிஷ்டருமந்நேரம் பரதனுக்குசொல்லுகிறார்
உன்கையாலுற்றுரிமை உதவாதென்றுருன் தந்தை
சத்துருக்ஞன் கையாலே சடங்கனைத்தும் செய்யவென்றார்
அப்படியா வென்றலறி அதிக விசாரமுள்ள
தசரதர்க் குற்றிரிமை சகலமும் செய்தார்கள்
கௌசலை கைகேசி சுமித்ரைமூவர் தவிர
அரசபத்னி யெல்லோரும் அக்கினியில் மூழ்கிவிட்டு
அமரருலகம்சென்றார் அந்நேர வேளையிலே
வதிஷ்ட மகாமுனிவர் பரதனைத் தான்பார்த்து
மணிமகுடந் தான் புனைந்து மாநிலத்தை யாளுமென்றார்

## பரதமகாராஜன் ஸ்ரீராமரைக் காண்பதற்கு சத்ருக்ஞனை அழைத்துக்கொண்டு காட்டுக்கு வருதல்.

மகுடம் புனைவீரென்ற வதிஷ்டர் மொழிதடுத்து
அண்ணன் ரகுராமனை அழைத்து வருவோமென்று
தம்பி சத்ருக்ஞனுடன் தரணியில்வாழ் குடிபடைகள்
தாய்மார்கள் மூவருடன் சகலரும் சூழ்ந்துவர
மந்த்ரி பிரதானியரும் வதிஷ்டரும் பின்தொடர
அயோத்தி புரிவிடுத்து ஆரண்யஞ் செல்லலுற்றார்
வனமாய் வனங்கடந்து வருகிறார் பரதர்சேனை
கங்கா நதியருகில் களிப்புடனே வாரார்கள்
நதியிற் படகுதள்ளும் நல்லகுணமமைந்த
குகப்பெருமான் பார்த்தவுடன் கோபித்துக் கண்சிவந்து
மர்மமுணராமல் மனது மிகத்துடித்து
ஸ்ரீராமச் சந்திரனை சீமைவிட்டுத் தான்துரத்தி
பதியை யபகரித்த பரதன் வருகிறான்பார்
காட்டுக்குச் சென்றவர்மேல் கடும்போர் விளைப்பதற்கு

நால்வகைச் சேனையுடன் ராமன்மேற் சண்டைசெய்ய
ஆயுதபாணியாக அமர்பொருதி கொல்வதற்கு
வில்லைக் கரத்தேந்தி வேகமுடன் வாரானென்று
தன்னுடைய நேயருக்குத் தைரியமாய்ச் சொல்லுகிறார்
பக்ஷமுள்ள சேனைகளே பகைஞர்கள் வாரார்கள்
வருவோர் திரும்பும்படி வழிமடக்கித்தானடித்துத்
துரத்திவிட வேணுமென்று சொல்லுந் தருணமதில்
ஓடிவந்தார்பரதன் உத்தமன் குகனிடத்தில்
கண்ணீர் சொரிந்தழுது கவலையுற்று சொல்லுகிறார்
அப்பா குகனேயென் அண்ணனைக் கண்டாயோ
இராமரைக் கண்டாயோ இன்பமுடன் ,சொல்லுமென்றார்
நடந்த விபரமெல்லாம் நலமுடனே தான்புகன்றார்
அயோத்தியில் தானடைந்த அநியாய ஆச்சர்யத்தை
விபரமாய்த் தானுரைத்து விம்மி யழுகலுற்றார்
பார்த்தார் குகப்பெருமான் பரதரிட நன்மனதை
அண்ணனைத் தான்தேடி அழுதுகொண்டு வந்தவனின்
மனதின் குறிப்பறிந்து மர்ம முணராமல்
அடித்துத் துரத்துதற்கு ஆலோசனை புரிந்தேன்
ஐயோ சிவனேயென்று அலரி மண்மேல்விழுந்து
அப்பா பரதாவுன் அண்ணன் ரகுராமன்
தேவியும் தம்பியுமாய் சென்றுவிட்டார் சித்ரகூடம்
என்ற மொழிகேட்டு இளைய பரதாழ்வான்
ஓடத்தில் தானமர்ந்தான் உத்தமன் சேனையுடன்
ஆற்றின்கரைதாண்டி அனைவரும் வாரார்கள்
பரதர் வருகிறதை பார்த்துவிட்டார் லக்ஷமணனும்
அண்ணா ரகுராமா அதோவாரானே பரதன்
நால்வகைச் சேனையுடன் நம்மீது சண்டைசெய்ய
வில்லைக் கரத்தேந்தி வேகமுடன் வாரானே
அயோத்தி புரிவிடுத்து ஆரண்ய வாசியாக

வனவாசி யாகநாம் வந்திருக்கும் வேளையிலே
சகோதர ராச்சேயென்று சற்றும் மனமிரங்கா
அண்ணனுச்சே யென்றுசொல்லி ஆலோசனை புரியச
சண்டைக்கு வந்தவனை மண்டை புடைக்கிறேன்பார்
தனுசிற் கணைதொடுத்து சிதைக்கிறேன் பாரவனை
என்று-வில்லிற் கணைதொடுத்து வீரமுடன் நிற்கையிலே
கண்டார் ரகுராமர் கலகலென தான்சிரித்து
தம்பி இலக்ஷ்மணனே தகுமோ நமக்கிதுதான்
கூடப்பிறந்தவர்மேல் கொடும்போர் விளைப்பாரோ
தானுடா விட்டாலும் சதையாடுமென்பதுபோல்
அண்ணனையும் தம்பியையும் அன்புடனே காண்பதற்கு
ஆறுத் துயர்மிகுத்து அழுதுகொண்டு வருபவன்மேல்
சண்டைசெய்யவேணுமென்று தனுசிற் கணைதொடுத்து
பொறும்பொறும் தம்பியரே புத்தியுள்ள லக்ஷ்மணரே
என்று-ஸ்ரீராமர் சொல்லுமுன்னே தீவிரமாய் பரதன்
தமயன்முன் ஓடிவந்து சாஷ்டாங்க மாய்பணிந்து
அண்ணு பெனைப்பிரிந்து ஆரண்யம் வந்தீரோ
தம்பியைத் தான்பிரிய சம்மதமோ உந்தனுக்கு
நாம்-கூடப்பிறக்கலையா கூட்டுப்பாலுண்ணலையா
வொக்கப் பிறக்கலையா வொருமுலைப்பா லுண்ணலையா
எந்தனைத் தான்பிரிய எவ்விதமாய்த் துணிந்தீர்
கைகேசியாலேநீர் கானகத்தில் வந்தீரென்று
நமது-அன்பான தந்தையவர் ஆவியிழந்துவிட்டார்
என்றசொற் கேட்டவுடன் ஸ்ரீராமச் சந்திரனும்
சீதையும் லக்ஷ்மணனும் சித்தமிகத் துடித்து
கதறி யழுதார்கள் கடலிறையும் பாவனைபோல்
ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தி லென்பதுபோல்
ஸ்ரீராமச் சந்திரனும் சித்தவைராக்யமதாய்

தந்தையின் உற்றுரிமை தனிவனத்தில் தான்நடத்தி
பிதுர்க்கருமம்பாலையுந்தான்பிரியமுடன்செய்துவிட்டார்
ஆற்றில் தலைமுழுகி அனைவரும் வந்தார்கள்
அந்நேர வேளையிலே அருகிருந்த பரதாழ்வான்
அண்ணனைத் தான்பணிந்து அன்புடனே சொல்லுகிறார்
உன்னைப்பிரிந்தினியான் உயிர்தரிக்கேன் அண்ணாவே
அயோத்தி புரியில்வந்து அரசுரிமை தான்புரிவீர்
மகுடமுடி புனைந்து மாநிலத்தை யாளவேணும்
வருகுவீ ரண்ணாவென்று வருந்தி யழைக்கையிலே
ஸ்ரீராமச் சந்திரரும் சிரித்து மனமகிழ்ந்து
அப்பா பரதாவென் அன்புள்ள தம்பியரே
தந்தைதாய் சொற்றவறி தரணியில்வாழ்வாரோ
மாதாவின் சொற்படியே வனத்தி லீரேழ்வருடம்
வனவாசம் தீர்ந்தபின்பு வருவேன் அயோத்திபுரி
என்றிவர் சொல்லையிலே எதிரிருந்த பரதாழ்வார்
அண்ணாவே யுன்னுடனே ஆரண்ய வாசியாக
அடியேன்யான் வந்துவிட்டேன் அயோத்தியில் யாரேனும்
இராஜரீகம்புரிந்து இருக்கட்டு மென்றுசொல்ல
ஆகாய வாணியும் அக்ஷணமே வாய்திறந்து
பரதன் நாடாளவேணும் ராமன் காடாளவேணும்
பிதுர்வாக்யம் தட்டாமல் பதினன்கு வருடம்வரை
வனவாசம் செய்துவிட்டு வருவார்ஸ்ரீ ராமரென்க
இவ்வார்த்தை கேட்டவுடன் எல்லோரும் சம்மதித்தார்
இராமர் பரதனுக்கு இன்பாகச் சொல்லுகிறார்
பதினன்கு வருடஞ்சென்று பக்ஷமாய் வருகிறேன்யான்
என்வார்த்தை தட்டாதே என்பிறவி தம்பியென்றார்
ஆனல்கேள் அண்ணாவே அடியேன்மனதின்படி
உமது-பாதுகையை பெந்தனுக்கு பக்ஷமுடன்கொடுத்தால்
அதனை-சிம்மாதனத்திருத்திசேவித்துக்கொண்டிருப்பேன்

நீர்-பதினான்கு வருடஞ்சென்று பாரில் வருகாவிடில்
நான்-அக்கினியில் மூழ்கி ஆவி யிழந்திடுவேன்
இவ்வித மானவரம் இன்பாய்த் தருவீரென்ன
அவ்விதமே நல்லதென்று ஹரிராமர் சம்மதித்து
பாதுகையைத் தந்து பரதனை யனுப்பிவிட்டார்
அண்ணன் மிதியடியை அன்பாய் சிரத்தேந்தி
ஆனைசேனை யாவரையும் அயோத்திக் கனுப்பிவிட்டு
நந்திகிராமத்தில்வந்து நற்குண பரதனுந்தான்
ஆலயமேற்படுத்தி அண்ணன் மிதியடியாம்
பாதுகையைத் தான்வைத்து பக்தியுடன் பூசைசெய்து
பதினான்குவருடம்வரை பரதாழ்வா ரன்புடனே
தென்திசைபோனவர்கள் திரும்பும்நாளெண்ணிக்கொ
தெற்குமுகம்நோக்கி தெரிசித்துக் காத்திருந்தான் [ண்டு

## ஸ்ரீராமர் சீதா லக்ஷ்மண சமேதராய் வருகையில் வழியி லெதிர்த்த விராதனை சம்மாரஞ் செய்தல்.

ஸ்ரீராமச் சந்திரரும் சீதையும் லக்ஷ்மணரும்
சித்ரகூடம் தான்விடுத்து சிந்தை மிகமகிழ்ந்து
அத்திரி மஹாரிஷியை அன்புடனே சேவித்தார்
அனுசூயை ஜானகிக்கு ஆபரணந் தான்கொடுத்து
அன்பா யணிவாயென்று ஆசீர்வாதஞ் செய்தாள்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையு மன்பாக
முனிவர்களை சேவித்து முகமலர்ச்சி யாகவேதான்
அறுசுவை பதார்த்தமுடன் அன்பாய் விடைபெற்று
வனமாய் வனங்கடந்து வாரார்கள் மூவர்களும்
அந்நேர வேளையிலே அசுரன் விராதனென்போன்
சீதையைத் தானெடுத்துத் தீவிரமாய் ஓடலுற்றான்

ஸ்ரீராம லக்ஷ்மணரும் சிலையிற் கணைதொடுத்து
விராதன்மீதெய்தவுடன் வீறிட்டவன் கதறி
சீதையைத் தான்விடுத்து ஸ்ரீராமலக்ஷ்மணரை
கொன்று புசிப்போமென்று கொக்கரித்து ஓடிவந்து
அண்ணனையும் தம்பியையும் அன்புடனே தானெடுத்து
தோளின்மேற் போட்டுக்கொண்டு துரிதமாயோடுகையில்
ஜானகி மனமெலிந்து தவித்து விசனமுற்று
இந்த அநியாயம் எவர்கட்குத் தானெடுக்கும்
பாபியசுராகேள் பதைபதைத்து சாகாயோ
என்னைப் புசித்துவிட்டு இருவரையும் தான்விடுவாய்
அவரைப் புசியாதே அசுரா சரணமென்றாள்
சீதையழுகுரலை ஸ்ரீராமர் தான்கேட்டு
அஞ்சாதே பெண்ணேயான் அசுரனைகொன்றுவாரேன்
இராக்ஷதனைக் கொன்றுவிட்டு இக்ஷணமே ஓடிவாரேன்
அழுதுத் துடிக்காதே அமிர்தப் பசுங்கிளியே
என்று-விராதன் வலதுகையை வீசினார் வாளாலே
இலக்ஷ்மணன் விராதனிட இடதுகையை வெட்டிவிட்டார்
அசுரன் உயிர்விடுத்து அமரருலகு சென்றான்
ஸ்ரீராமர் லக்ஷ்மணரும் சீதையின் முன்னேவந்து
தைரிய வார்த்தைசொல்லி தன்னுடனழைத்துசென்றார்
வனமாய் வனங்கடந்து வாரார்கள் மூவர்களும்
தண்டகாரண்யம்வந்து தபசிகளைக் கண்டார்கள்
சரபங்கரைப்பணிந்து சந்தோஷமுற்றார்கள்
அங்கிருந்த மாமுனிகள் அரிராமா இவ்வனத்தில்
அசுரர்கள் அந்யாய அக்ரமத்தை யென்னசொல்வோம்
தபநிலையைத் தான்குலைத்து தபசிகளை கொன்றுதின்று
பொல்லாத துன்பங்கள் புரிகிறாராண்டவனே
நீர்-அசுரர்களைக் கொன்று ஆதரிக்கவேணுமென்று
இருகையும் தானேந்தி இருடிமுனிவரெல்லாம்

அஞ்சாதீ ரென்றுசொல்லி அபயஸ்தம் தாருமென்றார்
ஸ்ரீராமச்சந்திரனும் சிந்தை மிகமகிழ்ந்து
இராக்ஷதரைக் கொல்வதற்கு ஏந்தினேன் கோதண்டம்
அசுரரைக் கொல்வதற்கு ஆரம்பம் வந்துவிட்டேன்
உமது கிருபையினால் ஒருமிக்க ராக்ஷதரை [ல்
கும்புகும்பாய்தான்வளைத்து கொன்றிடுவேன் அஸ்திரத்தி
அஞ்சாதீ ரென்றுசொல்லி அபயஸ்தம் தான்கொடுத்தார்
அந்நேரவேளையிலே அருகிருந்த மாமுனிகள்
அகமகிழ்ச்சியாகவேதான் ஆனந்த முற்றார்கள்
இராமர் கிருபையினால் இன்புற்றிருந்தார்கள்
இவ்விதமாகவேதான் இவர்க ளிருக்கையிலே
மாமுனிக ளோர்தினத்தில் மனமகிழ்ந்து சொல்லலுற்றார்
ஸ்ரீராமச் சந்திரரே சீரிலகு மெய்த்தவத்தோன்
அகஸ்தியரை சேவித்து அன்புடனே வாருமென்றார்
இந்தமொழிகேட்டு ஸ்ரீராமலக்ஷ்மணரும்
ஜானகி தன்னுடனே சந்தோஷமாகவேதான்
அகஸ்தியர் மாளிகையில் அன்புடனே வந்தார்கள்
கண்டா ரகஸ்தியரும் களிப்புற்றா ரந்நேரம்
மாங்கனி தேங்கனியும் மதுர பலாக்கனியும்
மூவருக்கும் நல்விருந்து முகமலர்ச்சியாயளித்து
உண்ணுங்க ளென்றுசொல்லி உபசரித்தா ரந்நேரம்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையுடன் மூவருமாய்
காய்கனிதான் புசித்துக் காலங் கழித்தார்கள்
அகஸ்தியரைத் தான்பணிந்து அரிராமர் சொல்லுகிறார்
இன்னுஞ் சிலதூரம் இன்புற்று சென்றிருந்தால்
அசுர ரெதிர்ப்படுவார் அகஸ்திய மாமுனியே
இராக்ஷதரைக்கொன்று இருடிகள் துயரொழிப்பேன்
தெற்கே சிலதூரம் செல்ல விடையருள்வீர்
என்று-ஸ்ரீராமர் கேட்கையிலே சிந்தைமிக மகிழ்ந்து

அகஸ்திய ரந்நேரம் அன்பாக சொல்லுகிறார்
அப்பா ரகுராமா ஆனந்தவாழ்மார்பா
அசுரரை சங்கரித்து அமரர் துயர் ரொழித்து
இராக்ஷதரைக் கொன்றுவிட்டு எங்களைக் காப்பதற்கு
அன்பாகவேயிந்த அம்புவில்லும் பெற்றுக்கொண்டு
தென்றிசையிற் செல்வாயாகில் தேவர்கள் தான்புகழும்
உன்னுடைய தந்தைக்கு உயிர்த்தோழனாயிருந்த
ஜடாயு வெனுங்கழுகு சந்திப்பா ருங்களையே
அவரால் நியமிக்கும் ஆசிரமத்தி லிருந்து
இந்தவனங்களிலே இராக்ஷதர் வருகாமல்
அசுரரைக் கண்டாலே அஸ்திரத்தி னாற்கொன்று
தபசிலைக்கு பங்கமின்றி தற்காத்து ரக்ஷித்து
காவல் புரிந்திடுவீர் கதிர்குலத்தின் ஸ்ரீராமா
என்று அகஸ்தியரும் இன்பாய்ப் புகன்றமொழி
ஸ்ரீராமர் கேட்டவுடன் சிந்தை மிகமகிழ்ந்து
அப்படியே நல்லதையா அகஸ்திய மாமுனியே
தமது கிருபையினால் சங்கரிப்பேன் ராக்ஷதரை
அஞ்சாதீ ரென்றுசொல்லி அன்புடனே போகலுற்றார்

## ஸ்ரீராமர் சீதா லக்ஷ்மண சமேதராய் வந்து ஜடாயுவைக்கண்டு பஞ்சவடியில் வசித்திருப்பது.

ஸ்ரீராமர் லக்ஷ்மணரும் சீதையுடன் மூவருமாய்
வனமாய் வனங்கடந்து வருகிறார் மூவர்களும்
அந்த வனந்தனிலே அதிவீர ஜடாயுபக்ஷி
மலையின் மீதிலமர்ந்து மனமகிழ்ச்சி யாயிருக்க
கண்டார்கள் மூவர்களும் காக்ஷியிது வென்னவென்று
இவ்விதமாய்ப் பக்ஷிகளும் இருக்குமோ வையகத்தில்

கல்மேல் மலையிருக்கும் காரணம் போலாக
பெருத்த சரீரமுடன் பெருமலையில் வீற்றிருக்கும்
கழுகு தலைக்கர்ண கலவரமாய்த் தோற்றிடுதே
மாய இராக்ஷதனோ மர்மங்கள் யாமறியோம்
கருடனோ வென்றுசொல்லி கண்ணுற்று வாரார்கள்
ஸ்ரீராம லக்ஷமணரும் சீதா தேவியுடனே
பார்த்துக் கொண்டுவருக பக்ஷமுடன் ஜடாயு
கண்ணுற்று யோசித்து கருத்தில் மதிக்கலுற்றார்
ஆரிவர் மூவர்களும் ஆரண்யம் வாரார்கள்
தபசிகளைப் போலாக சடைமுடி தான்தரித்து
தனுசைக் கரத்தேந்தி சமர்த்தராய் வாரார்கள்
ஹரிஹரனோ பிர்மாவோ அழகுள்ள மன்மதனோ
மஹா லக்ஷ்மிபோன்ற மங்கை யிவளாரோ
ஆரென் றறிவோமென்று ஆலோசித் தன்புடனே
உற்றுற்றுப் பார்த்தாரே ஒளிசிறந்த கண்ணாலே
தனது சிநேகிதனும் தசரதன் சாயல்போல
இராமரும் லக்ஷ்மணரும் இன்பாய்த் துலங்குவதால்
ஆரப்பா வென்றுசொல்லி அன்புடனே கேட்கலுற்றார்
ஸ்ரீராமச் சந்திரரும் சிந்தை மிகமகிழ்ந்து
ஜடாயுவைப் பார்த்து சந்தோஷமாய்ச் சொல்லுகிறார்
அயோத்தி புரியாளும் அரசன் தசரதனின்
பிள்ளைகள் யாங்களென்று பிரிய முடனுரைத்தார்
அப்படியா வென்றுசொல்லி அன்பாய் ஜடாயுபக்ஷி
மலையைவிட்டுக் கீழிறங்கி மைந்தர்கள் முன்னேவந்து
என்-சிநேகிதன் தசரதனும் க்ஷேமமாவென்று கேட்டார்
என்-அண்ணனர் க்ஷேமத்தை அன்பாக சொல்லுமென்றார்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையும் விசனமுற்று
தசரதன்பேர் சொன்னவுடன் சஞ்சலத்தி லாழ்ந்தார்கள்
ஸ்ரீராமச் சந்திரனும் ஜடாயு முகம்பார்த்து

அயோத்தியில் தான்நடந்த அந்யாய அக்ரமத்தின்
அதிசய ஆச்சர்யத்தை ஆதியோடந்தமுடன்
விபரம் விபரமாக விளம்பி தசரதனும்
ஆவி விடுத்தாரென்று அரிராமர் சொல்லுற்றார்
சொன்ன மொழிகேட்டு சோர்ந்து ஜடாயுபக்ஷி
என்றைக்குக் காண்பேனுன்னை என்று மனம்பதறி
ஆரண்யந் தானதிர அடித்துப் புரண்டழுது
ஜடாயு வெனும்கழுகு சஞ்சலத் தாற்கதறி
ஆசை மிகுந்தவெந்தன் அன்பான தசரதனே
ஆவி யிழந்துநீ அமரர்பதி சென்றாயோ
என்னைப் பிரிந்துவிட்டு ஏகினாய் சொர்க்கலோகம்
உன்னைப் பிரிந்தயான் உலகில் வசிப்பேனோ
கூடப் பிறந்தவன்போல் கூட்டுறவாய் நீயிருந்து
என்னை மறந்தாயோ அயோத்திபுரி மன்னவனே
என் ஜடாயுபக்ஷி ஏங்கி விசாரமுற்றுக்
கதறி யழுகையிலே காடெங்கும் தானழுமாம்
ஜானகி யம்மாளும் தத்தளித்துத் தானழுதாள்
ஸ்ரீராமர் லக்ஷ்மணரும் சித்தந் துடித்தழுது
ஜடாயுவைத் தான்தேற்றி தைரிய வார்த்தைசொல்லி
ஐயா ஜடாயுவே அன்பான சிற்றப்பா
எங்கள்-தந்தையின் சிநேகிதரே தவத்தில் மிகுந்தவரே
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மனது கலித்திடாதீர்
என்றிவர் சொல்லையிலே அன்பாய் ஜடாயுபக்ஷி
இறக்கைக ளாலிவரை இன்பாகச் சேர்த்தணைத்து
மூக்கினால் முத்தமிட்டு மொழிவா ரொருவார்த்தை
என்-சிநேகிதன் பெற்றெடுத்த ஸ்ரீராமச் சந்திரரே
பக்ஷமா யிவ்வனத்தில் பன்னகசாலை யொன்று
சேமித்து இங்ஙனமே சேர்மை விடனிருப்பீர்

அசுரர்கள் வந்தாலே அதஞ்செய்து போட்டிடுவோம்
இராக்ஷதர்களைக் கொன்று எமலோகஞ் சேர்த்திடுவோம்
என்று ஜடாயுபக்ஷி இன்பாகச் சொல்கையிலே
கோதாவரி நதியிற் குளித்து ஸ்நானஞ்செய்து
பஞ்சவடியிற்சென்று பன்னக சாலையொன்று
இலக்ஷ்மணன் ஏற்படுத்த ஸ்ரீராமர் ஜானகியும்
மனமகிழ்ச்சி யாகவேதான் வாழ்ந்திருந்தா ரந்நேரம்
தம்பி இலக்ஷ்மணன்தான் தமயன் மதனியர்க்கும்
பசிதணிய வேணுமென்று பக்ஷமாய் வனந்தனிலே
காய்த்துக் கனிந்திருக்கும் கனிவர்க்கங் கொண்டுவர
விருக்ஷங்கள் சூழ்ந்து விளங்கும்நற் சோலைசென்று
மாங்கனியும் தேங்கனியும் மதுர பலாக்கனியும்
கொய்யா பழங்களுடன் கொடி முந்திரிப்பழமும்
இன்பான அன்னாசி இலந்தைப் பேரீச்சம்பழம்
வாழைப் பழங்களையும் விதவிதமாய்த் தான்பறித்து
அன்புடனே கொண்டுவந்து அண்ணன் மதனியரை
உண்ணுங்க ளென்றுசொல்லி உபசரித்து நிற்பாராம்
இலக்ஷ்மணர் பேருதவி ஸ்ரீராமர் தான்பார்த்து
மூன்றுபங்கி லோர்பங்கு முன்னிற்கும் லக்ஷ்மணர்க்கும்
அன்புடன் கொடுத்தாலும் அதனை யவர்வாங்கி
அண்ணன் பரதேசிபோல் ஆரண்யம் வந்திருக்க
அமுது புசித்துநாம் அகமகிழ லாகாது
தமயன் முடிதரித்துத் தரணியை யாண்டிருந்தால்
அப்போ தமுதருந்தி ஆனந்தங் கொள்வோமென்னும்
நோன்பை மறவாத நேர்மையுள்ள லக்ஷ்மணனும்
களிப்புடனே ராமர்தந்த கனிவர்க்க மத்தனையும்
பக்ஷணம் செய்யாமல் பத்திரமாய் வைத்திருந்து
மதனியர்க்கு மண்ணனுக்கும் மறுவேளை தான்கொடுப்பார்

இவருடைய பக்தியினால் ஈசன் கிருபைகூர்ந்து
பசிதாகம் நித்ரையின்றி பக்ஷமுடன் ஆதரித்தார்

## ஸ்ரீராமச்சந்திரர் சீதாலக்ஷ்மண சமேதராய் பஞ்சவடிதீரத்தில் வந்திருக்கையில் சூர்ப்பநகைவந்து மோகிப்பது.

இவ்விதமாகவேதான் இவர்களிருக்கையிலே
இராக்ஷதர் தன்னுயிர்க்கு எமனாகத் தான்பிறந்து
அசுரர் குலமழிக்க அவதரித்த சண்டாளி
இராவணன் தங்கையெனும் இராக்ஷசி சூர்ப்பநகை
இரைதேடி யுண்பதற்கு இருண்ட வனஞ்சென்று
காட்டானை சிங்கம்புலி கரடி சிறுத்தைகளை
அடித்துக் கொன்றுபுசித்து ஆற்றின் ஜலங்குடித்து
பஞ்சவடி தீரத்தில் பக்ஷமாய் வருகையிலே
ஸ்ரீராம லக்ஷ்மணரின் திருவுருவைப் பார்த்தவுடன்
காம வெறியாலே கண்ணுந் தெரியாமல்
மோக வெறியாலே மூர்ச்சித்துத் தான்விழுந்து
இந்திரரோ சந்திரரோ இருடிகள்போ லிங்குவந்தார்
மன்மத சொரூபமுள்ள மானிடர் யாரிவர்கள்
கண்டு விசாரிப்போம் காமசௌந்தரரை
இவரை யணைந்தாலே என்காதல் தீருமல்லால்
ஜீவன் நிலைக்காதென்று சிந்தை மிகமகிழ்ந்து
அந்தரத்தில் வாழ்ந்திருக்கும் அப்சரஸ்திரீகளிலும்
ககனத்தில் வாழ்ந்திருக்கும் கந்தர்வ ஸ்திரீகளிலும்
அழகு துலங்கிடவும் ஆனந்தங் கொஞ்சிடவும்
பத்தரை மாற்றுப் பசும்பொன் வடிவமைத்து

மாயகன்னி போலாக மாது வடிவெடுத்து
பஞ்சவர்ன ரவிக்கைப் பட்டாடை தானுடுத்தி
நவரத்ன ஆபரணம் நன்றாகத் தான்புனைந்து
கண்ணுக்கு மையெழுதி கஸ்தூரி பொட்டணிந்தும்
மல்லிகை முல்லையுடன் மருவு மருக்கொழுந்தும்
மன்மத பாணமுடன் மனோரஞ்சித மலர்கள்
சூரிவே ருடன்தவனம் கொண்டை தனிலணிந்து
சிறுநகை தான்புரிந்து சித்த மிகமகிழ்ந்து
அன்ன நடைநடந்து அரிராமர் முன்னேவந்தாள்
மாயகன்னி போலாக வருகின்ற ராக்ஷசியின்
உண்மை நிலையுணரா உத்தம ராமனுந்தான்
இந்த-ஆரண்யந் தன்னிலின்று ஆரோஓர் ஸ்திரீயுந்தான்
ஒருதுணையு மில்லாமல் உலாவுகின்ற காரணமேன்
அச்சம் பயமுமின்றி ஆண் துணையு மில்லாமல்
இருண்ட வனந்தனிலே இன்பாய் வருகுவதேன்
ஏதோ புதுமையிது எதிருற்றால் கேட்போமென்று
ஸ்ரீராமச் சந்திரரும் சிந்தையில் மதித்திருக்க
சுந்தர வடிவுடனே சூர்ப்பநகை வந்துநின்று
இருகரமும் தான்குவித்து இன்பமாய் சரணமிட்டாள்
அந்நேர வேளையிலே அரிராம ரேதுசொல்வார்
எங்குவந்தாய் பெண்ணணங்கே எனக்கறியச்சொல்லுவாய்நீ
அத்வான கானகத்தில் யாருந் துணையுமின்றி
வந்த வயணமென்ன விபரமாய்ச் சொல்லிடுவாய்
என்ற மொழிகேட்டு ஏதுசொல்வாள் சூர்ப்பநகை
புன்நகை தான்புரிந்து பூரித்துளமகிழ்ந்து
காம சௌந்தரனே கருதும் மொழிகேளும்
பிரம்பா வெனதுபாட்டன் பிரியமுள்ள சுந்தரனே
குபேரனென் தாயாதி குலமோ சிறந்ததுகாண்
இந்திராதி தேவர்களை ஏவற் பணிசெய்ய

அந்தமுள்ள நல்வரங்கள் அயனிடத்தில் பெற்றுக்கொண்டு
கைலை வரையெடுத்த கீர்த்தியுள்ள ராவணனும்
எந்தன் தமையனென்று இருதயத்தி லெண்ணிடுவீர்
எந்தனை நீமணந்தால் எவரும் உனைப்பணிவார்
சந்தோஷமா பென்மொழிக்குச் சம்மதிப்பீ ரென்றுரையே
என்றிவள் சொல்லையிலே ஸ்ரீராமர் தான்சிரித்து
பாதகி ராக்ஷசியே பயமில்லா வார்த்தைசொன்னாய்
குபேரனிட தங்கையே கூசாமல் வந்ததென்ன
இராவணன் கண்டாலே இருதுண்டாய்ப் போட்டிடுவான்
அச்சம் பயமில்லாமல் அடுக்கா மொழியுரைத்தாய்
அசுரருக்கும் மானிடர்க்கும் ஆகுமோ சம்பந்தம்
என்றிவர் சொல்லையிலே இராக்ஷசி சூர்ப்பநகை
ஆலோசனை புரிந்து அன்புடனே சொல்லுகிறாள்
எவரோடு யான்சுகித்து இன்புற்று வாழ்ந்தாலும்
எந்தன் குலத்தாரும் என்னுடைய அண்ணர்களும்
கண்டு மனமகிழ்வார் கவலைப் படவேண்டாம்
நீர்-இன்பா யெனைமணந்து இமையவ ரேவல்கொண்டு
மூன்று உலகத்திற்கும் முதன்மையாய்த் தானிருந்து
அரசு புரிவதற்கு அண்ணனிடஞ் சொல்லுகிறேன்
இராவணன் அரசுசெய்யும் இலங்காபுரிதனையும்
நீயே அரசுசெய்து நேர்மையாய் வாழ்ந்திருக்க
சகாயம் புரிகிறேனான் சரச மனோகரனே
என்றிவள் சொல்லையிலே ஸ்ரீராமச் சந்திரனும்
நாம்-தாயார் வயற்றிலே ஜனித்ததொரு நாள்முதலாய்
என்னென்ன அதிசயத்தை இன்பாகக் கேட்கலாச்சு
இதுவும் தலைவிதியோ என்றெண்ணி தான்சிரித்தார்
ஸ்ரீராமர் தான்சிரிக்க சீதையும் ஓடிவந்து
என்ன அதிசயத்தால் இவ்விதமாய் நகைத்தார்
கண்டுணர்வோ மென்றுவர காதகி சூர்ப்பநகை

பார்த்துவிட்டாள் ஜானகியை பதறி மனங்கொதித்து
ஆரடி யிங்குவந்தென் ஆசை மணவாளனை
அழைத்துக்கொண்டு போவதற்கு அஞ்சாமல் வந்தாயோ
தூரப்போ வென்றுசொல்லி தூத்தி அதட்டுகையில்
சீதை மனமிரண்டு ஸ்ரீராமர் தன்கழுத்தை
இருகையாற் கட்டிக்கொண்டு ஏங்கி பயமடைந்தாள்
கண்டாளே சூர்ப்பநகை காதகி சண்டாளி
காம வெறிபாலே கண்ணுந் தெரியாமல்
சீதையம்மா ளென்றெண்ணி சிந்தையில் மதித்திடாமல்
ஆரோ ஓர் ஸ்திரீயிவளும் ஆரண்ய மார்க்கம்வந்து
எமது-ஆசைமணவாளனை அழைத்தேக வந்தாளென்று
இராமரைத் தான்பார்த்து அன்பமுடன் சொல்லுகிறாள்
இன்ப மணவாளா இராக்ஷசி தானிவளே
மனிதரைக் கொன்றுதின்னும் மாய அரக்கியிவள்
அவளைத் துரத்திவிட்டு அன்புடனே வாருமென்றாள்
சூர்ப்பநகை வார்த்தைகளை ஸ்ரீராமர் தான்கேட்டு
கோபித்துக் கண்சிவந்து கோதண்ட பாணியவர்
பர்ணசாலைக்குப் பத்தினியுடனே சென்றார்

## சீதையை விழுங்கவந்த சூர்ப்பநகையை இலக்ஷ்மணர் அவயவபங்கஞ் செய்தல்.

இவ்விதமாகவே தான் இவர்களிருக்கையிலே
மையலுற்று தந்திரமாய் மாயகன்னி போலாக
சுந்தரமாய் வந்திருந்த சூர்ப்பநகை யோசித்து
அவளிருந்தால் நம்மீது ஆசைவைபாரென்றெண்ணி
நாளையதினமவளை நமது பசிதணிய
கொன்று புசித்துவிட்டால் கொழுநன் வசமாவான்
என்று மனதிலெண்ணி எதிரிலிருக்குமந்த
பர்வதத்திற்றனே பதுங்கி யொளித்திருந்தாள்

அன்றுபோய் மற்றுநாள் அருணோதயமாச்சு
ஸ்ரீராமச் சந்திரரும் ஸ்நானபானஞ் செய்வதற்கு
ஆற்றுக்குச் சென்றபின்னர் அரிவை யிளங்கொடியாள்
சீதை தனித்திருக்கச் சூர்ப்பநகை பார்த்துவிட்டாள்
இக்ஷணமே நாமிவளை எடுத்துப் புசிப்போமென்று
ஆர்ப்பரித்துக் கர்ஜ்ஜித்து ஆரண்யந் தானதிர
பேய்போல கூச்சலிட்டு பெருந்தொனியாய் சப்தித்து
இராக்ஷசி வருகிறதை இலக்ஷ்மணர் தான்பார்த்து
திடீரெனவே ஓடிவந்து தீரமுடன் கர்ஜ்ஜித்து
ஆரடி யென்றுசொல்லி அதட்டியே ஆர்பரித்து
கொண்டை மயிரையவர் கூசாமற் றான்பிடித்து
செவிநாசி தானறுத்து சேரவே தொங்கவிட்டார்
அய்யோ முறையோவென்று கூச்சலிட்டுத் தானழுதாள்
அஷ்டதிக்குப் பாலகரை அடக்கி வசப்படுத்தி
தேவாதி தேவர்களை ஜெயித்த பலமுடைய
இராவணா உன்னுடைய இன்பான தங்கை யானும்
மானிடர் கையிற்சிக்கி மதிமோச மானேனே
செவிநாசி தானறுத்து சித்ரவதை செய்துவிட்டார்
இந்த விகாரமுடன் இராக்ஷதர் முன்னேவந்தால்
பரிகாசம் செய்யாரோ பாரோர் பழித்திடவே
இந்திரனைத் தான்ஜெயித்த இந்திர ஜித்தேவுன்
அத்தைக்கு இவ்விதமாய் அநியாய மாச்சுதப்பா
எந்தன் குலத்தோரே இராக்ஷச வீரர்களே
என்கதி யிவ்வாறாச்சே எவர்தீர்ப்பா ரென்கவலை
என்று-ஒப்பாரி சொல்லியிவள் ஓங்கி யழுகலுற்றாள்
அந்நேர வேளையிலே அரிராமச் சந்திரரும்
ஜபதபந் தான்முடித்து சந்தோஷமாய்த் தான்வருக
கண்ணுற்றார் சூர்ப்பநகை கதறி புலம்புவதை
ஆரடி பெண்ணேயென்று அன்புடனே கேழ்க்கையிலே

ஸ்ரீராமச் சந்திரரை சூர்ப்பநகை தான்பார்த்து
முந்தாணி யால்முகத்தை மூடி யழுதுக்கொண்டு
ஆசை மணவாளா அழகான சுந்தரனே
மதனு உனைத்தேடி மகிழ்ச்சியாய் வந்தேனிங்கே
உன்-தம்பியென் மைத்துனனும் தப்பிதமென்றெண்ணமல்
அண்ணியின் செவிநாசி அறுப்பது நீதிதானே
ஆயினும் குற்றமில்லை ஆணழகா சொல்கிறேன் கேள்
பரிகாசத்தா லெந்தனை பக்ஷமுள்ள மைத்துனரென்
விருப்பத்தால் செவிநாசி விளையாட்டாய்த் தானறுத்தார்
குற்றமெண்ணிப் பார்ப்பவர்க்கு சுற்றமேது வையகத்தில்
மருவி சுகிப்பீரென்று மலரடியைத் தான்பணிந்தாள்
ஸ்ரீராமச் சந்திரரும் சிறுநகை தான்புரிந்து
இலக்ஷ்மணர் தன்முகத்தை இன்புற்று பார்க்கையிலே
தம்பி இலக்ஷ்மணன் தமையனுக்கு சொல்லுகிறார்
மதனியைத் தானெடுக்க மாபாவி ஓடிவந்தாள்
திடீரென்று யானிவளை தீர முடன்தடுத்து
அறுத்தேன் செவிநாசி அண்ணாவே யென்றுரைத்தார்
இலக்ஷ்மணர்சொல் கேள்வியுற்ற இராக்ஷசி சொல்லுகிறாள்
என்-ஆசை மணவாளனை அழைத்தேக வந்தவளை
என் கொழுநனை வசமாக்கிக் கொண்டுபோக வந்தவளை
சக்காளத்தி யானவளை சாசனேயான் பார்த்துவிட்டால்
கோபம் வருகாதா கொண்டுபோனல் குற்றமென்ன
அவளுக்குத் தன்பதிலாய் அன்புடனே யானிருப்பேன்
என்றிவள் சொல்லையிலே ஸ்ரீராமர் கோபித்து
எதிரிலிருந்துநீ இவ்விதமாய்ப் பேசாதே
ஆகியி லுன்பாட்டி அரும்பாவி தாடகையாள்
முனிவர் தபமழித்த மூதேவி ராக்ஷசியை
கொன்றுவிட்ட அஸ்திரம்போற் கோடி கணைகளுண்டு
அசுரரைக் கொல்வதற்கு அம்புவில்லுந் தானெடுத்து

கானகத்தில் வந்துவிட்டோம் கருத்திலே நினைந்திடுவாய்
அற்பவார்த்தை பேசாதே ஆக்கினைகள் செய்திடுவோம்
ஓடிப்போ வென்றுசொன்னார் உத்தம ராமச்சந்திரன்
ஸ்ரீராம னைப்பார்த்து சூர்ப்பநகை சொல்லுகிருள்
ஆசை மணவாளா அன்பாயென் சொற்கேளும்
நீர்-என்னை மணம்புரிந்தால் எவரும் உனைப்பணிவார்
இராக்ஷதர் நேசமுற்று எமனுக்கும் அஞ்சாமல்
மூன்றுலோகந்தனிலும் முதன்மையாய் நீயிருப்பாய்
நீங்கள்-நாட்டிற்குப் போனாலும் நானும் வருகின்றேன்
உமக்கு-ஏவல் தொழில்புரிந்து இன்பாய் சுகித்திருப்பேன்
எந்த வுருவென்னை எடுத்திடச் சொன்னாலும்
அந்த வுருவமெல்லாம் அன்புடனே யானெடுப்பேன்
என்னை மறவாதே என்பிராண நாயகரே
அவள்மீது காதலுற்று அன்பா யிருந்தாலும்
நானும் அவளுடனே நன்மனதாய் தாழ்ந்திருப்பேன்
சரசனே நீரிதற்குச் சம்மதியாவிட்டாலும்
உந்தன் சகோதரனும் ஒண்டியா யிருப்பதால்
தனியா யிருப்பதாலே சந்தோஷ மாகயென்னை
அவருடன் கூட்டிவைத்தால் அன்பா யிருந்திடுவேன்
மூக்குடன் காதறுந்த மூளியாச்சே யென்றுசொன்னால்
இடையில்லா பெண்ணுடன்யான் இன்புற்று வாழ்கிறேனே
நீ-காதுடன் மூக்கறுந்த கன்னிகையை மணம்புரிந்து
அன்பா யிருப்பாயென்று அனுக்ரகஞ் செய்வீரே
என்றிவள் சொல்லையிலே இலக்ஷ்மணன் கோபித்து
அண்ணாவே இன்னுமிவள் ஆவி யுடனிருந்தால்
அநியாய வார்த்தைகளை அநேகமாய்ச் சொல்லிடுவாள்
தனுசிற் கணைதொடுத்து சங்கரித்து விட்டாலே
பீடை தலையுமென்று பிரிய முடனுரைக்க
இன்னு மிவள்போகா இங்ஙனமே நின்றிருந்தால்

உன்-சித்தத்தி னுற்றவிதம் செய்திடுவா யென்றுரைத்தார்
இவர்-சொன்ன மொழிகேட்டு சூர்ப்பநகை தான்பயந்து
இனியிருந்தால் மோசமென்று இருதயத்திற்றான்மதித்து
ஆசையாய் வந்தவளை அநியாயஞ் செய்தவுங்கள்
கர்வத்தைத் தானடக்க கரனை யழைத்துவந்து
கலகம் விளைத்துங்களைக் காலனார்க் கனுப்புகிறேன்
இவ்விதஞ் செய்யாவிட்டால் இராவணன் தங்கையோயான்
சூரர் குலத்துதித்த சூர்ப்பநகை யானுவேனே
நல்லதடா வென்றுசொல்லி நடந்தாளே சூர்ப்பநகை
இராக்ஷசி சொற்கேட்ட ஸ்ரீராம லக்ஷ்மணரும்
அசுரர் வருவாரென்று ஆலோசனை புரிந்து
வில்லிற் சணைதொடுத்து வீரமுடன் வீற்றிருந்தார்

## சூர்ப்பநகையின் துர்ப்போதனையால் சண்டைக்கு வந்தகரன், தூஷணன், திரிசிரன் முதலான இராக்ஷதரை ஸ்ரீராமர் கொன்றுவிடுவது.

இவ்வித மாகவேதான் இவர்க ளிருக்கையிலே
மந்திரிபிர தானியரும் மற்றுமுள்ள சேனைகளும்
நாற்புரமுஞ் சூழ்ந்துநிற்க நவரத்ன மணிமகுடம்
சிரசி லணிந்துகொண்டு சிம்மா சனத்தமர்ந்து
திரிசிரன் தூஷணனும் தீரமுடன் சூழ்ந்துநிற்க
கையிற் செங்கோலேந்தி கரன்கொலுவில் வீற்றிருந்தான்
அசுராதியர்களெல்லாம் ஆனந்த மாகவேதான்
தமது புஜபலத்தைத் தாமே புகழ்ந்துக்கொண்டு
ஆர்பாட்ட மாயிருக்க அத்தருணம் சூர்ப்பநகை
காம வெறியாலே காதுடன் மூக்கிழந்து
குய்யோ முறையோவென்று கூச்சலிட்டுத் தான்கதறி
அண்ணே கரனேயென்று அரண்மனையி லோடிவந்து

ஆரண்ய மானிடரால் அங்கயீன மாச்சுதென்று
கதறி யழுதனளே கடவிறையும் பாவனைபோல்
பார்த்துவிட்டான்கரனும் பதறி மனம்பதைத்து
ஆரம்மா உன்னையிந்த அநியாயம் செய்தார்கள்
உன்-காதுடன் மூக்கரிந்த காதகரைச் சொல்லுமம்மா
கைவாளால் யானவரை கண்டதுண்ட மாகவேதான்
வெட்டி யெறிந்துவிட்டுன் விசனத்தை மாற்றுகிறேன்
துண்டுதுண்டாய் வெட்டியுந்தன் துயரத்தை மாற்றுகிறே
சொல்லம்மா வென்றிடவே சூர்ப்பநகை வாய்திறந்து [ன்
அண்ணாவே அண்ணாவே ஆர்தீர்ப்பா ரென்கவலை
ஆரிடத்திற் சொல்லி அழுதிடுவேன் அண்ணாவே
அயோத்தி புரியாளும் அரசன் தசரதனின்
மைந்தர்க ளாயுதித்த மன்மத வடிவழகர்
இராமனும் இலக்ஷ்மணனும் இவ்வனத்தில் வந்தார்கள்
ஸ்ரீராமர் பத்தினியாள் சீதையும் வந்திருந்தாள்
பஞ்சவடி தீரத்தில் பசும்பொன் வடிவமைந்த [மென்று
அந்த-அழகான பெண்ணையெந்தன் அண்ணனுக்குவேணு
இராவணர்க்கு வேணுமென்று இன்பாகத் தானெடுத்தேன்
தூக்கி யெடுக்கையிலே துஷ்டனான் ஓடிவந்து
காதுடனே மூக்கையுந்தான் கத்தியா லறுத்துவிட்டான்
நான்-அழுதுத் துடிதுடித்து அண்ணாவே யோடிவந்தேன்
என்றிவள் சொல்லியிலே எழுந்திருந்தான் கரனும்
இராவணன் தங்கையென்றும் எண்ணமற் போனார
நல்ல தவர்களையான் நசிக்கிப் பிழிந்தவர்கள்
உதிரத்தை யானருந்தி உன்பழியை தீர்க்கின்றேன்
காண்பிப்பா யென்றுசொல்லி கரனும் எழுந்திருக்க
கண்டாரே ராக்ஷதர்கள் கரனுடைய வெஞ்சினத்தை
அசுரர்க் கதிபதியே அமரரைத் தான்செயித்து
வெற்றிகொள்ளும் உன்னுடைய வெஞ்சமரை மானிடர்மு-

செலுத்துவே னென்றுரைத்தால் தேவர்கள் தான்சிரிப்பார்
கொசுவைப்பொருட்டாயெண்ணிகருட னெதிர்ப்பதுபோல்
மானிடரைத் தான்ஜெயிக்க மகராஜா போகாதிர்
நாங்களே சென்று நரர்களைச் சங்கரித்து
மென்றுதின்று பசியாறி மேன்மையுடனேவருவோம்
விடையளிப்பீ ரென்றுசொல்லி வேண்டினர் ராக்ஷதர்கள்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அசுரர்க் கதிபன்கான்
இதுவே சரியென்று இராக்ஷதர்க்குச் சொல்லுகிறன்
மானிடரைக் கொன்றுவிட்டு பாதை யாழைத்துவாரும்
என்று கரனுரைக்க இராக்ஷதர்கள் சம்மதித்து
அப்படியே நல்லதென்று ஆயுத பாணியாக
ஆரண்யம் தானதிர ஆர்பறித்து ஓடிவந்து
பஞ்சவடி தீரத்தில் பராக்ரமுடன் ஓடிவந்து
சூர்ப்பநகை காண்பித்த சுந்தரரைப் பார்த்துவிட்டார்
ஸ்ரீராம லக்ஷ்மணரின் திருமுகத்தை கண்டார்கள்
அசுரர் வருகிறதை அரிராமர் பார்த்துவிட்டார்
தம்பி இலக்ஷ்மணனை ஜானகிக்குக் காவல்வைத்து
அம்புவில்லுந் தானெடுத்து அசுரர்கள் முன்னேவந்து
சண்டைசெய்யும் வீரரானால் சமர்த்தாக வாருங்களடா
என்றிவர் சொல்லையிலே இராக்ஷதர்க ளெல்லோரும்
தனுசிற் கணைதொடுத்து சயர்த்தா யெதிர்த்தார்கள்
விருக்ஷங்கள் தான்பிடுங்கி விட்டெறிந்தார் ராமர்மீது
பர்வதத்தைத் தான்பிடுங்கி பளபளென விட்டெறிந்தார்
ஸ்ரீராமச்சந்திரனும் தீவிரமாய் வில்லெடுத்து
அஸ்திரங்களைத் தொடுத்து அசுரர்மேல் தான்விடுத்தார்
கரமிழந்தும் காலிழந்தும் சிரமிழந்தும் உடலிழந்தும்
இராக்ஷத ரெல்லோரும் இறந்து மடிந்தார்கள்
பார்த்தாளே சூர்ப்பநகை பயந்து மனம்நடுங்கி
அமர்க்களத்தை தான்விடுத்து அதிவிரைதா யோடிவந்து

கரன்முன்னே தான்விழுந்து கதறி புலம்புகிறாள்
அண்ணாவே அண்ணாவே அசுரர்கள் தான்மடிந்தார்
இராக்ஷத சேனையெல்லாம் இறந்து மடிந்தார்கள்
என்னசெய்வே னென்றுசொல்லி ஏங்கித் துடித்தழுதாள்
கண்டான் கரனுந்தான் கடுஞ்சினத்தாற் கர்ஜ்ஜித்து
நன்று மிருக்குதந்த நரர்செய்த வேடிக்கை
என்று மனதிலெண்ணி எரியுந் தணல்போல
கோபித்துக் கண்சிவந்து கொர்ஜ்ஜித்து வீரமுடன்
இத்தருணமே சென்று இரண்டு மனிதரையும்
சித்ரவதை செய்துவிட்டு திரும்புவே னென்றுரைத்து
ஆங்கார கோபமுடன் அதட்டி யெழுந்திருந்தான்
கண்டா ரசுரரெல்லாம் கரனுடைய வெஞ்சினத்தை
தனுசைக் கரத்தேந்தி தாமும் பயணமானார்
காலனுக்கும் அஞ்சாத கரனுடைய தம்பியர்கள்
திக்கெட்டும் கீர்த்திபெற்ற திரிசிரன் தூஷணனும்
தாமும் பயணமானார் தமயனுக்குப் பின்துணையாய்
இரதகஜ துரகமுடன் இராக்ஷதர்கள் சூழ்ந்துவர
தேரின்மீ தேகரனின் தீரமுடன் வருகையிலே
கானகத்து மிருகமெல்லாம் கதறியே ஓடுதுபார்
அந்தரத்து தேவர்களும் அஞ்சி பயந்திருக்க
ஆரண்ய ரிஷிகளெலாம் அரிராமா காருமென்று
சிந்தனை செய்திருக்க ஸ்ரீராம லக்ஷ்மணரும்
அசுரர் வருகிறதை அன்புடனே பார்த்துவிட்டார்
இரகுராமச் சந்திரரும் இளையவர்க்கு சொல்லுகிறார்
தம்பி இலக்ஷ்மணனே ஜானகிக்குக் காவலிரு
அரைக்ஷண நேரத்தில் அசுரரைக் கொன்றுவிட்டு
வருகிறே னென்றுரைத்து ஸ்ரீராம ரத்தருணம்
வில்லிற்கணைதொடுத்து வீரமுடன் நின்றிருந்தார்
இராமரைக் கண்டவுடன் இராக்ஷதர்கள் கொர்ஜ்ஜித்து

வில்லிற் கணைதொடுத்து வேகமுடன் விட்டார்கள்
பர்வதங்களைப் பிடுங்கி பளபளென விட்டெறிந்தார்
விருக்ஷங்களைப் பிடுங்கி வெஞ்சினத்தால் விட்டெறிந்தார்
கொன்று புசிப்போமென்று கொக்கரித்து ஓடிவர
ஸ்ரீராமச் சந்திரனும் சிலையுங் கணைதொடுத்து
அசுரர்களை யெல்லாம் அதஞ்செய்து கொல்லுகிறார்
இராக்ஷதர் சேனையெல்லாம் இறந்து மடிந்தார்கள்
இராம பாணத்தினாலே இராக்ஷதர்கள் தான் மடிந்தார்
மற்றுமுள்ள ராக்ஷதர்கள் மனமிரண்டு ஓடலுற்றார்
கண்டான் திரிசிரனும் கடுங்கோபங் கொண்டெழுந்து
ஆக்ரமித்து பற்கடித்து அரிராமர் முன்னேவந்து
தனுசிற் கணைதொடுத்து சரமாரி யாய்ப்பொழிந்தான்
கோதண்ட ராமனுந்தான் கோபத்தாற் கர்ஜ்ஜித்து
அஸ்திரங்களாலசுரன் அங்கமெல்லாம் பேர்த்தெரிந்து
திரிசிரன் சிரசிரண்டு தீவிரமாய் தானறுத்து
நான்கு கையும் தானறுத்து நாசஞ்செய் தானபின்பு
ஒருசிரசு மிருகையால் ஓடிவந்து சண்டைசெய்தான்
அரிராமச் சந்திரரும் அறுத்தா ரிருதாமும்
கடித்துன்னைக் கொல்வேனென்று மாதகனும் ஓடிவந்தான்
அஸ்திரத்தா லோர்சிரசும் அறுத்துவிட்டாரப்போது
திரிசிரன் மாண்டுவிட திகைத்து மனமயங்கி
அசுராதியர்களெல்லாம் அஞ்சிபயந் தோடலுற்றார்
அந்நேரவேளையிலே அருகிருந்த தூஷணனும்
ஓடுகின்ற ராக்ஷதரை ஓடாதீரென்றுரைத்து
இமையவர்க்கும் அஞ்சாத தீரமுள்ள ராக்ஷதரே
மனிதர்க்குத் தான்பயந்தால் மாநிலத்தோ ரேசாரோ
வருவீர் வருவீரென்று வழிமடக்கித் தானழைத்து
அனைவரையுங் கூட்டிவந்து அரிராமர்முன்விடுத்து
சண்டைசெய்து மானிடரை சிதைத்திடு வீர்களென்று

தானும்ஸ்ரீ ராமர்முன்னே தனுசேந்தி வீரமுடன்
அஸ்திரங் களைவிடுத்து ஆர்பறித்து கர்ஜ்ஜித்தான்
கண்டார் ரகுராமர் காதகரின் சேஷ்டைகளை
வில்லிற் கணைதொடுத்து வேகமுடன் தான்விடுத்து
இராக்ஷதர் சேனைகளை இரணக்களமாய் செய்துவிட்டு
பின்னும் வெகுகணைகள் விறுவிறென தான்விடுத்தார்
அசுரர்களெல்லோரும் அமர்பொருத மாட்டால்
கரமிழந்தும் சிரமிழந்தும் காலன் பதியணுகி
ஆவி யொழிந்தார்கள் அரிராமர் அஸ்திரத்தால்
பார்த்திருந்த தூஷணனும் பதைபதைத்து கோபமுடன்
பாரடா உந்தனையென் பாணத்தாற் கொல்லுகிறேன்
என்றுரைத்து ராமர்முன்னே எதிர்த்துப் பொருதுகையில்
ஸ்ரீராமச் சந்திரரும் சிலையிற் கணைதொடுத்து
தூஷணன் சிரசுதனை துணித்துவிட்டா ரப்போது
கண்டான் கரனும் கடுங்கோபத் தாற்சினந்து
மானிடனால் சேனையெல்லாம் மடிந்துவிட்டதென்னவிந்தை
என்று மனதிலெண்ணி ஸ்ரீராமச் சந்திரன்முன்
வந்தெதிர்த்து சண்டைசெய்துவன் கணையைத்தான்சொரிந்
ஸ்ரீராமர் மேனிதனில் தீவிரமாய்த் தான்விடுத்தான் [து
அந்நேர வேளையிலே அரிராமர் கோபித்து
வில்லிற் கணைதொடுத்து வீரமுடன் கரனை
இக்ஷணமே கொல்வேனென்று இழுத்தாரே நாணிதனை
இழுத்தவிசை யால்தனுசு இருதுண்டாய்த் தானொடிந்து
உலகமெல்லாந் தான்குலுங்க ஓசை கிளம்பிற்று
கண்டார் அமரரெல்லாம் கலங்கி மனந்துடித்து
ராமர்கை வில்லொடிந்த காரணத்தை யோசிக்கில்
இனியென்ன ஆபத்து இமையவர்கட் கெய்திடுமோ
என்று மனம்பதைத்து ஏங்கி விசாரமுற்று
சிந்தை மெலிந்திருக்க ஸ்ரீராம ரந்நேரம்

பரசுராமரை ஜெயித்து பத்திரமாய் வைத்திரென்ற
தனுசைக் கொடுப்பீரென்று தனதுகையை நீட்டுகையில்
வருணனால் கோதண்டம் வந்தது ராமர்கையில்
கண்டாரே தேவர்களும் களிப்புற்றா ரத்தருணம்
ஸ்ரீராமச் சந்திரரும் சிந்தை மிகமகிழ்ந்து
தனுசை வளைத்துத் தகுந்த குறிபார்த்து
காநுடைய திரேகமெல்லாம் கணைகளைத் தான்தொடுத்தா.
அஸ்திரங்கள் பட்டவுடன் ஆவிபகன் றான்காநும் [ர்
வானுலக தேவரெல்லாம் மலர்மாரி தான்பொழிந்தார்
அந்நேர வேளையிலே அரிராமச் சந்திரரும்
அமர்க்களத்தைத் தான்விடுத்து ஆனந்த மாகவேதான்
பர்ன்னக சாலையண்டை பக்ஷமுடன் வருகையிலே
தம்பி இலக்ஷ்மணனும் ஜானகியும் ஓடிவந்து
நமஸ்காரஞ் செய்தார்கள் ரகுராமச் சந்திரனுக்கு
இவ்விதமாகவேதான் இவர்க ளிருக்கையிலே
சூர்ப்பநகை யானவளும் துடிதுடித்துத் தானழுது
காமவெறி யர்லையான் காதிழந்தும் மூக்கிழந்தும்
இராக்ஷத சேனைகளை இராமனால் கொன்றுவிட்டேன்
ஐயையோ யென்னுடைய ஆவிக் குயிரான
அண்ணா திரிசிரனே அறிவுள்ள தூஷணனே
கரனே யுன்னை மனிதன் கணையினாற் கொன்றானே
உங்களை யான்பிரிந்து உயிரோ டிருப்பேனோ
யான்-பார்த்திருக்க உங்களையும் பாணத்தாற் கொன்றானே
இந்தப்-பழிக்கு பழிவாங்கா பார்தனிலே யானிருந்தால்
என்னப் பெருமையென்று இறைச்சலிட்டுத் தானழுது
இலங்காபுரி யணுகி இராவணனிடம் புகன்று
மானிடரைக் கொன்றுவிட்டு மனதின் பகைமுடிப்பேன்
என்றுசொல்லி சூர்ப்பநகை இறைச்சலிட்டு ஓடிவாரான்

## இராவணேஸ்வரனவன் மந்திரிபிரதானியருடன் கோலுவமர்ந்திருக்கையில் சூர்ப்பநகை ஒடிவந்து அசுரர்குடிக்கு ஆபத்தான கலகம் விளைப்பது.

மயனென்னுந் தச்சன்செய்த மகா வுன்னதமான
இலங்காபுரிதனிலே இமையோர் புகழ்ந்து நிற்க
சங்கீத சாஹித்தியம் சற்றும் வழுவின்றி
தும்புரு நாரதருந் திருகரத்தில் வீணையேந்தி
அசுராதியர் ஜெயத்தை அன்புடனே பாடிநிற்க
மலர்தேனுடன் ஜலத்தை வருணன் வருஷிக்கவும்
தூசின்றி வாயுதேவன் துடைத்தினிமை காற்றுவீச
இராக்ஷதர்க் கடிமையென ஏமனும் பணிந்துநிற்க
அந்தகார மின்றி அக்னி அலங்கார தீபமேந்த
கற்பகவிருக்ஷத்துடன் காமதேனு நவநிதியும்
சிந்தா மணியும்வந்து சிந்தை மகிழுடனே
இராவணன் சொற்படியே இராக்ஷதர்க் கெந்நாளும்
விரும்பியதைக் கொடுத்து மிகமகிழாய் வாழ்ந்திருக்க
பிர்ம்மதேவன் நாள்தோறும் பிரியமுடனேவந்து
புரோகிதஞ் சொல்லிவிட்டு போவார் மகிழுடனே
இவ்வித பெருமையுடன் இலங்கா புரிதனிலே
சிம்மா சனத் தமர்ந்து செங்கோல் கரத்தேந்தி
மந்திரிபிர தானியரும் மற்றுமுள்ள சேனைகளும்
இருபுறமுஞ் சூழ்ந்துநிற்க இராவணன் கொலுவிருந்தான்
அத்தருணம் சூர்ப்பநகை அழுது மனந்துடித்து
கடவிறைபும் பாவனைபோல் கதறி யழுதுக்கொண்டு
ஆரண்யம் தான்விடுத்து அரண்மனையில் ஓடிவந்து
அண்ணாவே யென்றுசொல்லி அலறியே தான்விழுந்தாள்
செவிநாசி போச்சுதென்று சித்தந் துடித்தழுதாள்

கண்டானே ராவணனுங் கடுங்கோபத் தாற்சினந்து
காதூஷன் திரிசிரனும் கைவாளால் வீசியவர்
தலையைத் தணிக்காமல் தடுமாறிப் போனாரோ
எந்தன் சகோதரியே எவருன்னை இவ்விதமாய்
அந்யாய மாகவேதான் அறுத்தார் செவிநாசி
இப்பொழுதே சொல்லிவிடு இருதுண்டாய் வெட்டுகிறேன்
தேவர்க ளானாலும் சித்ரவதை செய்திடுவேன்
இராவணன் தங்கையென்று இருதயத்தி லெண்ணமல்
பயமில்லா துந்தனையே பங்கஞ்செய்த துஷ்டர்களின்
ஊரென்ன பேரேதுவோ உண்மையைப் புகன்றிடுவாய்
இக்ஷணமே சென்றுயான் இழுத்துவந் துன்னெதிரே
சக்கைச் சக்கை யாயவர்கள் சரீரத்தைத் தானறுத்து
உயிருடனே சித்ரவதை உன்னெதிரே செய்தெந்தன்
கோபத்தைத் தீர்க்காமல் கோறேன் புசிப்பினியான்
அவர்களைக் கொல்லாமல் அன்னம் புசிக்கேனென்
வருவாயென் தங்கையென்று வருந்தியே தானழைத்தான்
இவன்-சொன்ன மொழிகேட்டு சூர்ப்பநகை யோசித்து
சுவர்வைத்துக் கொண்டலவோ சித்திரமெழுதவேணும்
என்-ஆசைக் கிசைந்த அழகு சவுந்தரரை
ஸ்ரீராம லக்ஷ்மணரை சித்ரவதை செய்துவிட்டால்
யான்-எவரை மணந்து இன்ப சுகம்பெறுவேன்
ஆசைப்ரா ணேசரிட ஆவியைப் போக்குதற்குக்
காட்டிக் கொடுத்தாலே கனமோசம் வந்துவிடும்
ஆகையினல் தந்திரமாய் அண்ணனிடஞ் சொல்லவேண்டும்
சீதையை ராவணனும் தீவிரமாய்க் கொண்டுவந்தால்
தனியா யிருப்பார்கள் சவுந்தரிய மானிடர்கள்
அத்தருணம் நாம்சென்று அவர்களுடன் வாழ்ந்திருப்போ
என்று மனதிலெண்ணி இராவணர்க்குச்சொல்லுகிறாள் [ம்
அண்ணுவே உன்னாலென் அவயவபங்கமானேன்

தமயனுக் காகவென்று சரீரம் பழுதானேன்
சொல்லுவோ மென்றாலுஞ் சோ தே யென்மனது
ஆனாலுஞ் சொல்லுகிறேன் அன்புடனே நீர்கேளும்
அயோத்தி புரியாளும் அரசன் தசரதனின்
மைந்தர்க ளாயுதித்த மன்மத சொரூபாவர்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சிலையைக் கரத்தேந்தி
சீதையென்னும் பெண்ணுடனே சித்தமை ராக்யமதாய்
மரவுரியைத் தானணிந்து மஹாரிஷிகள் போலாக
பஞ்சவடி தீரத்தில் வந்திருந்தா ரந்நேரம்
மஹாலக்ஷ்மி போலாக மாது இலங்குவதை
கண்ணாலே பார்த்துவிட்டு களிப்புற்றேன் அண்ணாவே
உந்தனுக்கு வேணுமென்று உத்தமியைத் தானெடுக்க
ஓடினேன் அண்ணாவே உடனே இலக்ஷ்மணனும்
எந்தன் செவிநாசி இருதுண்டாய் தானறுத்தான்
எனக்குத் துணைவந்த இராக்ஷத வீரருடன்
திரிசிரதூ ஷணன்கரனை ஸ்ரீராமன் கொன்றுவிட்டான்
ஆனாலும் வையகத்தில் அவளைப்போல் சுந்தரமாய்
ஆருங் கிடையாது அண்ணாவேயென் றுரைத்தாள்
சூர்ப்பநகை இவ்விதமாய்ச் சொன்ன மொழிகேட்டு
ஜானகிமேல் மையல்கொண்டு தவிக்கின்றான் ராவணனும்
தங்கை செவிநாசி தானிழந்து போனாலும்
மங்கையைக்கொண்டுவந்து மணம்புரிவேனேயாகில்
பிராணன் நிலைக்குமென்று ராவணன் மையலுற்று
எந்தனுடன் பிறந்த எனக்கிளைய சூர்ப்பநகா
உந்தன் சொற் கேட்டவுடன் உருகுதம்மா யென்மனது
சீதையின்பேர் கேட்டவுடன் ஜீவன் துடிக்குதம்மா
மன்மத பாணமென்தன் மார்புருகிப் போகுதம்மா
சித்தசன் விட்டகணை சிறுமார் புருகுதம்மா
அங்கஜன் மலர்கணையால் ஆவிதண லாகுதம்மா

சீதையின் வடிவழகின் சிங்கார லக்ஷணத்தை
அன்புடனே சொல்லுமென்று ஆசையாய்க் கேட்கலுற்று
சொன்ன மொழிகேட்டு சூர்ப்ப நகைமகிழ்ந்து. [ன்
நமதெண்ண மீடேற நல்லநா ளாச்சுதென்றும்
சீதையை ராவணன் தான் சீக்கிரமாய்க் கொண்டுவந்தால்
தனியா யிருப்பார்கள் ராமனும் லக்ஷ்மணனும்
அத்தருணம் யான்சென்று அவரைச் சுகித்திருப்பேன்
என்று மனதிலெண்ணி எதிரிருக்கும் ராவணர்க்கு
ஆசை பெருகுதற்கு அன்பாகச் சொல்லுகிறாள்
என்-கூடப் பிறந்த குலமணியே அண்ணாவே
சீதை வடிவழகைச் சொல்ல முடியுமோதான்
யான்-பார்த்தமட்டும் சொல்லுகிறேன் பக்ஷமுடனேகேட்
தங்கத்தைக் காய்ச்சித் தரையில் கவிழ்த்ததுபோல் [பீர்
பசும்பொன் வடிவமைந்து பார்த்தோர் மனமயங்க
அழகு துலங்கிடவும் ஆனந்தங் கொஞ்சிடவும்
அந்தர மகளிரெனுங் கந்தர்வ ஸ்திரீகளிலும்
ஆயிரம் பங்குக்கு அதிக அழகமைந்து
உல்லாச மாகவேதான் உலாவுகிறாள் மானிடர்முன்
மாய்கை தனைவிளைத்து மானிடரை யேமாற்றி
சூரர்களைக் கொல்லாமல் நல்ல சமயம்பார்த்து
சீதை தனித்திருந்தால் தீவிரமாய்த் தானெடுத்து
இலங்கா புரியில்வந்து இன்பாய் மணம்புரிந்து
வாழ்ந்திருப்பீ ரண்ணாவே மனமகிழ்ச்சி யாகவேதான்
என்றுரைத்தாள் சூர்ப்பநகை எழுந்திருந்தான் ராவணனும்
என்-கூடப் பிறந்தவளே குலக்கொடியே சூர்ப்பநகா [ம்
உன்-சொற்படியே சென்றுயான் இத்தருணம் மானிடரை
கொல்லாமல் தந்திரமாய் கொண்டுவாரேன் சீதையையான்
என்று மனமகிழ்ந்து இருதோளும் பூரித்து
விமானத்தின் மீதமர்ந்து வேகமுடன் வாறானே

## இராவணனின் சொற்படியே பொன்மானாய் வந்த மாரீசன் ஸ்ரீராம பாணத்தால் இறப்பது.

சீதைபின்மேல் மையலுற்று சித்தந் தடுமாறி
இலங்கா புரிவிடுத்து இருண்டவனந் தான்கடந்து
இருடிகள் சூழ் கோகரணம் இராவணனும் வந்துவிட்டான்
அந்தவனந் தனிலே அருந்தபசு தான்புரியும்
மாரீசன் கண்ணுற்று மனமகிழ்ந்து ராவணனை
அன்பா யுபசரித்து ஆசை மருமகனே
மூவுலகுந் தான்புகழும் முதல்வனாய்த் தான்விளங்கும்
இராவணேஸ் வராநீயும் இவ்வனத்தில் வந்ததென்ன
அடியேன் மனமகிழ அன்புடனே சொல்லுமென்ன
பத்துதலை ராவணனும் பக்ஷமுடன் சொல்லுகிறான்
அன்பான மாமா ஓர் அபிப்பிராய முற்றதுவே
சொல்லுவோ மென்றாலும் துடிக்குதே யென்மனது
ஆனாலும் சொல்லுகிறேன் அன்புடனே கேட்டிடுவீர்
பஞ்சவடி தீரத்தில் பயமில்லா வீரரைப்போல்
அம்புவில்லுங் கைபிடித்து அருந்தபசி போலாக
ஸ்ரீராம லக்ஷ்மணனும் சீதையுடன் வந்திருக்க
அன்பாக சூர்ப்பநகை அவ்வனத்திற் சென்றவுடன்
இராவணன் தங்கையென்று இருதயத்தி லெண்ணாமல்
உந்தன் மருமகளை உலகோர் பழித்திடவே
கைவாளி னால்மனிதர் காதுடன் மூக்கரிந்து
துரத்தியதைக் கேள்வியுற்ற திரிசிரன் தூஷணனும்
கரனும் மனிதர்முன்னே கடும்போர் விளைத்தனர்கள்
ஸ்ரீராமச் சந்திரனும் தீவிரமாய்க் கொன்றுவிட்டான்
இந்த அநியாயம் எவர்கட்குத் தானடுக்கும்
நரரை நான் ஒட்டாவென்னினான்சென்று சண்டைசெய்தால்
கண்டோர் சிரிப்பார்கள் ககனத்தோ ரேசிடுவார்

ஆகையினால் மாமாவே அதற்கோருபாயமுண்டு
பழிக்குப் பழிமுடித்தால் பார்தனிற் கீர்த்தியுண்டு
உன் துணையெனக்கிருந்தால் உபாய முடனேசென்று
ஸ்ரீராயன் தேவியென்னும் சீதையை யான்கொண்டுவந்து
பழிக்குப்பழி முடிப்பேன் பக்ஷமுடன் வாருமென்றான்
அவ்வார்த்தை கேட்டவுடன் அருகிருந்த மாரீசன்
இருகரத்தி னற்செவியை திடமெனவே தான்மூடி
அரக்கர் குடிமுழுகி அழிபாய மாவதற்கோ
சீதையினால் தென்னிலங்கை சீர்ழிந்து போவதற்கோ
ஆலோசனை புரிந்தாய் அருமை மருமகனே
பரஸ்திரீயை யிச்சித்தால் பாபமல்லோ ராவணனே
அந்நியன் தேவியின்மேல் ஆசைகொள்ளவேண்டாம்நீ
சீதையின்மே லாசையுற்றால் செத்து மடிந்திடுவாய்
ஸ்ரீராமச் சந்திரனை யாரென்று நீ நினைந்தாய்
அசுரர்களைக் கொல்வதற்கு ஆதிநாராயணனே
ஸ்ரீராமச் சந்திரனே பிறந்தான் மனிதனாக
அவன் தம்பி லக்ஷ்மணனே ஆதிசேஷனென்றுணர்வாய்
அமரர் துயர்தவிக்க ஆதி மகாலக்ஷ்மி
சீதையாகத் தான்பிறந்து ஸ்ரீராமனை மணந்தாள்
மர்மமுணராமல் மாண்டு மடியாதே
என்-தாயான தாடகையும் தம்பி சுபாகுடனே
இராக்ஷத ரெல்லோரும் இராமன்கணை யால்மடிந்தார்
நான்-தப்பிப் பிழைத்துவந்து தபசுசெய் கின்றேனே
உன்னுடனே யான்மடிய உற்ற துணை யாயழைத்தாய்
இனியா கிலுமுனது இலங்கையிற் போய்விடுவாய்
அநேக-வருஷம்வரை அருந்தபசு தான்புரிந்து
பெற்ற வரங்களினால் பெருமையுடன் சிறந்து
எவ்வுலகுந் தான்புகழும் இராவணனை னுயிருக்கும்
அருமை பெருமையெல்லாம் அழிந்திடும் தப்பாமல்

விளக்கொளியில் வீழ்ந்திறக்கும் விட்டில்போற் சாகாதே
சீதையைக் கொண்டுவ சிந்தையி லெண்ணாதே
இராமன் பகையானால் இலங்கை யழிந்துவிடும்
ஸ்ரீராமச் சந்திரனை தேவனென் றுணர்வாய்
அசுரர் குலமழிக்க அவதரித்தார் மானிடராய்
அவரை யெதிர்த்தாலோ ஆவி யொழிந்திடுவாய்
புத்ரமித் ரரதியாதிய போர்க்களத்திற் றுன் மடிவீர்
உலகாசையை மறந்து உயிரிழப்பீர் தப்பாமல்
அப்பா மருமகனே அறிவுள்ள ராவணனே
சாஸ்திர புராணங்கற்ற சமர்த்ய னாயிருந்தும்
அறிவைப் பறப்படுத்தி ஆவி யொழிக்காதே...
பெண்ணாசை கொண்டு நீ பேயாய்ப் பறக்காதே
சீதையைத் தாவென்றன் சித்தத்தி லேநினைந்து
இலங்கா புரியிற்சென்று எப்போதும் போல்சுக
அரசுரிமை தான்புரிவாய் ஆசை மருமகனே
என்று-மாரீசன் சொன்னசொல்லை மதியி லுணராமல்
இராவணன் கோபித்து இரைச்சலிட்டுச் சொல்லுகிறான்
மாமாவே உன்னுடைய மாதர்த்தி யென்னசொல்வேன்
உன்தாயார் தாடகையின் உயிரை வதைத்தார்கள்
உன்-மருமாள் சூர்ப்பநகை வனத்திற்குச் சென்றிருந்தாள்
கைவாளி னாலவளின் காதுமூக்கும் தானறுத்தார்
அவ்வித துஷ்டர்களை அதஞ்செய்துக் கொல்லாமல்
ரோஷமில்லா வார்த்தைகளை பேசுகிறீ ரென்னிடத்தில்
சரணிலே பிச்சையில்லையோ உங்களுக்கு
முகத்திலே மீசையில்லை மூடனைப்போல் பேசுகிறாய்
பழிக்குப் பழிமுடித்தால் பார்தனில் கீர்த்தியுண்டு
என்-பாட்டியைக் கொன்றவனை பாணத்தாற் கொல்லவே
கட்டாயிடப் போகாதென் றீனன் வந்திருக்க,
பகைஞர்களைப் புரழ்ந்து பாவிக்க லானீரே

என்று-இராவணன் சொன்னவுடன் எதிரிருந்த மாரீசன்
எந்தன் மருமகனே இராவணேசா உன்னுடைய
பகைமுடிக்க ராக்ஷதரின் படைகூட்டி யிப்பொழுதே
நரர்களுடன் சண்டைசெய்தால் நலமா யிருக்குமன்றி
காட்டில் தவம்புரியும் சாயி லாகாதவனை
அமர்பொருத மாட்டாமல் ஆரண்யத்தில் ஓடிவந்து
பயந்து ஒளிந்திருக்கும் பரதேசி யானயென்னை
துணையாய் வருவாயென்று சொல்வதேன் மருமகனே
என்றுசொல்ல மாரீசன் இராவணேசன் யோசித்து
மனிதரைக் கொல்வதற்கு மகாசேனை வேண்டுமோதான்
இந்தவாளாயுதத்தால் இரண்டு மனிதரையும்
வெட்டி யெறிந்து வீரசொர்க்கம் சேர்த்திடுவேன்
இராமலக்ஷ் மணரிறந்தால் இஷ்டமுள்ள நாயகியாள்
சீதை மனந்துடித்து ஜீவனைத் தான்பிரிவாள்
ஆகையினால் மாமாவே அன்புடனே பொன்மானாய்
சீதையின் முன்சென்று சித்தம் மகிழுவண்ணம்
விளையாடிக் கொண்டிருந்து வேசமுட னேயோடி
காட்டில் மறைந்தாயாகில் கன்னி தனியாவாள்
அத்தருணம் யான்சென்று அவளை யெடுத்துவந்து
அன்பாய் மணம்புரிவேன் ஆசையுள்ள மாமாவே
என்றிவன் சொல்லையிலே எதிரிருந்த மாரீசன்
தப்பிப் பிழைத்துவந்து தபஞ்செய்யும் வேளையிலும்
தலையெழுத்து தப்பாமல் தான்முடிந்த காரணம்போல்
எமனாக வந்தானே இராவணனென்றுசொல்லி
இராமன் கையில்மடிந்தால் இன்பமுடன் வைகுந்தம்
சேர்ந்து பகவானை சேவித்திருப்போமென்று
சித்தவை ராக்யமதாய் ஸ்ரீராமனைப்பணிந்து
பக்தியா யின்றோடே பரமபதம் செல்வோமென
மூவாசையு மொழித்து முதல்வனைப் பூசித்து

அப்பா மருமகனே யான்போறேன் முன்னாக
பின்னாலே நீங்களெல்லாம் பிரியமாய் வருவீரென்று
அசரீரி வார்த்தைபோல அன்புடனே சொல்லிவிட்டு
பொன்மா னுருவெடுத்துப் போகிறான் மாரீசன்
பஞ்ச வடிதீரத்தில் பக்ஷ முடனேவந்து
ஸ்ரீராம லக்ஷ்மணரை சிந்தையிற் பூசித்து
சீதையின் முன்பாக சிங்கார மாகவேதான்
துள்ளிதுள்ளித் தான்குதித்து தூரத்தில் ஓடிவதும்
அருகினில் ஓடிவந்து அன்பாய்விளை யாடுவதும்
ஆசையாய் பிடிக்கச்சென்றால் அலறியே ஓடுவதும்
சுந்தரவடிவுடனே சுற்றிசுற்றி யோடுவதும்
நாகரீக மாகவேதான் நடனம் புரிவதுயாய்
விளையாடும் புள்ளிமானின் விநோதத்தைக் கண்டவுடன்
சீதை மனமகிழ்ந்து ஸ்ரீராமச் சந்திரன்முன்
ஆசை யுடனேவந்து அன்பாகச் சொல்லுகிறாள்
என்பிராண நாதாநீர் எதிரினில் தோற்றுகின்ற
பொன்மானை யெந்தனுக்குப் பிடித்துத் தருவீரேல்
அனுதின மிதனுடனே அன்பாய் விளையாடி
கானகத்தில் நாள்தோறும் காலங் கழித்திருப்பேன்
குழந்தையைப்போலாக குலாவிமகிழ்ந்திருபபேன் [பேன்
நான்வளர்த்தகிளியைப்போல் நாள்தோறும் பார்த்திருப்
பிடித்துக் கொடுமென்று பிரியமுடன் கேட்கையிலே
அப்படியே நல்லதென்று அரிராமர் சம்மதித்து
தம்பி இலக்ஷ்மணனே தங்க சொரூபமுள்ள
இந்தமான் போலாக எங்கிலும்யான் கண்டதில்லை
தங்க நிறவடிவில் தருந்தவெண் புள்ளிகளாய்
விளங்கும் அலங்கார விநோதத்தைக் கண்டாலே
ஆச்சர்ய மாகுதென்று அரிராமர் யோசித்தார்
இலக்ஷ்மணர் கண்டுணர்ந்து இராமருக்குச் சொல்லுகிறார்

அண்ணாவே ராக்ஷதரின் அநியாய சேஷ்டையிது
பொன்மா னிதுவல்ல பொய்மானாய்த் தோற்றதண்ணா
தாடகையின் புத்திரர்கள் சுபாகுடன் மாரீசன்
அசுரா தியர்களுடன் ஆரண்யந் தன்னில்வந்து
கௌசிகர் வேள்விதனில் கலகங்கள் தான்விளைத்து
உம்முடைய பாணத்தினால் உயிரிழந்தார் ராக்ஷதர்கள்
சுபாகு மடிந்தவிட்ட சூக்ஷத்தைக் கண்டுணர்ந்து
ஓடிய மாரீசன் ஒளிவுற்ற பொன் மான்போல்
இந்நாளில் வந்துநம்மை ஏமாற்றி சூதுசெய்ய
மனதில் நினைத்துவந்தான் மான்போ லுருவெடுத்து
அண்ணாவே நம்பாதீர் அசுரர்கள் மாயமிது
நீர்-இதனைப் பிடிக்க சென்றால் இராக்ஷதர்கள் ஓடிவந்து
மதனியைத் தானெடுத்து மாயமாய்ப் போய்விடுவார்
ஆகையினா லண்ணாவே அம்புவில்லும் யானெடுத்து
இந்த-மானை தொடர்ந்துசென்று மாய அசுரர்வந்தால்
அஸ்திரத்தில் கொன்றுவிட்டு அன்புடனே யான்வருவேன்
உத்திரவு செய்வீரென்று உத்தமனுங் கைதொழுதான்
ஸ்ரீராமச் சந்திரனை சீதை நமஸ்கரித்து
என்பிராண நாயகரே இளையவர்சொல் கேட்காதீர்
தம்பியுடன் பேசிக்கொண்டு தாமதிப்பீ ராமாகில்
ஓடிவிடுந் தப்பாமல் ஒளிமிகுந்த பொன்மானும்
அதிதீவிரமாக அதனைப் பிடித்துவாரும்
மானைப் பிடித்துக்கொண்டு வருவீர் சீக்கிரமாய்
என்று ஜானகிசொல்ல ஸ்ரீராமர் யோசித்து
வனவாசம் போவோர்கள் மனையா ளுடன்சென்றால்
பற்பல துயரனைத்தும் உற்றிடு மென்பதுபோல்
என்னென்ன ஆபத்துகள் இடையூறு வந்தாலும்
பொன்மானை யான்தொடர்ந்து போகிறேன் தம்பியரே
பர்ன்னக சாலைதனில் பத்திர மாயிருப்பாய்

ஜானகி தனைப்பிரிந்து தனியாகப் போகாதே
உன்-அண்ணியைத் தான்பிரிந்து ஆரண்யம் போகாதே
அசுரர்கள் வந்தாலே அஸ்திரத்தால் கொன்றிடுவாய்
என்று-தம்பி இலக்ஷ்மணர்க்கு தைரிய வார்த்தைசொல்லி
அம்புவில்லுந் தானெடுத்து அழகுள்ள பொன்மானை
பிடித்து வருவோமென்று பிரியமுடன் ஸ்ரீராமர்
மானைத் தொடர்ந்துபோக மாரீச பொய்மானும்
ஓடியோடி யொளிந்து உலாவுவது வனங்களிலே
அருகில் நெருங்குவதும் ஆரண்யம் ஓடுவதும்
இப்படியாகவேதான் ஸ்ரீராமச் சந்திரரை
வனத்தில் வெகுதூரம் வரவழைத்து வஞ்சகமாய்
தீமுடன் ஓடுவதை ஸ்ரீராமர் கண்டுணர்ந்து
தம்பிசொன்ன வார்த்தையெல்லாம் சரியாய் முடிந்ததுவே
பொன்மானிதுவல்ல பொய்மானாய்க் காண்கிறது
அசுரர்கள் மாய்கையினால் அழகுள்ள பொன்மானாய்
இராக்ஷதன் வந்தெம்மை ஏமாற்றினனென்றுசொல்லி
கோபித்துக் கண்சிவந்து கோதண்டத்திற்கணையை
தொடுத்துமான் மேல்விடவே தேகம் பொடிப்பொடியாய்
மான்வடிவந் தான்விலகி மாரீச ராக்ஷதனும்
இலக்ஷ்மணா சீதாவென்று இறைச்சலிட்டுத் தான்விழுந்தான்
அந்நேர வேளையிலே அரிராமர் யோசித்து
தம்பிசொன்ன வார்த்தையெல்லாம் சரியா யமைந்ததுவே
சதுர்வேதந் தானுணர்ந்த சாஸ்திர க்யானியவன்
உற்ற துரைத்தானே உத்தம லக்ஷ்மணனும்
தேவாதி தேவனைப்போல் தெளிவாகச் சொன்னானே
என்பிறவி தம்பியின்சொல் எல்லாம் நிஜமாச்சே
இறப்பதற்குத் துணிந்தோ இராக்ஷதன் ஓடிவந்தான்
மாண்டு மடிவதற்கோ மாயமானாய் ஓடிவந்தான்
இவனாலே வந்ததல்ல இராக்ஷதர்கள் மோசமிது

இவனை முன்னனுப்பி இராக்ஷதர்கள் ஓடிவந்து
பர்ணசாலைதன்னில் பக்ஷமுள்ள தம்பியின்மேல்
போர்புரிகின்றாரோ போவோம் அதிதுரிதம்
ஆனாலும் தம்பியின்மேல் அசுரரெதிர்ப்பாரோ
என்று மனதிலெண்ணி ஸ்ரீராமர் வருகலுற்றார்
மாயாமானாயோடிவந்த மாரீசன் வீறிட்டு
இலக்ஷமணா சீதையென்று இறைச்சலிட்டுக் கூவினதை
கேட்டு வயிறெரிந்தாள் கிளிமொழியாள் சீதையம்மாள்
மர்மத்தைத் தானுணரா மங்கையுந் துடித்தழுதாள்
வயிற்றைப் பிசைந்துக்கொண்டு வகைமோசமாச்சுதென்று
எதிரினில் நின்றிருந்த இலக்ஷமணனைத் தான்பார்த்து
ஐயையோ மைத்துனனே உன் அண்ணன்மீது ராக்ஷதர்கள்
வெஞ்சமர் செய்வதினால் வீறிட்டவர் கதறி
இலக்ஷமணா சீதாவென்று இறைச்சலிட்டுக் கூவுகிறார்
அசுரரிடத்திற்சிக்கி அயர்பொறுக்க மாட்டாமல்
ஆவி துடிதுடித்து அலறியே கூச்சலிட்டார் [வருவீர்
உன்-அண்ணனுக்குப்பின் துணைபாய் அதிவிரைவாய்ப்போய்
என்றுரைத்தாள் சீதையப்பன் இலக்ஷமணர் யோசித்து
அண்ணனை வெல்வதற்கு அசுரராலாகாதம்மா
மாரீசன் கூக்குரலாய் மதனியே கேட்டதம்மா
பொய்மானாய் வந்திருந்த பொல்லாத ராக்ஷதனும்
மாரீசனுயிர்விடுத்து மாறுபாடாய் கூவலுற்றான்
இராமபாணத்தினாலே இராக்ஷதனுயிர்விடுத்தான்
இன்னும் அரைக்ஷணத்தில் என்றமையன் வந்திடுவார்
அழுதுத் துடிக்காதே அண்ணியரே யென்றுரைத்தான்
இத்தனை விதமாக இலக்ஷமணன் சொன்னாலும்
ஜானகியனந்துடித்து சஞ்சலமாகவேதான்
ஐயோ யென்மைத்துனரே ஆளைத்தோற்றேனே
நாரில்லா மலரானேன் நதியில்லா வயலானேன்

மணவாளனைப்பிரிந்த மாபாவி பாவிநானே
ஒருநாட் பழகிடினும் உயிர்துணையா யிருப்பார்
அந்நியர்களானாலும் ஆவிதுணையா யிருப்பார்
கூடப் பிறந்தவர்க்கு கொஞ்சமும் விசனமில்லை
தானுடா விட்டாலும் சதையாடாதோ உமக்கு
அதிவேகமாய்ச் சென்றுன் அண்ணனை யழைத்துவாரும்
இல்லாமற் போனாலே இறந்திடுவேன் தப்பாமல்
அக்னியிலேவிழுந்து ஆவி யிழந்திடுவேன்
என்று ஜானகிசொல்ல இலக்ஷ்மணர் யோசித்து
தம்பயனு மில்லாத தருணத்தி லுந்தனையான்
தனியே விடுத்துசெல்ல சஞ்சல மாகுதம்மா
எவ்வித மாய்ப்பிரிந்து ஏகுவேன் கானகத்தில்
மனது துடிக்குதம்மா மதனியே யென்ன செய்வேன்
நீர்-ஆவியொழிக்கவேண்டாம் அண்ணனை யழைத்துவாரேன்
மாண்டு மடிவதற்கு மனதில் நினையாதீர் [ன்
செத்து மடிவதற்குச் சித்தத்தி லெண்ணாதீர்
இருள்சூழ்ந்த கானகத்தில் இராக்ஷதர் மெத்தவுண்டு
மாய சொரூபமாக வந்திடுவார் ராக்ஷதர்கள்
பர்ணசாலைதனில் பத்திர மாயிருப்பீர்
யாங்கள் வரும்வரையில் யாதும் கவரின்றி
வெளியில் வருகாமல் வினைமற் றிருப்பீரென்று
கோடு கிழித்திந்தக் கோட்டைவிட்டுத் தாண்டாமல்
வீற்றிருப் பீரென்றுசொல்லி வில்லைக் கரத்தேந்தி
அண்ணனைத் தேடிக்கொண்டு அதிவிரைவாய் செல்லலுற்
இருள்சூழ்ந்த கானகத்தில் இராமரைத் தேடலுற்றார் [றுச்

இலக்ஷ்மணர் ராமரைதேடிக்கொண்டு போகுந்
தருணம் இராவணேஸ்வரன் மாயசந்நியாசி
ரூபமாய் சீதையம்மன் முன்பாக வருவது.

இராமரை தேடிக்கொண்டு இலக்ஷ்மணர் சென்றவுடன்
ஜானகி தனித்திருக்கும் சமயத்தில் ராவணனும்

தருணமிதுதானென்று சந்தோஷ முற்றவனும்
தேகை யலங்கரித்துத் தீவிரமாய்க் கொண்டெவந்து
பர்ன்னக சாலைபண்டை பக்ஷமுடன் தானிறங்கி
மாய்சந்யாசியாக மாகி முன்னே சென்று
இருகையும் தானேந்தி இந்துண்ணும் யாசகன்போல்
பிக்ஷயளிப்பீரென்று பிரியமுடன் கேழ்க்கையிலே
தலைவி யெழுகினது தப்பாதென்றே யுலகோர்
சொல்லும் பழமொழிபோல் சீதையம்மன் ஓடிவந்து
ஆரோ தபமுனிவர் ஆசிர்மம் வந்தாரென்று [ருள்
அமுதசன்னைத் தான் ருடைத்த அன்புடனே வந்துநின்
கண்டானே ராவணனும் கன்னியின்மேல் மையலுற்று
எவருடைய ஆசிர்மம் எந்தரிஷி யிங்கிருப்போர்
உமது பெயரென்ன உண்மையுடன் சொல்லுமென்ன
திருட்டுசந்யாசிமுன்னே சீதையம்மன் சொல்லுகிறுள்
ஐயா பெரியவரே அயோத்திபுரி யாண்டிருந்த
தசரதராஜன்பெற்ற தனயர்கள் நால்வருண்டு
அவர்களில் முன்பிறந்து அவனிதனில் கீர்த்தியுற்ற
காகுஸ்த ரென்பவன் கருத்தில் மதித்திடுவீர்
பிதுர்வாக்யம் தள்ளாமல் பிரியமாய் காட்டில்வந்தார்
ஜனகராஜன் பெற்றெடுத்த ஜானகியென்பேராம் [ருள்
நீர்-எங்கிருந்து எங்குபோறீர் எனக்கறியச் சொல்லுமென்
இவ்வார்த்தைக்கேள்வியுற்று இராவணனும்சொல்லுகிறுன்
மாநிலத்தோர் தான்புகழும் மாதர்கள் சிரோன்மணியே
இந்திராதியர் போற்றும் இலங்காபுரிவாசன்
அசுரர்குலத்துதித்த அதிவீர சூரனெனும்
புயவலிமை தானுடைய புகழிலகும் வள்ளலெனும்
வெற்றியுள்ள தீரன் வெஞ்சமர்கட் கஞ்சாதோன்
மன்மதனைப் பார்க்கிலும் மஹா வடிவு மிக்கான்
அந்தரத்தில் வாழ்ந்திருக்கும் கந்தர்வ ஸ்திரீகளெல்லாம்

சந்ததமும் வந்தனையும் சரசமனோகரனும்
கைலையைத் தானெடுத்த கீர்த்தி ப்ராகசனெனும்
இராவணன் வாழ்ந்திருக்கும் இலங்கையிலேயானிருப்பேன்
உங்களைப்போன்றவர்க்கு உசிதமுள்ள லங்கையதா
இராக்ஷதர் துணையிருந்தால் எல்லாசுகபோகமுண்டு
ஏதுந் துயரணுகா இன்புற்றிருப்பீரென்று
இவ்விதமாய் ராவணனும் இன்பமுடன் சொன்னவுடன்
சீதை மனந்துடித்து திருச்செவியை மூடிக்கொண்டு
ஐயா பெரியவரே அருந்தபசியானவரே
துர்க்குணமே ஒருருவாய்த் திரண்டுவந்தராக்ஷதரை
மெத்த சிலாகித்து மேன்மையுடன் பேசுறீரே
அசுரரை சங்கரித்து அமரரிடர்தீர்க்க
தனுசேந்தி யென்மணாளன் வனந்தனிலே வந்திருக்க
ஆலோசனைபுரியா அசுரனைத் தான்புகழ்ந்தீர்
என்று-ஜானகிசொல்லி இராவணன் கேள்வியுற்று
அமிர்தமொழிவசன அழகு சவுந்தரியே
இராவணன் பேர்சொன்னாலும் எட்டுதிக்கும் தானலறும்
மனிதரை யொருபொருட்டாய் மனதில் நினைந்தனையே
கைலையைச் செண்டுபோல கையிலெடுத்தவனை
வெல்வோருலகிலுண்டோ வேல்பொருதங் கண்ணாளே
என்று-இராவணசந்யாசி இன்பமுடன் சொல்லயிலே
அவன்-திருட்டுசந்யாசியென சீதையம்மன் தானினைந்து
அசுரனைத்தான்புகழ்ந்த அறிவில்லா சந்யாசி
இராவணனைத் தான்புகழ்ந்த இழிவுற்ற சந்யாசி
அந்த-காதகனை சிறையிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனனை
சின்னஞ் சிறுவயதில் ஜெயித்த பரசுராமன்
பயந்து மனம்நடுங்க பராக்ரமஞ் செய்தவரின்
புயவலிமை தானுணரா புகலாதேயென்று சொல்ல
பத்துதலை ராவணனும் பற்கடித்து கர்ஜ்ஜித்து

சொரூபந் தானெடுத்து சீதைமுன்னே வந்துநின்று
மாதே யெனைதூஷித்து மனிதரைப் புகழ்ந்தனையே
என்னுடைய சாமர்த்தியம் இப்போதே காட்டுகிறேன்
பாரென்று சொல்லியவன் பாதாளந் தானடுங்க
பர்ணசாலையுடன் பளீரெனவே பூமியையும்
வேருடன் தான்பெயர்த்து தேரின்மேல் வைத்துக்கொண்டு
சாரதி தேர்நடத்த சந்தோஷமாய்ச் சென்றானே
அத்தருணம் சீதையம்மன் அலறிமனந் துடித்து
ஐயோ விதிவசமே ஆர்தீர்ப்பா ரென்கவலை
மானைப் பிடிக்கச்சொல்லி மன்னனை யனுப்பிவிட்டு
மைத்துனரும் பின்போக மாபாவி யானனுப்பி
அசுர னிடத்திற் சிக்கி அழுதுத் துடிக்கின்றேனே
என்னசெய்வே னென்றலறி ஏங்கி விசாரமுற்றாள்

## சீதையம்மன் அழுகுரலைக் கேள்வியுற்ற ஜடாயுபக்ஷி ஓடிவந்து இராவணனுடன் சாமர்த்தியமாய் சண்டை செய்து மூர்ச்சித்து வீழ்வது.

தசமுக ராவணனும் ஜனகி முகம்பார்த்து
அன்னமே தேனே அமிர்தப் பசுங்கிளியே
கண்ணீர் சொரிந்துநீ கதறி யழவேண்டாம்
என்னை மணம்புரிந்தால் இமையோருனைத்தொழுவார்
இராவணன் தேவியென்றால் எட்டுதிக்குந் தான்புகழும்
மதுமாம்ச பக்ஷணமும் மங்கையரே வேணதுண்டு
என்னுடைய லங்கையிலே எல்லாவை போக்யமுண்டு
கட்டிலுண்டு மெத்தையுண்டு கால்பிடிக்க தாதியுண்டு
என்மனையா ளுந்தனுக்கு ஏவல் பணிசெய்து
நீ-கால்லிணு விட்டதொழில் கையாற் புரிந்திடவும்
சர்வ அதிகாரமும் சாசி யுனக்கேதருவேன்

அஞ்சாதே யென்றுசொல்லி அசுரன் மொழிந்திடவே
சீதை மனந்துடித்து சீறியே கோபித்து
பாவி இராக்ஷாவுன் பத்துத்தலைகளையும்
அஸ்திரத்தாலென் மணாளன் அறுத்தெறிந்துபோட்டபின்பு
என்-மனத்துயரம் தான்தீரும் மாபாவி யென்றுரைத்தாள்
ஜானகிசொல் கேள்வியுற்ற தசமுகனுங் கோபித்து
நல்லது பெண்ணேயுந்த நான்சமர்த்தை யானறிவேன்
நார்கட்கு ராக்ஷதர்கள் நடுங்குவரோ பெண்மயிலே
என்று-இராவணன் தானுரைத்த இழிவான சொற்கேட்டு
சீதை மனம்பதறி திகைத்து துடித்தழுதாள்
சீதையழுவதினால் பக்ஷிகளுந் தானழுமாம்
மங்கை யழுவதினால் மரங்களெல்லாந் தானழுமாம்
ஜானகி யழுவதினால் வனமெங்கும் தானழுமாம்
கரடி புலிசிங்கம் கதறியழுதிடுமாம்
சந்திரரும் சூரியரும் சஞ்சலமாய்த் தானழுதார்
தேவர் முனிவர்களும் சித்தர்களும் தானழுதார்
அந்நேர வேளையிலே அங்கிருந்த கழுகரசன்
ஜடாயுபக்ஷி யோடிவந்து ராவணனைத் தானதட்டி
போகாதே நில்லுநில்லு புத்திகெட்ட பாதகனே
என்றதட்டி கர்ஜ்ஜித்து இறக்கையினாலே யடித்து
என்னை-சீதைக்குக் காவல்வைத்து ஸ்ரீராமர் போயிருக்க
திருடிக்கொண்டு போகதே தேரை நிறுத்தென்றான்
கண்டான் தசமுகனும் கடுங்கோபத்தாற் சினந்து
ஆரடா பக்ஷியேநீ அஞ்சாம லோடிவந்து
தேரை மடக்கலுற்றாய் ஜெயவிஜய சூரனைப்போல்
என்று-தசமுகன் கேட்கையிலே ஜடாயுபக்ஷிசொல்லுகிறான்
ஸ்ரீராமன் பத்தினியை திருடிக்கொண்டு போகாதே
ரதத்தை யொடித்துன்னை நாசஞ்செய்வேனென்றுரைக்க
வழிமறிக்குந் திருடனைப்போல் வந்ததட்டி ஏசுகிறாய்

இராவணா ஸனென்றுந்தன் இருதயத்தி லெண்ணமல்
உயிரை யிழப்பதற்கோ ஓடிவந்தாய் பக்ஷியே
அஸ்திரத்தாற்கொல்வேனென்று அதட்டித்தாத் தரையில்
பாதத்தைப் பிடித்துக்கொண்டு ராவணர்க்கு சொல்லுகிறார்
ஒருவன் மனைவிதனை ஒருவர் விரும்பலாமோ
அந்நியன் தேவியின்மேல் ஆசை வையாதேபாவி
ஸ்ரீராமன் தேவியெனும் சீதையை விட்டுவிடு
தேரைவிட்டுக் கீழிறக்கு தேவர்தொழும் ஜானகியை
ஸ்ரீராம ரந்தனையே சீதைக்குக் காவல்வைத்து
அசுரரைக் கொல்வதற்கு ஆரண்யஞ் சென்றிருக்க
யாருமில்லா வேளையிலே யாசகன்போ லோடிவந்து
சீதையைத் தானெடுத்து தேர்மீதி லேற்றிக்கொண்டு
திருடன்போ லோடுவது தீரமோ யுந்தனுக்கு
சமர்த்துடைய வீரனால் சண்டைசெய்வா யென்னுடனே
பெண்டுகள்போல்வீண்வார்த்தை பேசாதேயென்றுரைத்
பக்ஷிசொற் கேள்வியுற்று பற்கடித்து ராவணனும் [நார்
நாணுசிற் கணைதொடுத்து ஜடாயுவின் மேல்விடுத்தான்
கழுகரசன் கொக்கரித்துக் கடுஞ்சினத்தாற் கர்ஜ்ஜித்து
அசுரன் தொடுத்தகணை அனைத்தையும் தானொடித்து
மூக்கினாலேரதத்தை முட்டி யுடைத்ததுவே
ஆச்சரிய முற்றசுரன் அனேக கணைதொடுத்தான்
பக்ஷியைக் கொல்வோமென்று பராக்ரமஞ் செய்கையிலே
ஜடாயுபக்ஷி மூக்கினாலே சாரதியைக் கொன்றுவிட்டு
குதிரைகளைக் கொன்று கெர்ஜ்ஜித்து வீரமுடன்
இறக்கையால் மோதி இராவணனைத் தானடித்து
காலாலும் மூக்காலும் கைவில்லைத் தானொடித்து
பத்துத் தலைகளையும் பனங்காயைப் போலாக [ய்ய
கொத்திகொத்தித் தான்பிடுங்கி கொக்கரித்துசண்டைசெ

பார்த்தானே ராவணனும் பயந்து மனந்துடித்து [த்து
ூதை-எவ்விதமாய் கொல்வதென்று இராவணனும் யோசி
உயிர்நிலையைத்தானுணர்ந்து உபாயமாய்க்கொல்வோமென்
மனதில் நினைத்துக்கொண்டு மர்மத்தைக் காட்டாமல் [று
கழுகே வுன்வீரமெல்லாம் கவனித்துளமகிழ்ந்தேன்
சமானமாய் நாமிருவர் சண்டைசெய்தோ மானாலும்
உயிர்நிலையைத் தானுணர்ந்து யுத்தம் புரிவோமாகில்
நன்றாயிருக்குமென்று நான்பதித்தேனுகையினால்
உன்னிஷ்டமெந்தனுக்கு ஒளியாமற் சொல்லுமென்றான்
இவ்வார்த்தை கேட்டபக்ஷி இறகிலேன் ஆவிநிலை
இருக்கிறதன் ஆவிநிலை இராவணா சொல்லுமென்ன
எந்தன் பெருவிரலில் எனது உயிர் நிலையும்
இருக்கின்ற துண்மையாக என்றுரைத்தான் ராவணனும்
அப்படியே நல்லதென்று அவ்விருவர் சண்டைசெய்தார்
அரசனும் ஜடாயுபக்ஷி ஆக்ரமித்து சண்டைசெய்ய
இராவணன் பெருவிரலை இருதுண்டாய் வீழ்ந்துவிட
கழுகரசன் மூக்கினாலே கடித்துதறிப்போட்டவுடன்
மறுபடியும் பெருவிரல்தான் வளர்ந்துவிட்ட தப்போது
இராக்ஷதன் மோசத்தை எண்ணிவிசார மிட்டார்
அத்தருணம் ராவணனும் ஆக்ரமித்து பற்கடித்து
ஜடாயுபக்ஷி முன்னாலே சமர்த்துடனே ஓடிவந்து
கூர்வாளினால்கழுகு குறித்த உயிர்நிலையாம்
இறக்கையை வெட்டினதால் இராமாவென்றேயலறி
மரணமூர்ச்சை யாகவேதான் மண்மீதினிற் சோர்ந்து
சரீரத்தில விலத்துத் தத்தளித்து வீழ்ந்து விட்டார்
அத்தருணம் சீதையம்மன் அழுதுபனைந்துடித்து
ஐயையோ மாமாவே ஆவி யொழிந்தீரோ
எனக்குத் துணைவந்து இறக்கையற்று வீழ்ந்தாயோ
காட்டிலந்த மாமனையும் காட்டிலந்த மாமனையும்

உயிரிழக்கச் செய்தேனே ஓ ஹோ விதிவசமே
என்று ஜனகியம்மன் ஏங்கி விசாரமுற்று
சந்திரரே சூரியரே சித்தாதி தேவர்களே
சத்தியத்தை மீறாத ஜனகன்மகள் யானால்
உத்தமியா யென்னாளும் உண்மை தவறாதிருந்த
பத்தினியும் யானால் பராக்ரமுள்ள யென்மணாளர்
தம்பியுடனிங்குவந்து ஜடாயுபக்ஷி வாய்மொழிப்பின்
உண்மைதனை கேட்கும்வரை உயிரிருக்க வேணுமென்று
இருகரமுந் தானெடுத்து இமையவர்க்குத் தெண்டனிட்டு
மாமாவே யுன்னுடைய மக்களிங்கு வந்தபின்பு
இராக்ஷதனைக் கொன்றுவிட்டு என்சிறையை மீட்கவென்று
சொல்வீரென்றலறி சோர்ந்தழுதாள் சீதையம்மன்
இவ்விதமாகவேதான் இவர்களிருக்கையிலே
ஏதமுடைந்து போனதினால் ராவணனுமந்நேரம்
தேர்தட்டின் மீதிருக்கும் செங்கமலமுகவதன
* ஜானகியைத் தீண்டாமல் தரையுடனே தானெடுத்து
தோளின்மேல் வைத்துக்கொண்டு தென்னிலங்கைபோகலுற்றான்
வழியிலெதிருற்ற ரிஷ்யமூக பர்வதத்தில்
வானரவீரரெல்லாம் வசித்திருப்பதைப்பார்த்து
ஜானகி யணிந்திருந்த தங்க நகைகளெல்லாம்
வஸ்திரத்திலே முடிந்து வீசியெறிந்துவிட்டாள்
அத்தருணம் ராவணனும் அன்பாய் நடந்துவந்து
இராக்ஷதர்கள் சூழ்ந்திருக்கும் இலங்காபுரியிலுள்ள
அசோக வனந்தனிலே அன்புடனே கொண்டுவந்து
பர்ணசாலையுடன் பதிவிரதை ஜானகியை

---

* இராவணன் தன் மனதிற்கிசையாத பெண்களைத் தீண்டினால் இரந்துவிடுவானென நளகூபன் சாபமீட்டிருப்பதினால் சீதை பூமியுடனே எடுத்துக்கொண்டுபோனான்.

தனியே நிறைவைத்து தம்பி விபூஷணரின்
புத்திரி திரிச்சடையை பொற்கொடியாள் ஜானகிக்கு
உற்றதுணையா யமைத்து உபாயமுட னென்மீது
ஆசை பொருந்தும்படி அன்புடனே சொல்லுமென்றும்
அஞ்சாத நெஞ்சுடைய அதிவீர ராக்ஷசரை
ஆயுத பாணியாக அவ்வனத்திற் காவல்வைத்து
அரண்மனையிற்சென் றிவனும் அரசுரிமை செய்திருந்தான்

## ஸ்ரீராம லக்ஷ்மணர் சீதையைக்காணமல் தேடிக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் வருதல்.

இவ்விதமாகவேதான் இவர்களிருக்கையிலே
மான்பின் தொடர்ந்துபோன மஹாவீர ஸ்ரீராமன்
பர்ணசாலைநோக்கி பக்ஷமுடன் வருகையிலே
தம்பி இலக்ஷ்மணனைத் தனியாகக் கண்டுவிட்டார்
அப்பா சகோதரனே அறிவுள்ள லக்ஷ்மணனே
உன்மாதனியைத் தனியாக வனத்திலேன் விட்டுவந்தாய்
இப்படியும் செய்யலாமோ எந்தன் சகோதரனே
இராக்ஷதர்கள் சஞ்சரிக்கும் இருண்ட வனந்தனிலே
தனியாயேன் விட்டுவந்தாய் தம்பியே சொல்லுமென்ன
அண்ணன்சொல் கேட்டவுடன் அறிவுள்ள லக்ஷமணனும்
நடந்த விபரமெல்லாம் நலமுடனே தான்புகன்று
ஜானகி சொன்னதெல்லாம் சவிஸ்தாரமாய் சொல்லிவிட்டு
அண்ணாவே என்மீது அணுவேனும் குற்றமில்லை
என்றசொற் கேள்வியுற்று ஸ்ரீராமச் சந்திரனும்
இராக்ஷதர் மாய்கையிது என்செய்வோ மென்றலறி
அண்ணனுந் தம்பியுமாய் அதிவிரைவா யோடிவந்தார்
பர்ணசாலையண்டை பக்ஷமுடன் ஓடிவந்து
சீதையைக் காணமல் ஸ்ரீராமச் சந்திரரும்
என்னசெய்வோம் தம்பியென்று ஏங்கிவிசாரமுற்று

மனது மிகக்கடித்து பாவினை பாதகமே
தேனே யுனைப்பிரிந்து சென்றையோ யென்னசெய்வேன்
எங்குகண்டு தேடுவேனுன் எந்திழையே யுன்னையென்று
ஸ்ரீராமச் சந்திரரும் சித்தந் துடித்தழுதார்
தமயன் மனந்தேற்றி தம்பி இலக்ஷ்மணனும்
அண்ணா இதைக்குறித்து ஆயாசங் கொள்ளாதீர்
தேர்ச்சுவடு தோற்றுதிக்கே செல்வோம் அதிவிரைவாய்
அண்ணியைக் கொண்டுசென்ற அசுரனைக் கண்ணுற்று
அஸ்திரத்தி னாலவனைச் சித்திரவதை செய்திடுவோம்
அதிவிரைவாய் வாருமென்ன அண்ணனுந் தம்பியுமாய்
வில்லைக் கரத்தேந்தி வேகமுடன் வாரார்கள்
காடு மலைதாண்டி கானக மெல்லாந்தேடி
வனமாய் வனங்கடந்து வாராரிருவர்களும்
ஜடாயுவும் ராவணனும் சண்டைசெய்த கானகத்தில்
தேருடைந்த துண்டுகளும் தேர்ப்பாகன் தன்னுடலும்
குதிரைத் தலைகளுந்தேர் கொடிகளும் அம்புகளும்
வில்லுகளும் முறிந்து விழுந்திருக்கக் கண்டார்கள்
ஸ்ரீராமச் சந்திரரும் ஆலோசனை புரிந்து
ஆருமில்லா கானகத்தில் அருஞ்சமர் நேர்ந்ததென்ன
என்றுசொல்லும் வேளையிலே இலக்ஷ்மணர் யோசித்து
அண்ணாவே யென்னுடைய அண்ணியைக் கொண்டுசென்ற
ராக்ஷதருடன்யாரோ நல்லசண்டை செய்தார்கள்
ஜடாயுவெனும் சிற்றப்பா சமர்புரிந்து ராக்ஷதரை
கொன்றுவிட்டு மதனியரை கொண்டு வருவார்போல
தோற்றுது அண்ணாவென்று தூரத்திற் பார்த்தார்கள்
ரத்த நதிதனிலே ஜடாயு விழுந்திருக்கும்
அநியாய ஆபத்தை அண்ணனுந் தம்பியுமாய்
பார்த்து வயிறெரிந்து பதைபதைத்து ஓடிவந்து
அன்பான சிற்றப்பா அமர்க்களத்தில் மாண்டீரோ

எவருன்னை இவ்விதமாய் எதிர்த்துப் போர் செய்தார்கள்.
சொல்லுமைய வென்றவுடி சோர்ந்தவர் கீழ்வீழ்ந்தழுதன
சமர்புரிந்து வீழ்ந்திருக்கும் ஜடாயுபக்ஷி கண்விழித்து [ல
மைந்தரைப் பார்த்தவுடன் மனது மிகக் குளிர்ந்து
மூக்கினை யிருவரையும் முத்தமிட்டு சொல்லுகிறார்
ஸ்ரீராம லக்ஷ்மணரே சீதையைத் தனியாக
விட்டுப் பிரிந்ததினால் விபரீதம் நேர்ந்ததப்பா
ஏன் பிரிந்து போனீர்கள் என்று ஜடாயு கேட்க
நடந்தவிபரீதமெல்லாம் நலமுடனே லக்ஷ்மணர்
ஆதியோடந்தமாக அணுவும் பிசகின்றி
விபரமாய்த் தானுரைக்க வினமுற்றுத் தானழுதார்
இவர் சாற்றும் மொழிகேட்டு ஜடாயுபக்ஷி சொல்லுகிறார்.
ஸ்ரீராம லக்ஷ்மணரே சிந்தை துடித்தழாதீர்
தலைவிதியெழுதினது தப்பாது யாவருக்கும்
உங்களை மோசஞ்செய்ய உபாயமாய் ராவணனும்
மானுரு வாகவேதான் மாரீசனையனுப்ப
மர்ம முணராதென் மருமகள் ஜானகியும்
மான்பிடித்துத் தாருமென்ன மனமகிழ்ச்சியாகவேதான்
ஸ்ரீராமர் மான்பிடிக்க தீவிரமாய் சென்றதவும்
இறந்திடு மாரீசன் இலக்ஷ்மணா சீதாவென்று
மாறுபாடாய்க் கூவினதால் மதிமயங்கி சீதையம்மன்
இளவலுக்கு யாதேனும் அபத்து நேர்ந்ததென
மனமிகவும் நொந்து தன்னுடைய மைத்துனர் லக்ஷ்மணரை
உன் அண்ணனைத் தீவிரமாய் அழைத்துவா வென்றதவும்
மதனியின் வார்த்தைதனை மாவனத்திற் சென்றதவும்
அண்ணனுங் காபியுமாய் ஆரண்யம் போனவுடன்
சீதைத் தனித்திருக்க திருடன் போல் ராவணனும்
பொற்கொடி ஜானகியை பூமியுடன் பேர்த்தெடுத்து
தேரின் மீதேற்றிக்கொண்டு தென்றிசையில் ஓடியதும்

ஒன்றுமற்று யான்தடுத்துக் கடும்போர் விளைத்ததுவும்
உயிர்நிலையைக் கேட்டுயாங்கள் யுத்தம் புரிந்ததுவும்
மாறுபாடு வஞ்சனையாய் ராவணன் சொல்லிவிட்டு
உண்மையான என்சிறகின் உயிர்நிலையை வெட்டினதும்
உற்றுகவனித்துணர்ந்தால் ஊழ்வினையே யாகுமப்பா
ஆனாலுமெந்தனிட அருமையான மைந்தர்களே
சீதையை ராவணனும் தீண்டினை லெரிந்திடுவான்
பூமியுடன் பேர்த்தெடுத்து போயினான் மாபாவி
ஸ்ரீராம லக்ஷ்மணரே தீவிரமாய் லங்கைசென்று
அசுராதியரையெல்லாம் அஸ்திரத்தாற் கொன்றுவிட்டு
இராவணனை சங்கரித்து இன்பமுடன் ஜானகியை
அழைத்துவந்து உம்முடைய அயோத்தி புரியிற்சென்று
அன்புடனே வாழ்ந்திருக்கள் ஆசையுள்ள மைந்தர்களே
என்று ஜடாயுபக்ஷி எம்பெருமான் திருவடியை
மனப்பூசை செய்துகொண்டு மவுனநிலையாயிருந்து
வையகத்தாசைமறந்து வைகுந்தம் சேர்ந்துவிட்டார்

## ஸ்ரீராமர் தன் தந்தையின் சிநேகிதராகிய ஜடாயு பக்ஷியை தகனஞ்செய்து உற்றரிமையாவும் நத்திவிட்டு இலக்ஷ்மணருடனே சீதையை தேடிக்கொண்டு போனது.

அந்நேர வேளையிலே ஸ்ரீராம லக்ஷ்மணரும்
பார்த்திருக்கும்போதே பதைத்துத் துடிதுடித்து
ஸ்மரணையற்றுக் கீழ்விழுந்த ஜடாயுபக்ஷி யானதுவும்
சுவாச மடங்கி சுருண்டு விழுந்ததனால்
அண்ணனுந் தம்பியுமாய் ஆரண்யந் தானதிர
அடித்துப் புரண்டழுது ஐயையோ வென்னசெய்வோம்
சிற்றப்பா உன்னுடைய ஜீவன் பிரிந்ததுவோ

பக்ஷியுரு வாயிருந்தும் பக்ஷம் மறந்திடாமல்
கிளைகிதர் மைந்தனென்று சீராய் வளர்த்தீரே
சீதையை மீட்பதற்கு தீரமுடன் ராவணனை
தடுத்து சமர்புரிந்த தந்தையே யாண்டீரோ
ஆவியைத் தானிழந்து அமரபதி சென்றீரோ
அன்பான ரக்கைகளால் அணைத்து முத்தங்கொடுத்த
இன்பான வாய்திறந்து எங்களுடன் பேசுமையா
கொஞ்ச நேரத்திற்குமுன் கோடி மதியுரைத்து
அஞ்சாதீர் மக்களென்று ஆதரவு சொல்லிவிட்டு
அறியாச் சிறுவர்களை அழுது துடிக்கச் செய்து
ஜீவனைத் தானிழந்து சொர்க்கத்திற் போனீரோ
என்று மனப்பதறி ஸ்ரீராம லக்ஷ்மணரும்
கண்ணீர் சொரிந்தழுதார் சடலிலறும் பாலனைபோல்
அந்நேர வேளையிலே அரிராமச் சந்திரரும்
தம்பி இலக்ஷ்மணனே தந்தையை இழந்தேனே
சீதைதனைப் பிரிந்து திகைத்தழுது நின்றேனே
யான்-பார்ப்பிறந்த பட்டதுயர் போதுமப்பா
சந்யாசியாகவேயான் தவஞ்செய்திருப்பேனோ
உடலை வெறுத்தினியான் உயிரை விடுவேனோ
அன்பான தம்பியொரு ஆலோசனை சொல்லுவாய்நீ
என்றசொற் கேள்வியுற்று இலக்ஷ்மணருரைப்பார்
அஞ்சாதீரண்ணாவே அடியேனிருக்கும்வரை
தம்பியிருக்கும்வரை சஞ்சலமெய்தாதீர்
தந்தை ஜடாயுதனைத் தகனஞ்செய்தான பின்பு
வில்லைக் கரத்தேந்தி வீரமுடன் லங்கைசென்று
ஜடாயுவைக் கொன்றுவிட்ட சண்டாள ராவணனை
குடும்பத்துடன் சேர்த்து கொன்றுவிட்டு தந்தைபழி
தீர்த்துக்கொண்டு நாமிருவர் தேவர்கள் புகழ்ந்துரைக்க
அண்ணியைத் தானழைத்து அன்பாக வந்திடுவோம்

என்றசொற் கேள்வியுற்று இராமரும் சம்மதித்தார்
அந்நேர வேளையிலே அண்ணனுந் தம்பியுமாய்
அன்பாய் ஜடாயுவை ஆற்றங்கரை கொண்டுசென்று
இரத்தத்தைத் தான்கழுவி இன்பாய் மலரணிந்து
சிங்காரஞ் செய்தார்கள் சிறப்புடனே பக்ஷியைத்தான்
சந்தனக்கட்டைகளைச் சம்ப்ர முடனடுக்கி
அன்பா யதின்மேல்வைத்து அக்கினியை மூட்டிவிட்டார்
வெந்துதணலாச்சு மேன்மை யுடன்சரீரம்
உத்தம ஸ்ரீராமர் உற்றுரிமை செய்துவிட்டு
அண்ணனுந் தம்பியுமாய் ஆற்றில் தலைமுழுகி
அதிவீர சூரரைப்போல் அம்புவில்லுந் தானெடுத்து
அசுரர்கள்வந்தெதிர்த்தால் அதஞ்செய்துகொல்வோமென
சீதையைத் தான்தேடி தீரமுடன் வாரார்கள்
வனமாய் வன்ங்கடந்து வாரா ரிருவருமாய்

## இலக்ஷ்மணர் தன்னைத் தூக்கிக்கொண்டுபோகும் அயோமுகியின் காதையும் மூக்கையும் அறுத்துவிட்டு ஓடிவருவது.

சீதையைத் தான்தேடி ஸ்ரீராம லக்ஷ்மணரும்
ஆரண்ய மார்க்கமாக அதிவிரைவாய்ப் போகையிலே
ஸ்ரீராமச் சந்திரர்க்கு சித்தம் மிகமெலிந்து
கால்கள் அயர்ந்து களைப்புறத்தினாலே
இளையவரைத் தான்பார்த்து இன்பாகச் சொல்லுகிறார்
தம்பி இலக்ஷ்மணனே தாகத்தால் நாவரண்டும்
கண்ணிருண்டு மெய்சோர்ந்து களையாய் வருகுதப்பா
நல்லஜலம் வேண்டுமென்றன் நாவரக்ஷி தான்தணிய [றார்
குளிர்ந்தஜலங்கொண்டுவந்து கொடுததிடுவாய்தம்பியென்
அப்படியே நல்லதென்று அன்புடனே லக்ஷ்மணனும்

ஆற்றுக்குப் போவதற்கு அதிவிரைவாய் ஓடிவாரார்
அந்நேரமவ்வேளையிலே அயோமுகி ராக்ஷசியும்
இலக்ஷ்மணர் தன்வடிவை இன்பாகப் பார்த்துவிட்டு
மோக வெறியாளிவர் முன்னே ஓடிவந்து
காம சவுந்தரனே காந்தர்வமணம் புரிவோம்
வாருமைய வென்றுசொல்லி வருந்தியழைக்கையிலே
தமையனுக்காகவே யான் ஜலங்கொண்டு போகின்றேன்
இந்த சமயத்தில் தொந்தரை செய்யாதே
துண்டாக வெட்டிடுவேன் தூரப்போ வென்றுரைத்தார்
இலக்ஷ்மணர் சொற் கேளவியுற்ற இராக்ஷசி சொல்லுகிறாள்
காமசவுந்தரா வென் காதலைத் தீர்த்துவிட்டால்
ஆகாச கங்கைதன்னை அழைப்பித்து யான் தருவேன்
கில்லென்று வழியடக்க வில்லைகரத் தெடுத்தார்
பார்த்தாள் அயோமுகியும் பக்ஷமுடன் யானிவரை
கொண்டுபோய் நம்முடைய குகைதனிலே வைத்திருந்து
ஆசை விளைவித்து அன்பாய் சுகித்திருப்போம்
என்று மனதிலெண்ணி இலக்ஷ்மணனைத் தானெடுத்து
ஆகாயமார்க்கமாக அதிவிரைவா போகிறாள்
அந்நேர வேளையிலே ஸ்ரீராமசந்திரரும்
தாகவாஞ்சை தீர்ப்பதற்கு நல்ஜலங் கொண்டுவர
ஆற்றுக்குச்சென்ற வென்றன் அறிவுள்ள தம்பியவன்
இன்னும் வரக்காணேனே இதுவும் விதிவசமோ
அரைக்ஷணமு மென்னைவிட்டு அகலாத வென்தம்பி
காய்கனிகள் கொண்டுவந்து களைதீர்த்து ரக்ஷித்து
தாய்போல வென்னைவளர்த்த தம்பிவரக்காணேனே
என்னசெய்வே னென்றவர் ஏக்கவிசாரமுற்று
இலக்ஷ்மணாவென் றழைத்து இறைக்கவிட்டுத் தானழைத்து
ஆரண்ய மார்க்கமாக அன்புடனே தேடிவாரார்
அந்நேர வேளையிலே அயோமுகியின் செவிராசி

இலக்ஷ்மண னறுத்துவிட இராக்ஷசியுந் தானழுது
நோய் பொறுக்க மாட்டாமல் ஓலமென்று கூச்சலிட்டாள்
ஸ்ரீராமர் கேள்வியுற்று திகைத்து மனமிரண்டு
அசுரரோ டென் தம்பி அமர் பொருதுகின்றானோ
என்று மனதிலெண்ணி எடுத்தாரே அக்னியாஸ்திரம்
காகமென தான் சுழட்டி கானகமெல்லாம் வெளிச்சம்
தோற்றும்படி செய்ய தன்மார்க்கி ராக்ஷசியும்
காதையும் மூக்கையும் கையால் பிடித்தழுதாள்
திடமென்று தான் குதித்து தீர்முள்ள லக்ஷ்மணனும்
நதிபருகி லோடிவந்து நசனைகொண்டுவந்து
அண்ணனுக்குதான் கொடுத்து அபோமுகமாற்றமெல்லா
ஆதியோடந்தமாக அன்புடனே சொல்லிவிட்டார்
இலக்ஷ்மணர் சொற்கேட்ட இராமர் மனமகிழ்ந்து
தம்பீ செய்வதெல்லாம் சயர்த்தமாக தோற்றுதப்பா
குலதெய்வம்போல் வந்தென் கூடப்பிறந்துவிட்டு
காலமெல்லா மெந்தனையே காப்பாற்றலானாயே
இந்தகடனெல்லாம் எந்தஜன்மத்தில் தீர்ப்பேன்
ஆகையால் லக்ஷ்மணா அன்பாகச் சொல்லுகிறேன் கேள்
* மறுஜென்மத்தி லுனக்கு பிரியுள்ள தம்பியாக
கூடப்பிறந்துனக்குக் குற்றேவல் யான்புரிவேன்
என்றுரைத்து ஸ்ரீராமர் இலக்ஷ்மணரைத் தான்பார்த்து
சாஸ்திரவேத முணர்ந்த தர்மகுணத்தினனே
பெண்ணைக் கொலைசெய்தால் பெரும்பழி யாகுமென்று

---

* திரேதா யுகத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் ஸ்ரீராமராகவும், ஆதிசேஷன் இலக்ஷ்மணராகவும் பிறந்தார். துவாபர யுகத்தில், ஆதிசேஷன் பலராமராகவும், ஸ்ரீமஹா விஷ்ணு கிருஷ்ணராகவும் பிறந்தார். இதை வாசிப்போர் உண்மை ரகஸ்யத்தை ஒழுங்காய் கவனிக்கவும்.

அயோமுகி சூர்ப்பநகை அவ்விரண்டு ராக்ஷசிகள்
ஆவியைப் போக்காமல் அறுத்துவிட்டாய் செவிநாசி
யான் தர்மநெறிபுணரா தாடகையைக் கொன்றுவிட்டேன்
உன்னைப்போல் உத்தமர்கள் உலகத்தில் யாருமில்லை
என்று மனமகிழ்ந்து இலக்ஷ்மணரை கொண்டுவந்த
நல்ல ஜலங்குடித்து நாவரக்ஷி தான் தணிந்து
அண்ணனுந் தம்பியுமாய் ஆரண்யமார்க்கமாக
சீதையைத் தேடிக்கொண்டு தீவிரமுடன் வாரார்கள்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சித்த மகிழ்வுடனே
வனமாய் வனங்கடந்து வாரார் இருவருமாய்
அண்ணனுந் தம்பியுமாய் ஆரண்யம் வாரார்கள்
கானகமெல்லாங் கடந்து கபந்தன் வனம் வந்தார்கள்
இராக்ஷத கபந்தனுந்தான் இருகரமும் நீட்டிக்கொண்டு
ஆரண்யந் தன்னிலுள்ள ஆனை சிங்கம் புலி மிருக
பக்ஷி மரங்களுடன் பலத்த அநேகமையும்
ஒருமட்டாய்த் தான் மடக்கி ஒருவாயில் போட்டுக்கொண்டு
விழுங்கி பசிதணிய விடுத்த ரெண்டு கைகளிலே
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சிக்கினார் அப்போது
கண்டு பயமடைந்தார் கற்குலத்து ஸ்ரீராமர்
இலக்ஷ்மணனே இது இராக்ஷசனோ பூதமோ தான்
பார்க்க பயமாகுதே பாருமாய் தம்பியென்றார்
அண்ணாவே என்ன சொல்வேன் ஆதிவராகம்போல
காணப்படுவதாலே கலவரமாகுதண்ணா
என்றவர் சொல்கையிலே ஸ்ரீராமர் யோசித்து
தம்பி இலக்ஷ்மணனே தலையின் விதிவசமோ
முன்னேசெய் தீவினையோ முற்காலத்துப் பயனோ
பெற்றாள் குடல்செய்த பெரும்பழியோ பாவியேன்
ஊழின் பயனோதான் உடலெடுத்த நாள்முதலாய்
சொல்ல முடியாத துன்பங்கள் சேர்ந்ததப்பா

தந்தையைப் பறிகொடுத்து தபசியாய் வருகையிலே
சீதை தனைப்பிரிந்தேன் சிறப்பதனை இழந்தேன்
இன்னமு மென்னென்ன இக்கட்டு நேர்ந்திடுமோ
என்றெண்ணி யென்மனது ஏங்கி தயக்குதையோ
பொல்லாத துன்பமுற்று பூமியி லிருப்பதிலும்
இறப்பது நல்லதப்பா என்பிறவி தம்பியரே
ஆகையினா லிந்த அசுரன் வயற்றுக்குள்ளே
போகிறேன் தம்பியரே புத்திபுள்ள கண்மணியே
அன்பான தம்பியே நீ அயோத்தி புரியிற்சென்று
எந்தன் விதிவசத்தை எல்லோர்க்கும் சொல்லிடுவாய்
என்று-இராம ருரைத்தமொழி இலக்ஷ்மணர் கேள்வியுற்று
உன்னைப் பிரிந்தினியான் உலகி லிருப்பேனோ
அண்ணா உனையிழந்து ஆவியோ டிருப்பேனோ
இந்த பெரும்பூதத்தை இருபிளவாய்க் கொன்றிடுவேன்
இலக்ஷ்மணர் முன்னடக்க இராமரவர் பின்னடக்க
அண்ணனுந் தம்பியுமாய் ஆங்கே யச்சமின்றி
கபந்தன்வாய் முன்னேவர களிப்புற் றவன்மகிழ்ந்து
ஆரடா நீங்களென்று அதட்டியே கேழ்க்கையிலே
மனதிற் பயமின்றி மவுனமாய்த் தானிருந்தார்
எடுத்து விழுங்குதற்கு இருகையி னாலணைத்தான்
இராமரும் லக்ஷ்மணரும் எகிறி குதித்தெழும்பி
கத்தியைத் தானெடுத்து கபந்தன் கையை வெட்டிவிட்டார்
ஆவியிழந்தவனும் அந்தரத்தில் வந்துநின்று
ஸ்ரீராம லக்ஷ்மணரே என்சாபந் தீர்த்துவிட்டீர்
பழைய உருவெடுத்து பக்ஷமுடன் செல்லுகிறேன்
என்றிவன் தான்புகல இலக்ஷ்மணர் வியப்புற்று
உன்பெயரைச் சொல்லுமென்ன உத்தமன் புகலுகிறார்
தனுவென்பவன் யானே தர்மகுண தீரனே
கந்தருவன் சாபத்தினால் இந்தவுரு வாயிருந்தேன்
உங்களா லென்சாபம் ஒழிந்தது யான்போறேன்

சீதையைத் தேடிக்கொண்டு நீருடன் செல்கிறீரே
உங்களுக் கொருசகாயர் உத்தமரே சொல்கிறேன்கேள்
மதங்கா ஸிரமஞ்சென்று மங்கை சபரியினால்
கிஷ்கிந்தா மார்க்கஞ்சென்று சுக்ரீவன் துணையுடனே
இலங்கையிற் சென்று இராவணனைக் கொன்றுவிட்டு
ஜானகியையழைத்துக்கொண்டுசந்தோஷமாய்போவீரென
நமஸ்காரஞ் செய்துவிட்டு நடந்தான் தனுவென்போன்
அவ்வார்த்தைக் கேட்டவுடன் ஸ்ரீராம லக்ஷ்மணரும்
ஆச்சர்ய முற்றவராய் ஆரண்யம் சென்றார்கள்
வனமா வனநடந்து வாரா ரிருவர்களும்

## இராமலக்ஷ்மணர் மதங்காசிரமம் வந்து சபரியினால் கிஷ்கிந்தாவிற்குப் போவது.

இவ்வித மாகவேதான் இவர்கள் வரும்வழியில்
மதங்காஸிரமந்தனிலே மங்கை சபரியையும்
கண்டு மனமகிழ்ந்து கதிர்குலத்தின் ஸ்ரீராமர்
அருந்தபசு தான்புரியும் அபமணி நீசுகமா
என்று-ஸ்ரீராமர்கேட்கவுமே சித்தமகிழ்ந்து
சந்தோஷமாகவேதான் சபரி புகல்வதானாள்
ஸ்ரீமந் நாராயணனும் சேஷனும் மாநிலத்தில்
ஸ்ரீராம லக்ஷ்மணராய் திருவுருவந் தான்துலங்க
வருவார் வருவாரென்று வருந்தித் தவமிழைத்தேன்
என்-தபசும் முடிந்ததையா தரிசனமுந் தந்துவிட்டீர்
இன்றைக்கு யென்னுடனே இருந்து புசிக்கவேண்டும்
நன்பனதுடனே நீங்கள் நல்விருந்து தான்புசிப்பீர்
என்று-அழைத்துக்கொண்டு சென்றவனை ஆசிரமத்திலிருந்
வாழையிலை போட்டு வட்டித்தாள் காய்கனிகள் [த்தி.
தேனுந் தினைமாவும் தெகிட்டாத தெள்ளமிர்தம்
மாங்கனியும் தேங்கனியும் மதுர பலாக்கனியும்

நொய்யாக் கனிகளுடன் கொடிமுந்திரிப்பழமும்
வாழைப் பழங்களையும் விதவிதமாய்த் தான்படைத்து
உண்ணுங்க ளென்றுசொல்லி உபசரித்தா ளந்நேரம்
இராமர் புசித்துவிட்டார் () இலக்ஷுமண ரப்போது
காய்கனியைத் தன்மடியில் களிப்புடனே வைத்திருந்து
மறுவேளை அண்ணனுக்கு மகிழுடனே தான்கொடுத்தார்
சந்தோஷ மாகவேதான் சபரியம்மாள் முன்பாக
ஸ்ரீராம லக்ஷுமணரும் சீதையைப் பிரிந்தசேதி
ஆதியோ டந்தமாக அன்பாகச் சொல்லிவிட்டு
அம்மணி யெங்களுக்கு அசுரர்வாழ் லங்கைசெல்லும்
மார்க்கம் புகல்வீரென்று மனமகிழ்ச்சி யாய்க்கேட்டார்
சபரி மனமகிழ்ந்து ஸ்ரீராம லக்ஷுமணரே
இன்னுஞ் சிலதூரம் இவ்வழியே செல்வீ ரகில்
இரிசியமுக பர்வதத்தில் இருக்கிறார் வானரர்கள்
வல்லமை பெற்றிருக்கும் வானர சுக்ரீபன்
அங்கதன் சாம்புவந்தன் அனுமானையும் பார்த்து
அவர்கள் துணைவகித்து அரக்கர்வாழ் லங்கைசென்று
இராவண கும்பகர்ண இராக்ஷதரை கொன்றுவிட்டு
ஜானகியைத் தானழைத்து சந்தோஷமாய்வருவீர்
என்றுசொல்லி சபரியம்மன் அக்ஷணம் சொர்க்கலோகம்
ஆச்சர்ய முற்றார்கள் ஸ்ரீராம லக்ஷுமணரும்
அந்த வனந்தாண்டி அன்புடனே வாரார்கள்

---

() ஸ்ரீராமர் வனவாசியாய் வந்தநாள் முதற்கொண்டு இலக்ஷுமணர் பசி தாக நித்திரை யில்லாமலிருப்பது வழக்க மாகையால் சபரிதந்த காய்கனிகளையும் பத்திரப்படுத்தி வைத்திருந்து மறுவேளையில் இராமருக்குக் கொடுத்துவிட்டார். இந்த சங்கதி அநேகரில் யாருக்குமே தெரியாது.

பம்பா நதியருகில் பக்ஷமுடன் வந்திருந்து
அண்ணனுந் தம்பியுமாய் அன்புடனே ஸ்நானஞ்செய்து
காலைக்கடன் கழித்து களிப்புற் றிருந்தார்கள்
சந்தியா வந்தனமும் ஜபதபமுந் தான்முடித்து
சபரிசொன்ன வழியாய் சந்தோஷமாய் வர்ரார்கள்
வனமா வனங்கடந்து வாரா ரிருவர்களும்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையைத் தேடிக்கொண்டு
அண்ணனுந் தம்புமாய் அதிவிரைவாய் வர்ரார்கள்

## இராம லக்ஷ்மணர் இரிசியமுக பர்வதத்தில் வந்து அனுமானைக்கண்டு சுக்ரீபனை சிநேகித்தல்.

இவ்விதமாகவேதான் இவர்கள்வரும் வழியில்
வானர சேனையெல்லாம் வாழ்ந்திருக்கும் மேன்மையுள்ள
இருசியமுக பர்வதத்தில் இன்பாய் வருகையிலே
அங்ஙனம் வீற்றிருக்கும் அரசன் சுக்ரீபனுந்தான்
ஸ்ரீராம லக்ஷ்மணரின் திருவுருவைத் தான்பார்த்து
உற்றுற்றுப்பார்த்து ஓடி பயந் தொனித்து
அனுமந்தனைக்கண்டு அன்புடனே சொல்லுகிறார்
மதியுள்ள மந்திரியெனும் மாருதியே யாரிவர்கள்
பார்க்க பயமாகுதே பதறுதே தேகமெல்லாம்
வில்லைக் கரத்தேந்தி வீரர்போல் வாராரே
என் கூடப்பிறந்தென்னை கொல்ல வகைதேடும்
சத்ராதி யானயெந்தன் தமயனெனும் வாலியினால்
என்னுயிரை வாங்கவந்த எதிராளியோவறியேன்
காணப் பயமாகுது கால்கைகள் சோருதப்பா
வாலியின் சொற்படியே வானவர்கள் வந்தாரோ
அடித்தென்னைக் கொல்வதற்கு அம்புவில்லுங் கைபிடித்து
வந்தாரோ வென்றலறி வயிற்றை பிசைந்துகொண்டு
கண்ணீர் சொரிந்தழுது கையை முறித்துக்கொண்டார்

சுக்ரீப னிவ்விதமாய்ச் சொன்னமொழி கேட்டு
அரசே தம்முருதிர் அவர்களை யான் கண்டுவாறேன்
அஞ்சாதீரென் றுரைத்து அபயமஸ்தக் தான்கொடுத்து
அனுமான் பிராமணன்போல் அழகாய் வடிவெடுத்து
ஸ்ரீராமச் சந்திரரிடம் தீவிரமா போயிவந்து
சுவாமி நமஸ்காரமென்று தோத்திரஞ் செய்தநின்றார்
அனுமாரைப் பார்த்தவுடன் அரிராம லக்ஷ்மணரும்
ஆச்சர்ய முற்றிவர்கள் ஆரப்பாவென்று கேட்டார்
ஏது விஷயமாக எங்களை வந்து கண்டாய்
என்றிவர் கேழ்க்கையிலே எதிரிருந்த ஆஞ்சநேயர்
வையகத்தில் கீர்த்திபெற்ற வாயுதேவ னென்தகப்பன்
ஆஞ்சன தேவிபெற்ற அனுமந்தன் யானைய்யா
சுக்ரீப ராஜனுக்குத் துணையான மந்திரியானே
சுகுணமதியுடைய சுக்ரீபராஜ ரும்மை
ஆரென் றறிந்துவா அனுப்பினா ரென்னையென்று
சுக்ரீபன் மனக்குறிப்பை சொல்லிவிட்டா ருண்மையாக
ஆதியோ டந்தமாக அன்புடனே சொல்லிவிட்டு
உமது சவிஸ்தாரம் உத்தமரே சொல்லுமென்றார்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சிந்தை மிகமகிழ்ந்து
தசரதர் புத்ரராக தரணியிற் ஜனித்ததுவும்
கைகேசி யம்மாளால் கானகத்தில் வந்திருந்து
சீதையைத் தான்பிரிந்த சேதியெல்லாம் மாருதிக்கு
ஆதியோடந்தமாக அணுவும் பிசகின்றி
ஒன்று விடாமலே ஒளியாமற் சொல்லிவிட்டார்
அவ்வார்த்தை கேள்வியுற்ற அனுமான் மனமகிழ்ந்து
ஸ்ரீராம லக்ஷ்மணர்க்கு சிரம் வணங்கி தெண்டனிட்டார்
அப்போது ஸ்ரீராமர் அருள்செவிலிகிறின்று
வேதிய ரிவ்விதமாய் சேவிக்க லாகாதென
அடியேனும் வானரந்தான் அன்பாகப் பாருமென்று.

வில்வரூபர் தானெடுத்து விளங்கினா ரப்பொழுது
ஆச்சர்ய முற்றார்கள் அண்ணனுந் தம்பியுமாய்
ஸ்ரீராமச் சந்திரரும் இலக்ஷ்மணனைத் தான்பார்த்து
அன்பான தம்பிந்த அதிசயத்தைக் கண்டாயோ
ஆதி பரப்பிரம்மம் அவதரித்து மந்திரியாய்
சுக்ரீப ராஜனுக்குத் துணையா யிருந்தாலே
அவனுக்கு நிகரானோர் ஆரிருப்பார் வையகத்தில்
இவர் துணையால் நமதெண்ணம் ஈடேறுமென் றுரைத்தார்
அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஆஞ்சநேய ரப்பொழுது
வில்வரூபந் தானொழித்து விருப்பமாய்ச் சொல்லுகிறார்
இங்ஙனமே வீற்றிருப்பீர் இக்ஷணமே யான்
சுக்ரீபனை யழைத்துத் துரிதமாய் ஓடிவாறேன்
என்று சொல்லிவிட்டு ஆஞ்சநேயர் சுக்ரீபன்முன்னே வந்து
இராஜேஸ்வராயாளும் இன்பாகச் சென்றவரை
இன்னாரினியாரென்று இன்பாய் விசாரித்தேன்
அயோத்தியை யாண்டிருந்த அரசன் தசரதனின்
மைந்தர்களாயுதித்து மந்தரையின் கூன்நிமிர்த்தி
த முனியின் சொற்படியே தாடகையைக் கொன்றுவிட்டு
அவர்காலின் தூசியினால் அகலிகை சாபந்தீர்த்து
சிறந்தனை சொற்படியே தேவியுடன் தம்பியுமாய்
வனவாசி யாய்வந்து விராதனை சம்பரித்து
காதலுற்ற சூர்ப்பநகை காதுமூக்குந் தானறுத்து
திரிசிரன் கரதூஷண இராக்ஷதரைக் கொன்றுவிட்டு
மாயமானும் வந்தெதிர்த்த மாரீசனை சம்மரித்து
ஸ்ரீராமர் தன்மனைவி சீதையை ராவணனும்
எடுத்தோடிச் சென்றதினால் எங்கு விசாரமுற்று
காட்டில் விழுங்கவந்த கபந்தனை சம்ஹரித்து
சபரியினா லிவ்விடத்தில் சந்தோஷமாய் வந்தார்கள்
ஆகையால் மன்னுடன் ஆபதொழிந்ததினி

பொல்லாத வாலியுயிர் போக்கிவிடுவோம் பின்தருணம்
கிஷ்கிந்தா பட்டணத்தை கீர்த்தியா யாளச்செய்வீர்
சீக்கிரமாகவந்து ஸ்ரீராமலக்ஷ்மணரை
நேசித்து உம்முடைய சிறுமைதனைச் சொல்லிவிட்டால்
ஆபத்தொழிந்துவிடும் அன்பாய் வருவீரென்றார்
மாருதிசொற் கேள்வியுற்று மனமகிழ்ந்து சுக்ரீவன்
அதிவிரைவாயோடிவந்து அரிராமலக்ஷ்மணரை
கண்டு வணங்கியவர் கைகுவித்துத் தெண்டனிட்டார்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்தமிகமகிழ்ந்து
அருகிலிருப்பீரென்று அன்புடனே தானுரைத்து
மங்களானந்தமாக மனமகிழ்ச்சியாயிருந்தார்
அங்கேர வேளையிலே அருகிருந்த வானரங்கள்
காட்டில் பழுத்திருக்கும் காய்கனி கிழங்குகளை
அன்புடனே கொண்டுவந்து அனைவர்க்குந் தான்படைத்து
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணை செய்துநிற்க
அனைவரும் நல்விருந்து அன்புடன் புசித்தபின்பு
அரிராமலக்ஷ்மணர்க்கு ஆஞ்சநேயர் சொல்லுகிறார்
வீராதி வீரனைப்போல் விளங்கிடும் வாலியென்போன்
அசுராதியர்க்கு மஞ்சா அதிவீர சூரனவன்
இராவணனை வாலிற்கட்டி இம்சித்த தீரனவன்
தன்னுடை மர்புரிய சத்ருவந்ததினால்
அவனை துரத்திக்கொண்டு அநேகநாளாய் சண்டைசெய்ய
பயந்த ராக்ஷதனும் பிலத்துவாரம்போய் நுழைந்தான்
அருகிருந்த சுக்ரீவனை அன்பாகத் தானழைத்து
காவலிரு வென்றுரைத்து கர்ஜ்ஜித்து வீரமுடன்
பிலத்துவாரத்தள் நுழைந்து பெருத்தசண்டைசெய்தவனு
அமர்புரியும் வேளையிலே அநேக நாளதினால் [ம்
இராக்ஷதனால் வாலி இறந்தனனென்றெண்ணி
சுக்ரீவனானவரும் துரிதமாயோர் கற்பாறை

கொணர்ந்து பிலத்துவாரம் கொப்பெனவே மூடிவிட்டார்
அத்தருணம் வாலியென்போன் அசுரனைக் கொன்றுவிட்டு
வெளியில் கிளம்புகையில் மேல்பாரை மூடிருக்க
காலினலே புதைத்துக் கல்லைபுரட்டிவிட்டு
ஓடிவந்து சுக்ரீபனை உதைத்தடித்துத் தான்துரத்தி
கிஷ்கிந்தாபுரிதனிலே கீர்த்தியுடையவனாய்
மகாகர்வங்கொண்டு மமதையுற் றிருக்கின்றான்
அந்த-வாலியைகொன்றுவிட்டால் வருத்தமொழியுமென்
அப்படியா வென்றுசொல்லி அரிராமச் சந்திரரும் [றூர்
அருகிருந்த சுக்ரீபனை அன்புடனே தான்பார்த்து
அஞ்சாதே யென்றுசொல்லி அபயாஸ்தந் தான்கொடுத்
வாலிதனை வதைத்துன் வருத்தமெலாந் தவிர்த்து [து
கிஷ்கிந்தா புரிதனைநீ கீர்த்தியா யரசுசெய்ய
மணிமகுடஞ் சூட்டுகிறேன் மாநிலத்தோர் வானவரும்
சந்திரரும் சூரியரும் சதுர்வேதன் ஹரிஹரனும்
ஆகாய வாணியுடன் அனைவரும் சாக்ஷியாக
என்று சுக்ரீபனுக்கு ஸ்ரீராமர் சொன்னவுடன்
அனைவரும் கேள்வியுற்று ஆனந்தமா யிருந்தார்

## சுக்ரீவன் மனதின்படியே ஸ்ரீராமச்சந்திரர் ஏழு மராமரத்தையும் ஒரே அம்பினல் உருவச் செய்வது.

இவ்வித மாகவேதான் இவர்க ளிருக்கையிலே
சுக்ரீபன் மாருதிக்குச் சொல்வா ரொருவார்த்தை
வாலியைக் கொல்வதற்கு மானிடரா லாகுமோதான்
குகையில்வாழ் சிங்கத்தைக் கிளப்பிவிட்டு ஓடுதல்போல்
விருதா பகைவிளைத்து வீண்சண்டை மூட்டிவிட்டால்

ஆபத்து நேருமென்று அஞ்சுகிறே னென்றுரைத்தார்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அனுமந்தன் யோசித்து
மன்றே இதைக்குறித்து மனவிசார மெய்தாதீர்
இவர்பலத்தைத் தானுணர இந்த வனத்திலுள்ள
ஏழு மராமரமும் எந்துங் கணையினாலே
துளை படச் செய்வீரென்று சொல்லி சமர்த்தறிவோம்
என்றிவர் யோசித்து இராமர் முன்னே வந்துநின்று
ஐயனே இவ்வனத்தில் அரியமராமரங்கள்
ஏழு மொன்றாகவேதான் எதிராகத் தோற்றுநிதை
ஒருகணை தான்விடுத்து உருவும்படி செய்வீரென
அவ்விதமே நல்லதென்று அரிராமச் சந்திரரும்
வில்லிற் கணைதொடுத்து விடுத்தார் மரங்களின்மேல்
ஏழு மரங்களையும் ஏகோபித்தே துளைத்தார்
பார்த்து மனமிரண்டார் வானர சேனையெல்லாம்
அனுமான் சுக்ரீபனுந்தான் ஆச்சர்ய முற்றார்கள்
வானர வீரர்களும் மனமகிழ்ச்சி யாயிருந்தார்

## துந்துபியின் எலும்பை இலக்ஷ்மணர் உதைத்துத் தள்ளுதல்.

ஸ்ரீராமர் வல்லமையை சொல்லி புகழ்ந்தார்கள்
இவர்கள் வரும்வழியில் இராக்ஷத துந்துபியின்
எலும்பு மலைபோலே எதிரிருக்கக் கண்டுவிட்டார்
எந்தமிருகத்தின் எலும்பிது வென்றுகேட்டார்
இராக்ஷத துந்துபியின் எலும்பிது வென்றுரைத்து.
ஆதியில் வாலியின்மேல் அருஞ்சமர் தான்புரிய
வாலியிந்த ராக்ஷதனை வதைத்துக் கரத்தினாலே
தூக்கி யெறிந்ததினால் தொலைதூரம் போய்விழுந்து
மதங்கரிட ஆசிரம மலையின்மேற் றான்விழுந்து
இறந்து பிணமானான் இருடி மனங்கொதித்து

இம்மலையில் வாலிவந்தால் இறந்திடுவா னென்றுசொல்லி
சாபம் கொடுத்ததினால் சந்தோஷமா யாங்களெல்லாம்
இந்தமலையில் வந்து இருக்கிறோ மென்றுரைத்தார்
அந்தசொற் கேள்வியுற்ற அரிராமச் சந்திரரும்
தம்பி இதனைக்காலால் தள்ளிவிடு அப்புறத்தே
என்று-இராமர் புகன்றவுடன் இலக்ஷ்மணரும் அப்பொழு
இடதுகாலால் துந்துபியை எட்டி யுதைக்கையிலே [து
ஆகாயந் தானெழும்பி அதிகதூரம் போயினது
பார்த்தார்கள் லக்ஷ்மணரின் பராக்ரம சாமர்த்யம்
அனுமானும் சுக்ரீபனும் ஆனந்தமுற்றார்கள்
வானர சேனையெல்லாம் மனமகிழ்ந்தா ரந்நேரம்.

## ஸ்ரீராமச் சந்திரருக்கு சீதையின் ஆபரணாதிகளைச் சுக்ரீவன் கொண்டுவந்து கொடுப்பது.

அந்நேர வேளையிலே அரிராமச் சந்திரரும்
ஜானகி தனைப்பிரிந்த சஞ்சலத்தாற் றிகைத்து
சோர்ந்த மனக்குறிப்பை சுக்ரீபன் கண்டுணர்ந்து
ஜானகி நகைகளெல்லாம் சந்தோஷமாய்க் கொண்டுவந்து
இரவிகுல உத்தமனே இராவணன் முன்னொருநாள்
ஆரோ ஓர் கன்னிகையை ஆகாயமாய்க் கொண்டுசென்று
அத்தருணம் உத்தமியாள் அணிந்த நகைகளெல்லாம் [ன்
கழட்டி யெறிந்துவிட்டாள் கண்டெடுத்து வைத்திருந்தே
சீதை நகைதானோ சிறப்புடனே பார்த்தருளும் [ம்
உன்-தேவிநகைதானோ தேவனே காண்பீரையா
என்றுசுக்ரீவன்சொல்ல ஸ்ரீராமர் தான்பார்த்து
கண்டுமனங் கொதித்துக் கண்ணீர் சொரிந்தழுது
என்-பத்தினியாள் ஆபரம் பார்த்தவுடனென்மனது
மெத்தத் துடிக்குதப்பா உத்தமியைக் காண்பதெப்போ
என்று மனம்பதறி ஏங்கிவிசார முற்றார்

அந்நேர வேளையிலே அருகிருந்த சுக்ரீபன்
இராமர் மனந்தேற்றி இன்பாகச் சொல்லுகிறார்
ஐயனே நீ ரிவ்விதமாய் ஆயாச மெய்தாதீர்
ஸீதாபிராட்டியரைத் தேடியழைத்துவந்து
தேவரீர் முன்னாக சேர்த்திடுவேன் அஞ்சாதீர்
பத்துதலை ராவணனுன் பாணத்தால் மாண்டிடுவான்
அசுராதியரையெல்லாம் அரைக்ஷணத்தில் கொன்றிடுவோ
துயரப்படாதீ ரென்று சுக்ரீபன் சொன்னவுடன்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்த மிகமகிழ்ந்து
அன்பான சுக்ரீபா உன்துயர் முன்தீர்த்து
என்துயரைப் போக்கிடுவேன் என்றுரைத்தா ரந்நேரம்
அவ்வார்த்தை கேள்வியுற்று அகமகிழ்ந்தார் வானரர்கள்
மாருதி ராமருக்கு மறுவார்த்தை சொல்லுகிறார்
வாலியைக் கொன்றிவர்க்கு மணிமகுடம் சூட்டிவிட்டால்
இணையில்லா கீர்த்திபெற்ற எழுபத்திரண்டுவெள்ளம்
வானர சேனையுடன் வையகமெல்லாந்திரிந்து
ஸீதா பிராட்டியரைத் தேடுவோம் சுவாமியென்றார்
அனுமந்தன் சொற்கேட்டு அரிராமர் சம்மதித்து
காதக வாலிதனைக் காண்பிப்பீ ரென்றுரைத்தார்

## சுக்ரீபனும் வாலியும் மல்யுத்தம் செய்யும்போது ஸ்ரீராமச்சந்திரர் அஸ்திரம்விடுத்து வாலியைக் கொல்வது.

வானர சேனையெல்லாம் மனமகிழ்ச்சியாகவேதான்
ஸ்ரீராம லக்ஷ்மணரை தீவிரமழைத்து வந்தார்
அத்தருணம் ஸ்ரீராமர் அன்பான சுக்ரீபா
வாலி தனையழைத்து மற்போர் புரிவாயாகில்
அப்போது யானவனை அஸ்திரத்தாற் கொன்றிடுவேன்

என்றிவர் சொல்லிலே இறைச்சலிட்டு சுக்ரீபன்
வாலியின்முன் ஓடிவந்து வாடாநீ சண்டைசெய்ய
இப்போது யானுந்தனை இறக்கடிப்பேன் தப்பாமல்
என்று-கூச்சலிட்டுத் தானழைக்க கோபத்தினால்வாலி
பஞ்சணையைத் தான்விடுத்துப் பதறி யெழுந்திருந்தான்
கண்டுவிட்டான் தாரைமனங் கலங்கி மிகத்துடித்து
என்பிராண நாயகரே ஏகாதீ ரித்தருணம்
ஸ்ரீராமர் தன்பலத்தால் சுக்ரீபன் வந்தெதிர்த்தான்
ஆகையா லித்தருணம் அமருக்குச் செல்லாதீர்
என்றசொற் கேள்வியுற்று என்னடி கொடும்பாவி
தர்ம குணம்வாய்ந்த தசரத புத்திரர்கள்
அந்யாயம் செய்வதற்கு அணுவேனும் சம்மதியார்
நில்லென் றதட்டிவிட்டு நீள்புயந் தட்டிக்கொண்டு
சுருக்காய் வெளியில்வந்து சுக்ரீபனைப் பார்த்து
அடடா சிறுபயலே அமர்பொரு வந்தனையோ
ஆ! ஹா பயலேவுன் ஆயுள் முடிந்ததென்று
சவுரியமாய் ஓடிவந்து தம்பியை வந்தெதிர்த்தான்
சுக்ரீபன் வாலிதனை தூஷித்து சண்டைசெய்ய
கண்ணுற்றார் லக்ஷ்மணரும் கடுங்கோபத் தாற்சினந்து
அண்ணாவே யிந்த அநியாய மென்னசொல்வேன்
தமயனைக் கொல்வதற்கு சத்துருவை கொண்டுவந்து
கூடப் பிறந்தவனைக் கொல்ல மனந்துணிந்த
இந்த-சுக்ரீபன் அந்நியர்க்குச் சூது விளைக்கானோ
என்றசொற் கேள்வுற்ற ஸ்ரீராமர் சொல்லலுற்றார்
தம்பி இலக்ஷ்மணனே தரணியில் வாழ்வோர்கள்
கெட்டவரும் நல்லவரும் கோடிபேர் தானிருப்பார்
பெற்றோர் குணம்போல் பிள்ளைகளுந் தான்பிறப்பார்
தம்பி பரதனைப்போல் தாரணியில் யாரிருப்பார்
இந்த-குரங்குகட்கு சற்றேனும் குலநலமு மில்லையப்பா

என்று அரிராம லக்ஷ்மணரும் ஆலோசித் திருக்கையிலே
வாலியும் சுக்ரீபனும் வானவர் மனம் நடுங்க
பூமி யதிரும்படி போர்செய்யும் வேளையிலே
ஒருவ ருடனொருவர் உகந்துசண்டை செய்தார்கள்
கட்டிப் புரண்டிவர்கள் கையினு லேயரைந்து
குத்திக் கடித்துக்கிள்ளி கோவென்று கூச்சலிட்டு
சண்டைசெய்யும்வேளையிலே சமர்த்தனெனும்வாலியுந்தா
சுக்ரீபனைத்தூக்கி சுழட்டி வீசியெறிந்தான் [ன்
அப்போது சுக்ரீவன் அரிராமர் முன்னேவந்து
ஐயா உமதருளால் அருஞ்சமர் யான்புரிந்து
பகைஞ னிடத்திற்சிக்கி பட்டதுயர் போதுமையா
என்றிவன் சொல்லையிலே ஸ்ரீராமர் தான்சிரித்து
என்ன செய்வேன் சுக்ரீபா இருவருமொருவிதமாய்
அண்ணனுந் தம்பியுமாய் அமைந்தீ ரொருவடிவாய்
ஆலோ சனைபுரியா ஆர்மேற் கணைவிடுவேன்
அடையாள மாகவிந்த கொடிமலர் யாலைசூடி
உன்-அண்ண னுடன்சென்று அருஞ்சமர் தான்புரிந்தால்
அந்த சமயத்தில் அஸ்திரத்தை யான்விடுத்து
வாலிதனைக் கொன்றுந்தன் வருத்த மொழிப்பேனென்றார்
ஸ்ரீராமர் சொற்படியே சுக்ரீவன் சம்மதித்து
வாலிமுன் ஓடிவந்து வாடா வெளியேயென்று
சண்டைக்குத் தானழைத்தான் சந்தேகித்தான் வாலி
அமர்பொருத மாட்டாமல் அஞ்சி மனமிரண்டு
பயந்தோடிப் போயினவன் பராக்ரமாய் வந்ததென்ன
கவனித் துணர்வோமென்று கர்ஜ்ஜித்து வீரமுடன்
சுக்ரீவனை யெதிர்த்து சூரனைப்போற் சண்டைசெய்து
நிலத்தினிற் றள்ளியவன் நெஞ்சைப் பிளப்பதற்கு
கையை ஓங்குந்தருணம் கண்டுவிட்டார் ஸ்ரீராமர்
இனி-சும்மா யிருந்துவிட்டால் சுக்ரீவன் மாண்டிடுவான்

என்று மனதிலெண்ணி இராமபாணந் தானெடுத்து
வில்லிற் றொடுத்தராமர் விடுத்திட்டார் வாலியின்மேல்
மார்பினிற் றைத்தகணை முதுகி லுருகும்போது
அதிவீர வாலியந்த அஸ்திரத்தைத் தான்பிடுங்கி
கண்ணாலே பார்த்துவிட்டு கர்ஜ்ஜித்து சொல்லுகிறான்
அண்ணனுந் தம்பியுமாய் அமர்பொருதும் வேளையிலே
திருட்டுத் தனமாக ஸ்ரீராமா அம்பெய்தாய்
எதிரிருந்து சண்டைசெய்தால் இருவர் சமர்த்தறிவோம்
மறைந்திருந்து அஸ்திரத்தை மார்புருக விட்டனையே
சத்தியந் தவறிடாத தசரதன் மைந்தனோநீர்
பரதனுடன்பிறந்த பரிதிகுல ராமனோநீர்
குரங்கை ஜெயித்துவிட்டால் குவலயம் புகழ்ந்திடுமோ
பாரோர் சிரித்திடவே பழிதேடிக் கொண்டனையே
என்றிவன் சொல்லையிலே ஸ்ரீராமர் யோசித்து
வாலிக்கு நீதிமார்க்கம் வகையுடனே தான்புகன்றார்
அவ்வார்த்தை கேட்டுவாலி அரிராமா வென்னுடனே
நேரிருந்து சண்டைசெய்தால் நீதியாகு மல்லாமல்
மறைந்திருந்து அம்பெய்தால் மாநிலத்தோ ரேசாரோ
என்றசொல் கேள்வியுற்ற இலக்ஷ்மணர் சொல்லுகிறார்
ஆதியிலுன் தம்பிக்கு அபயாஸ்தம் தான்கொடுத்துன்
நேரிருந்து சண்டைசெய்தால் நீயும் சரண்புகுந்தால்
தர்மநெறி தப்புமென்று மறைந்திருந்து வாளியெய்தார்
என்றசொல் கேள்வியுற்று ஸ்ரீராமர் யோசித்து
வானர குலாதிபனே வாலியேநீ யஞ்சாதே
உன்னுயிர்க்குப் பங்கமின்றி உயிர்ப்பிக்கச் செய்கின்றேன்
அன்பாயுன் தம்பியுடன் ஆசை விஸ்வாசமதாய்
கிஷ்கிந்தா பட்டணத்தில் ஸ்ரீத்தியா யிருப்பாயென்றார்
இவ்வார்த்தை கேட்டவாலி இராமர் முகம்பார்த்து
மார்பிற்கணை காயம்பட்டு மாநிலத்தில் யானிருந்தால்

சரியொத்த வானரங்கள் சற்றும் மதியார்கள்
என்-தம்பி சுக்ரீவனையும் தனயன் அங்கதனையும்
உன்-கண்மணியைபோலாக காப்பாற்றுவீரென்றுரைத்து
இருவரையும் தான்பிடித்து இராமர்கையிற்றான்கொடுத்து
ஐயனே யென்தனுக்கு வைகுந்தம் தாருமென்று
பூமியிற்றான் வீழ்ந்து பொன்னுலகு போய்ச்சேர்ந்தான்
வாலி யுயிர்விடுக்க வானரங்கள் தானழுதார்
தாரையும் ஓடிவந்து தவித்துத் துடித்தழுதாள்
அங்கதன் மேல்விழுந்து ஐயாவே யென்றழுதான்
தானுடாவிட்டாலும் சதையாடுமென்பதுபோல்
சுக்ரீபன் வாலிமுன்னே சோர்ந்தழுது அண்ணாவே
இருவரொரு தாய்வயற்றில் எந்நாளி னிற்பிறப்போம்
என்று பரதவித்து ஏங்கி யழுகையிலே
ஸ்ரீராம லக்ஷமணரும் சுக்ரீவனைத் தேற்றி
ஆயுள் முடிந்துவாலி அமரர்பதி சென்றுவிட்டான்
விசனப்படாதீரென்று வேண மதிபுகன்றார்
அநுமந்த ரானவரும் அருகிருந்த சுக்ரீவனால்
தாரை மனந்தேற்றி மாளிகைக் கனுப்பிவிட்டு
அங்கதனால் வாலிக்கு அன்புடனே உத்தரிமை
செய்து முடித்துவிட்டு சித்த மகிழ்ந்திருந்தார்

## இலக்ஷ்மணர் சுக்ரீவனுக்குக் கிஷ்கிந்தாபுரியை மகுடாபிஷேகஞ் செய்வித்தல்.

இவ்வித மாகவே தான் இவர்க ளிருக்கையிலே
ஸ்ரீராமச் சந்திரரும் சித்த மிகமகிழ்ந்து
தம்பி இலக்ஷ்மணனே சத்ய முறைப்படியே
கிஷ்கிந்தா பட்டணத்தைக் கீர்த்தியா யரசுசெய்ய
சுக்ரீப ராஜனுக்கு சுவர்ண முடிசூட்டி
பட்டாபி ஷேகஞ்செய்து பக்ஷமுடன் வாருமென்றார்

அப்படியே நல்லதென்று அன்புடனே லக்ஷ்மணரும்
குரங்கு படையுடனே கிஷ்கிந்தாவிற்சென்று
சிம்மாசனந்தனிலே சுக்ரீபனை தானமர்த்தி
சுகிபவா வென்றுரைத்து சுவர்ண முடிசூட்டி
செங்கோல் கரத்திற்றந்து தேசத்தை யாளுமென்று
அங்கதனை இளவரசாய் அன்புடனே தானமர்த்தி
ஆசீர்வதித்துவிட்டு அண்ணன்முன் அழைத்துவந்தார்
சுக்ரீபன் ஓடிவந்து ஸ்ரீராமரைப் பணிந்து
சுவாமி சரணமென்று சாஷ்டாங்க மாய்ப்பணிந்தான்
பாதம் பணிந்தவனை பக்ஷமா யாசீர்வதித்து
இராஜரீகம் தான்புரியும் இலக்ஷணங்க ளின்னதென்று
விபரம் விபரமாக விமரிசையாய்த் தான்புகன்று
மழைக்காலம் சென்றபின்பு வானரசேனையுடன்
வருகுவீ ரென்றுசொல்லி மகிழா யனுப்பிவிட்டு
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சித்த வைராக்யமதாய்
மதங்காசிரம மென்னும் மலைதனிலே தானிருந்தார்
இப்படி யாகவேதான் இவர்க ளிருக்கையிலே
சுக்ரீபன் அங்கதனும் சாம்புவன் நீலன் அனுமான்
மற்றுமுள்ள வானரங்கள் மகிழுடன்கிஷ் கிந்தையிலே
காய்கனிகள் தானருந்திக் கள்ளைக் குடித்துவிட்டு
ஆனந்த மாகவேதான் ஆர்ப்பாட்ட மாயிருந்தார்
மழைகாலந் தீர்ந்துமின்னும் வானர சைனியங்கள்
வரவில்லை ஏனென்று ஸ்ரீராமர் யோசித்து
தம்பி இலக்ஷ்மணனே சாற்காலஞ் சென்றுமின்னும்
சுக்ரீபன் வாராமல் சூது நினைந்தனனே
தீவிரமாய்ச் சென்றவனை தீரமுடனழைப்பாய்
வரமாட்டேனென்றுரைத்தால் வாலிபோலிறப்பாயென்று
அஞ்சாமலேயுரைத்து அழைத்து வருவாயென்றார்
இராமர்சொற் கேள்வியுற்று இலக்ஷ்மணரும் சம்மதித்து

அதிதீ விரமாக அந்நகரில் ஓடிவாரார்
அத்தருணம் வானரங்கள் அஞ்சி மிகப்பயந்து
கோட்டைக் கதவுகளை கொப்பெனமே மூடிவிட்டார்
இலக்ஷ்மணர் தான்சிரித்து எட்டி யுதைக்கையிலே
கோட்டை யிடிந்துவிழ குரங்குக ளெல்லாம்பயந்து
ஆரண்ய மார்க்கமாக அப்பொழுதே ஓடிவிட்டார்
அங்கதன் அனுமானும் அஞ்சி மனம்நடுங்கி
தாரையின் முன்சென்று சாற்றினார் விபரமுடன்
அந்தசொற் கேள்வியுற்று அருகிருந்த பெண்களுடன்
இன்பாக ஓடிவந்து இலக்ஷ்மணரை தான்பணிந்து
ஏது விஷயமாக எளியோரைத் தேடிவந்தீர்
தெரிவிப்பீர்சுவாமியென்று தெண்டனிட்டு தாள்பணிந்தா
அம்மணி யென்னசொல்வேன் அண்ணன்முன்சுக்ரீபர் [ள்
வானர சேனையுடன் வருகிறே னென்றுரைத்து
சரத்காலம் சென்று மின்னும் வரக்காணோ மென்றவரும்
என்னை யனுப்பினார் என்றுரைத்தார் லக்ஷ்மணரும்
அவ்வார்த்தை கேட்டதாரை ஐயனே யென்னசெய்வோம்
வானர சேனையெல்லாம் வனத்தி லிருக்கிறது
மந்திரிக ளெல்லோரும் வரவழைக்க சென்றுவிட்டார்
என்றுரைக்கும் வேளையிலே எதிரில்வந்தார் ஆஞ்சநேயர்
மாருதியே நீயும் வருகாம லேனிருந்தீர்
என்றுரைக்க ஆஞ்சநேயர் இலக்ஷ்மணரை பார்த்துவிட்டு
அரண்மனைக்குச் சென்றிவரும் அங்கதனைத் தானழைத்து
சுக்ரீப ராஜனுக்குச் சொல்லென்று ரிவர்வருகை
அங்கதனும் அத்தருணம் அவசரமாய் சுக்ரீபனை
தட்டி யெழுப்பினதால் திடீரெனவே தானெழுந்து
மதுவுண்ட மயக்கத்தினால் மகனை யருகழைத்து [னார்
எங்குவந்தா யென்றுகேட்க இலக்ஷ்மணரின்சேதிசொன்
அப்படியாவென்றுசொல்லி அமைச்சர்களைத்தானழைத்து

காட்டில் வசித்திருக்கும் கருங்குரங்கு செங்குரங்கு
வானர சேனையெல்லாம் வரவழைப்பீ ரென்றுரைக்க
அப்படியே நல்லதென்று ஆரண்யத்தி லேயிருக்கும்
எழுபத்தி ரெண்டுவெள்ள சேனைக ளுடன்வந்து
அரசனைக் கண்ணுற்று ஆனந்த முற்றார்கள்
சந்தோஷ மாகவேதான் சுக்ரீபன் சேனையுடன்
ஸ்ரீராம லக்ஷமணர்முன் தீவிரமாய் வந்துவிட்டார்
ஸ்ரீராமர் தான்பார்த்து சிந்தை மிகமகிழ்ந்து
ஆஞ்ச நேயரையழைத்து அன்புடனே சொல்லுகிறார்
அன்பான மாருதியே என்னுடைய பத்தினியாள்
ஜானகியைத் தேடுதற்கு சமர்த்துடனே நீங்களெல்லாம்
கண்டுணர்ந்து வாரீரென்று கணையாழி தான்கொடுத்து
சீதையடை யாளமெல்லாம் சீருடனே தான்புகன்று
கண்டுவந்து சொன்னீரானால் காதக ராக்ஷதரை
சித்ரவதை செய்துவிட்டு சீதைசிறை மீட்டிடுவேன்
என்று-ஸ்ரீராமர் சொன்னவுடன் தீவிரமாய் சுக்ரீவன்
அங்கதா ஜாம்புவந்தா அனுமானே நீங்களெல்லாம்
சீதை யம்மனைத்தேட தென்திசையிற் செல்வீர்கள்
வடக்கில் தசவலியும் விருஷபன் மேற்றிசையும்
வினதன் கிழக்கிலுந்தான் வீரமுடன் செல்வீரென்று
அவரவர்க்கு பின்துணையாய் அருகிருந்த வானரங்கள்
இரண்டுமூன்று வெள்ளமாக இன்பா யனுப்பிவிட்டார்

## சீதையம்மனைத் தேடப்போன வானரங்கள் பிலத் துவாரத்தில் அகப்பட்டு மதிமயங்கி சுயம் ப்ரபையம்மனை தரிசித்தல்.

சுக்ரீபர் சொற்படியே சேனைகளெல்லாம் பிரிந்து
ஜானகியைத் தேடுதற்கு நாற்றிசையும் போனார்கள்

தென்திசையிற் சென்றவர்கள் ஜெயமாகுமென்றெண்ணி
பாலிலத்திற் சுரங்கம் பார்த்துவிட்டா ரந்நேரம்
இதற்குள்ளேசென்றோமானால் இளைப்பனுகாதென்றெண்
உள்ளே நுழைந்துவிட்டு ஒன்றுந் தெரியாமல் [ணி
இருளா யிருப்பதாலே எல்லோருந் தான்பயந்து
அநுமந்தா யித்தருணம் ஆதரிக்க வேண்டுமென்ன
விஸ்வரூபந்தானெடுத்து விளங்கினர் மாருதியும்
வாலைப் பிடித்துகொண்டு வருகுதுபார் வானரங்கள்
அந்த சுரங்கத்தில் அமரர்பதி போன்றிருக்க
கண்ணுற் றதிசயித்து கலவரமா யோசித்து
சுவர்க்க பதியோவென்று சுயம்சபையைப்பார்த்து
சீதா பிராட்டியென்று சித்தத்தி லெண்ணிணந்தும்
மனதிற் கலவரமாய் மங்கைமுன் வருகையிலே
தபம்புரியும் சுயம்ரபையும் தபத்தைவிட்டுக் கண்விழித்து
ஆரப்பா நீங்களென்று அன்புடனே கேழ்க்கையிலே
ஸ்ரீராமர் தூதரம்மா சீதையைத் தேடவந்தோம்
என்று-ஆதியோ டந்தமாக அன்புடனே சொல்லிவிட்டார்
என்சாபம் தீர்ந்ததென்று எல்லோரையுமழைத்து
ஸ்நானபானஞ் செய்வித்து சிறப்புடனே தானமர்த்தி
காய்கனி கிழங்குவகை களிப்புடனே தான்கொடுத்து
உண்ணுங்க ளென்றுசொல்லி உபசரித்து நின்றிருந்தாள்
வானர வீரரெல்லாம் விருந்தமுது தான்புசித்து
ஆரம்மா இங்ஙனம்நீ அருந்தபசு செய்வதென்ன
என்றிவர் கேழ்க்கையிலே இந்திரனு லுற்றசாபம்
ஸ்ரீராமர் தூதராலே தீருமென சொல்லிவிட்டார்
ஆகையால் ஆஞ்சநேயா அடியாளை சுவர்க்கபதி
அனுப்புவீ ரென்றுசொல்லி அனுமானைத் தான்பணிந்தாள்
அப்படியே நல்லதென்று அனுமந்தன் சம்மதித்து
பிலத்துவாரத்தைப் பேர்த்து பிரயாண மாய்வருக

சுயம்ப்ரபை வானுலகம் சொரூபத்துடன் போனள்
அங்கிருந்து வானரங்கள் ஆற்றங் கரையணுகி
ஸ்னானபானந் தான்முடித்து சந்தோஷ மாகவேதான்
பழவர்க்கம் தான்புசித்து படுத்திருந்தா ரவ்விடத்தில்
துமிரனென்னும் ராக்ஷதனும் துரிதமுட னேடிவந்து
அங்கதன் மார்பில் அறைந்தா னவனெழுந்து
இராவணனே வென்றெண்ணி இராக்ஷதனைத் தானறைந்து
கொன்றுவிட்டா னப்போது குரங்குகள் விழித்தெழுந்து
அங்கதன் வல்லமையை அன்பாய்ப் புகழ்ந்தார்கள்
பெண்ணைநதி யோரமாக பிராட்டியரை தேடிக்கொண்டு
சிந்து தேசமெல்லாம் சீதைதனைத் தேடுகிறார்
பாண்டு பர்வதத்தின்மேல் பராக்ரமமுடன் தேடுகிறார்
அருந்ததி பர்வதத்தில் அன்புடனே தேடுகிறார்
திருப்பதி யெங்குந்தேடி தண்டக நாட்டில்வந்தார்
திசைதிசையாய்த் தேடிவந்தும் சீதையம்மன் காணமல்
சோழதேசம் வந்திவர்கள் சுற்றிசுற்றித்தேடுகிறார்
அம்மனமுங் காணமல் ஆயாசத்தோடவர்கள்
மஹேந்திர பர்வதத்தில் மகிழுடனே வந்தார்கள்

## சீதையைத் தேடுவதற்கு வான்ரவீரர்கள் எட்டுத் திசையிலும் பிரிந்து மஹேந்திர பர்வதத்தில் ஒன்றுய்ச்சேர்ந்து சம்பாதியைக் காணுதல்.

சீதைதனைத் தேடதற்குச் சென்றிருந்த வானரங்கள்
அனைவரும் மஹேந்திரகிரி அன்புடனே வந்தார்கள்
சகல தேசந்திரிந்தும் ஜானகியைக் காணமல்
மனவிசார முற்றிவர்கள் மனமெலிந்து சொல்லுகிறார்
சீதையைக் காணமல் ஸ்ரீராமர்முன் போவதிலும்
உயிரை யிழப்பதுவே உத்தம மென்றார்கள்

அருகிருக்கும் சேனைகட்கு அங்கதன் சொல்லுகிறார்.
நான்-ஆவியொழிக்கின்றேன் அனைவரும்போய் என்சேதி
சுக்ரீபர் தாரைக்கும் சொல்வீரென் றேயுரைத்தான்
அவ்வார்த்தை கேள்வியுற்ற ஆஞ்சநேயர் சொல்லுகிறார்
இன்னுஞ் சிலகாலம் இப்புவி யெங்குந்தேடி
ஜானகியைக் காணுவிடில் ஜடாயுபோற் போர்க்களத்தில்
உயிரை விடுவதுவே உத்தம மென்றுரைத்தார்
அங்கிருந்த சம்பாதி அவ்வார்த்தை கேள்வியுற்று
இறந்தனனோ தம்பியென்று ஏங்கி விசாரமுற்று
என்-தம்பி ஜடாயுவின் சவிஸ்தாரம் சொல்லுகிறார்
ஆரிவர்க ளென்றுசொல்லி அதிவிரைவாய் வருகையிலே
பக்ஷிபோல ராக்ஷதனும் பராக்ரமமுடன் வாரானென்று
குரங்கினங்கள் தான்பயந்து கூச்சலிட்டு ஓடினது
அசுரனோ வென்றனுமார் ஆலோசனை புரிந்து
மாய இராக்ஷதானே மரணமெய்த லாயிற்று
அருகினில் வாடாஉன்னை அடித்துதைத்துக் கொல்லுகிறே [ன்
னென்று தைரியமாய் எதிரினில் நின்றிருக்க
கழுகுபக்ஷி சம்பாதி கண்ணீர் சொரிந்தழுது
அனுமந்தன் முன்வந்து ஐயாயென் தம்பியான
ஜடாயுவையார்கொன்றுவிட்டார்சாற்றுவீரென்றுகேழ்க்க
இராவணன் ஜானகியை எடுத்துக்கொண் டோடுகையில்
தடுத்து சமர்புரிந்தார் ஜடாயு அசுரனிடம்
இராவணன்ஜடாயுவின் தன் இறக்கைகளைத்தான் துணித்து
ஆவி யொழித்தானென்று ஆதியோடந்தமாக
நடந்த விபரமெல்லாம் நலமுடனே தான்புகன்று
சீதையைத் தேடுதற்குத் தென்னிலங்கைபோரேமென்றார்
அவ்வார்த்தைக் கேள்வியுற்று அலறி மிகத்துடித்து
தம்பி ஜடாயுவேநீ சமர்புரிந்து மாண்டாயோ
இருவரொரு தாய்வயற்றில் இனிபிறக்கப் போரோமோ

என்று-சம்பாதி பக்ஷியுந்தான் சஞ்சலமுற்றழுது
தென்னிலங்கைசென்று நீங்கள் சீதைதனைப்பார்த்துவந்து
ஸ்ரீராமச் சந்திரர்க்கு சொல்லுவீ ரென்றுரைத்து
காற்றுப் போலேபறந்து கழுகரசன் போனபின்பு
அங்கதன் சாம்புவந்தன் அனுமாரும் யோசித்து
இந்த மஹேந்திரகிரியே இலங்கைதனில் பாய்வதற்கு
ஆரால் முடியுமென்று ஆலோசனைபுரிய
அனுமந்த ரானவரும் அந்த மஹேந்த்ரமேறி
விஸ்வரூபந் தானெடுத்து விசையுடனே யோகையிலே
இலங்கையிற் காவலான இலங்கணி தான்தடுத்தாள்
அனுமந்தன்லங்கணியை அடித்துதைத்துக்கொன்றுவிட்டு
சமுத்திரத்தை தாண்டியிவர் சந்தோஷமாய் வாராரே

## அனுமார் இலங்கையிற் சென்றுசீதையம்மனை தேடிக்கொண்டு அசோகமரத்தின் கிளையில் வந்திருப்பது.

அலைகடலைத் தான்தாண்டி அனுமா னிலங்கைசென்று
நாற்புறமும் சுற்றிசுற்றி நலமுடனே தேடுகிறார்
சின்ன குரங்காகத் திருவுருவந் தானமைந்து
இராக்ஷதர் வீடுகளில் இன்பமுடன் போய்நுழைந்து
மகோதரன் கும்பன்நிகும்பன் மற்றுமுள்ள ராக்ஷதரின்
வீட்டின் அறைகளெல்லாம் வினோதமுடன்போய்பார்த்து
சீதையைக் காணமல் திகைத்து மனமிரண்டு [ம்
இந்த்ரஜித்து மாளிகையில் இன்பமுடன் போய்நுழைந்து
அவ்விடத்திலுந்தேடி அதிக விசாரமுற்று
கும்பகர்ணன் தூங்குமிடம் குறிப்பாக வந்துவிட்டார்
அவன்-மூச்சி லகப்பட்டு மூக்கின் வழியாக
தத்தளிக்கும் ஐந்துவுடன் தானும் அகப்பட்டு

தவித்துதறி மெள்ளமாக தைரியமா யோடிவந்து
இராவணன் மாளிகையில் இன்பாகப் போய்நுழைந்து
மண்டோ தரியைப்பார்த்து மனது மிகக்கொதித்து
சீதையிவள் தானோவென்று சித்தம் மிகமெலிந்து
பத்துதலை ராவணனை பதைபதைக்கக் கொல்வோமென்று
கெர்ஜ்ஜித்து வீரமுடன் கோபித்துக் கண்சிவந்து
ஸ்ரீராமர் சொன்னதுபோல் சீதை யடையாளம்
இராக்ஷத மண்டோதரிக்கு இல்லாமற் போனதினால்
சீதையிவ ளல்லவென்று தீவிரமாய் வெளியில்வந்து
நந்தவன சோலையெல்லாம் நலமுடனே தேடிக்கொண்டு
அசோக வனத்தில்வந்து ஆயாசத் தோடிவரும்
விருக்ஷத்தின் மீதமர்ந்து விசாரத்துட னிருந்தார்

## இராவணன் சீதையின் முன்வந்து வேண்டுதலும் சீதை அவனை நிந்தித்துத் துரத்திவிட்டுதன் பிராணனை விட யோசிக்கையில் அனுமார் ஓடிவந்து கணையாழியைத் தருவது.

இவ்வித மாயனுமார் இருக்கின்ற வேளையிலே
பத்துதலை ராவணன்தன் சித்தம் மிகமகிழ்ந்து
சீதையின் முன்னேவந்து சித்திர விழியணங்கே
மானே மரகதமே மயிலினமே சுந்தரியே
மாரன் கணையாலென் மார்புருகு தென்னசெய்வேன்
சித்தசன் விட்டகணை சிறுமார் புருகுதையோ
ஆவி தணலாகுதே ஆசை மஞ்ஞகரியே
காதலைத் தவிர்த்திடுவாய் கண்ணே நவமணியே
என்று-இராவணன் ஜானகிக்கு இன்பா யுரைத்தமொழி
கேட்டு வயறெரிந்து கிளிமொழியாள் சீதைபம்மன்
அந்நியன் தேகமீது ஆசைவைத்தா யாமாகில்

அழிந்திடுவாய் தப்பாமல் அசுரர்களும் தான்மடிவார்
இவ்விதமா யென்முன்னே இழிவாகப் பேசாதே
என்பிரான நாதனம்பால் எத்தனையோ ராக்ஷதர்கள்
ஆவி யொழிந்தார்கள் அவர்களைப்போல் நீமடிவாய்
போடாபடு பாவியென்று புத்திசொல்ல ராவணனும்
ஆக்ரமித்துப் பற்கடித்து அதிதுரித மாயுன்னைக்
கொன்று புசிப்பேனென்று கோபத்துடன் புகல
அசோகமரத்திலிருந்த ஆஞ்சநேயர் பார்த்துவிட்டு
சீதையை ராவணனும் தீண்டுதற்கு முன்பாக
இக்ஷணமே யான்குதித்து இராவணனைக் கொன்றுவிட்டு
இராக்ஷதர் தன்னுடனே இலங்கையைத் தான்புரட்டி
கடலிற் கவிழ்ப்பேனென்று கையைப் பிசைந்துகொண்டு
ஆர்பாட்ட மாயிருக்க அத்தருணம் ராவணனும்
சீதைமுகம் பார்த்துத் தீரமுடன் சொல்லுகிறான்
ஆரென்றெனை நினைந்து அலக்ஷியமாய்ப் பேசலுற்றாய்
எட்டுத் திசையுஞ்சென்று எங்கெங்கும் கீர்த்திபெற்ற
இராவணேஸன் யானந்த இராமனை ஓர் அஸ்திரத்தால்
அப்பொழுதே கொன்றுலென் ஆசையுள்ள நாயகியாள்
நீஇறந்து போவாயென்று நினைத்துயான் தந்திரமாய்
உந்தனைக் கொண்டுவந்தேன் உறுதியா யெண்ணிடுவாய்
என்றிவன் சொல்லையிலே ஏங்கி விசாரமுற்று
இவ்வார்த்தை கேட்குமுன்னே என்னுயிர்விடுவேனென்று
சித்த மிகமெலிந்து சீதையம்மன் தானழுதாள்
பார்த்தானே ராவணனும் பரிதாப மாகவேதான்
இனியிருந்தால் ஜானகியும் இறந்திடுவா ளென்றெண்ணி
திரிச்சடையைத் தானழைத்து சீதை மனங்கலைத்து
திருவாழி கையிற்றந்து ஸ்ரீராமர் சொன்னதெல்லாம்
ஆதியோ டந்தமாக அணுவும் பிசகின்றி
ராம ரடையாளமும் நலமுடனே சொல்லிவிட்டு

என்மீதி லாசையாக ஏற்றதோர் தந்திரங்கள் [ட்டான்
அன்புடனேசொல்வாயென்று அரண்மனைக்கு சென்றுவி
இராக்ஷசிக ளெல்லோரும் இரைச்சலிட்டு ஜானகியை
இராவண னுடனே நீ இன்புற்று வாழ்ந்திருப்பாய்
என்று-சொல்வதைக் கேள்வியுற்று சீதை மனந்துடித்து
இந்த-இழிவுசொற் கேட்பதிலும் இறப்பது நல்லதென்று
ஏங்கி விசனமெய்த எதிரிருந்த திரிச்சடையும்
அஞ்சாதே யம்மாவுன் ஆபத்து நீங்கிவிடும்
யான்-கண்ட கினவுபடி காதக ராக்ஷதரை
கொன்றுன் சிறைமீட்க கோதண்டந் தானேந்தி
ஸ்ரீராமர் தான்வருவார் சித்தங் கலங்காதே
என்று-திரிச்சடை சொல்லையிலே சீதை மகிழ்ந்திருந்தாள்
அந்நேர வேளையிலே அனுமந்தன் யோசித்து
இதுதான் தருணமென்று இராக்ஷசிகள் தானுறங்க
நித்ராதேவி மந்திரத்தை நேர்மை யுடன்ஜபித்தார்
ஜானகி தான்தவிற சகலரும் தூங்கிவிட்டார்
அந்த சமயத்திலே ஆவி யொழிப்பதற்கு
குருக்கத்தி புதரிடத்தில் போவதை யனுமார்கண்டு
இத்தருணம் தாமதித்தால் இறந்திடுவா ளென்றெண்ணி
ராமராம ராமராம ராமதூதன் வந்துவிட்டேன்
ஆவி யொழித்திடாதீர் அம்மணியான் வந்துவிட்டேன்
என்று-பாதம்பணிந்தவனைப் பார்த்துவிட்டாள்சீதையம்ம
ஆரப்பா வென்றுசொல்லி அன்புடனே கேழ்க்கையிலே
வாயுதேவன் புத்திரன்யான் வானர குலத்துதித்தோன்
அஞ்சனா தேவிபெற்ற அனுமந்தன் யானம்மா
ஸ்ரீராமர் தூதனென்று சிந்தை மகிழ்வுடனே
என்போல வானரங்கள் எழுபத்தி ரெண்டுவெள்ளம்
வருகிறார் பின்னாலே வருத்தப்படவேண்டாம்
இராவணனைத் தான்ஜெயித்து இராக்ஷதரைகொன்றுவிட்டு

ஸ்ரீராமர் வந்தும்மைத் தீவிரமழைத்துச் செல்வார்
அஞ்சாதீ ரம்மாவென்ற அனுமந்தன் சொற்கேட்டு
ஜானகி மனமகிழ்ந்து சந்தோஷ மாகவேதான்
தன்னை-ஸ்ரீராமச் சந்திரரும் சித்த மிகமகிழ்ந்து
மணம்புரிந்த நாள்முதலாய் வனந்தனிலே வந்திருந்து
பொன்மான் பிடிப்பதற்கு போன தினம்வரையில்
நடந்த சவிஸ்தாரம் நலமுடனே தான்புகன்று
ஜோதி ப்ரகாசமுள்ள சூடா மணிதனையும்
அனுமந்தன் கையிற்றந்து அரிராமச் சந்திரரிடம்
தீவிரமாய்ச்சென்று யெந்தன் சேதி எல்லாம் புகல்வாய்
நீர்-பார்த்தவரையி லெந்தன் பரிதாபம் சொல்லுமையா
என்று-சீதை புகன்றதெல்லாம் சித்தந் தனிலிருத்தி
அப்படியே நல்லதென்று ஆஞ்சநேயர் போகலுற்றார்

## அனுமார் அசோகவனத்தையழித்து இராக்ஷதர்களை கொல்லுந் தருணம் வந்தெதிர்த்த சம்புமாலியை கொல்வது.

அந்நேர வேளையிலே அனுமந்த ரானவரும்
இவ்வளவு தூரம்வந்து இராக்ஷதரைக் கொல்லாமல்
சும்மாய் விடுவதுதான் சூரத்தன மல்லவென்று
அசோக வனத்தை அழிப்பதற்கு யோசித்து
மரங்களை வேருடனே மளமளெனத் தான்பிடுங்கி
வீசியெறி யுந்தருணம் வீறிட்டு ராக்ஷதர்கள்
அனுமா னுடனெதிர்த்து அமர்பொருதும் வேளையிலே
அனைவரையுங்கொன்றுவிட்டு ஆர்பாட்டஞ் செய்திருந்தான்
இந்த விசேஷமெல்லாம் இராவணன் கேள்வியுற்று
குரங்குவந்து ராக்ஷதரைக் கொல்லுமா வென்றெண்ணி

சமீபத்தில் வீற்றிருந்த ஜம்புமாலியைப் பார்த்து
நீ-வாய்வேக மாய்ச்சென்று வானரத்தைத் தான்மடக்கி
கைப்பிடியாய்த்தான்பிடித்துக் கயிற்றினுல்கட்டிக்கொண்டு
இழுத்து வருவாயென்று இராவண னனுப்பிவிட்டான்
அதிவிரைவாய் ஜம்புமாலி அசோக வனத்தில் வந்து
ஆஞ்சநேயர் தன்னுடனே அமர்பொருதும் வேளையிலே
ஆனைசேனை பரிவாரம் அனைத்தையும் தானிழந்து
இராக்ஷதர்க ளெல்லோரும் இறந்ததைக் கண்ணுற்று
தனியே யனுமானிடம் சண்டைசெய்து மாண்டுவிட்டான்
இராக்ஷதர்கள் தான்பயந்து இராவணன்முன்வந்துரைத்தார்
அப்படியா வென்றுசொல்லி அதிசயித்து வானரத்தை
நானே ஜெயிப்பேனென்று நடப்பதற்கு யோசித்தான்
பஞ்ச சேனுபதிகள் பகருவார் ராவணர்க்கு
யாங்கள்சென்றுவானரத்தை இக்ஷணத்திற்கொன்றுவாரோ
உத்திரவு செய்வீரென்று உறுதியுடன் கேழ்க்கையிலே
அப்படியே நல்லதென்று அனுப்பினுன் ஐவரையும்
அவர்கட்குப் பின்துணையாய் அநேகம்பேர் சென்றூர்கள்

## அனுமார் பஞ்ச சேனுதிபதிகளையும், அக்ஷய குமாரனையும் கொன்று விட்டதால் இந்திரஜித்து வந்து பிர்மாஸ்திரத்தால் கட்டி இராவணன் முன் அழைத்துக்கொண்டு வருவது.

இவ்விதமாகவேதான் இராக்ஷதர்க ளோடிவந்து
அனுமந்தனை யெதிர்த்து அருஞ்சமர் புரிந்தார்கள்
கத்தியெறி யம்புபாலா கைவாள் கணைகளாலும்
ஆஞ்சநேயரை யடித்து ஆர்பாட்டஞ் செய்தனர்கள்

மாருதியு மந்நேரம் மஹாஉக்ர கோபத்துடன்
இராக்ஷதரைக் கொன்றுவிட்டு இரணக்களம்பிணக்களமாய்
அசுராதியரை யெல்லாம் அக்ஷணமே கொன்றுவிட்டார்
பராக்ரமுள்ள வீரரெனும் பஞ்ச சேனுபதிகள்
வியப்புற்று கர்ஜ்ஜித்து வீரா வேசத்துடனே
கைப்பிடியாய் வானரத்தை கயிற்றிலுலே யிணைத்து
ராவணன்முன் கொண்டுபோக தாவியே பிடிக்கவந்தார்
அப்போது ஆஞ்சநேயர் அசுரர்களை வாலினுலே
பிணைத்திருக்கியவர்களையே பூமியிலே தானடித்து
காலினுலே புதைத்துக் கையினுற் கிள்ளியுந்தான்
பல்லினுலே கடித்துப் பஞ்ச சேனுபதிகள்
ஆவியைத் தானெழித்து ஆர்பாட்ட மாயிருந்தார்
அந்நேர வேளையிலே அருகிருந்த ராக்ஷதர்கள் [ணர்கள்
இரணக்களத்தின் காக்ஷியெல்லாம் இராவணர்க்குச்சொன்
அவ்வார்த்தைக் கேள்வியுற்று அனலின் மெழுகதுபோல்
கைசோர்ந்து மெய்சோர்ந்து கடுஞ்சினத்தால் கர்ஜ்ஜித்து
அர்ப குரங்கினுலே அசுராதிய ரொழிந்தார்
இத்தருணம் யான்சென்று இரணக்களத்திலே யிருக்கும்
வானரத்தைத் தான்ஜெயித்து வருகிறே னென்றுசொல்ல
அக்ஷய குமாரனுந்தான் ஆர்பாட்ட மாயெழுந்து
தந்தையே குரங்கைவெல்ல தனயன்யான் காத்திருக்க
நீர்போக வேண்டாமென்று நிறுத்திவிட்டு அப்போதே
அம்புவில்லுந் தானெடுத்து அசுராதியர்களுடன்
அசோக வனத்தில்வந்து அனுமந்தனைப் பார்த்து
இந்தக் குரங்குதானே இராக்ஷதரைக் கொன்றதென்று
வில்லிற் கணைதொடுத்து விசையாகவே விடுத்தான்
அந்தக்கணையை யெல்லாம் அனுமார் ஒடித்தெறிந்து
வாலினுல் ராக்ஷதரை வதைத்தார் அரைநொடியில்
கண்ணுற்ற அக்ஷதனும் கர்ஜ்ஜித்து வீரமுடன்

அம்பிற் கணைதொடுத்து அனுமந்தன் மேல்விடுத்தான்
மாருதி அத்தருணம் மஹாஉக்ர கோபத்துடன்
அக்ஷதன்கை வில்லொடித்து அவனையும்நசிக்கிக்கொன்றான்
அருகிருந்த ராக்ஷதர்கள் அஞ்சி மனமிரண்டு
ராவணன்முன் ஓடிவந்து நவின்றார் விபரமாக
கேட்டு வயறெரிந்தான் கேடுற்ற ராவணனும்
அமர்க்களத்தில் மாண்டோயோ அக்ஷய குமாராவென்று
அலறி யழுகையிலே அசுரரெல்லாம் தானழுதார்
மகனே மகனேயென்று மண்டோதரி தானழுதார்
இராக்ஷதப்பெண்களெல்லாம் இறைச்சலிட்டுத்தானழுதார்
இந்த விசேஷமெல்லாம் இந்திரஜித்துக் கேள்வியுற்று
அம்புவில்லுந் தானெடுத்து அசுரர் கூட்டத்துடனே
இராவணன்முன் ஓடிவந்து இறைச்சலிட்டுச்சொல்லுகிறான்
ஐயாவே யென்தம்பி அக்ஷதனைக் கொன்றுவிட்ட
குரங்கைப் பிடித்துவந்துன் கொலுமுன்னே கொல்லுகிறேன்
நல்வாக் கருள்வீரென்று நமஸ்கரித்து தெண்டனிட்டு [ன்
அசோக வனத்தில்வந்து அனுமாருட னெதிர்த்து
தனுசிற் கணைதொடுத்து சமர்த்தாக சண்டைசெய்தான்
அனுமானும் இந்திரஜித்தும் அமர்புரியும் வேளையிலே
கெலிப்பு தோற்பில்லாமல் கெர்ஜ்ஜித்து சண்டைசெய்ய
இந்தக் குரங்கைவெல்ல எவராலு மாகாதென்று
பிர்மாஸ்திரம் விடுத்துப் பிடித்தான் அனுமானை
ஸ்ரீராம ராமாவென்று சிந்தனைசெய் தந்நேரம்
மனமெலிந்து மாருதியும் மயக்க முடனிருக்க
கட்டின கட்டோடே காதக இந்திரஜித்தன்
இராக்ஷதர் கையாலே இழுத்துக்கொண்டு வாங்களென்ன
அசோக வனம்விடுத்து அரண்மனையிற் கொண்டுவந்தான்

## இராவணன் உத்திரவின்படியே இராக்ஷதர்கள் அனுமந்தன் வாலில் நெருப்பிட்டுக் கொளுத்தி வேடிக்கைப் பார்க்க அவர் இலங்கையைத் தகனஞ் செய்வது.

*பிர்மாஸ் திரத்தினாலே பிணைந்திழுத்து மாருதியைக்*
*கட்டின கட்டோடே காதக ராக்ஷதர்கள்*
*இழுத்துக்கொண்டு வந்தார்கள் இராவணன் முன்பாக*
*இந்திரஜித்து அத்தருணம் இன்புடனே சொல்லுகிறான்*
*தந்தையே இந்தக்குரங்கை சமர்த்தாய் பிடித்துவந்தேன்*
*என்றிவன் சொல்லையிலே இராவணன் கர்ஜ்ஜித்து*
*ஆரென்று கேழ்க்குமுன்னே ஆஞ்சநேயர் நகைத்து*
*சிம்மா சனத்திலிவன் சிறப்புடன் வீற்றிருக்க*
*தரையில்யான் நின்றிருக்க தகாதென்று அந்நேரம்*
*வாலை வளர்த்திக்கொண்டு வளரும் சிம்மாசனம்போல்*
*இராவணன் தலைக்குமேலே இரண்டடி யுயரமாக*
*அமர்ந்திருப்பதைப் பார்த்து அதிசயித்து ராவணனும்*
*ஆரடா குரங்கேநீ அச்சமின்றி யிங்குவந்து*
*அசோக வனமழித்து அசுரர்களைக் கொன்றுவிட்டாய்*
*அக்ஷய குமாரனையும் அஞ்சாமல் கொன்றுவிட்டாய்*
*நீ-உண்மையான குரங்கோ உற்ற துரைத்திடுவாய்*
*இருடிகள் யாகத்தெழுந்த பெரும்பூதமோ எமனோ*
*நீ-ஹரிஹர பிரம்மாவோ அறிவிப்பா யெந்தனுக்கு*
*என்றசொற் கேள்வியுற்ற எதிரிருந்த ஆஞ்சநேயர்*
*இராவணனைப் பார்த்து இன்பாகச் சொல்லுகிறார்*
*நீ-மனோகர்வத் தாலெந்தனை மரியாதை யில்லாமல்*
*ஆரடா குரங்கேயென்றாய் அறிவுகெட்ட ராவணனே*
*நான்-ஹரிஹர பிரம்மாவுமல்ல அமர் முனியுமல்ல*

ஏமனும் நானல்லரிஷி ஏவிய பூதமல்ல
மோக வெறியாலே மூர்க்கனே கொண்டுவந்த
சீதை மணவாளர் ஸ்ரீராமச் சந்திரனால்
அனுப்பிய தூதனடா அறிவில்லா ராவணனே
தப்பிப் பிழைக்கவென்றால் ஜானகியை ராமர்முன்னே
சந்தோஷமாய் விடுத்து சரணஞ்செய்வாய் பயலே
இல்லாமற் போனாலே இராமபாண முன்னுடைய
பத்துத் தலைகளையும் பனங்காயைப் போலாக
அறுத்தெறிந்து லங்கையையும் அழித்துவிடுந் தப்பாமல்
என்றசொற் கேள்வியுற்று இராவணன் கோபித்தெழுந்து
பயமின்றி வானரந்தான் பகர்ந்ததை கேட்டீரோ
இராக்ஷதரே இக்குரங்கை இருதுண்டாய் வெட்டுமென்ன
விபூஷணர் தான்தடுத்து வீரப்ரதாபமுள்ள
அண்ணா இராவணனே அடுக்கா மொழியுரைத்தீர்
தூதாக வந்தவரை துண்டாகச் செய்தீரானால்
பார்த்தார் சிரிப்பார்கள் பரியாசஞ் செய்திடுவார்
வேண்டா மென்றுதடுக்க வெஞ்சினத்தால் ராவணனும்
கொல்லா விட்டாலிந்தக் குரூர குணமமைந்த
குரங்கின்வாலைநெருப்பால்கொளுத்துவீரென்றுரைத்தான்
அவ்வார்த்தை கேள்வியுற்ற அசுரர்க ளெல்லோரும்
வடகயிறும் தேர்க்கயிறும் பாசக் கயிறுகளும்
இராக்ஷதரும் இராக்ஷசிகள் இன்பா யுடுத்துகின்ற
சீலை புடவைகளும் சிறந்தபட்டு வஸ்திரமும்
கொடிசீலைவஸ்திரமும் கொண்டுவந்து வாலிற்சுற்றி
குடங்குடமாய் எண்ணெநெய்யும் கொண்டுவந்துவார்த்துவி
ஆஞ்சநேயர் வாலிலேதான் அக்கினியை மூட்டிவிட்டு [ட்டு
சுடுகுரங்கைச் சுடுவென்று சூழ்ந்துகொண்டு ராக்ஷதர்கள்
கலகலென தான்சிரித்து கையினால் கிள்ளுவதும்
பரியாசஞ் செய்வதையும் பார்த்தார் அனுமந்தன்

கேடுவரும் போதுமதி கெட்டுவரு மென்பதுபோல்
என்னைச் சுடலானீரோ என்று கோபத்துடனே
விண்மண்ணுமொன்றாக விஸ்வரூபந் தானெடுத்து
இலங்காபுரி மேல்வாலை இன்பாய் வைத்துக்கொளுத்த
ஆரம்பஞ் செய்துவிட்டார் அத்தருணம் சீதையம்மன்
அக்கினி பகவானை அன்பாய் ஸ்துதிபுரிந்து
அனுமந்தன் வால்சுடாமல் அக்கினி குளிர்ந்திருக்க
திருவருள் புரிவீரென்ற சீதையம்மன் சொற்படியே
மாருதிக்குக்கெடுதியில்லா மகிழ்ச்சியுடன் அக்கினிதேவன்
குளிர்ந்தஜலம்போலிருக்க கொளுத்திவிட்டார்லங்கைதனை
அசோக வனந்தவிர அசுரர்வாழ் மாளிகையும்
கூட கோபுரங்களுடன் கொடிமுடியும் தானெரிந்து
அக்கினி மயமாக அனல்பற்றும் வேளையிலே
மாருதிமனமகிழ்ந்து மங்களானந்தமுடன்
சீதையின்முன்னேவந்து ராமரிடம்போறேனென்று
நமஸ்காரந்தான்புரிந்து நலமுடனேபோகலுற்றார்

## தென்திசையில் போன வானரங்கள் வரவில்லையே யென்று ஸ்ரீராமர் விசனப்படுகையில் அனுமார் வந்து இலங்கையின் சமாச்சாரந் தெரிவிப்பது.

இவ்வித மாயனுமார் இலங்கையைக் கொளுத்திவிட்டு
விஸ்வரூப மாகவேதான் விசையாகத் தானெழும்பி
வானரங்கள் தானிருக்கும் மஹேந்திர பர்வதத்தில்
வந்து குதித்தாரே வாயுபுத்ர ஆஞ்சநேயர்
அங்கதனும் ஜாம்புவந்தர் அங்கிருந்த வானரங்கள்
அனைவரும் மாருதியை அன்புடனே வாழ்த்தினார்கள்
சென்ற விபரமெல்லாம் தெளிவாகச் சொல்லுமென்ன
இலங்கையில் நடந்ததெல்லாம் இன்பாகத் தானுரைத்தார்

ஸ்ரீராமா யெல்லோரும் ஸ்ரீராமரைக் காண்போமென்று
எல்லோரு மொன்றாய்ச்சேர்ந்து ஏகோபித்து வாரார்கள்
இவர்-வருவதற்குள்ளாக அரிராமர் மனமெலிந்து
சீதையைத் தேடுதற்குச் சென்றிருந்த வானரங்கள்
வல்லமை யாகவேதான் வடக்குக் கிழக்குமேற்கில்
தேடினும் காணாமல் திரும்பியே வந்துவிட்டார்
தென்திசையிற் சென்றவரின் சேதியொன்றுந் தெரியாமல்
என்னமோ ஏதோவென்று ஏங்கியே விசாரமிட்டார்
சுக்ரீப ராஜனுந்தான் ஸ்ரீராமரைத் தேற்றி
வருவார் வருவாரென்று மனத்துயரைத் தீர்த்திருந்தார்
இப்படி யாகவேதான் இவர்க ளிருக்கையிலே
அங்கதன் சாம்புவந்தன் ஆஞ்சநேயர் தன்னுடனே
வானர வீரரெல்லாம் வந்துவிட்டார் ராமர்முன்னே
கண்டு மனமகிழ்ந்து கவலையெல்லாந் தானொழித்து
சீதையைக்கண்டீரோவென்று ஸ்ரீராமர் கேழ்க்கையிலே
ஆஞ்சனா தேவிபுத்ரன் அனுமான் மனமகிழ்ந்து
வானரசேனையுடன் வல்லமையாய்த் தென்திசையில்
சென்று பலவிடத்தும் தேடினுங் காணாமல்
ஜடாயு தமயனை சம்பரதியைக்கண்டு
பேசிய சங்கதியும் பெருமையுடன்புகன்று
மஹேந்த்ர கிரியேறி கடல்தாண்டிப் போகையிலே
வந்தெதிர்த்த லங்கணியை வதைத்துவிட்டு லங்கைசென்று
அசோக வனம்சென்று அம்மனைக் கண்டதுவும்
இராவண னிடஞ்சென்று வீரமுடன் பேசினதும்
அசுரர்கள் தன்வாலில் அக்கினியை மூட்டினதால்
இலங்கையைக் கொளுத்திவிட்டு இங்குவந்தேன் சுவாமியெ
சீதையம்மன் தான்கொடுத்த சூடாமணியைத் தந்து [ன்று
ஜானகி புகன்றதெல்லாம் சந்தோஷமாய்சொல்லிவிட்டார்
அவ்வார்த்தை கேள்வியுற்ற அரிராம லக்ஷ்மணரும்

மனது மிகமகிழ்ந்து வானரங்களின் சமர்த்தை
மெச்சி புகழ்ந்துபேசி மேன்மை யுடனிருந்தார்
ஸ்ரீராமச் சந்திரரும் சீதையைக் காண்போமென்று
வானர சேனையுடன் வருகிருர் தென்திசையில்
இலங்கைக்கு மத்தியிலே இறைச்சலிட்டுத் தானிறையும்
அலைகடலைப் பார்த்திவர்கள் ஆலோசனை புரிந்து
கடற்கரையி லெல்லோரும் களிப்புற்று வீற்றிருந்தார்.

## அனுமார் இலங்கையை கொளுத்திவிட்டுபோன பிறகு இராவணன் மந்திரிகளிடம் துராலோசனை புரியுந் தருணம் புத்திசொன்ன விபூஷணரை இலங்கையிலிருந்து துரத்திவிடுவது.

இவ்விதமாகவேதான் இவர்க ளிருக்கையிலே
அனுமந்தன் வாலினலே அசுரர்வாழ் தென்னிலங்கை
அனல்பற்றித் தானெரிந்து அழிந்ததினல் ராவணனும்
மனவிசாரத்துடனே மயனை வரவழைத்து
எரிந்தழிந்த லங்கைதனை எப்போதும் போலாக
சிருஷ்டிப்பீ ரென்றுரைக்க சித்தமகிழ்ந்துமயன்
இராவணன் சொற்படியே இலங்கையைச் சிருஷ்டிசெய்து
அரண்மனையும் மாளிகையும் அழகாக ஏற்படுத்தி
சிருஷ்டித்தேனென் றுரைத்துச் சிலவுபெற்றுப்போனபி
நவரத்ன கசிதமான நல்ல சிம்மாசனத்தில் [ன்பு
இராக்ஷத மந்திரியுடன் இராவணேஸன் கொலுவிருந்து
இரண்டு மனிதர்களால் இன்பா யனுப்பிவைத்த
குரங்குவந்துதென்னிலங்கை கொளுத்திவிட்டுப்போனது
என்ன அநியாயமென்று ஏங்கி விசாரமுற்றுன் [வே
அந்நேர வேளையிலே அருகிருந்த ராக்ஷதர்கள்

மீசைகளைத் தான்முறுக்கி வீரமுடன் கர்ஜ்ஜித்து [த்து
தோள்கள்ரெண்டும்தட்டிக்கொண்டு துடைதட்டிகொக்கரி
எத்திசையும் கீர்த்திபெற்ற இராவணேஸா அஞ்சாதீர்
இத்தருணம் யாங்கள்சென்று இரண்டு மனிதரையும்
குரங்குகளுடனே சேர்த்துக் கொன்றுபுசித்துவிட்டு
பசிதணித்துக்கொள்வோமென்று பராக்ரமமுடன்தாமெழு
அனுப்புவீரென்றுசொல்லி ஆர்ப்பரித்துநிற்கையிலே [ந்து
இந்திரஜித்து யோசித்து இராக்ஷதரைக் கையமர்த்தி
இராவணேஸனைப்பார்த்து இன்பாகச் சொல்லுகிறான்
தந்தையே யித்தருணம் தனுசேந்தி யான்சென்று
குரங்குக் கூட்டத்தையெல்லாம் கொன்றுபுசித்துவிட்டு
மனித ரிருவரையும் மசகம்போலே நசுக்கி
உதிரத்தைத் தானருந்தி ஓடிவருவேனென்று
அவ்வார்த்தை கேள்வியுற்ற அன்பன் விபீஷணரும்
அண்ணன்பெற்ற இந்திரஜித்தை அதட்டியேசொல்லுகிறார்
அறிவில்லா பேய்ப்பயலே அடுக்காமொழி யுரைத்தாய்
விளையாட்டுப்போலாக வீண்கலக மூட்டவந்தாய் [லுகிறார்
என்று-இந்திரஜித்தைக்கையமர்த்தி இராவணர்க்குச்சொல்
அண்ணாவே யென்வார்த்தை அன்புடனே நீர்கேளும்
ஆதியில் நீர்கானகத்தில் அருந்தபசு புரிகையிலே
நரர்களைக் கொல்வதற்கு வரம்பெறா காரணத்தால்
கார்த்தவீர் யார்ச்சுனனால் கட்டுண்ட ரந்நாளில்
குரங்கா லழிவாயென்று கைலைநந்தி சாபமிட
வாலியினால் கட்டுண்டு வருத்தப்படலானாய்
அக்கினியன் தேவியினால் ஆவியிழப்பா யென்று
வேதவதி சாபமிட்டு சீதையாக வந்துதித்தாள்
அமரர்குறை தீர்க்கவென்று ஆதிநாராயணனே
இராமாவ தாரமுற்று இராக்ஷதரைக் கொல்வதற்கு
தனுசேந்தி வந்துவிட்டார் தமையனே கண்டுணர்வாய்

அவரைப் பகையாதே அண்ணாவே யிப்பொழுது
சீதையைத் தாயென்றுன் சித்தந் தனில்மதித்து
ஸ்ரீராமர் முன்விடுத்துத் திருவடியைத் தான்பணிந்து
அநுப்புவீ ராமாகில் அநேகநாள் வாழ்ந்திருப்பீர்
என்று விபூஷணரும் இன்புடனே சொல்லையிலே
பத்துத்தலை ராவணனும் பள்பளென பற்கடித்து
மீசை துடிதுடிக்க வீராவேச மாயெழுந்து
அடடா பயலேஎன் ஆண்மைதனைக் கண்டுனரு
வீரமில்லாவார்த்தைசொன்னாய் விபூஷணயான் அந்நாளில்
இலங்கையில் வந்தக்குரங்கை இருதுண்டாய் வெட்டுதற்கு
கத்தியை ஓங்குமுன்னே காதகா நீதடுத்து
தூதுவந்த வானரத்தை சூதுசெய்து கொல்லாமல்
துரத்திடுவா யென்றுரைத்த சொல்லினால் ஏமாந்து
கொல்லாமல் விட்டதினால் கொழுத்தினது இந்நகரை
இப்போதும் மானிடர்மேல் இன்பமாய்ப் பேசுகிறாய்
பகையாளி தன்னுடனே பக்ஷமாய் நேசித்து
உயிருக்குத் தான்பயந்து ஒளிக்கும் விபூஷணனே நீ
அலக்ஷியமா யென்தனை நீ அவமதித்துப் பேசினதால்
கைவாளி னாலுந்தனைக் கண்ட துண்டம் செய்திடுவேன்
கூடப் பிறந்தவனைக் கொல்வது தகாதெனவே
தம்பியாச்சே யென்றெண்ணி தர்மமாய் விட்டுவிட்டேன்
இனியிங்கு நிற்காமல் இலங்கைவிட்டு ஓடிவிடு
தாமதித்து நின்றிருந்தால் தலைதுணிந்து மாண்டிடுவாய்
என்றிவன் சொல்லையிலே ஏங்கி விசாரமுற்று
இராவணனைத் தான்பிரிந்து இராமரிடம் போகலுற்றார்
அந்நேர வேளையிலே அனலன் அனிலன் அரன்
சம்மாதி மந்திரிகளும் சந்தோஷமா யோடிவந்து
விபூஷண ருடன்கூடி விரைவுடனே சென்றார்கள்

## விபூஷணுழ்வார் இராவணனை வெறுத்து இராமச்சந்திரர் திருவடியில் சரணமடைந்து இலங்கையில் நடந்த சமாச்சரம் தெரிவிப்பது.

மந்திரிகள் நால்வருடன் மகிழ்ந்து விபூஷணரும்
இலங்கைவிட்டு கடற்கரையில் இன்பமுடன் வந்திருந்து
வானர சேனைகட்குள் வருகிறு ரப்பொழுது
அனைவரும் பார்த்திவரை ஆரடா வென்றதட்டி
இராவண னுவென்று இறைச்சலிட்டு ஓடிவந்து
அடியுங்கள் பிடியுங்கள் அசுரனிவ னென்றுரைக்க
வேத முறையுணர்ந்த விபூஷணரு மந்நேரம்
ஸ்ரீராம ராமராமா ஸ்ரீமந் நாராயணுவுன்
திருவடிக் கபயமென்று சிந்தனை செய்திருந்தார்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அரிராம லக்ஷ்மணரும்
அருகிருக்கும் வானரரால் அழைத்தார் விபீஷணரை
அன்பாய் விபீஷணரும் அரிராமர் முன்னேவந்து
திருவடியைத் தான்பணிந்து ஸ்ரீராமா காருமென்று
கைகட்டி வாய்புதைத்து களிப்புடனே சொல்லுகிறுர்
ஸ்ரீராமச் சந்திரயான் இராவணனுடன்பிறந்த
தோஷமெல்லாம்இன்றேடேதுலைந்ததென்று தாள்பணிந்து
இராவணன் ஜானகியை எடுத்துவந்ததால் தனது
புத்திரி திரிச்சடையைத் துணையா யமைத்ததுவும்
அனுமான் இலங்கைவந்து அசோக வனமழித்து
இராக்ஷதரைக்கொன்றுவிட்டு இலங்கையைக்கொளுத்தின[ம்
அசுரரிடம் ராவணனும் ஆலோசனை செய்ததுவும்
ஆதியோடந்தமாக அணுவும் பிசகின்றி
சொல்லி முடித்துவிட்டு ஸ்ரீரகு நந்தனுயான்
இராவணர்க்கு வேணமதி இன்பாகத் தானுரைத்து
சீதையைத் தாயென்று சித்தந்தனி லிருத்தி

ஸ்ரீராமர் முன்விடுத்துத் திருவடியைப் பூசித்தால்
பிழைத்திருப்பாயென்றுயான் பிரியமுடன்சொன்னதினுல்
என்னைத் துரத்திவிட்டான் என்றுரைத்தார் வீபூஷணரும்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அரிராமர் மனமகிழ்ந்து
விபீஷணு யாதொன்றும் விசனப்படவேண்டாம்
இலங்கா புரிராஜ்யம் இதோதந்தேன் பெற்றுக்கொள்வீர்
சூரியரும் சந்திரரும் தெற்குவடக்கானுலும்
சொன்னசொல் பிசகேனென்று சொல்லிவிட்டார் ஸ்ரீராமர்
அத்தருணம் வீபீஷணரும் அன்பாகச் சொல்லுகிறுர்
கடல்மீதணை கட்டுதற்கு களிப்புடன் வருணனைத்தான்
வரவழைப்பீரென்று சொல்ல அரிராமர் சம்மதித்து
வருணனைத் தானழைத்தும் வராமலிருந்ததனுல்
கோபித்து அஸ்திரத்தைக் கோதண்டத்திற்றொடுத்து
விடுத்தார் கடல்மீது விரைவுடனே வருணவன்
ஓடிவந்து ஸ்ரீராமா உன்மகிமை யாரறிவார்
எதுக்கழைத்தீரெனை இன்பாகச் சொல்லுமென்ன
இராவணனைச் சங்கரிக்க இலங்கைநகர் செல்லுதற்கு
இடங்கொடுப்பீரென்றுந்தனை இன்பாயழைத்தேனென்றுர்
வருணன் மனமகிழ்ந்து அரிராமச் சந்திரரே
உமதுசொற் போலாக உத்தமரே சம்மதித்தேன்
வானர சேனைகளால் வல்லமை யாகவேதான்
கடல்மீ தணைகட்டி களிப்புடனே செல்வீரென்றுர்
அப்படியே நல்லதென்று அனைவரும் சம்மதித்தார்

## இலங்கைக்குப் போவதற்கு வானரசேனைகள் கடலில் அணைகட்டி சேதுபந்தனஞ் செய்வது.

ஸ்ரீராம லக்ஷ்மணரும் சித்த மிகமகிழ்ந்து
ஆழியி லணைக்கட்ட ஆலோசனை செய்தார்கள்
சுக்ரீவன் சொற்படியே சூழ்ந்திருந்த வானரங்கள்

மலைகளைத் தான்பிடுங்கி மகிழ்ச்சியாய்க் கொண்டுவந்து
நளன்கையில் தான்கொடுக்க நலமா யணைகட்டினார்
அந்நேர வேளையிலே * அணிப்பிள்ளைக ளோடிவந்து
ஜலந்தனிலே மூழ்கி மணலிற் புரண்டுவந்து
அணைகட்டும் சந்துகளில் அடைத்தது மழமழப்பாய்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்த மிகமகிழ்ந்து
நீங்களு மெந்தனுக்கு நேர்ந்த வுதவிசெய்தீர்
என்று-தம்முடைய கைவிரலால் தடவினாரணிப்பிள்ளையை
கரடிகளும் வானரமும் கடலில்அணை கட்டிவிட்டார்
அந்நேர வேளையிலே அரிராமச் சந்திரரும்
வானர சேனைகளும் வந்துவிட்டார் லங்கையிலே
அவரவர்க் கிசைந்தபடி அமைத்தான் நளன்கூடாரம்
சந்தோஷமா யெல்லோரும் சவுக்கியமாய் வீற்றிருந்தார்
இவ்வித மாகவேதான் இவர்க ளிருக்கையிலே
இராக்ஷதர்க ளோடிவந்து இராவணன் பாதம்பணிந்து
இந்நகரில் முன்புவந்து இராக்ஷதரைத் தான்வதைத்து
ஊரைக் கொளுத்திவிட்டு ஓடிய குரங்குபோல
அநேகங் குரங்குகளும் அநேகங் கரடிகளும்
கடலிலணை கட்டிக்கொண்டு கர்ஜ்ஜித்து வீரமுடன்
இலங்கையிலே வந்தாரென இராவணன் கேள்வியுற்று
சுகசாரணரையேவி சேதிகண்டு வாரீரென்றான்
அவ்விருவ ருங்குரங்காய் அக்ஷணமே ஓடிவந்து
இராமரிட சேனைகளை எண்ணிக்கை யிட்டிருந்தார்

---

* ஸ்ரீராமர் இலங்கைக்குப்போக வானர சேனைகள் கடலில் அணைகட்டும்போது சகாயம்புரிந்த அணிப்பிள்ளைகளின் தேகத்தை இராமர் கையால் தடவினதால் அந்த அணிப்பிள்ளைகள் முதுகில் மூன்று வெண்கோடுகள் உண்டாயிற்று.

விபூஷணா ரிவரைக்கண்டு வீராவேசத்துடனே
அடித்துதைத் திழுத்துவர அங்கிருக்கும் வானரங்கள்
மர்ம முணராமல் மனந்துடித்துத் தானழுது
ஜயனே ரகுராமா அநியாயம் பார்த்தீரா
எங்க ளினத்தாரை இந்த விபூஷணன்தான்
அடித்துதைத்துக் கொல்லுவது அடுக்குமோ பாருமையா
என்றிவர் சொல்லையிலே இராமரும் சந்தேகித்து
விபூஷணரைக்கேட்க விபரமாய்ச் சொல்லுகிறார்
இராவண னனுப்பிவைத்த இராக்ஷதர்க ளிருவர்களும்
வானரங்க ளாகவந்து வகைமோசஞ் செய்யவந்தார்
என்று-அடிமே லடியடித்தால் அம்மியும் நகர்வதுபோல்
இருவரையும் தானடித்து இம்சிக்கும் வேளையிலே
சுயரூப மாகிவிட்டார் சுகசாரண ராக்ஷதர்கள்
ஸ்ரீராமச் சந்திரரும் சிரித்த முகத்துடனே
ஆரடா நீங்களென்று அன்புடன் கேட்கையிலே
இராவணன் சொன்னதெல்லாம் முன்பாகச்சொல்லிவிட்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அரிராமச் சந்திரரும் [டார்
இராக்ஷத தூதர்களே இராவண னிடத்திற்சென்று
அசுரர் குலமழிக்க அரிராமர் வந்தாரென்றும்
சண்டைசெய்யும் வீரானால் சமர்த்தாய் வருவாயென்றும்
இல்லாமற்போனாலே இலங்கையை விபூஷணர்க்கு
மகுடாபிஷேகஞ்செய்து மாதரசி யென்தேவி
சீதையை யென்முன்விடுத்து திருவடி பணிவாயென்றும்
சொல்லுவீ ரஞ்சாமல் சுகசாரணரேயென்று
ஸ்ரீராமர் தான்புகன்று தீரமா யனுப்பிவிட்டார்
சுக-சாரணரு மப்போது இராவணன்முன் ஓடிவந்து
நடந்த விபரமெல்லாம் நலமுடனே தான்புகன்று
ஸ்ரீராமர் சொன்னதெல்லாம் சரியாய்ப்புகன்றார்கள்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அதிவீர ராவணனும்

அப்படியா வென்றுசொல்லி ஆச்சர்ய மாகவேதான்
கர்ஜ்ஜித்து யானவரைக் கண்டுவருவே னென்று
மங்கள ஸ்நானஞ்செய்து மணிமகுடந் தான்புனைந்து
கஸ்தூரி சந்தனமுங் கந்தம் புனுகுடனே
ஜவ்வாது அத்தர்களும் தானணிந்து சுந்தரமாய்
நவரத்ன ஆபரணம் நலமுடனே தான்புனைந்து
சிங்கார மாகவேதான் சித்ரகுடை பிடித்து
அப்சரஸ் மாதர்களும் அலங்காரமாய் நடிக்க
கவிஞர் கவிபாடி கட்டியங்கள் கூறிவர
விருது கொடிபறக்க வீரசூர ராவணனும்
கோட்டைமதி லேறிநின்று கோபாவேசத்துடனே
சுக-சாரணை எதிரிகளின் தன்பெயரைச் சொல்லுமென்ன
சுவேதகிரி மீதிருக்கும் ஸ்ரீராம லக்ஷ்மணர்
அங்கதன் சுக்ரீபன் அனுமான் நளன் நீலன்
சாம்புவந்தர் முதலான சமர்த்தர்களைக் காண்பித்து
இவர்களைத் தான்ஜெயிப்போர் எத்திசையுமில்லையென்றார்
இம்மொழியைக் கேள்வியுற்று இராவணன் கோபித்து
குரங்குடன் மனிதரையா கூசாமலே புகழ்ந்தீர்
சீச்சீ யென்றே யதட்டி தீரமுடன் பார்க்கையிலே
கண்டுவிட்டார் ரகுராமர் காதகராக்ஷதனை
இவன்தானோ துன்மார்க்க இராவணனென்று கேழ்க்க
அருகிருந்த விபூஷணரும் அவன்தா னென்றேபுகன்று
சொல்லிவாய் மூடுமுன்னே சுக்ரீபன் கோபித்து
இராவணன் மேற்பாய்ந்து இருகையால் மோதியவன்
சிரசின் மணிமகுடம் சிதறிடவே தானறைந்தான்
அருகிருந்த பெண்களெல்லாம் அஞ்சிபயந் தோடிவிட்டார்
தசக்ரீவன் சுக்ரீவன் சமர்த்தாக சண்டைசெய்து
ஒருவ ருடனொருவர் உகந்துசண்டை செய்கையிலே
அடித்துதைத்துக்கடித்து அங்கமெல்லாம் புண்ணாக

உதிரம் பெருகும்படி யுத்தம் புரிந்தார்கள்
அத்தருணம் ஸ்ரீராமர் அலறி மனந்துடித்து
அப்பா விபூஷணபென் அருகிருந்த சுக்ரீவன்
செண்டுபோலே எகிரி திடீரெனவே ராவணன்மேல்
பராக்ரமுடன் சண்டைசெய்ய பாய்ந்தானே வீரமுடன்
இராவணனால் சுக்ரீபன் இறந்துவிட்டானுமாகில்
என்னுயிர் நிலைக்காதென்று ஏங்கி விசாரமிட்டார்
அத்தருணம் சுக்ரீபன் அடித்துதைத்து ராவணனின்
சிரசின் மணிமகுட ஜீவரத்னத்தைப் பறித்து
ஜிவ்வென்று தாவெகிரி ஸ்ரீராமர் முன்னேவந்து
பாத காணிக்கைவைத்து பக்ஷமுடனே பணிந்தான்
பார்த்து மனமகிழ்ந்தார் பாரிதிகுல ஸ்ரீராமர்
தசக்ரீவன் மேற்பாய்ந்து சமர்த்துடனே சண்டைசெய்த
சுக்ரீபா உன்னைப்போல் சூரவீர ரிருண்டோ
என்றுரைத்தார் ஸ்ரீராமர் எதிரிருந்த வானரங்கள்
சுக்ரீபன் சாமர்த்தியம் சொல்லி புகழ்ந்திருந்தார்

## வானரசேனைகளும் இராக்ஷத சேனைகளும் அணிவகுத்துக் கொண்டு யுத்த சன்னத்தராய் நிற்பது.

இவ்விதமாகவேதான் இவர்க ளிருக்கையிலே
சுக்ரீவனால்ராவணன் ஜீவரத்னம் தானிழந்து
அதிக வெட்கத்துடனே அரண்மனையில் வந்துவிட்டான்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சுக்ரீபன் ஆஞ்சநேயர்
வானர சேனையுடன் வளைத்துக்கொண்டார் லங்கைதனை
அந்நேர வேளையிலே அசுரனெனும் சார்த்தூலன்
வல்லமை மிகுந்திருக்கும் வானர சேனைகளின் [ன்று
அணிவகுப்பைக் கண்டுணர்ந்து அதிவிரைவாய் லங்கைசெ

இராவணன்முன்சொன்னவுடன் இராக்ஷதர்களையழைத்து
அமரர்களை ஜெயித்த அசுராதி வீரர்களே
குரங்குங் கரடிகளும் கோட்டையைத் தான்வளைத்து
சண்டை செய்யத்துணிந்து சமர்த்தாக வந்ததுவே
என்னசெய்வோ மென்றுகேட்க எதிரிலிருந்த நிகும்பன்
அப்பா இராவணனேயென் ஆசை மருமகனே
உன்-காமவெறியாலே கலகம் விளைந்ததப்பா
உன்-மோகவெறியாலே மூண்டது சண்டையினி
முன்பொரு குரங்குலங்கை முழுதுமே சுட்டெரித்து
பின்பொரு குரங்குவந்து பிராணனைப் போக்காமல்
நீ-சிரசி லணிந்திருந்த ஜிவரத்னத்தைப்பறித்து
ஓடினது இத்தருணம் ஒருமிக்க வானரங்கள்
எழுபத்தி ரெண்டுவெள்ள சேனையெனும் வானரங்கள்
இராமனுக்குத் துணையாய் இன்பா யிருக்கிறார்கள்
தற்சமயம்கோட்டைதனை சமர்த்தாய்வளைத்துக்கொண்டர்
அனுமான் மேற்குவாசலும் அங்கதன் தெற்குவாசலும்
கீழ்க்கோட்டை வாசலண்டை கீர்த்தியுள்ள நீலனுந்தான்
சுக்ரீபன் தன்னுடனே ஸ்ரீராம லக்ஷ்மணரும்
கோட்டையின் வடக்குவாசல் குறிப்பாக வந்துசேர்ந்து
கோட்டையை வளைத்துக்கொண்டு கொடும்போர்புரியலா
அவரைப் பகைக்காதே அப்பா மருமகனே [னார்
சீதையை ராமர்முன்னே தீவிர மாயனுப்பி
சந்தோஷமா யவர்களுடன் சமாதான மாய்விடுவாய்
என்று நிகும்பன்சொல்ல இராவணன் கோபித்து
நாணமில் லாயலென்முன் நரரைப் புகழ்ந்துக்கொண்டும்
கொஞ்சமும் வெட்கமின்றி குரங்கைப் புகழ்ந்துகொண்டும்
வீரமில்லா பேடியைப்போல் வீண்வார்த்தைப் பேசாதே
எட்டிநில் லென்றதட்டி எதிரிருந்த ராக்ஷதரை
கோட்டையின் நாற்புரத்தில் குறிப்பாகக் காவல்வைக்க

மனதில் நினைந்தவனும் மஹாவீர ராக்ஷதரில்
தெற்கே மகோதரனும் கிழக்கே பிரகஸ்தனும்
இந்திரஜித்து மேற்றிசையும் இலங்கையில் விருபாக்ஷனும்
அசுரர் சேனையுடனே அதிவீரமாகவேதான்
கணையுடன் தனுசேந்தி காவ லிருப்பீரென்று
இராவணன் சொல்லிவிட்டு இராக்ஷத வீரருடன்
அம்புவில்லுங் கைபிடித்து அதிவீர சூரனைப்போல்
வடக்குவாசல் கார்த்துக்கொண்டு வல்லமை யாயிருந்தான்

## ஸ்ரீராமச்சந்திரர் இராவணன் மனதை அறியும்படி அங்கதனை தூதனுப்புதல்.

இவ்விதமாய் ராக்ஷர்கள் இலங்கையில் காவலிருக்க
ஸ்ரீராமச் சந்திரரும் சுக்ரீவனைப்பார்த்து
சண்டை சமாதான சவிஸ்தாரந் தானறிய
இராவண னிடத்திலே எவரை யனுப்பிடலாம்
என்று-ஸ்ரீராமச் சந்திரனும் எதிரிருந்த அங்கதனை
அருகில் வரவழைத்து அன்பாக இத்தருணம்
தசக்ரீவன் முன்சென்று ஜாகியை விடுவாயென்றும்
இல்லாமற் போனாலே இராக்ஷத ருடன்சேர்ந்து
சண்டைசெய்ய வாடாவென்று சமர்த்தாக சொல்லிவிட்டு
அவன்மனதைத்தானுணர்ந்து அதிவிரைவாய்வாருமென்ன
அவ்விதமே சம்மதித்து அங்கதனும் ராவணன்முன்
அஞ்சாமல் வந்துநிற்க ஆரென்முன் ராவணனும்
கேட்டவுடன் அங்கதனும் கெர்ஜ்ஜித்து சொல்லுகிறுன்
உன்னை-வால்நுனியில்கட்டிவைத்த வாலியின்புத்திரன்யா
அங்கத னெந்தன்பெயர் அரிராம ரனுப்பவந்தேன் [ன்
என்றுரைத்த சொற்கேட்ட இராவணன் சொல்லுகிறுன்
என்-சிநேகிதன் பெற்றெடுத்த செல்வனே அங்கதாஉன்
தகப்பனைக் கொன்றவரை சதைக்கிறேன் பாணத்திறல்

இலங்கா புரிராஜ்யம் இன்பா யாசுசெய்ய
உனக்கு மகுடஞ்சூட்டி உன்னையென் புத்திரனாய்
வளர்த்துக்கொள்வேன் கண்மணியே வானர குலாதிபனே
ஸ்ரீராம லக்ஷ்மணரை நிரமுடனெதிர்த்து
அடித்துத் துரத்திவிட்டு அழகான ரூபவதி
சீதையென்னும் பெண்ணையும்நான் திருமணம்தான்புரிந்து
அன்பா யிருப்பேனடா அங்கத குமாராவென்றான்
அவ்வார்த்தைக் கேள்வியுற்று அதட்டியே கர்ஜ்ஜித்து
அடடடா ராவணனே அறிவில்லா பேய்ப்பயலே
திருடனைப்போல் நீ சென்று சீதையை யெடுத்துவந்து
தாயென்று எண்ணாமல் தாரமெனவோமதித்தாய்
இத்தருண மானாலும் இராமர்முன்னே ஜானகியை
அழைத்துவந்துவிடுத்தால் ஆவியுடனிருப்பாய்
இல்லாமற் போனாலே இராக்ஷத சேனையுடன்
உன்-பத்து தலைகளையும் பாணத்தினா லறுத்து
இலங்கையில் விபூஷணர்க்கு இன்பாய் முடிசூட்டி
ஜானகி தனையழைத்து சந்தோஷ மாய்ப்போவார்
அவருடைய சாமர்த்யம் அறியாமல் பேசுகிறாய்
துஷ்டாவுன் இஷ்டமென்ன சொல்லடா யென்றுரைக்க
இராவணன் கோபித்து இராக்ஷத வீரர்களே
இந்தக்குரங்கைப்பிடித்து இம்சித்துக் கொல்லுங்கள்
என்றிவன் சொல்லுமுன்னே எதிரிருந்த அங்கதனும்
ஜிவ்வென்று தானெகிரி ஸ்ரீராமர் முன்வந்து
இராவணன் சொன்னதெல்லாம் இன்பாக வேயுரைத்தான்
அப்படியா வென்றுசொல்லி அரிராமர் வீற்றிருந்தார்

## இராக்ஷதர்களும் வானரசேனைகளும் கைகலந்து சண்டை செய்வது.

இப்படியாகவேதான் இவர்க ளிருக்கையிலே
அங்கதன் சுக்ரீபன் ஆஞ்சநேயர் சாம்புவந்தர்

ஸ்ரீராமர் ஆக்ஞையினால் நீரமுடன் முனைந்து
இராக்ஷதரைக் கொல்வதற்கு இரைச்சலிட்டு ஓடிவந்து
அசுராதியரை யெல்லாம் அதஞ்செய்து கொல்லுகையில்
பிரகஸ்தன் கும்பானும் பின்னுமுள்ள ராக்ஷதரும்
வில்லிற் கணைதொடுத்து வீரமுடன் சண்டைசெய்ய
வானர வீரர்களும் வாலறுந்தும் காலறுந்தும்
நிலைக்காமல் ஓடுவதை நீலனெனும் வானரந்தான்
பார்த்து வயறெறிந்து பராக்ரமுடன் ஓடிவந்து
பிரகஸ்தனைக்கொன்று பிரபலமாய் சண்டைசெய்ய
இராக்ஷதர் வாழுகின்ற இலங்கா புரிகோட்டையின்
நாற்புரமும் சுற்றிசுற்றி நல்லசண்டை செய்தார்கள்
குரங்குகளால் ராக்ஷதர்கள் கோடிபேர் தான்மடிந்தார்
அமர்பொருத மாட்டாமல் அசுரரெல்லாம் ஓடுகிறார்

## இராவணன் முதல்நாள் சண்டை.

இராக்ஷதர் ஓடுவதை இராவணன் பார்த்துவிட்டு
கர்ஜ்ஜித்து வீரமுடன் கையில் தனுசேந்தி
அசுராதியர்களுடன் அமர்க்களத்திற் றன்புகுந்து
வானர சேனைகளை வாட்டினான் அஸ்திரத்தால்
அத்தருணம் ரகுராமர் அம்பிற் கணைதொடுத்து
தசக்ரீவன் மேல்விடவே தடுத்துவிட்டான் வாளியினால்
சுக்ரீபனோடிவந்து தசக்ரீவனை யடித்து
வீரமுடன் சண்டைசெய்து விலவிலத்து நின்றிருக்க
அனுமந்தனோடிவந்து அடடா இராவணனே
உன்பலமு மென்பலமும் உண்மையுடன் காணவேணும்
குத்துசண்டை செய்வோமென்று கொக்கரித்து வீரமுடன்
மல்யுத்தம் செய்யயிலே மாருதி துடித்தெகிரி
இராவணனைக் குத்திவிட்டு இராக்ஷதரைக்கொல்லுகையில்
பின்னும் தசக்ரீவன் பிரபலமாய் சண்டைசெய்து

வானரவீரர்களை வாட்டினன் அஸ்திரத்தால்
அந்நேரம் லக்ஷ்மணரும் அதிவிரைவா யோடிவந்து
பத்து தலைகளையும் பாணத்தி னற்றுளைத்து
இராவணன் மேனியெல்லாம் இரத்தமய மாக்கிட்டார்
மறுபடியும் ராவணனும் மனதைரியத்துடனே
வில்லைக் குணத்தொனித்து விமரிசையாய்ச் சண்டைசெய்ய
அனுமந்தன் தோள்மீது அரிராமர் தானமர்ந்து
தனுசைக் கரத்தேந்தி சமர்த்தான இராவணனை
அஸ்திரத்தினல் வதைத்து அமர்பொருதும் வேளையிலே
இராமரும் ராவணனும் பிரபலமாய் சண்டைசெய்ய
அக்கினி யாஸ்திரமும் ஆதித்த னஸ்திரம்
இந்திராஸ்திரம் சந்திராஸ்திரம் இமயவராஸ்திரமும்
ஒருவர்க்கொருவர்விடுத்து உகந்து சண்டைசெய்தார்கள்
அத்தருணம் ரகுராமர் அஸ்திரத்தால்ராவணனைச்
சின்ன பின்னஞ்செய்து சித்ரவதை செய்துவிட்டு
கைவில்லைத் தானொடித்து கவசமுமற்றுவிழ
தேருமுடைந்துவிழ தேர்ப்பாகன் தானிறக்க
அஸ்வங்களு மிறந்து அசுரர்களு மோடிவிட
வில்லிற் கணைதொடுத்து விமரிசை யாய்விடுத்தார்
இராமர்விடுங் கணைகள் இராவணனை சூழ்ந்துகொண்டு
தேகசதையை யெல்லாம் சின்னபின்ன மாயறுத்து
சக்கைசக்கை யாய்சதையை சதைத்திடு முபத்திரவம்
பொறுக்க முடியாமல் பூமியைப் பார்த்துக்கொண்டு
வயிற்றை வளர்ப்பதற்கு வகையறியா மானிடர்கள்
கடன்பட்டுத் தத்தளிக்கும் காரணம்போல் ராவணனும்
மதிமயங்கி நிலைதளர்ந்து மனோகர்வம் பாழாகி
என்னசெய்வே னென்றெண்ணி ஏங்கி விசாரமுற்று
எந்தவழி ஓடுவது என்று மனமெலிந்து
திக்கெட்டும் கீர்த்திபெற்ற தீரவீர ராவணன்பான்

மனிதனுக்குத் தான்பயந்தால் மண்டலத்தோ ரேசாரோ
கண்டார் சிரிப்பார்கள் ககனத்தோர் தானிகழ்வார்
இந்த வுடலோடே இலங்கையிற் போவதிலும்
இறப்பது நல்லதென்று இராவணன் யோசிக்க
கருணாநிதியான காருண்ய மூர்த்தியெனும்
ரகுராமச் சந்திரரும் தீரமுடன் சொல்லுகிறார்
வீரமில்லா ராவணனே விபூஷணர்க்கு லங்கைதனை
பட்டங்கட்டி வந்துவிட்டேன் பத்தினி ஜானகியை
அழைத்துவந்தென் முன்விடுத்தால் ஆவிபிழைத்திருப்பாய்
இல்லாமற்போனாலே இறந்திடுவாய் தப்பாமல்
சண்டைசெய்யவேணுமென்றால் சற்று மயங்காமல்
இன்றுபோய் நாளைவந்து இராக்ஷத சேனையுடன்
அம்புவில்லுந் தானெடுத்து அமர்க்களத்தில் வந்துநின்று
போர்புரிவாய் பாதகனே போய்வருவா யென்றுரைத்தார்
அவ்வார்த்தைக் கேள்வியுற்று அம்மம்மா யென்னுயிரு
தாய்வயற்றின் பாக்கியத்தால் தப்பிப் பிழைத்ததென்று
கணைகள் வருதோவென்று கலவரமாய் முன்பின்னும்
பார்த்து பயங்கரமாய் பதைத்து மனமெலிந்து
செத்தேன் பிழைத்தேனென்று தேகத்தைதான்மறைத்து
இலங்கை அரண்மனையில் இராவணேசன் ஓடிவிட்டான்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்தமிக மகிழ்ந்து
வானர சேனையுடன் வந்துவிட்டார் பாசறையில்

## கும்பகர்ணன் சண்டை.

இவ்விதமாகவேதான் இவர்க ளிருக்கையிலே
இலங்கை யரண்மனையில் இராவணன் ஓடிவந்து
கட்டிலின்மேற் சாய்ந்து கனவருத்தமாகவேதான்
அருகிருந்த தூதர்களால் அசுரரை வரவழைத்து
ஆலோசனைபுரிய அத்தருணம் மாலியவான்

என்னடா பேராண்டி என்னதுய ருற்றதென்றுன்
மாலியவான் சொற்கேட்டு மனம்பதைத்து ராவணனும்
கண்ணீர் சொரிந்தழுது கலவரமாய்ச் சொல்லுகிறுன்
பாட்டாயான் ராமனிடம் பட்டதுயர் போதுமையா
ஹரிஹரப் பிரம்மாதிகளும் அஷ்டதிக்குப் பாலகரும்
இந்திர னிமையவரும் இராக்ஷதரு மொன்ருக
ஸ்ரீசேர்ந்துவந் ததிர்த்தாலும் ராமன் வென்றிடுவான்
அவனுடைய வாகனமோ அற்பகுரங் காயிருந்தும்
கருடனைப்போலாக கரகரென தான்சுழன்று
கணைகட்கு மஞ்சாமல் கர்ஜ்ஜித்துப் பாய்கிறது
ரகுராமச்சந்திரனும் தீரமுடன் வில்வளைத்து
தொடுக்கும் கணைகளாலென் தேரொடிந்தும் வில்முறிந்து
தேர்ப்பாகனு மிறந்து ஜெயக்கொடியும் தானறுந்து
அஸ்வங் களுமிறந்து அசுரர்களும் மாண்டுவிட்டார்
யான்-தனியா யமர்க்களத்தில் தத்தளிக்கும் வேளையிலே
உயிர்பிக்ஷை தந்தேனின்று ஓடிப்போ வென்றுரைத்தான்
அரைகோடி வருஷம்வரை அரசுரிமை செய்திருந்தேன்
இத்தனை நாள்வரையில் இவனைப்போல் வீரர்களை [ன்
எங்கிலும்யான் கண்டதில்லை என்னசெய்வேனென்றழுதா
அவன்-மனதைத்திடப்படுத்தி மாலியவான்சொல்லுகிறுன்
அப்பா இராவணனே ஆதியில்யான் சொன்னதெல்லாம்
உண்மையாய் கண்டுணர்ந்து உயுத்தம் புரிந்தனையே
ஸ்ரீராமன் விற்திறமை தீரமா யறிந்தனையே
இனியாகிலும் சீதையை இராமன்முன் அனுப்பிவிட்டு
சமாதான மாயிருந்தால் சதாகாலம் வாழ்ந்திருப்பாய்
இல்லாமற் போனலே இலங்கா புரியிலுள்ள
இராக்ஷத சேனையுடன் இறந்திடுவா யென்றுரைத்தான்
மாலியவான் சொற்கேட்ட மகோதரன் கர்ஜ்ஜித்து
வீராவேசத்துடனே விளம்புகிறுன் தீரமுடன்

வல்லமை யெல்லாமிழந்து வயதுமுதிர்ந்துவிட்ட
இந்தக் கிழவன்பேச்சை இராவணா நீ கேட்கவேண்டாம்
சீதையைத் தான்விடுத்து ஸ்ரீராமனைப் பணிந்தால்
கண்டார் சிரிப்பார்கள் ககனத்தோ ரேசுவார்கள்
பார்த்தார் நகைத்துன்னை பரிகாசஞ் செய்திடுவார்
சண்டையை நிறுத்தவேண்டாம் தசமுக ராவணனே
கும்பகர்ணனை யழைத்து குரங்குடன் மனிதரையும் [தான்
அடித்துக்கொன்று தின்பாயென்று அனுப்புவீரென்றுரைத்
மகோதரன்சொற்கேள்வியுற்று மனமகிழ்ந்து ராவணனும்
தூங்குகின்ற கும்பகர்ணன் துயில்விட் டெழுந்திருக்க
அசுராதி கிங்கிரரை அனுப்பினன் அவர்களெல்லாம்
ஆளி சிங்கப்புலிகள் ஆனைகளும் வெள்ளாடும்
குதிரைகளும் தான்விடுத்து கும்பகர்ணனை மிதிக்க
தூங்குகின்ற கும்பகர்ணன் துயில்விட் டெழுந்திராமல்
சயனித் திருக்கையிலே சம்மட்டி யாலோங்கி
தாடையி லடிக்கையிலே சம்மட்டி தான்முறிந்து
அரைதூக்கத் தோடவனும் அயர்ந்து யெழுந்திருந்து
ஆறுமாத நித்திரையில் அரைதூக்கத்தைக்கெடுத்து
ஏண்டா யெழுப்பிவிட்டீர் என்றிவன் கேழ்க்கையிலே
இராவண னழைத்தாரென்று இராக்ஷதர் சொல்லிவிட்டு
மதுமாம்ஸ பக்ஷணங்கள் மகிழுடன் கொண்டுவந்து
சாப்பிட்டு வாருமென்று சந்தோஷமாய்ச் சொன்னார்கள்
தூக்கந் தெளியாமல் தூங்கிவிழுந்துக்கொண்டு
கண்ணை நிமிட்டிக்கொண்டு கைகாலலம்பாமல்
அறுநூறு வண்டிசாதம் அதற்கேற்ற கறிவகையும்
பதினாயிரம்குடங்கள் பண்பாய் புசித்துவிட்டு
பசிதணியவில்லையென்று பரிதாபமாய்ச் சொன்னவுடன்
ஆயிரம் எருமைகளை அசுரர்கள் கொண்டுவந்து
தின்றுபசியாறி தீவிரமாய் வாருமென்ன

ஆயிரம் எருமைகளை அப்பொழுதே தான்புசித்து
இன்னும்பசி தீராமல் இருந்த விடத்திற்றனே
தூங்கிவிழுந்துகொண்டு துயருற்றான் கும்பகர்ணன்
ஐயனே உன்னுடைய அண்ணன் அழைக்கின்றார்
என்றசொற் கேள்வியுற்று எழுந்திருந்தான் கும்பகர்ணன்
அரண்மனையில் வந்து நின்று அண்ணா சரணமென்றான்
தம்பியைக் கண்டவுடன் தசமுக ராவணனும்
கும்பகர்ணா லங்கையிலே குரங்கும் மனிதர்களும்
அஞ்சாமல் வந்திருந்து அசுரர்களைக் கொன்றுவிட்டார்
என்று-ஆதியோடந்தமாக அணுவுங்குறையின்றி
நடந்த விபரமெல்லாம் நலமுடனே தான்புகன்று
ஆகையினால் கும்பகர்ணா அதிவிரைவாய் நீசென்று
குரங்குடன் மனிதரையும் கொன்று புசித்துவிட்டு
வருகுவா யாமாகில் ஜானகியையான்மணந்து
இந்த இலங்கையிலே இன்புற் றிருப்பேனென்றான்
அவன்-வார்த்தையைக் கேள்வியுற்று வயறெரிந்துகும்பகர்
அண்ணா இலங்கைக்கு அழிவுகாலம்வந்ததோ தான் [ணன்
சீதையைத் தாயென்றுன் சித்தத்தி லெண்ணிடுவாய்
இராமன் பகைவேண்டாம் என்றிவன் சொல்லையிலே
இவ்வார்த்தைக் கேட்பதற்கோ இங்கழைத்தேன் உந்தனை
விபூஷணனைப் போல்நீயும் விழுவாய் ராமன்காலில் [யான்
என்றதட்டி ராக்ஷதரே என்தேரைக் கொண்டுவாரும்
நானே அமர்பொருதி நரர்களைக் கொல்லலுற்றேன்
என்றிவன் சொல்லையிலே எதிரிருந்த கும்பகர்ணன்
அண்ணாவே யென்மீது ஆயாசங் கொள்ளாதீர்
யான்சென்று சண்டைசெய்து இறந்துவிட்ட பின்னாலே
ஜானகியை ராமர்முன்னே சந்தோஷ மாயனுப்பி
சண்டையை நிறுத்திவிட்டு சமாதான மாயிருப்பீர்
இல்லாவிடி லிந்திரஜித்தை இலக்ஷுமணன்கொன்றிடுவான்

இராமனால் நீஇறப்பாய் என்றுசொல்லி கும்பகர்ணன்
தனுசைக் கரத்தேந்தி சமர்த்துடனே தேரிலேறி
இராக்ஷத சேனையுடன் இரணக்களத்தில் வந்துவிட்டான்
அத்தருணம் ஸ்ரீராமர் அப்பா விபூஷணனே
காண்போர் மனமிரள கருநீல பர்வதம்போல்
எதிரே வருகிறவன் எவனென்று கேட்கையிலே
குவலயத் தோர்புகழும் கும்பகர்ண னிவனென்று
அவன்சவிஸ் தாரமெல்லாம் அன்பாய்ப் புகன்றுவிட்டு
தர்ம குணத்தோனிவன் ஜானகியைத் தாவென்று
இராவண னிடத்திற்சொன்னான் இவன்சொல்லுங்கேளாம
தடுத்துவிட்டா னென்றுரைக்க ரகுராமர் யோசித்து
அவ்விதமா னவனை அழைத்து வருவாயென்றார்
அப்போ விபூஷணரும் அண்ணன்கும்ப கர்ணன்முன்னே
வந்து நமஸ்கரித்து வாருமண்ணா ராமர்முன்னே
நான்பெற்ற லங்கைதனை நலமாக யுந்தனுக்குக்
கொடுத்துவிட்டுன் ஊழியனாய் குற்றேவல் யான்புரிவேன்
என்றிவன் சொல்லையிலே எதிரிருந்த கும்பகர்ணன்
தம்பிநீ சொல்வதெல்லாம் சரியா யிருந்தாலும்
அண்ணனை துரோகஞ்செய்ய அனுவேனும் சம்மதியேன்
சகோதரன் பகைஞரிடம் தத்தளித்து நிற்கையிலே
தமயனுக்கு முன்னாலே தம்பியுயிர் தான்விடுத்தால்
சொர்க்க பதவியிலே சோராமல் வாழ்ந்திருப்பார்
ஆகையால் ராமர்முன்னே அமர்பொருதி யானிறந்து
அமரர்லோகம் போகின்றேன் அன்புடைய தம்பியேநீ
எங்களுக்கு உன்கையால் எள்ளுந் தண்ணீரிறைத்து
இராம ருதவியினால் இலங்கையை யாண்டிருப்பாய்
என்று-ஆசீர்வதித்து அனுப்பினான் கும்பகர்ணன்
விபூஷணர் ராமரிடம் விபரமாய் சொல்லிவிட்டார்
அப்படியா வென்றுசொல்லி அரிராமர் தானிருந்தார்

அங்கோர வேளையிலே அசுரர்களும் வானரரும்
மல்யுத்தம் குத்துசண்டை மரங்களா லடிக்குஞ்சண்டை
அடித்துக் கடித்துதைக்கும் அநேகவித சண்டைசெய்து
வானரங்க ளாலசுரர் வருத்தப்பட் டோடுகையில்
குரங்குகள் இராக்ஷஸரைக் கொன்றுவிட்ட தேயென்று
ஆக்ரமித்துப் பற்கடித்து அமர்க்களத்திற் றன்புகுந்து
தனுசிற் கணைதொடுத்துச் சரமாரி யாய்பொழிந்தான்
வானர வீரரெல்லாம் வீராவேசத்துடனே
விருக்ஷம் மலைகளையும் வேருடனே தான்பிடுங்கி
விறுவிறென தான்சுழட்டி வீசி யெறிகிறதும்
கும்பகர்ணன் மேற்பாய்ந்து குத்தியுதைத்துக்கடித்து
கையினுற் கிள்ளுவதும் கண்ணுற்ற கும்பகர்ணன்
கோபாவேசத்துடனே கொதித்தெழும்பி பற்கடித்து
வானர சேனைகளின் வாலைப் பிடித்திழுத்து
பூமியில்மோதியறைந்து பிராணனைப் போக்கிவிட்டு
அடித்துசில வானரத்தைக் காலால் நசுக்கிக்கொன்று
வசந்தனெனும் வானரத்தை நசுக்கிப் பிழிந்துதிரம்
திரேகத்தில் பூசிக்கொண்டு தீரமுடன் கர்ஜ்ஜித்தான்
அந்நேர வேளையிலே அங்கதனும் ஓடிவந்து
கும்பகர்ணன் தேர்மீது குதித்தவனைத் தானறைந்து
அடித்துதைத்துக் கிள்ளுகையில் அஸ்திரத்தில் அங்கதனை
மூர்ச்சிக்கச்செய்துவிட்டு முனைந்துசண்டைசெய்யலுற்றான்
ஆஞ்சநேயர் ஓடிவந்து அநேக மலைகளினுல்
கும்பகர்ணனை யடித்தும் கொஞ்சமுஞ் சலியாமற்
மலைபோ லிருப்பதைதான் மாருதியும் பார்த்துவிட்டு
ஸ்ரீராமர் வந்திவனைச் சித்ரவதை செய்வாரென்று
அவனைவிட்டு நீங்கிப்போய் அசுரருடன் சண்டைசெய்தார்
அப்போது லக்ஷ்மணரும் அஸ்திரங்களைத்தொடுத்து
கும்பகர்ணன் தேர்மீது குறிப்புடனே தான்விடுத்து

தேரை யொடித்துவிட்டு தேர்ப்பாகனைக் கொன்று
அம்புறுத் தூணியையும் அறுத்தெறிந்து வில்லொடித்து
நிராயுத பாணியாக நிலைதளரச் செய்துவிட்டார்
அந்நேர வேளையிலே அசுரரெல்லாம் ஓடிவந்து
இலக்ஷ்மணருடனே வின்சண்டை செய்யலுற்றார்
திடீரெனவே சுக்ரீவன் தீரமுடன் ஓடிவந்து
கும்பகர்ணன் தன்னுடனே குத்துசண்டை செய்கையிலே
இதுதான் குரங்கரசன் இதைப்பிடித்து ஓடிவிட்டால்
சண்டை யடங்குமென்று சமர்த்தன் சுக்ரீபனைத்தான்
கையினாலே பிடித்துக் கக்கத்தில் வைத்துக்கொண்டு
அரண்மனைக்குப் போகலுற்றான் அசுரர்கள் மனமகிழ
அத்தருணம் வானரங்கள் அரிராமர் முன்னேவந்து
சுவாமியா மென்னசெய்வோம் சுக்ரீபனை கும்பகர்ணன்
தூக்கிக்கொண்டு போனனென்று தயரப்படலானார்கள்
ஸ்ரீராம ரந்நேரம் சிலையிற் கணைதொடுத்து
சரக்கூடம் கட்டிவிட்டு தடுத்திட்டார் ராக்ஷதனை
கோதண்ட ராமனுக்கு கும்பகர்ணன் சொல்லுகிறான்
விற்திற முனக்கிருந்தால் விடுவித்துக் கொள்இவனை
இவனை விடுவித்தால் இராவணனைத் தான்ஜெயித்து
ஜானகி சிறைமீட்கும் சமர்த்தானவன் நீயே
என்றிவன் சொன்னவுடன் எடுத்தாரே அஸ்திரத்தை
கோதண்டத் திற்றொடுத்து கும்பகர்ணன் மேல்விடுத்தார்
சுக்ரீப ரானவரும் திடீரென்று கும்பகர்ணன்
காதுமூக்குந் தான்பறித்து கபிலென்று ஓடிவந்தார்
தங்கையைப் போலாக தன்கதியு மாச்சுதென்று
வீராவேசத்துடனே ஸ்ரீராமரை யெதிர்த்து
அமர்பொருதும் வேளையிலே அவன்கரத்தைத்தானறுத்து
காலையும் துணித்துவிட்டு கணையால் அவன்சிரசும்
அற்று விழும்படியே அரிராமர் செய்துவிட்டார்

அப்போது கும்பகர்னன் ஆவி விடுந்தருணம்
ஸ்ரீராமச் சந்திரரை சித்தத்திலேநினைந்து
சுவர்க்க பதவிசென்று சுகானந்த மாயிருந்தான்
அமர்க்களத்தைத்தான் விடுத்து அசுரரெல்லாம்ஓடி விட்டார்
அங்கோர வெளியிலே அரிராம லக்ஷ்மணரும் [ர்
மனத்துப ரகன்றதென்று மனோல்லாசமா யிருக்க
வானர சேனையெல்லாம் வருத்தந் தொலைந்ததென்று
ஆனந்த மாகவேதான் அரிராமர் தன்னுடனே
பாசறையிற் சென்று பயமின்றி வீற்றிருந்து
காய்கனி கிழங்குகளைக் களிப்புடனே பக்ஷித்து
சிந்தை மகிழ்ந்திருந்தார் ஸ்ரீராமர் கிருபையினால்

## அதிகாயன் சண்டை.

இவ்வித மாகவேதான் இவர்க ளிருக்கையிலே
இராவணன் மகோதரனை இன்பா யருகழைத்து
மாமாவே சீதையாசை மறக்க முடியவில்லை
அங்கதன் பாணத்தினால் ஆவிதடு மாறுதையோ
என்செய்வேன் மாமாவே இதற்கோ ருபாயஞ்சொல்வீர்
என்றிவன் கேட்கையிலே எதிரினில் நின்றிருந்த
மகோதர னவனும் மனமகிழ்ந்து சொல்லுகிறான்
மருத்துவ னென்பவனை மாயா ஜனகனைப்போல்
திருவுரு வமைத்தந்த சீதையின்முன் கொண்டுசென்று
உன்-தகப்பனைக் கொல்வேனென்றால் தானேயுனை மணந்து
வாழ்ந்திருப்பேனென்பாளென்ற மகோதரன்சொற்கேட்டு
அப்படியே செய்வீரென்று ஆசையுடன் ராவணனும்
ஜானகியின் முன்வந்து சரச மனோகரியே
என்-ஆசை தவிர்ப்பாயென அடடா படுபாவி
அற்பமா யெண்ணாதே அழிந்திடுவா யென்றுரைக்க
மாயா ஜனகனைத்தான் மகோதர னிழுத்துவந்து

சீதையின் முன்விடுக்க சித்தந் துடித்தழுது
இராக்ஷதர் மாய்கையென்று இருதளத்தி லெண்ணுமல்
தனது தகப்பனென்று தத்தளித்து தானழுதாள்
மருத்து வசுரனெனும் மாயா ஜனகனுந்தான்
அம்மணி சீதாயென் அருந்தவப் புத்திரியே
இராவணனை நீமணந்தால் என்னுயிர் பிழைக்குமம்மா
இல்லாமற் போனுலே இருதுண்டாய் வெட்டிடுவான்
என்னசெய்வேனம்மாவென்று இறைச்சலிட்டுத்தானழுதா
சீதையும் அத்தருணம் சித்தந் துடித்தழுது [ள்
என்-குலத்திற்பிறந்தவர்கள் குடும்பத்துடன்மாண்டாலும்
கற்புநிலைபிசகேன் கருத்தில் மதிப்பீரென்றாள்
மாது புகன்றமொழி மகோதரன் கேள்வியுற்று
அப்பா மருமகனே அதிவீர ராவணனே
ஜனகன்மேற் குற்றமில்லை சந்தோஷ மாகவேதான்
இவனைத் துரத்திவிட்டு இராமனைக் கொன்றுவிட்டால்
திக்கில்லா ஜானகியைத் திருமணம் புரிந்திடுவீர்
என்றிவன் சொல்லுமுன்னே இராக்ஷதர்கள் ஓடிவந்து
கும்பகர்ணனை ராமன் கொன்றுவிட்டா னென்றழுதார்
அவ்வார்த்தைக் கேள்வியுற்ற அதிவீர ராவணனும்
என்செய்வே னென்றழுது ஏங்கி விசாரமுற்று
இராவணன் தானழுக இராக்ஷதரெல்லாமழுதார்
இலங்கா புரியிலுள்ள இராக்ஷசிகள் தானழுதார்
மகோதரன் ராவணனின் மனதைத் திடப்படுத்தி
அரண்மனைக் கழைத்துவந்தான் அத்தருணம் ராவணனும்
அசுரர்களே உங்களுக்கு அணுவேனும் வீரமில்லை
நானேபோய் குரங்குடனே நரர்களையும் கொன்றுவிட்டு
என்-தம்பிபழி தீர்த்துவந்து ஜானகியை மணம்புரிவேன்
எட்டிதிற்பீ ரென்றதட்டி எழுந்திருந்தான் கோபமுடன்
இராவணன் தன்னுடைய இளைய குமாரனை

அதிகாயன் ஓடிவந்து ஐயாயென் சொற்கேளும்
என்னை அனுப்பிவைத்தால் இரண்டு மனிதருடன்
குரங்குகளையும் சேர்த்து கொன்றுதின்று வந்திடுவேன்
என்றிவன் சொல்லையிலே இராவணனும் சம்மதித்து
அப்படியே நல்லதென்று அனுப்பினான் அதிகாயனை
இராவணன் சொற்படியே இராக்ஷத வீரருடன்
தனுசைக் கரத்தேந்தி சமர்த்தன் அதிகாயன்
அதிவீர சூரனைப்போல் அமர்க்களத்தில் வந்துவிட்டான்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்த மிகமகிழ்ந்து
அப்பா விபூஷணனே அமர்செய்ய வந்திருக்கும்
இராக்ஷதன் யாரென்று இன்பமாய்க் கேழ்க்கையிலே
ரகுநந்தனா யிவனும் இராவணன் புத்ரனையா
அதிகாய னிவன்பேர்தான் அதிவீரசூரனிவன்
இவனை ஜெயித்தவர்கள் இல்லையே எவ்வுலகும்
பயந்து நடுங்கும்படி பராக்ரமுடன் சண்டைசெய்வான்
என்றிவர் சொல்லையிலே ஸ்ரீராமர் யோசித்து
என்தம்பி லக்ஷ்மணனே இவனை ஜெயித்திடுவான்
கண்ணாலே பாருமென்று களிப்புடனே சொல்லுகையில்
அசுரரும் வானரரும் அமர்பொருத லானார்கள்
அங்கதன் சுக்ரீபன் அனுமான் நீலன் நளனும்
சாம்புவந்த ரெல்லோரும் சமர்த்துடனே ராக்ஷதரை
அடித்துக் கடித்துதைத்து அமர்பொருதும் வேளையிலே
அசுரர்க ளெல்லோரும் அம்புகளால் வானரரின்
சேனைகளை வாட்டுகையில் செடிமரம் மலைகளையும்
வானர சேனையெல்லாம் வாரிவாரி ராக்ஷதர்மேல்
அடித்து நசுக்கிக் கொல்ல அசுரர்களிலனேகர்
ஆவி யிழந்துசாக அதிகாயன் பார்த்துவிட்டு
ஆனைக் கூட்டத்துடனே அமர்க்களத்திற் றன்புகுந்து
வில்லிற் கணைதொடுத்து வீரமுடன் சண்டைசெய்ய

ஆனைகளும் வானரரை அதஞ்செய்துக் கொல்லுகையில்
ஆஞ்சநேயர் ஓடிவந்து ஆனைகளைத் தான்பிடித்து
அதிகாயன் தேர்மீதும் அசுரர் படைமீதும்
வீசிட ராக்ஷதரின் வீரர்வெகு பேரிறந்தார்
தேரைச் செலுத்திக்கொண்டு தேவாந்தகனோடிவந்து
மாருதியின் மேற்கணைகள் மழைபோற் சொரிவதினால்
ஆனைப் படையைவிட்டு ஆக்ரமித்துப் பற்கடித்து
இவ்வென் றெகிரிவந்து தேவாந்தகனைப்பிடித்து
கழுத்தை யொடித்துவிட்டு கர்ஜ்ஜித்து ஓடிவந்து
அசுராதியரையெல்லாம் அதஞ்செய்து கொல்லுகிறார்
அத்தருணம் லக்ஷ்மணர் அதிகாயனை யெதிர்த்து
அமர்பொருதும் வேளையிலே அங்கதன் ஓடிவந்து
சுவாமியென் தோள்மீது சுகமா யமர்ந்துகொண்டு
அசுரனொடு சண்டைசெய்து அவனை வதைப்பீரென்றார்
அத்தருணம் லக்ஷ்மணரும் அங்கதன்தோள் மீதமர்ந்து
வில்லுங் கணைதொடுத்து வீராவேசத்துடனே
அதிகாயன் தேகமெல்லாம் அஸ்திரங்களால்மறைத்து
பிர்மாஸ் திரமொன்றைப் பிரயோகஞ் செய்துவிட்டார்
அந்தக்கணைவந்து அதிகாயன் சிரசுதனை
அறுத்தெறிந்ததைக்கண்டு அசுரரெல்லாம் ஓடிவிட்டார்
வானர வீரரெல்லாம் மனமகிழ்ந்து ராமர்முன்னே
வந்து வணங்கி வருத்த மொழிந்ததென்றார்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சித்த மிகமகிழ்ந்து
வானர சேனையுடன் பாசறையிற் போய்ச்சேர்ந்து
காய்கனி கிழங்குகளை களிப்புடனே தான்புசித்து
பசிதணிந்து யாவர்களும் பக்ஷமுடன் வீற்றிருந்தார்

## இந்திரஜித்தன் சண்டைக்கு வந்து நாகபாசம் தொடுத்தல்.

இராக்ஷதர்களோடிவந்து இராவணேசனைப்பணிந்து
அதிகாயன் லக்ஷ்மணனால் ஆவியிழந்தானென்று
சொன்ன மொழிகேட்டு சோர்ந்தழுதான் ராவணனும்.
அன்பான புத்திரனே அதிகாயா மாண்டாயோ
அமரர்களை ஜெயித்த அதிவீர சூரனே நீ
சின்ன மனிதனாலே ஜீவ னிழந்தனையோ
எவ்வித மாய்சகிப்பேன் என்மகனே யென்றலறி
இராவண னழுகையிலே இராக்ஷதரெல்லாமழுதார்
தானிய மாலைவந்து தரையில் புரண்டழுது
ஐயோ மணவாளா அதிகாயனை யிழந்தோம்
இத்தனை மனைவிகளும் இருக்கின்றோமே உமக்கு
சீதையின்மேல் மையலுற்று சீரழிய லானீரே
காம வெறியாலே கலகம் விளைத்தீரே
என் மைத்துனன் கும்பகர்ணனும் மஹாவீர ராக்ஷதரும்
உன்சொற் படியேசென்று உயிரிழந்தார் போர்க்களத்தில்
பத்து மாதம்சுமந்து பக்ஷமுடன் பெற்றெடுத்த
பிள்ளைக ளனைவரையும் பெண்ணாசை யாலிழந்தீர்
எங்கேயோ வானம் இடிந்ததென்று யானிருந்தேன்
பாவிதலைமீது பதறி விழுந்ததுபோல்
மணவாளா உன்னாலே மடிந்தாரே இராக்ஷதர்கள்
இந்த அநியாயம் எவர்கட்குத் தானடுக்கும்
என்றிவள் மனந்துடித்து இரைச்சலிட் டழுகையிலே
வெட்கத்துடன் கோபித்து வில்லைக் கரத்தெடுத்து
அஞ்சாதே பெண்ணேநீ அமர்க்களத்தில் யான்சென்று
அதிகாயனைக் கொன்றவரை அதாஹதஞ் செய்துவிட்டு
பழிக்கு பழிமுடிப்பேன் பத்தினியே யஞ்சாதே

மாளிகைக்குப் போவாரென்று மஹாஉக்ர கோபத்துடன்
தானிய மாலிதன்னை ராவணனனுப்பிவிட்டு
ஆலோசனை புரிந்து அரண்மனையில் வீற்றிருந்தான்
இந்தசமாச்சாரம் இந்திரஜித்தன் கேள்வியுற்று
அம்புவில்லுந் தானேந்தி அரண்மனையி லோடிவந்து
சஞ்சலமே னுந்தனுக்குத் தந்தையே சொல்லுமென்று
இந்திரஜித்தன் கேட்கையிலே இராவணன் சொல்லுகிறான்
அப்பாவென் புத்திரனே அசுரர் கூட்டத்துடனே
உன் தம்பி அதிகாயன் உயிரிழந்தான் போர்க்களத்தில்
என்றிவன் சொன்னவுடன் எதிரிருந்த இந்திரஜித்து
அப்படியா வென்றுசொல்லி ஆங்காரக் கோபமுடன்
கனைத்துக் கதித்தெழும்பி கர்ஜ்ஜித்துச் சொல்லுகிறான்
இலங்கை நகரில்வந்து இராக்ஷதரை கொன்றுவிட்ட
குரங்கையான் பிடித்துவந்தால் கொல்லாமல் விட்டதினால்
ஊரைக் கொளுத்திவிட்டு உபாயமாய் ஓடியது
ஊரின் உளவுசொல்ல உன் தம்பி பகைஞரிடம்
அன்பா யிருப்பதாலே அசுரர் உயிரிழந்தார்
ஆனாலு மிப்பொழுதே அமர்க்களத்தில் யான்சென்று
என்-கூடப்பிறந்தவனை கொன்றவனை அஸ்திரத்தால்
சித்ரவதை செய்துவிட்டு திரும்புகிறேன் ஐயாவே
பழிக்குப் பழிமுடித்து பராக்ரமுடன் வாறேனென்று
அதட்டி யெழுந்திருந்து அசுராதிவீரருடன்
வில்லைக் கரத்தேந்தி விஜயரத மீதேறி
பேய்கணங்கள் சூழ்ந்திருக்கும் போர்களத்தில் வந்துவிட்
அந்நேர வேளையிலே அரிராம லக்ஷ்மணரும் [டான்
வானரசேனையுடன் வந்துவிட்டார் போர்க்களத்தில்
அசுரரும் வானரரும் அமர்பொருதலானார்கள்
அங்கதன் நளன்நீலன் அனுமான் சாம்புவந்தரும்
விருக்ஷங்கள் மலைகளையும் வேருடனே தான்பிடுங்கி

அசுரர்களை அடித்து அதஞ்செய்து கொன்றார்கள்
சமர்த்துடனே இந்திரஜித்து தனுசில் அநேககணை
தொடுத்துவிட வானரங்கள் சோர்ந்து துடிதுடித்து
காலிழந்தும் வாலிழந்தும் கண்டதுண்ட மானார்கள்
மஹாவீர சுக்ரீபன் மரங்கள் மலைகளையும்
வேருடனே பேர்த்தெடுத்து வெஞ்சினத்தால்இந்திரஜித்
அடிக்குந் தருணமவன் அஸ்திரத்தை தான்விடுத்து
மூர்ச்சிக்கச் செய்துவிட முன்நின்ற அங்கதனும்
இந்திரஜித்தனை யெதிர்த்து இருவருமாய்ச் சண்டைசெய்து
பர்வதங்களாலடிக்க பாணத்தா லிந்திரஜித்தன்
அங்கதனை மூர்ச்சைசெய்ய அனுமந்தன் ஓடிவந்து
பிர்மாண்ட மானஒரு பெரியமலை தனை
வேருடனே தான்பிடுங்கி விட்டெறிந்தார் ராக்ஷதன்மேல்
கணைகளா லிந்திரஜித்தன் கண்டதுண்டம் செய்துவிட்டு
வில்லெடுக்கத் தெரியாத வீரமில்லாகுரங்கே
கல்லெடுத் தடிக்கவந்தாய் கானகத்தில் வாழ்குரங்கே
என்னை ஜெயிப்பதற்கு எவராலு மாகாதே
உன்னால் முடியுமோதான் ஓடிப்போடா குரங்கே
என்-தம்பியைக்கொன்ற சமர்த்தான லக்ஷ்மணனை
சித்ரவதை செய்துவிட்டு சித்த மிகமகிழ்ந்து
பழிக்கு பழிமுடித்து பராக்ரமாய் போவேனென்றான்
அவ்வார்த்தைக் கேள்வியுற்று ஆஞ்சநேயர் சிரித்து
ஊர்க்குருவி கருடனுக்கு உவமைசொன்ன வாறதுபோல்
உண்மைக் கினவுகண்டு உளருதல்போல் பேசுகிறாய்
வில்லெடுத்து உம்மைக்கொல்ல ஸ்ரீராம லக்ஷ்மணரும்
வீரமுடன் வந்துவிட்டார் தீர்ந்ததுங்கள் ஆயுசெல்லாம்
கல்லெடுத்து ராக்ஷதர்க்குக் கருமம்புரிவதற்கு
விபூஷணனும் வந்திருக்க விதியை நினைந்தழாமல்
பெரியாச வார்த்தையென்றுன் பாஷிக்கலானாயோ

ஆர்மீது சண்டைசெய்ய ஆவலுற்றாலும்நீ
சம்மதமே யெங்களுக்கு சாற்றுவா யென்றுரைக்க
இலக்ஷ்மணனுடனே இத்தருணம் சண்டைசெய்து
தம்பி பழிக்குபழி தகுந்தபழி வாங்கிடுவேன்
பாரடாயென்று சொல்லி பாணப்பிர யோகஞ்செய்ய
அனுமானும் சாம்புவந்தர் அங்கதனும் வானரரும்
வீரமுடன் இந்திரஜித்தை வெகுநேரமாய் சூழ்ந்து
விருக்ஷம் மலைகளாலும் வீரமுடன் சண்டைசெய்து
இந்திரஜித்தின் அஸ்திரத்தால் இளைத்துக் களைத்திருக்க
அந்நேர வேளையிலே ஆஞ்சநேயர் தோள்மீது
இலக்ஷ்மணர் வீற்றிருந்து இந்திரஜித்தின் மேற்கணைகள்
சராமாரி யாய்ப்பொழிந்து சண்டைசெய்யும் வேளையிலே
இலக்ஷ்மணர் விடுங்கணையால் இந்திரஜித்தன் தேரொடிந்து
கைவில்லுந் தான்முறிந்து கவசமுந் தூளாகி
அசுரர்களும் ஓடிவிட்டார் அத்தருணம் வானரங்கள்
இலக்ஷ்மணரைத் தான்புகழ்ந்து இன்புட னிருக்கையிலே
கண்ணுற்ற இந்திரஜித்தன் கர்ஜ்ஜித்து வீரமுடன்
மற்றொரு வில்லெடுத்து மந்திரோபதேசஞ்செய்து
நாகாஸ்திரம் தொடுத்து வேகமுடனே விடுத்து
அனைவரையும் மூர்ச்சைசெய்து அசுராதி வீரருடன்
இராவணன் முன்சென்று இறந்தார்கள் வானரரும்
நரர்களும் யான்விடுத்த நாகாஸ்திரத்தினாலே
ஆவியிழந்தாரென்று அன்புடன் சொல்லிவிட்டான்
இந்திரஜித்தன் சொற்கேட்டு இராவணன்மகிழ்ந்திருந்தான்
இலக்ஷ்மணரும் வானரரும் இளைத்து மனந்திகைத்து
நாகாஸ்திரத்தினாலே நடுங்கியே மூர்ச்சையானார்
அத்தருணம் ஸ்ரீராமர் அலறிமனமயங்கி
தம்பி இலக்ஷ்மணனே தமயனைப் பிரிந்தாயோ
என்னைப் பிரிந்துவிட்டு ஏகினையோ சொர்க்கபதி

துணையாக வந்திருந்த சுக்ரீபா ஆஞ்சநேயா
அங்கதா சாம்புவந்தா அனைவரு மிறந்தீரோ
என்னசெய்வே னென்றுசொல்லி ஏங்கி விசாரமுற்று
இராம ரழுகையிலே இமையவரெல்லாமழுதார்
அந்தரத்து தேவர்களும் சிந்தை துடித்தழுதார்
கருட னிதையறிந்து கபிலென்றே ஓடிவந்து
நாகபா சத்தையெல்லாம் நாசமாய்க் கொய்துவிட்டு
கட்டுகளைத் தானறுத்து ககனத்திற் போய்மறைந்தார்
இறந்தவர் போலிருந்த இலக்ஷ்மணரும் வானரரும்
தூங்கினவர் போலாக சுகானந்த மாயெழுந்தார்
ஸ்ரீராமச் சந்திரரும் சிந்தை மிகமகிழ்ந்து
கருடபகவானே காருண்ய தேவதைபோல்
பிரியமுடனே வந்து பிராணபிக்ஷை தந்தீரென்று
வானரசேனைகளை வாழ்த்தியா சீர்வதித்து
தம்பி இலக்ஷ்மணனே சஞ்சலந் தீர்ந்ததென்று
ஆனந்த மாகவேதான் அன்பா யிருந்தார்கள்

## இந்திரஜித்தன்விட்ட பிர்மாஸ்திரத்தால் இலக்ஷ்மணரும் வானரசேனைகளும் மரணமூர்ச்சை யானதால் அனுமார் சஞ்சீவி மலையைக் கொண்டுவந்து சகலரையும் எழுப்பிவிடுவது.

இவ்விதமா யிவர்கள் இன்புற் றிருக்கையிலே
சாரணர்க ளோடிவந்து ராவணனைத் தான்பணிந்து
நாகசாஸ்திர மறுந்து நரர்களும் வானரரும்
உயிர்பெற் றெழுந்தாரென்று உற்றதெல்லாஞ்சொல்லிவிட்
மகாபாரி சுவனுடனே மாய தூமாக்ஷனும் [டார்
இராவணனைத் தான்பணிந்து இத்தருணம் யாங்கள்சென்று
குரங்குடன் மனிதரையும் கொன்றுவிட்டு வாரோமென்றார்

போய்வருவீ ரென்றவரை புகழ்ந்துரைக்கும் வேளையிலே
இராவணேசா இவர்கள் இரணக்களத்தில் நிற்காமல்
பயந்தோடி வந்தாரென்று பகர்ந்தனர் தூதுவர்கள்
அப்படியா வென்றிவனும் ஆக்ரமித்து பற்கடித்து
இவர்களின் மூக்கறுத்து இலங்கையைவிட்டுத்துரத்த
ஆலோசனைபுரிய அருகிருந்த மாலியென்போன்
இவ்விதம்கோபிப்பதுதான் இயற்கையல்ல வீரர்கட்கு
சமயத்திற் கேற்றாற்போல் சண்டைசெய்யும் வேளையிலே
ஓடியொளித்திருந்து உயிரைப் பதனஞ்செய்து
பகைஞர் களையெதிர்த்து பராக்ரமாய் சண்டைசெய்வார்
இந்திரஜித்துலக்ஷ்மணனால் இரணக்களத்தைத்தான்விடுத்து
ஆகாயத் தில்மறைந்து அரண்மனையி லோடிவந்தார்
அவ்விதமே இவர்கள் அமர்பொருத லரனர்கள்
இதுவே சூரியற்கை இராவணேசா வென்றுரைத்தான்
சரிசரி அவ்விதமே சமர்த்தாக நீங்கள்சென்று
எவ்விதமா னாலுமந்த இரண்டு மனிதருடன்
குரங்குகளையுஞ் சேர்த்து கொன்றுவிட்டு வாருமென்றான்
அப்படியே நல்லதென்று அசுராதி வீரருடன்
மாலி தூமாக்ஷனும் மகாபாரி சுவன்சனசன்
குமுதன் விருஷபனும் கோபமாக கேதுவுடன்
வஜ்ரதந்தன் ராக்ஷதரும் வந்துவிட்டார் போர்க்களத்தில்
கண்ணுற்ற வானரங்கள் கர்ஜ்ஜித்து தானெழும்பி
அசுரர்களை யெதிர்த்து அடித்துதைத்துக் கொல்லுகையில்
இலக்ஷ்மணரும் அம்புகளால் இராக்ஷதரைக் கொன்றுவிட்
மகரக்கண்ணன் ஓடிவந்து மஹாஉக்ர கோபத்துடன் [டான்
வெகுநேரம் யுத்தஞ்செய்து வெஞ்சமரில் தானிறந்தான்
சாகாத ராக்ஷதர்கள் தசமுக ராவணன்முன்
ஓடிவந்துபோர்க்களத்தில் உற்றதெல்லாம்சொல்லிவிட்டார்
இராவணன் கேள்வியுற்று இந்திரஜித்தைத் தானழைத்து

மனிதர் குரங்குகளால் மாண்டார்கள் ராக்ஷதர்கள்
என்றிவன் சொல்லுமுன்னே எழுந்திவன் கர்ஜ்ஜித்து
இன்றைக்கே வானரரும் இரண்டு மனிதர்களும்
ஆவியிழந்துவிட அஸ்திரத்தால் கொல்லுகிறேன்
என்றிவன் சொல்லிவிட்டு இராக்ஷத சேனையுடன்
அமர்க்களத்தில் ஓடிவந்து அஸ்திரத்தைத் தான்தொடுத்து
சண்டைசெய்யும் வேளையிலே சமர்த்தான வானரர்கள்
விருக்ஷம் மலைகளையும் வேருடனே பேர்த்தெடுத்து
இந்திரஜித்தன் மேலடித்து இம்சிக்கும் வேளையிலே
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சிலையில் கணைதொடுத்து
இராக்ஷத வீரருடன் இந்திரஜித்தையும் மடக்கி
வெகுநேரம் யுத்தஞ்செய்யும் வேளையில் மகோதரனும்
இந்திரன்போ லுருவமைந்து இராக்ஷதரை தேவர்போலும்
மாயரூப மாயமைத்து மகாவுக்ர கோபத்துடன்
இராமருடன் சண்டைசெய்து இராக்ஷதரை பறிகொடுத்து
கைசோர்ந்து மெய்சோர்ந்து காதகனும் ஓடலுற்றான்
இலக்ஷ்மணர் விடுங்கணைகள் இந்திரஜித்தன் மேற்பாய்ந்து
தேரை யொடித்துவிட்டு தேர்ப்பாகனைக்கொன்று
கவசத்தைத் தூளாக்கி கைவில் நாணியறுத்து
அசுரர் களைவதைத்து அதஞ்செய்யும் வேளையிலே
இந்திரஜித்து வேறுருவில் எடுத்து குணத்தொனித்து
பிர்ம்மாஸ்திரந் தொடுத்து பிரயோகஞ் செய்துவிட்டான்
அந்த-அஸ்திரம் தானெழும்பி அமர்க்களத்தில் சண்டை
இராமரைத் தீண்டாமல் இலக்ஷ மணருடனே [செய்யும்
வானர சேனையெல்லாம் வாழ்நாள் முடிந்தாற்போல்
மரணமூர்ச்சைசெய்துவிட மனமகிழ்ந்தான் இந்திரஜித்தன்
பகையெல்லா மின்றோடே பறந்துவிட்ட தென்றெண்ணி
இராவணன்முன் வந்துரைத்த இன்புற்றிருக்கையிலே
ஸ்ரீராமச் சந்திரரும் தீரமுடன் ஓடிவந்து

அமர்க்களத்தை பார்த்துவிட்டு அதிக வருத்தமுற்று
வானரரும் லக்ஷ்மணரும் மரணமுற்றா ரென்றெண்ணி
விதியை நினைந்தழுது விசனத்தால் மூர்ச்சையானார்
இராக்ஷதர்க ளெல்லோரும் இராவணன்முன் ஓடிவந்து
இந்திரஜித்தன் அஸ்திரத்தால்-இலக்ஷ்மணனும் வானரரும்
இறந்துவிட்டதைப்பார்த்து இராமனும் மாண்டுவிட்டான்
என்றிவன் சொல்லையிலே இராவணேசன் மகிழ்ந்து
இராக்ஷத பிரேதங்களை எவராகிலும் பார்த்தால்
பரிகாசஞ் செய்வாரென்று பக்கத்தில் நின்றிருந்த
மருத்தாசுரனையனுப்பி மாண்ட அசுரருடல்
கடலிலெறிந்துவிட கட்டளை செய்துவிட்டு
பொற்கொடி ஜானகியை புஷ்பவிமானத்திலேற்றி
இரணக்களத்தைக் காட்டுமென்று இராக்ஷசி கட்குரைத்தான்
அப்படியே நல்லதென்று அசுரஸ்திரீ யெல்லோரும் [டன்
அமர்க்களத்தில் ஜானகியை அன்பாயழைத்துச் சென்றார்
சீதையம்ம னந்நேரம் ஸ்ரீராம லக்ஷ்மணரும்
வானர சேனையுடன் மரணமூர்ச்சை யாயிருக்க
பார்த்து வயறெரிந்து பதறி துடித்தடித்து
ஆசை மணவாளா ஆவியிழந்தீரோ
என்னசெய்வே னென்றலறி எதிரிருந்த லக்ஷ்மணரைக்
கண்டு விசனமுற்றுக் கையை முறித்தழுது
ஐயையோ மைத்துனரே அமரர்பதி சென்றீரோ
பெண்வார்த்தைக் கேள்வியுற்றோர் பெருந்துயரடைவது
என்வார்த்தை யாலுமக்கு இடையூறுநேர்ந்ததுவே [போல்
மானைப் பிடிப்பதற்கு மணவாளனை யனுப்பி
உன்னையும் பின்னனுப்பி உற்ற விதிவசத்தால்
ஜடாயுவையு மிழந்து சஞ்சலத்துட னிருக்க
நீங்களும் இறந்தீரோ நீதியுள்ள வீரர்களே
தர்மந்தவறியதோ தலைவிதியோ யானறியேன்

என்றுசொல்லி சீதையம்மன் ஏங்கி யழுகையிலே
திரிச்சடை யம்மனுந்தான் சீதையின் மனந்தேற்றி
அழுதுத் துடிக்காதே அசுரர்கள் மாயமிது
மாயமா னுகவேதான் மாரீசன் வந்ததுவும்
ஜனகனைப்போல் ராக்ஷதனை சிருஷ்டித்து வந்ததுவும்
நாகபாசத்தாற்கட்டி நலிந்திடச் செய்ததெல்லாம்
அசுராதியர் மாயமென்று அறிந்திருந்து இவ்விதமாய்
வீணுய் மனம்பதறி விசனப்படவேண்டாம்
சற்றுநேரம் பொறுத்தால் சகலரு மெழுந்திருப்பார் [த்து
அழவேண்டாமென்றுசொல்லி அமர்க்களத்தைத் தான்விடு
அசோக வனத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்விட்டான்
காய்கனிகள் கொண்டுவர கானகத்திற் சென்றிருந்த
விபூஷணரும் போர்க்களத்தில் விரைவுடனே வந்துநின்று
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சித்த மிகமயங்கி
வானர சேனையுடன் வருத்தத்துடன் போர்க்களத்தில்
மரணமூர்ச்சை யாயிருக்க மனவிசார முற்றிவரும்
அனுமந்தனைப் பார்த்து அதிக விசாரமுற்று
அஸ்திரமெல்லாம் பிடுங்கி அனுமான் களையாற்றி
குளிர்ந்தஜலங் கொண்டுவந்து குடிப்பித்தா ரந்நேரம்
மூர்ச்சை தெளிந்தவரும் முகமலர்ச்சி யாகவேதான்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சேனைகளு மெங்கேயென்றார்
பார்த்ததெல்லாம் சொல்லிவிட்டு பரிதாப மாகவேதான்
ஆஞ்சநேயர் தன்னுடனே அமர்க்களம் சோதிக்கலானார்
சாம்புவந்தர் ஓரிடத்தில் சஞ்சலமாய் வீழ்ந்திருக்க
அனுமான் விபூஷணரும் அவர்முகத்தைப் பார்த்தழுது
என்னசெய்வோ மென்றுசொல்லி ஏங்கிவிசாரமிட்டார்
அத்தருணம் சாம்புவந்தர் அனுமந்தனைப்பார்த்து
நீர்-இத்தருணம் வடதிசையில் இருக்கின்ற மேருமலை
தாண்டியே சென்றால் சஞ்சீவி மலைதோன்றும்

அவ்வனம் சென்றுநீர் அம்மருந்தைக் கொண்டுவந்தால்
நம்முடைய சேனையெல்லாம் நலமுடனே தான்பிழைப்பார்
என்று-சாம்புவந்தர் சொன்னவுடன்சந்தோஷ மாயனுமா [ன்
விஸ்வரூபம் தானெடுத்து வேகமுடனே பாய்ந்து
சஞ்சீவி பர்வதத்தைச் சந்தோஷமா யெடுத்து
அதிவேகமாய்ப் பாய்ந்து அமர்க்களத்தில் வந்துவிட்டார்
* அசுரர்கூட்டந்தவிர அனைவரும் உயிர்த்தெழுந்தார்
சஞ்சீவி காற்றுவீச ஸ்ரீராம லக்ஷ்மணரும்
வானர சேனைகளும் வருத்தமெல்லாமொழித்து
உயிர்பெற் றெழுந்திருந்தார் உற்றதுயர் தீர்ந்ததென்று
அரிராமச் சந்திரரும் அநுமானைத் தான்புகழ்ந்து
ஐயனே ஆஞ்சநேயர் ஆதியில் தசரதனின்
மைந்தர்க ளாயுதித்து மரணமுற்று இத்தருணம்
உன்-வயற்றில் பிறந்ததுபோல் மறுஜனன முற்றோமென்று
வாழ்த்தி வரங்கொடுத்து வையகத்தி லெந்நாளும்
[] சிறஞ்சீவி யாயிருந்து ஜீவிப்பா யென்றுசொல்லி

---

* இராம லக்ஷ்மணனும் வானரசேனைகளும் இறந்துவிட்டா ரென்னும் சந்தோஷத்தினால் இராவணேஸ்வரனவன் தமது இராக்ஷத பிணங்களை பிறர்கண்ணுற்றால் பரிகாசிப்பா ரென்று மருத்துவா சூரனால் இராக்ஷச பிணங்களை அதிசீக்கிரமாய்க்கடலில் போட்டு விடும்படி உத்திரவு செய்து விட்டான். ஆகையால் இராக்ஷதர் பிணமெல்லாம் ஜலத்தில் மூழ்கிவிட்டது. ஆனால் அமர்க்களத்திலிருந்த வானர சேனைகள் மாத்திரம் சஞ்சீவி காற்றினால் உயிர்பெற் றெழுந்தார்கள்.

[] ஸ்ரீமந் நாராயண மூர்த்தியாகிய இராமரானவர் அநுமந்தனுக்கு சிறஞ்சீவி பட்டங் கொடுத்தமையால், இன்னமும் உயிருடனே இருக்கின்றார். இவரைப் பார்க்க வேணு மென்றால் காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாச்சர்யம், இடும்பை, வேட்கை யென்னும் அஷ்டவித துர்க்குணங்களையு மொழித்து சுத்தமன தாயிருந்தால் ஆஞ்சநேயரைக் காணலாம்.

ஸ்ரீராமச் சந்திரரும் சித்தமகிழ் திருந்தார்
இலக்ஷ்மணர் விபூஷணரும் இன்பாய் மகிழ்ந்திருந்தார்
வானர சேனைகளும் மனமகிழ் வாயிருந்தார்
அத்தருணம் ஆஞ்சநேயர் அரிராமரைப்பணிந்து
சகலருக்கு மின்றோடு சஞ்சலந் தீர்ந்ததென்று
சஞ்சீவி பர்வதத்தை சந்தோஷமாய்த் தோள்மீது
எடுத்துக்கொண்டு வேகமுடன் எகிரியே பாய்ந்துசென்று
பழைய விடந்தனிலே பத்திரமாய் வைத்துவிட்டு
அமர்க்களத்தில் ஓடிவந்தார் அந்நேர வேளையிலே
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சிந்தை மிகமகிழ்ந்து
வானர சேனையுடன் வந்துவிட்டார் பாசறையில்
இன்பாய் விபூஷணரும் இனிமையுள்ள காய்கனிகள்
மாங்கனியும் தேன்கனியும் மதுர பலாக்கனியும்
கொய்யாப் பழங்களுடன் கொடிமுந்திரிப்பழமும்
கிச்சிலிப் பழங்களுடன் மதுரமுள்ள அன்னாசி
மலைதேனுங் கொண்டுவந்து மகிழ்ச்சியுடன் தான்கொடுத்து
உண்ணுங்க ளென்றுசொல்லி உபசரித்தா ரந்நேரம்
வானர சேனையெல்லாம் வயிறுறத் தான்புசித்தார்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்தமகிழ்வாய்புசித்தார்
எல்லோரும் புசித்துநன்றாய் ஏப்பமிட்டு பசிதணிந்து
வாககாலைத் தானுதறி களைதீர்ந்து யாவர்களும்
சஞ்சல மில்லாமல் சந்தோஷ மாயிருந்தார்
அரிராம லக்ஷ்மணரும் ஆனந்த மாயிருந்தார்

## இந்திரஜித்தன் மாயசீதையை ஆஞ்சநேயர் முன்பாக கோன்றுவிட்டு நிகும்பலையாகஞ் செய்யப்போகுதல்.

இப்படியாகவே தான் இவர்களிருக்கையிலே
இராக்ஷதர் ஓடிவந்து இராவணேஸனைப்பணிந்து

ஐயனே வானரங்கள் ஆவியுடனெழுந்தார்
நரர்களிருவர்களும் நலமாய் பிழைத்துக்கொண்டார்
சஞ்சீவி பர்வதத்தால் சகலரும் பிழைத்தார்கள்
என்றிவர் சொன்னவுடன் இராவணன் அதிசயித்தான்
அருகிருந்த இந்திரஜித்தன் அன்புடனே சொல்லுகிறான்
தந்தையே யாதொன்றும் சஞ்சல மெய்தாதீர்
நிகும்பலையில் யான்சென்று நிகழும் யாகம்முடித்து
தங்க ரதமுடனே தனுசுங் கணைகளெலாம்
வரம்பெற்று வந்தவுடன் வதைக்கிறேன் பகைஞர்களை
என்று-இராக்ஷத னொருவனைத்தான் இந்திரஜித்தன் தந்திரமாய்
மாயசீதைபோற்செய்து மாருதிமுன் கொண்டுவந்து [மாய்
இவளாலே யெங்களுக்கு இவ்வளவு துன்பமாச்சு
அடடா குரங்கேஇவள் ஆவியைப் போக்குறேன்பார்
என்று-ஓங்கினான் கைவாளை ஓஹோஹோ வென்றலறி
அனுமான் துடிதுடித்து அசுரர்புகழ் இந்திரஜித்தே
பெண்கொலை செய்யாதே பெருமையுள்ள வீராநீ
சீதையைக்கொல்லாதே யென்று சிந்தை துடித்தழுதார்
இராக்ஷத வீரனை இந்திரஜித்து அந்நேரம்
மாயா சீதைதன்னை வாளினால் வெட்டிவிட்டு
அயோத்தியிற்சென்று அதஞ்செய்கிறேனென்று
விமானத்தின் மீதமர்ந்து வடக்கேபோக்குக்காட்டி
திருடன்போல் நிகும்பலையில் திடீரெனவே வந்தமர்ந்து
வேண்டும் வரம்பெறவே வேள்விநடத்தலானான்
அந்தருணம் ஆஞ்சநேயர் அரிராமர் முன்னேவந்து
சீதையை இந்திரஜித்தன் சிரந்துணித் தயோத்திநகர்
போயினா னென்றுசொல்ல பொறிகலங்கி ஸ்ரீராமா
ஜானகி மடிந்தனளே தம்பி இல்க்ஷமணனே
ஆவி விடும்போது யாரை நினைந்தாளோ
எவரை நினைந்தவளும் ஏங்கி யழுதாளோ

என்று-ஸ்ரீராமச் சந்திரரும் சிந்தை துடித்தழுதார்
இலஷ்மணரும் வானரரும் இறைச்சலிட்டு தானழுதார்
அப்போ விபீஷணரும் ஆலோசனைபுரிந்து
வண்டு உருவமாக வந்தார் அசோகவனம்
சீதையைக் கண்டுவிட்டு சித்தம் மிகமகிழ்ந்து
நிகும்பலையில் இந்திரஜித்தன் நேர்மையாய் வேள்விசெய்யும்
மர்மமெல்லாமுணர்ந்து மாயமாயோடிவந்து
அமர்க்களத்திலேயிருக்கும் அரிராம லக்ஷ்மணர்க்கும்
வானர சேனைகட்கும் விபரமாய்ச் சொல்லிவிட்டார்
ஸ்ரீராமச் சந்திரரும் சித்த மிகமகிழ்ந்து
தம்பி இலக்ஷ்மணனை தனுசைக் கரத்தேந்தி
வானர வீரருடன் வல்லமையாகவேதான்
நிகும்பலை வேள்விதனை நிர்த்தூளி செய்துவிட்டு
இந்திரஜித்தனைக்கொன்று இன்பாய் வருவாயென்றார்
நல்லதண்ணு வென்றுசொல்லி நடந்தாரே லக்ஷ்மணரும்
வானர வீரருடன் வந்தார் நிகும்பலையில்
அனுமந்தன் சுக்ரீபன் அதிவீர நீலன்நளன்
அங்கதன் ஜாம்புவந்தர் அசுரருடன் சண்டைசெய்ய
தனுசிற் கணைதொடுத்து தகுந்த குறிபார்த்து
இந்திரஜித்தன் வேள்விதனில் இலக்ஷ—மணர் தான்விடுத்து
ஓமாக்கினியையவித்து உடைத்தார் கலசங்களை
அத்தருணம் அங்கிருந்த அசுரரெல்லாம் ஓடிவிட்டார்
இலக்ஷமணரும் வானரரும் இந்திரஜித்தனையெதிர்த்து
சண்டைசெய்யும் வேளையிலே சலித்து மனம்பதறி
வீராவேசத்துடனே விபூஷணரைத் தான்பார்த்து
கோடாலிக் காம்புபோல குலத்தை யழிக்கவந்த
சிற்றப்பா பகைஞரிடம் சேர்ந்துயென் வேள்விதனை
அழித்துவிடச் சொன்னயே அடுக்குமோ ஈதுனக்கு
என்றிவன் நிந்தித்து இகழ்ச்சியாய் தூஷிக்க

அருகிருந்த விபூஷணரும் அடடா துஷ்டப்பயலே
கழுதைக் குபதேசம் காதிலுரைத்தாலும்
பழுதாகு மென்பதுபோல் பாவியுன் தகப்பனுக்கு
பற்பல நீதிகளைப் பக்ஷமுடன் யான்புகன்று
சீதையை ராமர்முன்னே தீவிரமாய்த் தான்விடுத்து
சமாதான மாவாயென்று சாற்றுமென்சொற் கேளாமல்
இராமர் பகைதேடி இராக்ஷதர் களையொழித்தான்
நானென்ன செய்வேனடா ஞாயமில்லா பாவிகளா
என்றிவர் சொல்லையிலே இந்திரஜித்தன் கோபித்து
இப்போ துன்னைக்கொன்று இரண்டு மனிதருடன்
குரங்குக்கூட்டங்களையும் கொல்லுவே னென்றதட்டி
வில்லிற் கணைதொடுத்து விபூஷணர் மேல்விடுத்தான்
அந்தக் கணையையெல்லாம் அறுத்துவிட்டார்லக்ஷ்மணரும்
பின்னும் வெகுகணைகள் பிரபலமாய்த் தான்விடுத்தான்
விபூஷணரும் கோபித்து வீராவேசத்துடனே
இருப்புலக்கை கொண்டுவந்து இந்திரஜித்தன் தேர்மேலே
ஓங்கி யடிக்கையிலே ஒழிந்ததவன் தேர்பரியும்
சாரதியுந் தானிறக்க தனியானான் இந்திரஜித்தன்
அத்தருணம் இலக்ஷ்மணரும் அஸ்திரங்களை விடுத்து
சித்ரவதை செய்யயிலே சித்தந் தடுமாறி
அமர்க்களத்தைத் தான்விடுத்து அரண்மனையில் ஓடிவந்து
இராவணனைப் பார்த்து என்னைபெற்ற ஐயாவே
சீதையை விட்டுவிட்டால் ஜீவன் நிலைத்திருப்போம்
இல்லாமற் போனாலே இறந்திடுவோ மெல்லோரும்
இனிமேலே சண்டைசெய்ய என்னால் முடியாது
உன்தம்பி இராக்ஷதரின் உளவெல்லாம் சொல்லிவிட்டான்
என்று-ஆதியோடந்தமாக அணுவும் பிசகின்றி
விபரமாய்ச் சொல்லிவிட்டு வீணாசை கொள்ளாதீர்
சீதையை ராமர்முன்னே சீக்கிரமாய்த் தான்விடுவீர் [அ
என்று-இந்திரஜித்தன்சொன்னவுடன் இராவணன்கோபித்

அடடா சிறுப்பயலே ஆண்மையில்லா வார்த்தைசொன்னாய்
எனக்குப் பிறந்திருந்தால் எதிரிகட்கு அஞ்சாமல்
சண்டைசெய்ய மாட்டாயோ சமர்த்தில்லா சிறுபயலே
சீச்சீ கெட்டாயென்று சீறியே யெழுந்திருக்க
இராவணன் மனக்குறிப்பை இந்திரஜித்தன் கண்டுணர்ந்து
ஆயுள் முடிந்ததென்று ஆலோசித் தன்புடனே
ஐயாவே யுந்தனுக்கு அன்புடன் யான்பிறந்த
புத்ரகடன் தீர்ப்பதற்குப் போகின்றேன் போர்க்களத்தில்
செத்துமடிந் தென்ஜீவன் சிவலோகம் போனாலும்
மைந்தனென்ற பாசம் மறவாதீ ரென்றுசொல்லி
கோதானம் பூதானம் கொடுத்தான் பிராமணர்க்கு
தேரை யலங்கரித்து தேர்ப்பாகனை யமர்த்தி
சிவசிவா வென்றுசொல்லி திருநீறு தானணிந்து
மாயப்ர பஞ்சமென்னை மயக்காமல் செய்வீரென்று
ஈஸ்வரனைத் தான்துதித்து இராக்ஷக சேனையுடன்
அமர்க்களம் வருகையிலே அவசகுனங் காணுகிறான்
ஏணியுடன் சாணானும் எண்ணைத் தலையனையும்
கட்டுச்சுரு ளோலையேந்தும் கணக்கனையும் ஒரியையும்
பார்த்து மதிமயங்கி பரமேஸ்வராயென்று [டான்
அழுதகண்ணுஞ் சிந்தையுமாய் அமர்க்களத்தில்வந்துவிட்
இலக்ஷமணரும் வானரரும் இராக்ஷதரைகொன்றுவிட்டார்
இந்திரஜித்தன் வானரரை எதிர்த்து அமர்பொருதி
சிலையிற் கணைதொடுத்து சித்ரவதை செய்யலுற்றான்
அத்தருணம் லக்ஷமணர் அர்த்தசந்திராஸ்திரம் விடுத்து
இந்திரஜித்தன் தலையை இரண்டாய்த் துணித்துவிட்டார்
அங்கதன் ஓடிவந்து அவன்சிரசை தானெடுத்து
இராமரின் பாதத்தில் இன்பாக வைத்துவிட்டு
உற்றதெல்லாம் சொல்லி உள்ளங் களித்திருந்தார்
ஸ்ரீராம லக்ஷமணரும் சித்தம் மகிழ்ந்திருந்தார்

வானர சேனையெல்லாம் வருத்தந் தவிர்ந்ததென்று
ஸ்ரீராமச் சந்திரருடன் சென்றுவிட்டார் பாசறையில்
காய்கனி தேன்கிழங்கும் களிப்புடனே தான்புசித்து
பசிதணிந்து யாவர்களும் பக்ஷமுடன் வீற்றிருந்தார்

## இராவணனுக்குத் துணையாய் சப்த தீவிலுமிருந்து வந்த இராக்ஷதர்களாகிய மூலபல சேனைகள் இராமபாணத்தால் இறப்பது.

இப்படியாகவேதான் இவர்க ளிருக்கையிலே
அமர்க்களத்தை தான்விடுத்து அசுரரெல்லாம் ஓடிவந்து
இந்தரஜித்து மாண்டானென்று இராவணன்முன்சொன்னவுடன்
ஐயோ மகனேயென்று அலறியே தான்விழுந்து [வுடன்
என்றைக்குக் காண்பேனென்று ஏங்கி விசாரமுற்று
கண்ணீ ராறுப்பெருக கதறியழுகையிலே
இலங்கையில வசிதிருக்கும் இராக்ஷதரெல்லாமழுதார்
மண்டோதரி ஓடிவந்து மனஞ்சோர்ந்து துக்கித்து
மகனே மகனேயென்று மாரடித்துத் தானழுதாள்
இராவணன முகம்பார்த்து ஏங்கி விசாரமுற்று
மன்னவுன் மோகத்தால் மகனை யிழந்துவிட்டீர்
சீதை மயக்கத்தால் சிததந்தடுமாறி
இராக்ஷத சேனையுடன் இந்திரஜித்து ஜீவனையும்
பகைவரிட மொப்பித்து பரதேசியானீரே
என்று-மண்டோதரி புலம்ப மனந்திகைத்து ராவணனும்
இராக்ஷத ருயிர்க்கெமனாய் இலங்கையிலே வந்திருக்கும்
சீதையைக் கொன்றுவிட்டு தீர்க்கிறே னென்பழியை
தடுக்காதே யென்றுசொல்லி தசமுக ராவணனும்
வாளேந்தி யோடுகையில் மகோதரன் தடுத்துசொல்வான்
எவ்வுலகும் கீர்த்திபெற்ற இராவணேஸ்வரா நீயக்கு

சீதையைக் கொன்றுவிட்டால் சிரித்திடுவார் தேவர்களும்
நரர்களைக் கொன்றுவிட்டு நாளை நீ இங்குவந்து
ஆரை மணம்புரிந்து ஆசையாய் வாழ்ந்திருப்பாய்
ஆராய்ந் துணராதோன் ஆபத்தடைவதுபோல்
பின்முன்னும் பாராமல் பிழைதேடிக்கொள்ளாதே
சப்த தீவிலும்நிறைந்து சஞ்சரிக்கும் ராக்ஷதரை
அன்பாய் வரவழைத்து அமர்க்களத்திற் போகாவிட்டால்
குரங்குடன் மனிதரையும் கொன்றிடுவார் தப்பாமல்
என்றிவன் சொல்லையிலே இராவணன் சம்மதித்து
0 உலகில் வசித்திருக்கும் உயிருள்ள ராக்ஷதரை
ஆண்பெண் சகலரையும் அழைத்து வருவீரென்று
சொன்னவுடன் தூதவர்கள் துரிதமுடனே யோடி
அந்தந்த தீவிலுள்ள அசுராதியரை யெல்லாம்
ஒருமிக்கத் தானழைத்து ஓடிவந்தார் ராவணன்முன்
அசுரர் குலத்துதித்த அதிவீர வன்னியென்போன்
வனழைத்தீரொன்றுசொல்லி இராவணனைக்கேழ்க்கையிலே
நடந்த விபரமெல்லாம் நலமுடனே சொல்லிவிட்டான்
இராவணன்சொற் கேட்டுவன்னி இறைச்சலிட்டுச்சொல்லு
அசுரேந்திராஉந்தனுக்கு ஆபத்துநேர்ந்ததென்று [கிறான்
எந்தனுக்கு முன்சொன்னால் இரண்டு மனிதரையும்
குரங்குக் கூட்டங்களையும் கொன்று புசித்திடுவேன்
ஆயினும் பெரிதல்ல அஞ்சாதீர் ராவணனே

---

0 ஸ்ரீமந் நாராயணர் தேவர்கட்கு வாக்குத்தத்தஞ் செய்த படியே ஸ்ரீராமராகப் பிறந்து இலங்கையில் அசுர சம்மாரஞ் செய்கையில் மாய இராக்ஷதரை யெல்லாம் ஒருமிக்கக் கொன்றுவிடுவதற்குக் காரணமாய் இராவணனால் இராக்ஷ மூலபல சேனையெல்லாம் ஒன்றாய் சேர்ந்துவந்து, ராமபாணத்தினால் இறந்தனர்.

இப்போதே யானவரை தப்பாமல் கொன்றிடுவேன்
என்று-வன்னிசொன்னதைக்கேட்டு மாலியவான்சிரித்து
அமரர் துயர்தீர்க்க ஆதிநாராயணனே
மனிதாவ தாரமுற்று மாயா அசுரர்களை
அஸ்திரத்தாற் கொல்வதற்கு அமர்க்களத்தில் வந்துவிட்
அவரை ஜெயிப்பதற்கு ஆகாது உன்னாலே [டான்
என்று-மாலியவான் சொன்னதையும் மதியிலுணராமல்
சீச்சீ கிழவாவென்று சீறி யெழுந்திருந்து
இராவணேஸா அஞ்சாதே இப்போதே யாங்கள்சென்று
குரங்குடன் மனிதரையும் கொன்றுவிட்டு வாரோமென்று
அசுர ருடனேவன்னி அமர்க்களத்தில் வந்துவிட்டான்
வல்லமை பெற்றிருக்கும் வானர வீரரெல்லாம்
மூலபல சேனைகளின் முன்னிற்க மாட்டாமல்
அலறியே ஓடுவதை அங்கதனும் பார்த்துவிட்டு
சண்டைசெய்ய வாருமென்று சமர்த்தா யழைக்கையிலே
ஜாம்புவந்த ரானவரும் சஞ்சலமாய்த் தானழுது
ஐயையோ அங்கதாநீ அறியாமல் பேசுகிறாய்
குரங்குபுத்தி யாலேநீ கொஞ்சமும் பயப்படாமல்
இராக்ஷதரால் சாவதற்கோ எங்களை யழைக்கிறாய்நீ
அப்பப்பா யெங்களாலே ஆகாது சண்டைசெய்ய
கடலணையைத் தானிடித்து கானகத்தில்போய்பிழைப்போம்
இந்த இலங்காபுரி எவர்வச மானாலென்ன [ம்
இராமர் தானுண்டாலென்ன இராவணேஸனுண்டாலென்ன
காட்டில் வசித்திருக்கும் கரடி குரங்குகட்கும்
தலைவிதியோ இவர்களுடன் சண்டைசெய்து சாவதற்கு
என்றிவர் சொல்லையிலே எதிரிருந்த அங்கதனும்
கலகலென தான்சிரித்து கரடிகுல சாம்புவரே
நம்பினோரைக் கைவிடுதல் ஞாயமல்ல வென்றுசொல்லி
அன்பா யவருடனே அனைவரையுந் தானழைத்து

அமர்க்களத்தில் வருகையிலே ஸ்ரீராமர் யோசித்து
தம்பி இலக்ஷமணுயான் தனியாகவேயிருந்து
மூலபல ராக்ஷதரின் முன்னின்று கொல்லுகிறேன்
அனுமான் சுக்ரீவனுடன் அங்கதனுடன்நீயும்
வானர சேனைகட்கு யாதொரு தீங்குமின்றி
காவலாய் வீற்றிருந்து காப்பாற்றுவீ ரென்றுரைத்தார்
அப்படியே நல்லதென்று அதிவீர லக்ஷமணனும்
வானர சேனையுடன் வந்தா ரொருபுரமாய்
பத்துதலை ராவணனும் பராக்ரமுடன் தேரேறி
அம்புவில்லுந் தானேந்தி அமர்க்களத்தில் ஓடிவந்து
தனுசிற் கணைதொடுத்து சரமாரி யாய்ப்பொழிந்து
அஸ்திரத்தைத் தான்விடுக்க அறுத்தெறிந்தார்லக்ஷமணரும்
சிவமோக னஸ்திரத்தைச் சிலையிற் றொடுத்துவிட்டான்
விபூஷணர் சொற்போல விஷ்ணுவாஸ்திரம்விடுத்து
சிவமோக னஸ்திரத்தைத் தூளாகச் செய்துவிட்டார்
இராவணன் விபூஷணனை இகழ்ச்சியாய்தூஷித்து
குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்புபோன்ற
உன்னையேமுன்கொல்வேனென்று உதயகாலசூரியன்போ
விளங்கும் வேலாயுதத்தை விபூஷணர் மேல்விடுத்தான்
இலக்ஷமணரும் அந்நேரம் எத்தனை அஸ்திரங்கள்
விடுத்துத் தடுத்தாலும் வேலாயுதம் சுழன்று
[] விபூஷணரைக் கொல்வதற்கு வேகமாய் வருகையிலே
இவர்க்குமுன் ஓடிவந்து இலக்ஷமணன் நின்றிருக்க
அவர்க்குமுன் சுக்ரீபனும் அவர்க்குமுன் அங்கதனும்

---

[] இந்தவேலாயுதத்தை தடுப்பதற்கு எவ்வித தேவாஸ்திரங்களை விடுத்தும் முடியாதபடியால் தாமே ஏற்றுக்கொண்டிறப்போமென்று ஒருவர்முன் ஒருவர்போய் நிற்கலாயினர். இதுதான் உண்மையான சிநேகிதரியல்பு.

அனைவரையும் தான்விலக்கி அனுமந்தன் போய்நின்றார்
எல்லோரையும் விலக்கி இலக்ஷ்மணனை முன்னின்றார்
அந்தவே லாயுதந்தான் அருகிருந்த லக்ஷ்மணரின்
மார்பிலுருகியதால் மதிமயங்கி மூர்ச்சையானார்
இலக்ஷ்மண னிறந்தானென்று இராவணன் சந்தோஷித்து
அமர்க்களத்தைத் தான்விடுத்து அவசரமாயோடுகையில்
விபூஷணரு மந்நேரம் விசனமுற்று ராவணனை
பார்த்து வயரெறிந்து பாதகா லக்ஷ்மணரை
அஸ்திரத்தால் மார்பிளந்து அந்யாயஞ் செய்தாயே
அதிவீர னானால்நீ அமர்செய்வா யென்னுடனே
என்று-இருப்புலக்கையோங்கிவந்து இராவணனைத்தானடித்
அப்போது ராவணனும் ஆலோசனைபுரிந்து [தான்
அடடா விபூஷணா யான் அண்ணனச்சே உந்தனுக்கு
ஒருதாய் வயற்றில்நாம் இருவரு மாய்பிறந்து
அண்ணனுந் தம்பியுமாய் அன்பாய் வளர்ந்தோமே
கூடப் பிறந்தபாசம் கொஞ்சமு மெண்ணாமல்
சண்டைசெய்யவந்தாயே தம்பி விபூஷணனே
பகைவரை யான்ஜெயித்து பராக்ரமாய்ப் போம்போது
வழியை மடக்காதேயுன் வல்லமையை யானறிவேன்
புத்தியில்லா சிறுபயலே போடாநீ அப்புறத்தே
என்று-அதட்டித்துரத்திவிட்டு அரண்மனையிற்போய்ச்சேர்
அப்போது ஆஞ்சநேயர் அதிவேக மாய்ச்சென்று [ந்தான்
சஞ்சீவி கொண்டுவந்து சந்தோஷமாய் லக்ஷ்மணனை
மூர்ச்சை தெளிவித்து முன்போல சேர்த்துவிட்டார்
இவ்வித மாகவேதான் இவர்க ளிருக்கையிலே
மூலபல ராக்ஷதர்கள் மூர்க்க முடன்முனைந்து
ஸ்ரீராமச் ச்ந்திரன்முன் தீரமுடன் வந்துநின்று
இவன்தானோராமனென்று எல்லோரும்சூழ்ந்துக்கொண்டு
கொன்று புசிப்போமென்று கொக்கரித்து ஓடிவர

இராமச்சந்திரன் நகைத்து இராக்ஷதரே யுங்களுக்கு
ஆயுள்முடிந்ததென்று அஸ்திரங்களைப் பொழிந்தார்
இராக்ஷத வீரர்களில் இறந்தார் வெகுபேர்கள்
மற்றுமுள்ள ராக்ஷதர்கள் மஹா வுக்ரகோபத்துடன்
தனுசிற் கணைதொடுத்துச் சரமாரியாய்ப் பொழிந்தார்
ஸ்ரீராமச் சந்திரரும் சிலையிற் கணைதொடுத்து
அசுரர்கள் மேல்விடுத்து அமர்பொருதும் வேளையிலே
கைசோர்ந்து மெய்சோர்ந்து கால்களும் விலவிலத்து
இத்தனை ராக்ஷதரை எப்படி கொல்வதென்று
யோசித்துக் கோதண்டத்தில் மோசனாஸ்திரந் தொடுத்து
அசுரர்கள் மேல்விடவே அனைவரும் மனமயங்கி
அங்கும்ராமன் இங்கும்ராமன் எங்கும்ராமனாயிருக்க
இதோராமன் அதோராமன் எதிரில்வந்தான் ராமனென்று
இராக்ஷதர் சேனைகளை இராக்ஷதரே கொல்லுகிறார்
கால்கை துணிந்தவரும் கழுத்தறிந்து மாண்டவரும்
தண்ணிதண்ணி யென்றலறி தத்தளித்து விழ்வோரும்
எண்ணமுடியாமல் இராக்ஷதரெல்லாமிறந்தார்
ஸ்ரீராமச்சந்திரரு சிந்தை மிகமகிழ்ந்து
இலக்ஷ்மணரும் வானரரும் இருக்குமிடத்தில் வந்து
இராவணனால்நேர்ந்ததெல்லாம் இன்பமுடன்கேள்வியுற்று
அனுமந்தன் சாம்புவந்தன் அங்கதன்சுக்ரீவனுடன்
இலக்ஷ்மணன் விபூஷணரை இன்பா யாசீர்வதித்து
வானர சேனைகட்கு வருத்தங்க ளில்லாமல்
ஆதரித்தீரேயென்று அன்பா யவர்களுடன்
அமர்க்களத்தைத் தான்விடுத்து அன்புடன் பாசறையில்
சென்று மனமகிழ்ந்து தேகக் களைதீர்ந்து
காய்கனி தேன்கிழங்குங் களிப்புடனே தான்புசித்து
வருத்த மொழிந்ததென்று மனோல்லாச மாயிருந்தார்

## ஸ்ரீராமச்சந்திரனுக்கும் இராவணனுக்கும் கடைசிநாள் யுத்தம்.

இவ்விதமாகவேதான் இவர்க ளிருக்கையிலே
இலக்ஷமணனைக்கொன்றோமென்று இராவணன்மனமகிழ்ந்
அரண்மனையில்வீற்றிருந்து அம்மான்மகோதரன்முன் [அ
தன்னைப் புகழ்ந்துகொண்டு சந்தோஷ மாயிருக்க
அத்தருணம் ராக்ஷதர்கள் அரண்மனையில் ஓடிவந்து
அதிவீர மூலபல அசுராதி சேனையெல்லாம்
இராமச்சந்திரன் கணையால் இறந்தன ரென்றுசொன்னார்
அவ்வார்த்தைக் கேள்வியுற்று அதிசயித்து ராவணனும்
பார்த்து வருவோமென்று பராக்ரமுடனெழுந்து
கோட்டையின் மதிலேறி கோபுரத்தில் வீற்றிருந்து
அமர்க்களத்தைக் கண்டவுடன் ஆறாக் துயர்மிகுத்து
இத்தனை ராக்ஷதரை இராமனோ கொன்றுவிட்டான்
ஆயினும் மோசமில்லை அம்மான் மகோதரா நீ
இறந்தவர்கள்போக இலங்கையில் பிழைத்திருக்கும்
அசுரா தியரையெல்லாம் அழைத்து வருவீரென்று
அம்புவில்லுங் கைபிடித்து ஆதிசிவனைப்பணிந்து
இராவணன்தேர் மீதேறி இரணக்களத்தில் வந்துவிட்டான்
அந்நேர வேளையிலே அரிராமச் சந்திரரும்
அம்புவில்லுங் கைபிடித்து அமர்க்களத்தில் வந்துநின்றார்
கண்ணுற்ற தேவர்களும் களிப்புடனே தானிருக்க
மாதலியை இந்திரனும் வரவழைத்துச் சொல்லுகிறான்
தெய்வலோ கத்திலுள்ள தேரை ஸ்ரீராமர்முன்னே
கொண்டுபோய் நிறுத்துமென்று கூறினான் இந்திரனும்
அப்படியே மாதலியும் அமரா புரிரதத்தை
அந்தரமாய்க் கொண்டுவந்து அரிராமர் முன்நிறுத்தி
தேர்மீதில் வீற்றிருந்து ஜெயித்திடுவீர் ராவணனை

என்றிவன் சொன்னவுடன் இராமர் மனமகிழ்ந்து
விஜயரத மீதேறி வில்லைக் கரத்தேந்தி
அஸ்திரங்களைத்தொடுத்து அசுரர்களை கொன்றுவிட்டு
பத்துதலை ராவணன்மேல் பாணப்ர யோகஞ்செய்தார்
அப்போது வானரர்கள் அசுராதியர் மேல்விழுந்து
அடித்துதைத்துக் கொல்லுகையில் காதக மகோதரனும்
ஸ்ரீராமரை யெதிர்த்து அமர்பொருதும்வேளையிலே
கோதண்ட ராமன்விடும் கூர்வாளி னாலவனும்
ஆவி துடிதுடித்து அமர்க்களத்தில் வீழ்ந்துவிட்டான்
அப்போது ராவணனும ஆலோசனைபுரிந்து
இராக்ஷத சேனையெல்லாம் இறந்து மடிந்துவிட்டார்
என்-புத்திரரும் தம்பிகளும் போர்க்களத்தில் மாண்டுவிட்டார்
மந்திரிமகோதரனும் மரணமுற்று னித்தருணம்
ஒருகோடி கும்பிழந்து ஓரியைப்போ லானேனே
ஆனைசேனை யானிழந்து ஆந்தைபோல் விழிக்கிறேனே
தனியாக யானிருந்து சண்டைசெய்ய லாச்சுதையோ
என்-கூடப் பிறந்தவனே குடிக்கு எமனாயிருந்தான்
ஆனாலும் மோசமில்லை அஞ்சாமல் போர்க்களத்தில்
ஸ்ரீராமனைக் கொன்றுவிட்டால் சீதையை மணம்புரிவோம்
சண்டையில்மாண்டுவிட்டால் சஞ்சலமெல்லாம்மொழித்து
சொர்க்க பதிசேர்ந்து சுகமுற் றிருப்போமென்று
மனதில் நினைந்திவனும் மகாதேவனைப்பணிந்து
தனுசிற் கணைதொடுத்து சரமாரியாய்ப் பொழிந்தான்
ஸ்ரீராம ரந்நேரம் சிலையிற் கணைதொடுத்து
இராவணன் விட்டகணை எல்லா மொடித்தெரிந்து
கோதண்டத்தி லனேக கூர்வாளிகள் தொடுத்து
தசமுக ராவணன்கை தனுசை யொடித்துவிட்டு
தேரை யொடித்துவிட்டு தேர்ப்பாகனைக்கொன்று
பத்துத் தலைகளையும் பாணத்தினால் அறுத்தார்
மறுபடியும் தலைகளெல்லாம் வளர்ந்து வருகையிலே
ஸ்ரீராமர் பார்த்துவிட்டு திகைத்து மனமிரண்டு
அருகிருந்த விபூஷணரை அன்புடனே தானழைத்து
இராவணன் தலைகளெல்லாம் இபபடி வளருவதேன்

மர்மம் புகல்வீரென்க மனமகிழ்ந்து சொல்லுகிறார்
ஸ்ரீராமச் சந்திரரே தீரமுள்ள ராவணனும்
அருந்தபம் புரிகையிலே அறுத்தறுத்துத் தன் தலையை
ஓமகுண்டத்திலிட்டு உக்ரதபம் செய்திருந்தான்
கமலாஸனன் ஓடிவந்து களிப்புடனே சொல்லுகிறார்
அன்பனே உந்தனுக்கு அறுந்த தலைவளர
திருவருள் புரிந்தோமுன் சித்தத்தி லுற்றவரம்
இப்போதே கேழ்ப்பாயென இராவணன் மனமகிழ்ந்து
மனிதருடன் வானரரை மறந்துவிட்டு தேவர்முனி
ஹரிஹரப்ரம் மாதியரால் ஆவி யகலாதிருக்க
வயற்றிலென் உயிர்நிலையும் மறைந்திருக்கவேண்டுமென்று
வரம்பெற் றிருக்கின்றான் வயிற்றில் பாணந்தொடுத்து
அமிர்த கலசமெடுத்தால் ஆவியொழிவாயென்றார்
ஸ்ரீராம ரத்தருணம் சிலையைக் குணத்தொனித்து
இராவணேசன் வயற்றில் இராம பாணந்தொடுத்து
அமிர்த கலசம் உடைத்து அத்தருணம் ராவணனின்
பத்துத் தலைகளையும் பனங்காயைப் போலாக
அறுத்தெறிந்துகொன்றுவிட்டார் அசுரர்பயம்தீர்ந்ததென
விபீஷணரு மந்நேரம் விசனமுற்றுத் தானழுது
அண்ணாவே யென்றலறி அமர்க்களத்தில் வீழ்ந்தழுதார்
இராக்ஷச மாதரெல்லாம் இறைச்சலிட்டுத் தானழுதார்
மண்டோதரி யோடிவந்து மனங்கலங்கித் தானழுது
ஆசை மணவாளா ஆவி யொழிந்தீரோ
சீதைபிறந்திடவும் இலங்கை யழியுமென்ற
சொல்லை நிஜமாக்கிச் சொர்க்கப் பதவியுற்றீர்
எவ்விதமா யானிருப்பேன் எந்தன் பிராணேசா
மைந்தரும் மைத்துனரும் மற்றுமுள்ள சேனையுடன்
நீயும் பிராணன்விட்டு நிலைகலங்கச் செய்துவிட்டீர்
என்னசெய்வேன் மன்னாவென்று ஏங்கித் துடித்தழுதாள்
அத்தருணம் ஸ்ரீராமர் அருகிருந்த விபூஷணரால்
இராவணர்க்கு உற்றுரிமை இன்பாய் நடத்துமென்ன
அப்படியே நல்லதென்று அகிற்கட்டை சந்தனமும்
குங்குமக் கட்டைகளால் கொளுத்தி தகனஞ்செய்தார்

அஸ்திகளைப் பாற்கடலில் அன்புடனே தான்விடுத்துக்
கடலிலே ஸ்ரானசெய்து களிப்புடனே வந்துவிட்டார்
ஸ்ரீராமச் சந்திரரின் திருவருளால் லக்ஷ்மணரும்
இலங்கையில் விபூஷர்தான் இன்பா யாகசெய்ய
மணிமகுடஞ் சூட்டிவிட்டு மகிழுடனே வந்துவிட்டார்
மண்டோதரி யம்மனும்தன் மணாளனுடன் தகனமானுன்
இந்த்ரஜித்தன் கும்பகர்ணன் இராக்ஷத சேனைகளின்
சரீரங்களைக் கொளுத்தி தகனஞ்செய் தானபின்பு
வானர வீரரான வசந்தனுயிர் கொண்டுவந்து
சரீரத்துடனெழுப்பி சந்தோஷமாய் வைத்திருந்தார்.

## சீதையம்மன் அக்கினியில்மூழ்கிக் குளித்துவருவது.

ஸ்ரீராமச் சந்திரரும் சித்தம் மிகமகிழ்ந்து
அனுமந்தா சீதைதனை அழைத்து வருவீரென்றூர்
நல்லது சுவாமியென்று நமஸ்கரித்து சீதைமுன்னே
வந்து இராவணனும் மரணமுற்றானென்றுரைத்து
திரிச்சடை தான்தவிற தீமையுற்ற ராக்ஷசிகள்
அனைவரையும் கொல்வதற்கு அனுக்கிரகம் புரிவீரென்றூர்
அத்தருணம் ராக்ஷசிகள் அலறி மனந்துடித்து
சீதையம்மன் பாதத்தில் திடீரெனவே போய்விழுந்து
ஆதரிப்பீரென்றுசொல்ல அனுமானைக் கையமர்த்தி
இராவணன் உத்திரவால் இராக்ஷசிகள் சூழ்ந்திருந்தார்
இவர்களைக் கொல்லாதே இராமதூதா வென்றுரைத்தாள்
அத்தருணம் விபூஷணரும் ஸ்ரீராமர் ஆக்ஞையினுல்
தேவதா ஸ்திரீகளினுல் சீதையை அலங்கரித்து
பல்லக்கின் மீதமர்த்தி பக்ஷமுடன் கொண்டுவந்தார்
அத்தருணம் சீதையம்மன் ஸ்ரீராமரைப் பணிந்தாள்
ஸ்ரீராமச் சந்திரரும் சீதையின் முகம்பார்த்து
என்ன தைரியத்தால் என்னைவந்து பேணிந்தாய்
புருஷனைப் பிரிந்தபோதே போச்சுதுன் கற்புநிலை
பெண்சாதிக் காகவென்று பெரும்போர் புரியவில்லை
என்-சிற்றப்பாஜடாயுபக்ஷி சிறகைவெட்டிக்கொன்றதினுல்
பழிக்குப் பழிவாங்க பராக்ரமா யிங்குவந்து

இராக்ஷத வீரருடன் இராவணனைக் கொன்றுவிட்டேன்
உன்-மனதிற் கிசைந்தவழி மாதேநீ போய்விடுவாய்
என்று-சீதை மனக்குறிப்பை ஸ்ரீராமர் கண்டுணர
தந்திரமாய்ச்சொன்னமொழி ஜானகியும்உண்மையென்றே
மணவாளன் சம்மதியா மாதர்களானவர்கள்
இருந்தும் பயனில்லை இறந்தாலுந் தோஷமில்லை
அன்பான மைத்துனரே அக்கினியை மூட்டுமென்றாள்
இராமரும் கண்காட்ட இலக்ஷ்மணரும் சம்மதித்து
தேவர்கள் வியப்புறவே தீயை வளர்த்திவிட்டார்
அத்தருணம் சீதையம்மன் அக்கினியின் முன்னேவந்து
சகல வஸ்துக்களையும் சாம்பலாக்கும் அக்கினியே
பதிவிரதா தர்மத்தில் பழுதணுகா தெந்நாளும்
என்-கற்புநிலை தவரா காசினியில் வாழ்ந்திருந்த
உண்மை நிலையதனை உலகோர்முன் சாக்ஷியாக
காண்பிக்க வேணுமென கபீலெனவே தான்குதித்தாள்
அக்கினி பகவானும் அம்மனைக் கரத்தேந்தி
அரிராமர் முன்னேவந்து அன்புடனே சொல்லுகிறார்
சீதையின் கற்பாலென் திரேகத்தை சுட்டெரித்த
பதிவிரதா லக்ஷணத்தை பார்த்தருளும் சுவாமியென்றார்
சீதையும் வருத்தமின்றி ஸ்ரீராமனைப்பணிந்தாள்
அமரர்முனி சித்தர்களும் அரிராமனைப் பணிந்தார்
பிர்ம்மதேவன் ஓடிவந்து பிரியமுடன் துதித்தார்
சொர்க்கப் பதவிதனில் சுகமுடனே வீற்றிருந்த
தசரதனும் வந்திருந்து தன்னுடைய மைந்தருடன்
மருமகள் ஜானகியை மகிழாயா சீர்வதித்தார்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையும் தசரதரைக்
கண்டுபணிந் திவர்கள் கவலையெல்லாம் சொல்லிவிட்டு
துதித்துப் பணிந்தார்கள் துயர்தீர்ந்த தென்றெண்ணி
அப்போது தேவர்களும் அரசன் தசரதனும்
அவரவ ரிருப்பிடத்தில் அன்பாகச் சென்றார்கள்

## பரதன் அக்கினியில் விழப்போகுந் தருணத்தில் ஆஞ்சநேயர் ஓடிவந்து ஸ்ரீராமர் வருகையை தெரிவிப்பது.

ஸ்ரீராமச் சந்திரரும் சீதையுடன் மூவருமாய்
இராக்ஷதரும் வானரரும் இன்பாய் தொடர்ந்துவர
இலங்கா புரிவிடுத்து இருண்டவனம் வாரார்கள்
அந்தவனந் தனிலே அருந்தபசு தான்புரியும்
பரத்துவாச ராசீர்மத்தில் பக்ஷமுடன் வந்திருந்து
இருந்துண்ணும் வேளையிலே விசனமுடன் பரதன்
பதினாலு வருடம்போய் பாரில் வருவேனென்ற
அண்ணனைக் காணேனென்று அக்கினியை மூட்டிவிட்டு
சுற்றி வலம்வருக சுமித்திரையும் கோசலையும்
தடுத்தும் மனம்பொறுயல் தன்னுடலைத் தான்வெறுத்து
அக்கினியில் வீழ்வதற்கு ஆலோசித் திருக்கையிலே
இராமர் அனுமந்தனை இன்பாய் அருகழைத்து
பதினான்கு வருடமாச்சு பரதனுந் தீபாய்வான்
ஆகையினால் ஆஞ்சநேயா அதிதீவிரமாக
நீ-அயோத்தி புரிசென்று அனைவர்க்கும் என்வருகை
சொல்லிவிட்டு வாருமென்ன துரிதமுடனனுமான்
விஸ்வரூபத் தோடெழுந்து விரைவுடனே ஓடிவந்து
அக்கினியைச் சுற்றிவரும் அரிராமர் தம்பியான
பரதனைத் தான்பார்த்து பக்ஷமுடன் சொல்லுகிறார்
வருகிறார் ஸ்ரீராமர் வருத்தப்படவேண்டாம்
என்று-ஆதியோ டந்தமாக அணுவும் பிசகின்றி
சொல்லிவிட்டு தீவிரமாய் ஸ்ரீராமர்முன்வந்து
யாவருடன் விருந்து ஆவலுடனே புசித்தார்
ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையும் வானரமும்
பரத்துவாசரைப்பணிந்து பக்ஷமுடன் போகலுற்றார்

## ஸ்ரீராமச்சந்திரரானவர் அயோத்தியாபுரியில் வந்து சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன அனுமத் சமேதராய் நவரத்ன கசித திருமுடி புனைதல்.

ஸ்ரீராம லக்ஷ்மணரும் சீதையுடன் மூவருமாய்
அனுமந்தன் சுக்ரீபன் அங்கதன் சாம்புவந்தர்
வசந்தன் களனுடனே வானரவீரர்களும்
இராக்ஷத சேனைகளும் இன்பாகவேசேர்ந்து
கானகமெல் லாந்தாண்டி கங்கா நதிக்கரையில்
சும்பாய் வருகையிலே குகபெருமான் கண்டுணர்ந்து
ஸ்ரீராமச் சந்திரரின் திருவடியைத் தான்பணிந்து
அனைவரையும் ஓடத்தில் அன்பாக ஏற்றிக்கொண்டு
கங்கையின் தென்கரையைக் களிப்புடனே தாண்டிவந்து
வடகரையில் போய்ச்சேர்ந்து மனுேல்லாச மாய்நடந்து
அயோத்தி புரிதனிலே அன்பாக வந்தார்கள்
அந்நேரவேளையிலே அந்நகர வாசிகளும்
ஸ்ரீராம லக்ஷ்மணரின் திருவடியைத் தான்பணிந்தார்
பரதாழ்வா ரந்நேரம் பக்ஷமுடன் ஓடிவந்து
அண்ணனையுந் தம்பியையும அண்ணியையும்பார்த்துவிட்டு
ஆனந்தமாகவேதான் அண்ணனைத் தான்பணிந்தார்
கௌசலை சுமித்திரையும கைகேசி தாய்மாரும்
மைந்தரிருவரையும் மருமகள் சீதையையும்
ஆசீர்வதித்திவர்கள் ஆனந்த மாயிருந்தார்
ஸ்ரீராமச்சந்திரரும் சிந்தை மகிழ்வுடனே
பெரியோர்களைப்பணிந்து சிறியோரை யாசீர்வதித்து
அனைவருடனினிதாய் அரண்மனையில் வந்துவிட்டார்
வசிஷ்டரு மந்நேரம் மனுேல்லாச மாகவேதான்
ஸ்ரீராமச் சந்திரனுக்கும் சீதைக்கும் அன்புடனே
மங்கள ஸ்நானஞ்செய்து மாநிலத்தோர் கொண்டாட

புவனமெல் லாம்மதிக்கும் பொன்னுபரணங்களும்
பட்டு பீதாம்பரமும் பக்ஷமுடனே புனைந்து
ஸ்ரீராமச் சந்திரரை சிம்மா சனத்திருத்தி
ஜானகி யம்மனையும் சந்தோஷ மாகவேதான்
அருகி லுட்காரவைத்து ஆகமம் புகழ்ந்திடவும்
வேத முறைப்படியே வேதிய ராசீர்வதிக்க
அனுமான் சிம்மாசனத்தை அன்பாய்ச் சுமந்திருக்க
அங்கதன் வாளேந்தி அவர்பக்கம் நின்றிருக்க
பரதாழ்வான் வெண்கொடையைப் பக்ஷமுடன் பிடிக்க
சத்ருக்னன் லக்ஷ்மணரும் சாமரையை வீசிநிற்க
வசிஷ்டர் கரத்தினாலே மணிமகுடந் தானெடுத்து
ஸ்ரீராமச் சந்திரரின் சிரசில் அணிந்தன்பாய்
அரசுரிமை செய்வீரென்று ஆசீர்வாதம்புரிந்தார்
பிராமணர்க ளெல்லோரும் பிரியமாயா சீர்வதித்தார்
இராஜராஜாக்களெல்லாம் இன்பாய் துதித்துநின்றார்
வானரரும் ராக்ஷதரும் மனமகிழ்ச்சி யாய்ப்பணிந்தார்
கௌசலை சுமித்திரையும் கைகேசி மூவர்களும்
மைந்தர்களை யாதரித்து மனமகிழ்ந் திருந்தார்கள்
இப்படியாக வேதான் இவர்களிருக்கையிலே
இராக்ஷதரும் வானரரும் இராமரிடம் சிலவுபெற்று
அவரவ ரிருப்பிடத்தில் அன்பாகச் சென்றிருந்து
பத்தியா னந்தமாக பக்ஷமுடன் வாழ்ந்திருந்தார்
உலகில் வசித்திருக்கும் உத்தம குணத்தினரே
இராமர் சரித்திரத்தை இனிதாய் படிப்போரும்
இன்பாயச்சிட்டோரும் எழுதிய உத்தமரும்
சந்தோஷமா யென்நாளும் சம்பத்துடன்வாழி.

ஸ்ரீராமர் வனவாசம் - சம்பூர்ணம்.

# பி. எஸ். டி. எம். அண்டு ஸன், பதிப்புகள்

அநுபோக வைத்திய தேவரகசியம் 3-காண்டம்
ஸ்ரீராமகோடி, ராமதாரக மந்திரத்துடன் பட்டு கட்டடம்
பட்டினத்தார் பாடல் மூலமும் பொழிப்புரையும் 10-ஐதீகப் படத்துடன்
ஸ்திரீ பக்த லீலாம்ருதம் என்னும் 50 பதிவிரதைகள் சரித்திரம்
குறைவற்ற செல்வம் என்னும் நோயில்லா வாழ்வு
அஷ்டதிக்கு ஆஞ்சநேயர் ஜெயமுனி வால்மிகர் பஞ்சபக்ஷி ஆரூடம் சக்கரத்துடன்
18-சித்தர்கள் வாதக் கோவை அல்லது ரஸ்வாத சிட்சா மூலமும் பொழிப்புரையும்
ஸ்திரி புருஷ லக்ஷணக்குறி சாஸ்திரம் அல்லது ஆண்பெண் இலக்ஷைசாஸ்திரம் மூலமும் உரையும்
கைமுறை பாக்கெட் வைத்தியம் டாக்டர் பி எஸ் தளசிங்க முதலியார் 600-முறைகள் குறையாமல் அச்சிட்டு கலிகோ பயிண்டு செய்தது
சம்பூர்ண இராமாயனம் ஸ்ரீராமர் வனவாசம்
அநுபோக ஜாதகரகசியம் கிரகசார சக்கரத்துடன் முதல் பாகம்
தொக்கோகம் அமுதர் தலைசக்கரமும் ஐதீகப்படத்துடன்
பச்சிலை மூலிகை அகராதி
அகஸ்திய நூல் என்னும் கொழுத்தசிரிப்பு
ஆழ்வார்களின் வைபவம்
நவக்கிரக மஹாமந்திரம்நவக்கிரகபூஜை சாந்தியுடன்
சகல தோஷ நிவர்த்தி
வேமன்ன பத்தியம் மூலமும் உரையும் 100-பாட்டு
இலாகிரிப் பிரியரென்னும் குடியர் துயரம்

விலாசம்:—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.